# கவண்கல்

## கவிதைகள்



சிலுவைச் சித்தர்

ஜோசப் மோகன்குமார்

# கவண் கல் கவிதைகள்

‘சிலுவைச் சித்தர்’

ஜோசப் மோகன் குமார்

ICTU
INTERNATIONAL CHRISTIAN TAMIL UNION

பன்னாட்டுக் கிறித்தவத் தமிழ்ச் சங்கம்

(A unit of ILCC - Govt.Reg. No: 00433/22)

(NITA Aayog Government Of India Ngo Darpan Unique ID No. For ILCC : TN / 2022/0321174)

தபால் பெட்டி எண்: 5313, கோடம்பாக்கம்,
சென்னை - 600 024, தென் இந்தியா.

**கவண்கல் கவிதைகள்**

''சிலுவைச் சித்தர்''

**ஜோசப்மோகன் குமார்**

2022

நூல் வரிசை எண்:003

காப்புரிமம்:

ஜோசப்மோகன் குமார்

வெளியீடு :

பன்னாட்டுக் கிறித்தவத் தமிழ்ச் சங்கம்
(A unit of ILCC - Govt.Reg. No: 00433/22)

தபால் பெட்டி எண்: 5313
கோடம்பாக்கம்
சென்னை - 600 024
தென் இந்தியா.
மின்னஞ்சல் : bishopjmk@gmail.com
**(NITA Aayog Government Of India Ngo Darpan Unique ID No. For ILCC : TN / 2022/0321174)**

விலை : 600/-

# கவண்கல் கவிதைகள்

## அறிமுகத் துறைமுகம்...

கர்த்தரின் கனமான அழைப்பை பெற்று, பல்வேறு வருடங்களாக மக்கள் தொடர்பு துறை, ஊடக, இசை மற்றும் இலக்கிய ஊழியம் செய்துவரும், ஜோசப் மோகன் குமார், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் காந்திய சிந்தனையையும், செனட் செராம்பூர் பல்கலைக்கழகத்தில் இறையியல் பட்டப் படிப்பும், அனைத்துலக இந்திய இறையியல் கல்லூரியில் பட்டப்படிப்பும், St. ஆண்ட்ரூஸ் இறையியல் கல்லூரியில் அறிவருக்கான பட்டமும் பெற்றவர். தஞ்சையில் நடை பெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், புதுக்கவிதைக் கான தமிழக அரசின் முதற்பரிசையும், விருதினையும், மோகன ப்ரியன் என்ற புனைப்பெயரில் பெற்றவர். தனது பாடல்கள், கவிதைகள் தேவசெய்திகளின் மூலமாக இறை எழுப்புதலைப் பதியமிட்டு வரும் இவர். கவியரசு, கலை முதுமணி எழுப்புதல் கவிஞர், போன்ற பல சிறப்புப் பட்டங்களை பெற்றவர். அளவில்லா அபிஷேகத்தோடு, அனைத்து திருச்சபைகளுக்குள்ளும் கடந்து சென்று, நற்செய்தியை அறைகூவலாக அறிவித்துவரும்

இந்த, சிலுவை சித்தர், இத்தொகுப்பின் மூலம் வானாந்திர சத்தமாக, வரலாற்றில் இடம்பெறுவார் என்பது உறுதி! பாராபரன் இவரையும், இவர்தம் குடும்பத்தையும், இவரது கோலிவுட் டூ கொல்கதா அனைத்துலக திரைப்பட ஊழியத்தையும் ஆசீர்வதித்து வழி நடத்துவாராக!''

பல்வேறு தலைமுறைகளாக ஊழிய வழிமரபில் வந்த இக்கவிஞர், பல்வேறு ஆலயங்களில் ஆயர்பணி புரிந்தவர், ஆழ்ந்த இறையியல் அனுபவம் உள்ளவர்: இவரது படைப்புகள் பல்வேறு இறையியல் கல்லூரிகளில் பாடத்திட்டங்களாகவும், ஆய்வுக் கட்டுரைகளாகவும் இடம்பெற்றுள்ளன. தற்போது புதிய தரிசனத்தோடு கலை, இலக்கியத் திரைப்பட உலகில் ஊழியம் செய்துவரும் இவரது கவிதைகள், எழுப்புதல் என்ற வார்த்தையின் உண்மையான உள்முகங்களை வெளிக்கொண்டு வருபவை! சபை பாகுபாடு இல்லாமல் உரிமையோடு, முழுக்கு முனிவர் யோவான் ஸ்நானகனுக்கு இருந்த ஆவேசஅறைகூவலோடு இன்றைய திருச்சபை மற்றும் நற்செய்தி ஊழியங்களின் பொய்மைகளை தோலுரித்துக் காட்டும் கவிஞர், கிறிஸ்தவர்களின் குறைகளை மட்டும் சுட்டிக்காட்டாமல், அக்குறைகளுக்கு தீர்வுகளையும் முன்வைப்பது பாராட்டுக்குரியது! அது மட்டுமல்லாது, தான் சார்ந்த சமுதாயத்தின் நிகழ்வுகளை, தாக்கங்களை, சூழல்களை, வேதாகமக் கருத்துக்களோடு ஒப்பிட்டு காட்சி வடிவங்களாகத் தருவது, கிறிஸ்தவ கவிதை மரபில் எவரும் செய்யாத இலக்கியப் பதிவு!

மற்றும், கவிஞரின் பரந்த பார்வைக்கு முக்கிய எடுத்துக் காட்டு, எழுப்புதல்துறவி, மார்ட்டீன் லுத்தரின் வாழ்க்கைப் பதிவாகும். ரோமானியத் திருச்சபையின் ஆடம்பர அரசியல் போக்கின் விளைவாக மலர்ந்த, எதிர்மறுப்போர் திருச்சபை காலச் சூழற்சியில் மீண்டும் அரசியல் பீடங்களாகவும், ஆதிக்கப் பிரிவுகளாகச் சிதறிப் போனதையும், ஒப்பனை ஊழியங்களையும், வேதனையோடு கட்டிக்காட்டுவது, கவிஞரின் விரிவான பொது நிலைத்துவத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டு, ரோமன் கத்தோலிக்கச்

சபை முதல் பெந்தகோஸ்தே சபை வரை உள்ள இறையியல் முரண்பாடுகளை எதையுமே விட்டு வைக்கவில்லை இவரது எழுதுகோல்!

கவிஞன் காலங்களைக் கடந்தவன்: நான் நேசிக்கும் இக் கவிஞர் தன் வாழ்வில் பல்வேறு போராட்டங்களையும். பள்ளத் தாக்குகளையும் தாவீதைப்போலத் தாண்டி வருபவர்! கவிதைகள் மட்டுமல்லாது தனது தனித்துவப் பாடல்களாலும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடு உலக நாடுகளில் ஒளிக்கீற்றாக ஊழியஞ்செய்துவரும், இந்த எழுப்புதல் கவிஞரை, மியூசிக் மைண்ட்ஸ் சார்பாக வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்!

இந்த எழுப்புதல் கவிதைகளை வாசிக்கும் போதே , உங்களைப் போல எனக்கும் பல அதிர்ச்சிகள், ஆச்சரியங்கள், கேள்விகள் எழும்பின. ஆனால் அதற்கான அத்தனை பதில்களும் இந்த எழுப்புதல் கவிதைகளுக்குள்ளேயே அடங்கியிருப்பது ஆழமான உண்மை! கிறிஸ்தவ இலக்கிய உலகம் தேக்கமடைந்த இச்சூழலில், தீப்பந்தங்களை விடியலுக்காய் சுமந்து வரும் இத்தொகுப்பு மிகச் சரியான வரலாற்றுப்பதிவு! கவண்கல் கவிதை களை வாசியுங்கள். இக்கவிதைகள் உணர்த்தும் உண்மைகளைச் சற்று யோசியுங்கள்!

Dr. **வின்சென்ட் ஜார்ஜ்,**<br>
**தலைவர்**<br>
**மியூசிக் மைண்ட்ஸ்**<br>
**சென்னை-24**

# சரித்திரச் சவால்...

''சிலுவை சித்தர்'', ஜோசப் மோகன் குமார் அவர்கள் ஆண்டவரின் திருப்பணி ஆற்றும் ஒரு தேவமனிதர். வார்த்தை களோடு நின்றுவிடாது, அவைகளை வாழ்க்கையாக்க வேண்டு மென்ற உயிர்த்துடிப்பு உள்ளவர். இவருடைய இவ்விதயக் குரல், இவருடைய கவண்கல் கவிதைகளில் தொனிக்கின்றன.

தேவப் பிரசன்னத்தில் கர்ப்பம் தரித்து பெற்றெடுத்த இக்கவிதைக் குழந்தைகளை தியானித்து, தேவபிரசன்னத்தோடு ஒண்றித்துவிட உங்களுக்கு சவால் விடுகிறேன்.

கர்த்தர் தாமே இவருடைய ஊழிய முதலீடுகளைத், தொடர்ந்து தேசங்களுக்குள்ளாகப் பரவச் செய்வாராக! இவருக்கு இயேசுவின் நாமத்தில் எனது வெற்றி வாழ்த்துக்கள்!

**கிறிஸ்துவின் பணியில்**

REV. Dr. **டட்லி எம்.தங்கையா**

**தலைமை போதகர்**

**(புதுவாழ்வு சபை ஊழியங்கள்)**

**மதுரை.**

## மைல்கல்...

*பேராயர், ஜோசப் மோகன் குமார் அவர்கள் தேவனுடைய கிருபையினால் முன்குறிக்கப்பட்டு ஏற்றவேளையில் தேவனால் இந்த கனமான ஊழியத்திற்கென்று அழைக்கப்பட்டு ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டு இயேசு கிறிஸ்துவின் இறையரசுக்குப் பிரயோஜனமானதும் விலையேறப் பெற்றதுமான ஓர் பாத்திரமாவார். இவரின் தகப்பனாருக்குள்ளிருந்த சிறந்த ஞானத்தையும் சுதந்தரித்துக்கொண்டு, இளவயது முதல் தேறி வந்தார். கர்த்தருடைய மகிமையான இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றபின், ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அறிவுக்கெட்டாத அன்பினை கவிதைகள், கட்டுரைகள், பிரசங்கம் இவைகளின் மூலமாய் மிகவும் திறம்பட எடுத்துரைப்பதில் வல்லவரானார். இவர் எழுதிய பாடல்களில் எழுப்புதல் உணர்வை உருவாக்கக் கூடியதாயும், மற்ற சில படைப்புகள் அவரது எழுப்புதல் பாரத்தை உறுதிப்படுத்தக் கூடியதாயும் இருக்கிறது. திரைப்படத் துறைக்கே இயேசுவை அறிவிக்க தீர்மானித்திருப்பது இந்தியாவில் கிறிஸ்தவ வரலாற்றை தீர்மானிப்பதற்கு ஓர் மைல்கல் ஆகும். இவரும், இவரது துணைவியாரும் ஒரு மாபெரும் எழுப்புதலை நிச்சயமாய் கொண்டு வரவேண்டும் என்று வாழ்த்துகிறேன்*

**கர்த்தர் இவர்கள் ஆசீர்வதிப்பாராக!**

**கிறிஸ்துவுக்குள் அன்புள்ள**
**போதகர். விக்டர் தர்மராஜ்**
**(புதிய ஏற்பாட்டு சபை)**
**சென்னை.**

# சிலுவைச் சித்தரின் சீர்திருத்தக்குரல்!

*கர்த்தரின் கனமான அழைப்பை பெற்று, பல்வேறு வருடங்களாக மக்கள் தொடர்பு, ஊடக, இசை, மற்றும் இலக்கிய ஊழியம் செய்துவரும், பேராயர், ஜோசப் மோகன் குமார், மதுரை காமராஜ் பல்கலை கழகத்தில் எம்.ஏ., காந்திய சிந்தனையும், செனட் செராம்பூர் பல்கலை கழகத்தில் இளநிலைஇறையியல் பட்டப்படிப்பும், நான்கு பல்வேறு பல்கலைக் கழகங்களில் அறிவர் பட்டமும் பெற்றவர். தஞ்சையில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் (1995) புதுக் கவிதைக்கான, முதற் பரிசையும், தமிழக அரசின் விருதினையும் பெற்றவர். 'மோனப்பிரியன்', 'யுரேகா லெமூரீயன்' என்ற புனைப் பெயர்களும் இவருக்கு உண்டு! தனது இறைசெய்திகள், கவிதைகள், பாடல்கள் மூலமாக உலகமெங்கும் இறை எழுப்புதலை பதியமிட்டுவரும் இவர், 'சிலுவைச் சித்தர்', கவியரசு, 'கலைமுதுமணி', 'அருட்கலைமாமணி', 'எழுப்புதல் கவிஞர்', 'செவாலியே' போன்ற பல்வேறு சிறப்பு பட்டங்களை பெற்றவர்! ஆங்லிகன் திருச்சபையில்(ACI)தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பேராயத்திற்கு பேராயராகவும், தமிழ் சுவிசேஷ லுத்தரன் (T.E.L.C) திருச்சபையில் கௌரவ ஆயராகவும் பணிபுரியும் இவர், பன்னாட்டு லுத்தரன் கூட்டமைப்பு ILCC -யின் தலைவராகவும் பணிபுரிகிறார்! தமிழ் திரைப்பட உலக மக்களுக்கு கோலிவுட் டூ கொல்கதா எனும் ஒரு உலகின் முதல், திரைப்பட உலகிற்கான திருச்சபை ஒன்றை நிறுவி, இறைபணியோடு, திரைபணியும் செய்து வருகிறார்! அளவில்லா அருட்பொழிவோடு அனைத்துதிருச்சபைகளுக்குள்ளும், கடந்து சென்று நற்செய்தியை அறைகூவலாக, அறிவித்துவரும் இந்த எழுப்புதல் பேராயர், இத்தொகுப்பின் மூலம், வனாந்திர சத்தமாக வரலாற்றில் இடம்பெறுவார் என்பது இறை உறுதி!*

பராபரன் திருப்பணியில் -

அருள்திரு. முனைவர் E. **ஜான்சன் ரெத்தினசாமி,**

**தூய இம்மானுவேல் லுத்தரன் தமிழ் திருச்சபை**

**அமெரிக்கா.**

# வெளிச்சத்தின் விலாசங்கள்!

*உங்கள் கவிதையின் மூலம், உங்கள் ஆதங்கம், கோபம், எரிச்சல், வேதனை, நம்பிக்கை, பொறுப்புணர்வு, நசரேத்தூரானின் மீது கொண்டுள்ள காதல் மிகவும் வீரியத்துடன் வெளிப்படுகின்றன!*

*கனத்துடன் வந்துள்ள உங்களது கவிதைகள் கனவுலகினை கலைத்து, கலக்கி, நிஜத்தை நிதர்சனப்படுத்துகின்றன!*

*ஒவ்வொரு வரிகளுமே, அடிமரத்தில் வைக்கப்பட்டுள்ள கோடரிகள் போன்று கூர்மைப்படுத்தப்பட்டுள்ளன!*

> **''பாநிலத்தில் குரல் ஒன்று முழங்குகின்றது.**
> **ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள்,**
> **அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள்!''**

*என்ற இறைவாக்கினர் ரசாயாவின் குரல் குறித்த, திருமுழுக்கு யோவானின் குரலை, உங்கள் எழுதுகோல், ஓங்காரமாக, ஆங்காரமாக, ஆக்ரோஷமாக, ஓங்கி ஒலிக்கிறது.*

**செல்வி பாமா,**
**(நாவலாசிரியை)**

## சிலுவைச் சித்தர்.
## ஜோசப் மோகன் குமாருக்கு என் ஆசிகள்!

*உரக்கச் சத்தமிடும் உங்கள் வரிகள், நெருப்பும், கசப்பும், நேசமும், பாசமும் நெஞ்சைவிட்டு கிளம்ப நிகழ்த்திய வார்த்தைத் துளிகள்!*

*காத்திருந்த எரிமலைக் குழம்புகள் அக்கினிப் பூக்களாய் பூத்திருக்கின்றன! ஒரு சாதனைச் சரித்திரம் தனித்திறம் பெற்று வெளிவந்திருக்கிறது. மாடங்களை வீட்டு மண் குடிசைக்குத் தாவிய ஆவியின் பாய்ச்சலை அழகுறச் செய்துவிட்டீர்கள்! மீண்டும் ஒருமின் பாய்ச்சலுக்குத் திருச்சபையை ஆயத்தப்படுத்த மூண்ட பேராவலில் முழங்கிடும் கவிதைத் தொகுதி; செத்த பிணத்துள்ளும் சத்தினை ஏற்றும் முத்திரை வரிகளின் முழக்கம்!*

*சொல்லும், செயலும் வெல்ல வாழ்த்துக்கள்1*

**பத்மஸ்ரீ. பேர. சாலமன் பாப்பையா**
**மதுரை**

# இரத்தத்தில் உள்ள இறையியல்!

வலம்புரி ஜானுக்கும், வண்ண நிலவனுக்கும் விவிலிய உரையின் வீச்சு பிடிபட்டதுபோல உங்களுக்கும் கவிதையின் உத்வேகத்தை கொடுத்து வருகிறது! சமகால கிறிஸ்தவத்தின் செயற்பாடுகளை, நிலைபாடுகளை கிறிஸ்தவ மணத்துடன் விமர்சனம் செய்வது, உங்களுடைய தொடர்ந்த ஈடுபாடகவும், ஓரளவுக்கு கோட்பாட்டு அவசியமாகவும், இருந்து வருவதையும் புரிந்துகொள்ள முடிகிறது! இத்தொகுப்பு மூலம் ஊடாடுகிற உங்கள் அழகிய கவித்துவம், வாலிப வசீகரம், இரசனைக்குரிய வெளிச்சம் நிரம்பியவையே! எச்சமிட்ட இடத்திலே ஆல் முளைக்கவும், மரம் கிளைக்கவும், பழம் பழுக்கவுமான, காலதூரத்தில் ஒரு பறவை இருப்பதில்லை! பழம் கடித்தல், பசி, எச்சமிடல், இயற்கை! ஆனால், பறந்து கொண்டிருப்பதுதான் வாழ்வு! நீங்கள் வல்லமையுடன் எல்லாவற்றையும் தாண்டுவீர்கள்! தொடர்ந்து எழுதிகொண்டே இருங்கள்! செல்லத்துவங்குகிறவர்கள் அனைவரும், அடையத்துவங்கிவிட்டவர்களே! இரத்தத்தில் இருக்கிற இறையியல் உங்களை வழிநடத்தி நிற்குமாக!

**கவிஞர். கல்யாண்ஜி**
**(வண்ணதாசன்)**

# இறையரசின் இலக்கு நோக்கி....!

*எழுதுவது, எதிரியை கண்டு சிரிப்பதுபோல் எரிச்சலானது! எழுத யோசிக்கும் முன் மரணத்தை யாசித்து விடலாம் என்றிருக்கும்!*

*இமைகள் இறுகிப்போய், கண்கள் கதவடைப்பு செய்கின்றன. உள்மனசுக்குள் ஓர் உள்நாட்டு கலவரம்! உட்கார்ந்திருக்கும் இடத்தை விட்டு உயிர் ஓரடி தள்ளி உலாவ ஆரம்பித்துவிடுகிறது. கண்களுக்குள் கசியும் கந்தகக் குழம்பினுள், நெஞ்சம் நீச்சலடிக்கத் துவங்குகிறது. வார்த்தைகளைப் பிழித்த பிசுபிசுப்பில், ரத்தம் கண்டிப் போனதாய் சுனக்கமடைகிறேன்; எரிமலையின் 'லார்வா',வை போல் இறுகிவிடுகிறேன்!*

*தாயின்மடியில் கன்று முட்டி முட்டி பால் குடிப்பதைப் போல் மோதிவிழுகிறேன்: பின் தேம்பி அழுகிறேன்!*

*பல நேரங்களில் எழுதுவதில்லை. ஆனால் அழுவதுண்டு. அப்பொழுது என் கண்ணீரே கவிதைகளாகி விடுவதுண்டு. ஒரு பெரிய பிரசவத்திற்குப்பிறகு சிறிய குழந்தையாகி விடுகிறேன். தத்தி தத்தி தாயாகி மீண்டும் பழைய அவஸ்தைக்கே படியேறத் துவங்குகிறேன். சுண்டிப்போன ரத்தம் மீண்டும் சுரக்கத் துவங்குகிறது. பூமியைப் போல் என்னை நானே சுற்றிக்கொண்டு எழுத்தையும் சுற்ற ஆரம்பிக்கிறேன்.*

எனது எழுதுகோல், கவிதைக்கு கருப்பையாகிவிட்டது. இப்போதெல்லாம் எழுதுகோல் பிடிக்காத நேரமெல்லாம், விரல்களில் ஒன்று குறைந்துபோனதாகவே நான் குழம்பி விடுகிறேன். இருள், எனது கால்களில் சுற்றிய கண்ணி வலைகளை, பேனாவால் பிரித்தெடுக்க பிரயாசைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

என் கவிதைகள் தாவீதின் கவண்கற்கள்: என் கவிதைகளின் முகத்தில் கந்தகம் வீசுகிறவர்கள், சீக்கிரம் என்னைச் சிலுவையில் அறையுங்கள் ! சிலுவை எனக்கு போதிமரமாகிவிட்டது. மேலும் உயிர்த்தெழுதலின் மேல் எனக்கு உற்சாகமாக இருக்கிறது.

எனது கவிதை இறையியலுக்கல்ல: அடக்குமுறை அரசியலுக்கு மட்டுமே ஆபத்தானவை! வேதாகமத்தை விரலுக்குள் வைத்திருப்பவர்களே: விளக்கம் சொல்லுங்கள்! அளவில் பெருக்கமடைந்திருக்கும் திருச்சபைகள், இயேசுவின் இறையரசுக்காக எந்த அளவில் செயல்படுகின்றன?

சுயவிளம்பரம், காணிக்கை வசூல், போட்டி மனப்பான்மை, அரசியல் உத்திகள், அயல்நாட்டு மோகம், ஆவிக்குரிய தில்லு முல்லுகள் இவைகளால், உணர்வு ஒடுக்கப்பட்ட ஒரு கூட்டம், திருச்சபைகளை புறக்கணித்து எகிப்திற்கே மீண்டும் திரும்பிக் கொண்டிருக்கிறது. சமகால இளைஞனைச் சந்தியுங்கள்: ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டே அவன் ஊனமாகிப் போனானே! இறையியல் - அவனுக்கு அறிவியல் சூத்திரங்கள் போல அந்நியமாகிவிட்டது. இருளின் ஜாடியில் மூடி அவனை புளிக்க வைத்தது போதும்! அவனுக்கு இறையரசின் இலக்குகளை அறிமுகப்படுத்துவதே எனது இறை தவம்! இளைஞர் எழுந்தால் 'பூர்ஷ்வா', களின் அரியாசனங்கள் புரட்டப்படும் என்பது உண்மை!

என் இளைஞனே!

திருச்சபைகள் இருண்டு கிடக்கின்றன!

கெட்டகுமாரர்கள் வீட்டை ஆக்கிரமித்துக்கொண்டு தகப்பனை அடித்து வெளியேற்றுகிறார்கள்: நீ தட்டி கேட்பதில்லையா?

வறுமைவர்க்கம், திருச்சபைகளுக்குள்ளேயே அகதியாக வாழுகிறது:

உனக்கு ஆன்ம வேதனை இல்லையா?

உனக்குரிய சிலுவை, நீ புதைகுழிபோகும்போது வந்தால் மட்டும் போதுமா?

உனக்குரிய உண்மையான அபிஷேகத்தை நீ உணருவ தில்லையா?

கேள்விகள் குவிந்து கிடக்கின்றன: உன் பதில் கேள்விகள் எங்கே? நிமிர்ந்துபார்: நீதியாக வா!

இந்த என் ஏற்றங்காலின் வீரிய வெள்ளப்பெருக்கு தூங்கிக் கொண்டிருக்கும், உன் விலாவில் விழுமானால்,

இதோ...இக்கணமே, இந்த எழுப்புதல் கவிதைப் போர்க்கருவியை, யுகங்களின் சாட்சியாக - காணிக்கையாக உன் கரங்களுக்கு வழங்குகிறேன்!

இது -

உன் வீடு
உன் ஊழியம்,
உன் மக்கள்,
உன் தேசம்,
உன் உரிமை,
உன் சுதந்திரம்,
உன் விடியல்,
உன் மெசியா,
உன் சிலுவை,

உன் உயிர்த்தெழுதல்!
வெளியே வா!

சுரண்டுதலே நீதியாகிப்போன, இந்தச் சூழ்ச்சிகரமான சமுதாயத்தில் ஏழைகளுக்கான நீதி அப்பங்கள், எப்போது பிட்கப்படும்?

உண்மையின் வயிற்றில் உதைகள் விடும் அநீதியின் கால்கள் எப்போது அறுத்தெறியப்படும்?

இயேசு கிறிஸ்துவின், உன்னத நேயங்கள், இங்கு ஒழுங்கு முறையாக வினியோகிக்கப்படாவிடில், திருச்சபைகளின் திருட்டு ராஜவதானிகளுக்கெதிராக, நீதியின் தளைகள், ஒரு ஊழித்தீயை உற்பத்தி செய்யும்!

தாழ்மையான கர்வத்துடன் மெய்யாவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

இந்த இறையியல் கவிதைகள் சாகாது! வாசிக்கும், சுவாசிக்கும் ஒவ்வொரு இதயங்களிலும் இவை வாழும், புன்னகை பறிக்கப்பட்ட ஒவ்வொரு புதைக்கப்பட்டவனுக்கு இவை. போராடிக்கொண்டிருக்கும்!

இவை -

ஆதிக்க வர்க்கத்தின், ஆலோசனை உளறல்களை மொழி பெயர்க்கும், வலாட்டுங் குருவிகளின் வாய்ப்பாடுகள் அல்ல:

புரட்டு ஏரோதுக்களின், போலி முகமூடிகளை கிழிக்கப்போராடக் கிளம்பும், அக்கினிக் குதிரைகளின் ஆவேசப்பயணம்!

இவை -

வறட்டு வக்கிரங்களுக்கு, முதுகு சொரிந்துவிடும் நீலப்படங்கள் அல்ல: ஏகாதிபத்தியத்தின் விலாவைப் பிளந்து எடுக்கப்பட்ட 'எக்ஸ்ரே' படங்கள்!

இவை -

வைரக்கிரீடங்கள் அணிந்து, வாசனைத் தைலங்கள் வழியும், செங்கோல்கள் அல்ல:

முள்முடி சுமந்து, காடியின் கசப்பை ருசித்து, விறகாக பிளக்கப்பட்ட கருவேல மரச் சிலுவைகள்!

வெட்டறுவாள்கள் மத்தியில் வெண்சிறகுகள் அசைத்து 'வீனஸ்' தேவதையைப் போல வலம் வராது என் கவிதை!

மனிதநேயம் சுமந்து ஒரு 'ஹெர்குலீஸ்' போல எழுந்து நிற்கும் என் கவிதை!

அடிமனதில் அக்கினி வீசும்போது வெறித்தனமான இந்த போராட்டக் கருவியைச் சுமந்தபடியே என் விரல்கள் அசையும்!

கல்லறைப்பாறையை கவிதைகளால் புரட்டும் என் எழுது கோல் நெம்புகோல், புஷ்பிக்காத பூமியை கொழுவாக கிளரும்!

அடிப்படை உரிமைகளுக்காக அடிமைகளுக்காகப் போராடும், இக்கவிதைகளில் ஒடுக்கப்பட்ட கிறிஸ்தவத்தின் உதிரம் ஒழுகாவிடில், அத்தனை கவிதைகளும் ஆண்மை இல்லாதவை என அர்த்தங்கொள்ளுங்கள்!

என் எழுத்துக்களுக்கு அவ்வப்போது அடைக்கலப் பட்டணங்களாயிருந்த, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், தலீத் ஆதரமையம், தமிழ்நாடு இறையியல் கல்லூரி, அருணோதயம், தரு, வான்மலர், பூக்கூடை, உன்னத சிறகுகள், இறையியல்

*மலர், குருத்தோலை, ஆகியவற்றை நன்றியோடு நினைவு கூறுகிறேன்!*

**‘சிலுவைச் சித்தர்’**

**ஜோசப் மோகன் குமார்**

தலைவர்

பன்னாட்டுக் கிறித்தவத் தமிழ்ச் சங்கம்

சென்னை - 600 024

# பொருளடக்கம்

யூத நிலவு.....! ........ 25
விதையின் கதை!........ 28
கல்லெறிய வந்தவர்கள்..... ........ 29
முன்னணையின் முதல் புரட்சி ........ 34
முதற்ச் செங்கல்; முற்போக்கு லூத்தர்! ........ 38
ஹைகூ! ........ 41
மாட்டுக் கொட்டில்! ........ 42
ஆதி! ........ 44
ஹைகூ! ........ 46
துலாக்கோல்! ........ 47
சுமையின் சிறகு! ........ 48
ஹைகூ! ........ 49
அசைபோடும் உயர்திணைகள்! ........ 50
விளம்பரம்! ........ 51
கரண்ட் கட்! ........ 52
ஹைகூ! ........ 54
வெளியேவராத விடிவெள்ளி! ........ 55
உலகத்தை ஜெயித்த ஒற்றை மேகம்! ........ 58
திறக்கப்படாத கல்லறை! ........ 61
விஷக்கனிகளால் விலக்கப்பட்ட ஒலிவ மரம்! ........ 65
ஹைகூ! ........ 67
பேஷன் ஷோ! ........ 68
ஊனப்பட்ட வானம்! ........ 70
ஹைகூ! ........ 73
அடித்தல் திருத்தல் இல்லாத ஆன்மீகம்! ........ 74
யுத்தப் புகையில் யுரேனிய ரோஜா! ........ 77
புதிய ஏதேன்...!........ 81
ஹைகூ! ........ 83

ஒரு ஆலயத்தின் கதை...! ........................................ 84
இரண்டாம் பிரசவம்...! ........................................ 89
ஆட்டுத் தொழுவம்....! ........................................ 93
எங்கள் கிறிஸ்மஸ் மரம்! ........................................ 96
நீ மின்மினி அல்ல! ........................................ 99
திருக்கூத்து! ........................................ 102
நன்றிக் கடன்! ........................................ 106
விஷக்கனிகள்! ........................................ 107
இதோ மனிதன்....! ........................................ 112
‘‘நல்’’ அடக்கம்! ........................................ 115
ஆண் - பெண்! ........................................ 115
ஒடுக்கப்பட்டவனே உண்மையான தலீத்...! ........................................ 116
கி.பி.யின் எல்லையில் ... ........................................ 119
நியாயத் தீர்ப்பு! ........................................ 121
ஒரு இரத்த சாட்சி! ........................................ 127
கலாச்சாரக் கழுதை! ........................................ 130
பட்டுப்போன கிறிஸ்மஸ் மரம்! ........................................ 131
ஹைகூ! ........................................ 132
வேதவினாடி - வினா! ........................................ 133
ரத்தச்சொட்டு! ........................................ 135
உபதே(வே)சிகள்! ........................................ 136
சிவப்பு வானம் செய்வோமாக! ........................................ 137
வடுக்களின் வாழ்க்கை ! ........................................ 140
தனத்தின் விழிகளுக்காக...! ........................................ 142
கடைசி மணிவேளை...! ........................................ 143
இரவுச் சூரியன்! ........................................ 144
வேறுபாடு! ........................................ 145
அம்புலி அப்பம்! ........................................ 146
போலியும் - கேலியும்! ........................................ 150

நிஜம் எது? .................................................................. 151
நீதியில் பிரியமாயிருக்கிறேன்... .............................................. 154
விலை! ........................................................................ 157
சிலுவை சுமக்கலாம் வாருங்கள்! ............................................. 158
கர்த்தரைக் காதலிக்கிறேன்... ................................................. 163
ஹைக்கூ! ..................................................................... 164
தாகத்தால் தவிக்கிறோம்! ....................................................... 165
விழுவதும் - எழுவதும்! ......................................................... 167
இரத்த தானம்! ................................................................ 168
இறையியலா? - பொறியியலா? ................................................ 169
அவர் இங்கு இல்லை ! ........................................................ 170
எழுப்புதல் எப்போது? ......................................................... 172
சக்திகளே சாவிகள்! ............................................................ 175
சம்பிரதாயங்கள் ! .............................................................. 177
எழுந்திரு வாலிபா! ............................................................. 178
திடன் கொள்! ................................................................. 182
முரண்! ........................................................................ 185
பரிசுத்தத்தின் பரிணாமம்....................................................... 186
வாசல்களைத் திறவுங்கள்! ..................................................... 188
சிறகு சிலுவையானது! ......................................................... 190
நெருப்புச் சுவாசம்! ............................................................ 192
முத்தங்கள் விற்பனைக்கு... ..................................................... 194
பைரசி! ........................................................................ 196
உழவர் சந்தையும் - உயிர்த்தெழுந்த யூதாஸ்களும்! ................... 197
8-ம் வார்த்தை ! ................................................................ 200
அழுக்கு அப்பங்கள்! ........................................................... 201
கன நித்திரை! .................................................................. 204
ஒரு அடிமையின் ஜெபம்! ...................................................... 205
எதிர்காற்று! ..................................................................... 206

சாம்பல் மேட்டில் ஒரு சங்கீதக்காரன்! ..................................... 207
தஞ்சை தந்த புஞ்சை! ..................................................... 210
கனவு காணுங்கள்! ........................................................ 218
அஃறிணைகளும் - உயர்திணைகளும்!......................................... 223
கிறிஸ்மஸ்மரம் Vs சிலுவைமரம்! ........................................... 227
தேவ சித்தம்! ............................................................ 231
காலம் மாறிப்போச்சு! .................................................... 238
காய்கறி வியாபாரம்! ...................................................... 240
பரம குயவனும் - பாத்திரமும்! ............................................ 243
மரியாளின் துதிபாடல்! ................................................... 249
நட்சத்திரங்களும் சீரியல் செட் பல்புகளும்! ............................. 254
பழைய கல்யாண கோட்!...................................................... 259
புலம் பெயரும் யோசேப்புகள்! ............................................ 261
சிலுவைச் சித்தன்! ....................................................... 265
சிலுவையும் - சிலந்திப்பூச்சிகளும்! ..................................... 267
காணிக்கையின் கதை! ...................................................... 274
எழுப்புதல் எது? ......................................................... 280
துதி ஆராதனை! ........................................................... 286
உப ''வேஷம்''!............................................................ 292
வேரில்லா கிறிஸ்மஸ் மரங்கள்!............................................ 299
வாக்குத்தத்தம்! ......................................................... 306
வேத விசாரணை! ........................................................... 313
இயேசு எந்த சாதி...? .................................................... 319
பிதா பேசுகிறேன்...!...................................................... 320
கூட்டுப்புழுவின் பரிணாமம்!.............................................. 329
இயேசுகிறிஸ்து எந்த சாதி?............................................... 332
கல்யாண மொய்!............................................................ 333
ஆன்மீக அரசியல்!......................................................... 334
எது திறப்பின் வாசல்?.................................................... 335
மரம்- இறையியல் பார்வை!................................................. 339

(வாக்கு) வாதம்! ........................................................ 342
‘சாதி’ தாண்டி சாதி! ................................................... 343
கொரோனா செய்த ஊழியம் ........................................... 345
பாவ அறிக்கை! .......................................................... 345
நித்திரைக்குப் பயப்படாதே! ........................................... 346
ஒரு ஆலயம் பேசுகிறது! ................................................ 347
மீண்டும் அடிமரம் துளிர்க்கும்! ....................................... 350
இன்றையத் திருவசனம்!................................................. 354
நிர்வாண நடனங்கள்!..................................................... 355
வேத தத்துவம்! ........................................................... 357
மழை வெள்ளம் + மனுவேலன்! ..................................... 358
தாழ்மையும் - மேன்மையும்!........................................... 361
சலிப்பூட்டும் இருமல் போதனைகள்!.................................. 364
ஊரடங்கில் நிகழ்ந்த உயிர்த்தெழுதல்! ............................. 368
கிருமியும்- கருமியும்! ................................................... 372
‘ஹைடெக்’ கிறிஸ்மஸ்!................................................. 375
சாத்தானின் சிறுநீர்! ..................................................... 379
என் வேளை இன்னும் வரவில்லை ...! ............................. 382
காணாமல் போன ஒற்றை ஆடு கண்ணீருடன் பேசுகிறது.......... 385
ஆணிகள் பேசுகின்றன! ................................................. 389
வெஜ் - நான் வெஜ்!..................................................... 392
பன்றிகளின் இறைவேண்டல்!.......................................... 395
மீன்கள் பேசுகின்றன!................................................... 398
கிறிஸ்த்துப் பிறப்பு வாழ்த்து! ........................................ 402
சித்தியும் - முக்தியும்!................................................... 405
இரண்டாம் சலவை!....................................................... 407
இயேசுவின் தமிழ்தேசியம்! ........................................... 410
தவளையும் - இறையியலும்! .......................................... 414
ஒரு கல்லறைத் தோட்டத்தின் கண்ணீர் கன்டனம்!................... 417

கிறிஸ்தவ வர்ணாசிரமம்! ........ 422
இயேசுவின் கேள்வி! ........ 423
நாற்காலி! ........ 424
கிறிஸ்தவ ஆத்திச்சூடி! ........ 425
சிவப்பு நிருபம் செய்வோம்! ........ 426
கர்த்தரிசமே கம்யூனிசம்! ........ 429
போஸ்டர் இல்லாத தொழுவம் ! ........ 433
பனையும் - வினையும் ........ 439
பேச்சு வார்த்தை! ........ 440
வசன கவிதை வழிபாடு! ........ 441
நோவா பேழையின் நுழைவாயிலில்... ........ 449
ஒரு பிரளயத்தின் பிரசவம்! ........ 452
அக்கினிப் பிரவேசம்! ........ 455
முள் மீது மௌனதவம்! ........ 461
வாசலைத் தட்டிய வைகறை! ........ 469
வித்தியாசமான வேள்வி! ........ 475
ஒரு திசைகாட்டியும் சில விறகு வெட்டிகளும்! ........ 482
சிலுவைக் கொழுவும் சிலந்தி வலையும் ........ 495
கதவில் அறையப்பட்ட காலத்தின் கல்வட்டு! ........ 503
நீதியின் நித்திரை கலைந்தது! ........ 514
கயமைக் கல்லறை புரண்டது! ........ 521
விசுவாசத்தின் விலாரத்தம்! ........ 529
பைசா கோபுரம் படுக்கையில் சாய்ந்தது! ........ 534
நீ விசுவாசத்தின் அமுதசுரபி! ........ 540
நீ நியாயத்தின் ரத்தப்பரிசோதனை! ........ 543
அடுத்து வரும் அக்கினி உடுத்திய ஆண்டுகள்! ........ 547
ஆசிரியர் வாழ்க்கை குறிப்பு: ........ 551

●●●



**என் ஆன்மிக வழிகாட்டி**

The Rt. REV. DR. J. **ஞானாபரணம் ஜான்சன்**

**(9ஆம் பேராயர். தமிழ் சுவிசேஷ லூத்தரன் திருச்சபை)**

**அவர்களுக்கு இக் கவண்கல் கவிதைகள் காணிக்கை**

## யூத நிலவு.....!

உயர்திணைகளின்
உறக்கப்போதையில்
அஃறிணைகளின்
ஆச்சரிய விழிப்பில்,
அந்தப்
புதிய ஏற்பாடு
பழைய ஏற்பாட்டைப்
பார்த்துப் புன்னகைத்தது.

அக்கினியில் சாறு
பிழியப்பட்டு,
ஆகாயத்தால்
பாய்முடையப்பட்ட
அந்த,
அடிமை இரவுகளுக்கான
அறுவடைச் சூரியன்,
கந்தல் கதகதப்புடன்
காட்சிக்கு வருகிறது,

✦

பூமியின் அஸ்தமனம்
புரளுகிறது;
அதிசயம்!

புழுக்கைகளின் நாற்றத்தில்
புஷ்பித்த லில்லியை
வண்ணத்துப் பூச்சிகள்
மொய்க்கின்றன!
வல்லூறுகளின்
மத்தியில்...
அடைக்கலான் குருவி
தத்துகிறது.....!

மரங்கொத்திகளுக்கு
மத்தியில்...
மகிமை தளிர்கிறது...!

மதுக்குவளைகளுக்கு
மத்தியில்...
பரிசுத்த ஆவியின்
ஊற்றுக் கண்
உடைகிறது ....

அதிகார ஆக்டோபஸின்
ஆணவக் கரங்களுக்கு
மத்தியில்...
தாழ்மையின் அப்பம்
தகதகக்கிறது!

அருணோதயங்களைப் பெருக்க,
அஸ்தமணங்களை நொறுக்க,
அந்த
அட்சயப்பாத்திரம்
ஆகாயத்தின் முற்றத்திலிருந்து
பூமிக்குப்
பிச்சையிடப்பட்டது!

✦

பௌர்ணமிகளுக்காக
அமாவாசைகளைச்
சுமக்கப்போகும்,
அந்த வானம்
குஞ்சு பொரித்த
யூத நிலவு,

சாபங்களின் மடியில்
வரமாகச்
சயனித்திருக்கிறது!

✦

அந்த,

| | | |
|---|---|---|
| ! | - | குறி |
| X | - | குறியாகி, |
| ? | - | குறியாகி |
| — | - | குறியாகி |
| % | - | குறியாகி |
| ( ) | - | குறியானது… |

ஆச்சரியம்!

✦

எல்லோரும் மகிழ்ந்து
களிகூருங்கள்…

மறுபடியும்
மனித குமாரன்
வந்தார்!

புல்லாங்குழலின்
பூபாளமாக அல்ல…
பூகம்பத்தின்
கர்ஜனையாக!

மெசியாவின்
துரட்டிக்கோல்,
தழைகளுக்காக அல்ல;
ஒடுக்கப்பட்டவர்களின்
உதிரம் உறிஞ்சும்,
தலைகளுக்காகவே
நீளுவது நிஜம்!

●

## விதையின் கதை!

முளைக்காத விதை,
மனிதனின் கதை;
முளைத்த விதை
இயேசுவின் கதை!

●

# கல்லெறிய வந்தவர்கள்.....

அயலான் மீது வீசுவதற்காக
தங்களின்
முன் அனுமதி பெறாமலே
எடுத்துக் கொள்ளப்பட்ட
கருப்பு உள்ளங்கைகளைக் குறித்து
கற்களுக்கு
கடும் கோபமுண்டு.

கற்களை எடுத்தவர்
எவரும் தங்கள்
பழைய பாவங்களை
பரிசோதிப்பதில்லை.

பாவிகளே
பாவங்களுக்கெதிராக
பேசுவது போல்,
கல்லடி
வாங்க வேண்டியவர்களே
கற்களை வீசுவது
இயல்பாகி விட்டது.

✦

தன்மீது
கற்களை வீசியவர்கள் மீது
இவளும்
எதிர்கல் வீசியிருந்தால்
இவரும்
முதற்கல்லை குறித்து
முற்போக்காய் எழுதியிருக்கமாட்டார்.

இரவில் அவளை
நிர்வாணப்படுத்தியவர்கள்.
பகலில் அவள்முன்
நிர்வாணிகளாயினர்.

தரையில் எழுதிய
அவரது விரல் -
தராசு முள்ளானது.

கருங்கற்கள்
எடைகற்களாக
கீழே விழுந்தபோது;

எதிர்தட்டில் இருந்தவர்
எடை குறைந்து
கலைந்து போனார்கள்!

கரங்களுக்கு தக்கபடி
கற்களின்
அளவுகளில், தன்மைகளில்
வித்தியாசம் உண்டு,
விலையும் உண்டு!

வீசப்படுகிற கற்கள் தங்கள்
வீடுகளின் மேலேயே விழுமென்ற
நியூட்டனின் விதியறியாத
(அ) நீதிமான்கள்
கற்களை வீசுவதிலேயே
தொடர்ந்து
கவனமாயிருக்கின்றனர்!

✦

அவன் -
கல்லை அப்பமாக
கேட்டான்;
இவர் -
கற்களால் மோசேவுக்கு -
கடவுள் செய்து தந்த
அப்பங்களை பேசினார்.

அப்பங்களுக்கும், கற்களுக்கும்,
ஆலோசனை சங்கங்களுக்கு,
வித்தியாசம் தெரியாததால்தான் -
திருச்சபையின் பொருளாதாரம்
தேய்மானமாகி விட்டது!

எஸ்றா, நெகேமியா
சாலமோன், சாமுவேல்
சுமந்த கற்கள்
எங்கே? என்று தெரியவில்லை;
மார்பிளும், டைல்சுகளும்
பலிபீடங்களாக பளபளப்பால்தான் -
ஆபிரகாம், எலியாவின்
பலிபீடங்களில்
இறங்கின அக்கினி
இன்னும் இறங்கவில்லை!

✦

கல்லின் மீது
சபையை கட்டுவதாக
அறிவித்தவர்கள் -
வீட்டைக் கட்டுவதிலேயே
வெறித்தனம் காட்டுகின்றனர்.

ஆகாத கற்களின் ஆட்சியில்
முதற்கற்களே மீண்டும்
மூலைக்கு எறியப்பட்டன.

‘கேபா’க்கள் -
‘பாபா’க்கள் ஆனதால்
திருச்சபையின் உள்ளே
தியேட்டரின் நெரிசல்!

ஆலய கட்டிடங்களில்
‘‘காம்ளாக்ஸ்’’ கடை திறப்பு விழாவின்
எந்த கல்வெட்டு கற்களிலும்
எகோவாவின் பெயர் இல்லை;
ஏனெனில் அவர்
வந்த ‘கமிட்டியிலும்’, இல்லை!

✦

மார்ட்டின் லூத்தர்
சீகன் பால்கு
சாது சுந்தர்சிங்
கார்மைக்கேல் போன்ற
மைல் கற்கள்.

காக்கைகள் கொத்தி தின்னும்
காணிக்கை இரைகளுக்கு -
‘டைனிங் டேபிள்களாகி’விட்டன.

✦

கற்கள் பலவிதமான
அளவுகளில் -
நிறங்களில் -
எடைகளில் -
விரவிக்கிடக்கின்றன;

அதனுள்ளே,
கோலியாத்துகளை வீழ்த்துகின்ற
கவண் கற்களை
கண்டு பிடிக்கும் வரை

கருங்கற்களைப் போல்
இருகி கிடக்கும்
இறையியலின் எதிர்காலம்!

✦

சுவிசேஷத்தின் மீது
சுமைதாங்கி கற்களின்
அழுத்தங்கள் இப்போது;

சுமைதாங்கி கற்கள்
சுமந்து செல்லும்
சுவிசேஷ எழுப்புதல் எப்போது?

●

# முன்னணையின் முதல் புரட்சி

FM-ல் மரியாள்கள்,
செல்போன்களில் யோசேப்புகள்,
கிரிக்கெட் ஸ்கோர்
மும்முரத்தில் மேய்ப்பர்கள்,
வழக்குகளின் தொல்லையில்
கிழக்கு சாஸ்திரிகள்,
பென்ஷன் கியூவில்
கிறிஸ்மஸ் தாத்தாக்கள்,
ஏ.ஸி. ரூம், இன்டர் நெட்
வசதியுடன் ஏரோதுக்கள்,
வான மண்டல
'சாட்டிலைட்' நெரிசலில்
வழிகாட்ட முடியாமல் போன
வால் நட்சத்திரம்.

உலக மயமாதலின்
உள்பொருள் சந்தை
நுகர்வுப் பொருளாய்
இயேசு!
முதல் நாள் உயிர்தெழுந்த
கிறிஸ்மஸ் மரம், ஏனோ -
மூன்றாம் நாள்
மரித்துப்போனது!

✦

‘‘தடா‘‘ ‘‘பொடா’’
கவலையில்லை,
‘‘கிடா’’ இல்லாத
கிறிஸ்மஸ் வேஸ்ட்!
‘‘கேக்’’ குடன் ‘‘கோக்’குடன்
கேரல் ரவுண்ட்,
ஏழைகளுக்கான
கிறிஸ்மஸ் ஏது?

ஆலய முற்றங்களில்
அரசியல் கசாப்புக்காரர்களால்
அடிக்கப்பட்ட ஆடுகளும்
உரிக்கப்பட்ட கோழிகளும்
கிறிஸ்துவைப் பார்த்து
கேட்கும் கேள்வி;
‘‘ஏன் எங்களை கைவிட்டீர்?’’

✦

தீபாவளித் திருவிழாவிலேயே
கிறிஸ்மஸ்க்கு ‘‘புதுசு’’ வாங்கிவிடும்
முன்னெச்சரிக்கை கிறிஸ்தவர்கள்,
புனித வெள்ளியின்
முள்முடிகளை
பொறுத்துக் கொள்வதில்லை;
இயேசுவின் கந்தல்
‘சில்க் ஹவுஸ்’களில்
கிடைப்பதில்லை
என்பது புரிவதில்லை!

✦

மாட்டுத் தொழுவமும், மாடுகளும்
மாறவில்லை;
மனிதர்கள் மாறிவிட்டனர்!

நாற்காலிகள்
மாறவில்லை;
நடைமுறைகள் மாறிவிட்டன!

கிறிஸ்மசை ஒரு
பண்டிகையாக பார்ப்பவர்கள்
பரிதாபத்திற்குரியவர்கள்!

திருச்சபையின் தலைமைத்துவம்
மாட்டுத் தொழுவத்திலிருந்தே
புறப்பட்டது;
விடுதலைப் புரட்சியின்
தொழிற் கருவிகள்
ஒரு தச்சனின் கையிலேயே
தரப்பட்டன!

கலிலேயாவின் கலப்பு ரத்தம்,
ஒரு சொட்டுக் கண்ணீராக
உருமாறி
முன்னணையில் வந்து விழுந்தது;
முதல் புரட்சி எழுந்தது;
முன்னணையின் முதல் புரட்சி
ஆலயத்திற்கு வெளியே இருந்தே
ஆரம்பித்தது!

✦

பெத்லேகேமின் எல்லையெங்கும்
இறந்து கிடக்கும் வீரப்பன்கள்;
ராமா முதல்
கும்பகோணம் வரை
ராகேல்களின் அழுகை சத்தம்.
தீயில் கருகிய சிறகுகளோடு
பரமசேனையின் திரள் பாடினர்;

''நமக்கொரு பாலகன் பிறந்தார்
கும்பகோணம் பள்ளியில் அவர்
எரிக்கப்பட்டார்;

கடும் கோபம் அவர்
தோளின் மேல் இருக்கும்!''

✦

பட்டுப் புடவைகளின் சரசரப்புகளின்
பளபளக்கும் பாலியஸ்டர்களின்
நடுநிசி கிறிஸ்மஸ்
ஆராதனை நடுவில் –
உறக்கம் கலையாத
ஒரு சிறுவன் கேட்டான்;

''அம்மா! இயேசு பிறந்துட்டாரா?''
அம்மாவின்
வளையல்கரம் அவன்
வாயை மூடியது;
''உஷ்! பேசாம இருடா!''

சம்பிரதாயங்களால்
கிறிஸ்மஸ் ஏமாற்றப்படுகிறது.
பரலோக ராஜ்ஜியத்தை
சுதந்தரிக்கும்
கள்ளம் கபடு இல்லாத
பாலகர்களாலேயே அது
காப்பாற்றப்படுகின்றது!

முன்னணையின் பாலகனைகுறித்து
உச்சஸ்தாயில் பாடிக்கொண்டு
ஆலயத்தின் உள்ளே
அனைவரும் இருந்தனர்.

தரித்திரர்களோடும், நோயாளிகளோடும்,
வீதியோர சிறுவர்களோடும், பிச்சைக்காரர்களோடு
எப்பொழுதும் போல இயேசு
படிக்கட்டின் வெளியே
பாவமாக உட்கார்ந்திருந்தார்!

●

## முதற்ச் செங்கல்; முற்போக்கு லூத்தர்!

நீ
பல்லாக்குத் தூக்கியின் பாட்டுவரி அல்ல;
ஆன்ம அக்கினிச் சூளையில் நெருப்பை
வார்த்தைகளாகப் பிழிந்தெடுத்த
நியாயப்பிரமாணம் நீ!

✦

புரட்சி எரிமலையாய் நீ பொங்கி எழுந்து
விண்வெளியை நகர்த்தியபோது -
திசைகள் எட்டும் கைகுலுக்கிக் கொண்டன,
சரித்திரத்தின் பள்ளத்தாக்குகள்
சங்கீதங்களால் நிரம்பின!
அன்று உன் வெற்றியின் விஸ்வரூபம் கண்டு
ஆகாயமே அண்ணாந்து பார்த்தது;
சூரியனுக்கும் சுடச் சுட முகம் வேர்த்தது!

✦

இந்த எழுப்புதலுக்கு முன்
எகிப்தின் வாதை இறையியலுக்கும் இருந்தது!
இயேசு கிறிஸ்து
நியாயத் தீர்ப்பு எழுதிய நிலத்தின் மீதும்
ஸ்டே - ஆர்டர்கள்!

திமிங்கலத்தின் வயிற்றில் யோனா இருந்தது போக
யோனாக்களின் வயிறுகளில் திமிங்கலங்கள்!

தண்ணீர் ரத்தமானது - உன் பிரவேசத்தால்
ரத்தம் ரசமானது!
வீதிகள் எங்கும் வெட்டுக் கிளிகள் - இன்று,
பாதைகள் எங்கும் பட்டுப் பூச்சிகள்!
திரும்பிய திசையெல்லாம் கல்மழை; - எனவே
திருச்சபையில் உனக்கு ஒட்டுமழை!

✦

பதவி போதையில் பரிசேயர்கள் வேட்டியைக் கூட
கட்டமுடியாமல் வீழ்ந்து கிடந்தபோது,
திருச்சபையை எழுந்து கட்டுவதற்காக
முதற்ச் செங்கலாய் முன்வந்தவரே;
மார்ட்டின் லுத்தரே!

ஆலோசிக்கத் தேவையில்லாதவைகளைக்
குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்த
ஆலோசனை சங்கங்களை குறித்து
ஆன்மீக மக்கள் ஆலோசனை செய்ததால்,
திருச்சபைக்கு - உன் தலைமையில் ஓர்
எழுப்புதல் தலைமுறை
இலைதளிர் விட்டது!

✦

உன்னைச் சிலுவையில் அறைய -
ஆணியும் சுத்தியலுமாக அலைந்தவர்கள் கூட
பாவமன்னிப்பிற்காக பரிமளத் தைலத்துடன்
உன்பாதங்களை யாசித்தனர்;
கன்னங்களில் முத்தமிட்ட யூதாஸ்கள்,
கால்களில் முத்தமிடக் காத்திருந்தனர்.

உன் நிழலில் இளைப்பாறியவர்கள்
கிளம்பும் போது -
உன் வேர்களை வெட்டியெடுத்துச் சென்றாலும்,
அவர்களை ஆசீர்வதித்த ஆலமரம் நீ!

✦

திருச்சபையின் எழுப்புதல்,
உன் அறைகூவலின் கீழ் ஆரம்பிக்கிறது!
கேள்விக் குறிகளின் முதுகுகளை
ஆச்சரியக் குறிகளாக நிமிர்த்திய உன்
அரசியல் பிரவாகத்தில் - சருகுகள் மட்டுமல்ல,
சரித்திரமே புரண்டு போனது!

அலைகள் சலங்கை கட்டி
ஆவேச நடனமாடவில்லை;
மேகங்கள் ஒன்றோடு ஒன்று
மோதிக் கொள்ளவில்லை;
பூமியின் வயிறு பூகம்பமாய் திறக்கவில்லை! ஒரு
பூ மலர்வது போல் இந்தப் புரட்சி நிகழ்ந்தது!
எரிகோ சுவர் உடைந்து பிளந்தது!

✦

இந்த வெற்றி உனக்கு மட்டும் உரிமையல்ல,
இது நியாயங்களின் தவம்!
ஒவ்வொரு கிறிஸ்தவனின் உயிர் வேள்வி!
ஆன்மீகத்தின் அறைகூவல்!
நோவா கால முதல் கண்ட நூற்றாண்டுக் கனவு!
அடிமைத் திருச்சபைக்கு - நீ
அறிவித்த ஆகஸ்ட் - 15!

✦

திருச்சபையின் நன்னம்பிக்கை முனையே;
இயேசுவின் வலது பக்க இருதயமே!
எல்லைகளைத் தாண்டிய உன்
இறையியல் யாத்திரை! - பாறைகளைப் புரட்டி
பூமியின் இருதயத்தை ஊடுறுவி - ஒரு
யோர்தான் நதியாய் பயணிக்கிறது;
கவிதைக் கரையில் நின்றபடி
கையசைத்து வணங்குகிறேன்!

●

## ஹைகூ!

நெருப்பை முத்தமிட்டது
விட்டில் பூச்சி,
யூதாஸ்!

●

ஒரே அக்கினி
ஒவ்வொரு அக்கினியாய் மாறியது,
மேல்வீட்டு அறையில்!

●

# மாட்டுக் கொட்டில்!

ரத்தச் சிறகுகளுடன்
‘ராபின்’ காபிரியேல்கள்.
சந்தனப் பேழையுடன்
சாஸ்திரி வீரப்பன்.
கொடியன் குளத்தின்
தலையைக் கொய்யும்
கூலி ஏரோதுக்கள்.
விஷச் சாராயத்தில்
வீழ்ந்து கிடக்கும்
வீதியோர மேய்ப்பர்கள்.

வெள்ளித் திரையில்
தொலைந்த வால் நட்சத்திரம்.

கதவுகளைச் சாத்தி
தனியார் தொலைக் காட்சிகளில் மூழ்கிய
சத்திரங்கள்.

ஊழல்களில் சிக்கிய
உடன் பிறப்புக்களால்
வழியும் சிறைகள்,

துப்பாக்கிக் கிடங்குகளே
தொழுவங்களாகிப் போன
ஈழத்தில் பிறக்கும்

முன்னணையில்லாத
இம்மானுவேல்.

தேர்தல் பிரச்சாரங்களில்
வீதியில் வெடித்துப் பிளந்த
ஊனமான சுவரில்
ஓர் விளம்பரம்;

''பிள்ளையை...
'வயர்'களில் சுற்றி
அரசியல் மேடைகளின்
அடியில் வைக்கப்பட்டிருப்பதைக்
காண்பீர்கள்.
அதுவே உங்களுக்கு
அடையாளம்!''

✦

அலங்கரிக்கப்பட்ட
இல்லங்கள்;
உள்ளங்கள்?
வானத்தில் பிரகாசிக்கும்
நட்சத்திரம்;
பூமியில்?

✦

போர்க்களங்ளை
முன்னணைகளாகவும்,
அதிர்வேட்டுக்களைத்
தாலாட்டுகளாகவும்
அனுமதிக்காமல்
ஆசீர்வதியும்
ஆண்டவரே!

●

# ஆதி!

‘ஆதி’யில் வார்த்தை இருந்தது;
அனைவரும் அதை மொழிபெயர்க்க
முண்டியடித்தனர்!
‘ஆதி’யில் அந்த வார்த்தையே
வெளிச்சமானது;
அனைவரும் அதன்மேல்
அரசியல் சமையலுக்கு
அடுப்புக் மூட்டினர்!

✦

‘ஆதி’யைக் குறித்து
பல்கலைக் கழகங்கள்
ஆராய்ச்சி மையங்கள்
வேத விஞ்ஞானக் கூடங்கள்
தங்களது தாடிகளைத் தடவி
தத்துவம் யோசித்தன!

‘ஆதி’யை குறித்த
சங்கீதப் பாடல்களுக்கு
மூச்சுத் திணறியதால் -
தாவீதின் சுரமண்டலம்
தலையை சொரிந்தது!

செங்கடலில்
இஸ்ரேலருக்கான
பாம்பன் பாலம்;

'பென்சிலாக' மாறிய
ஆரோனின் கோல்!
அன்னிய பாஷைக்கு
'கோனார்' நோட்ஸ்!

அரசியல்வாதிகளுக்கு
பொன்னாடையான
எலியாவின் சால்வை!
'கோமா'வில்
தோமா!
'ஆதி'க்கு
அழுகை வந்தது!
அனைவரும் தம்தம்
'செக்புக்' குகளைத் திறந்து
கானான் தேசத் தொகுதிகளை
விலைபேசினர்!
'ஆதி'க்கு ஆத்திரம் வந்தது;
கடலை உசுப்பி
கரைகளை உடைத்தது!
'ஆதி' தன்
'ஆதி'யின் பதவியை
ராஜினாமா செய்து
வானத்தை சுருட்டி
வனாந்திரம் சென்றது!

✦

ஆகாயமே இல்லாத
பூமியில் தன்னை,
'ஆதி' என்று

அதிகாரப் பூர்வ
அறிவிப்பு செய்தான்
ஒருவன்;

‘ஆதி’யில் நான்
‘ஜோதி’ என்றான்
மற்றொருவன்!

✦

அனைவரும்
‘ஆதி’ யாகும்,
அரசியல் கூத்தில்
‘ஆதி’ யாராக மாறியது? என
அனைவருக்கும் தெரியவில்லை;
ஆலயகமிட்டிக்கும் புரியவில்லை!

●

## ஹைகூ!

ஆடுகள் இன்று
கசாப்பு கடையை நோக்கி...
நாளை கிறிஸ்மஸ்!

●

எங்கள் வீட்டில்
கிறிஸ்மஸ் கிடையாது...
சிலுவை சுமக்க முடியாது!

●

# துலாக்கோல்!

ஆலய ஆராதனை
துவக்கம்.
கம்பீர ஆர்கன்
ஒலி,
அங்கிகளின்
அணிவகுப்பு.
தங்கச்சிலுவையின்
தகதகப்பு.
ஒரு
கான்வென்ட் பூ
கன்னத்தைத் தடவியது
‘‘தாத்தா!
அவரு எதுக்கு
அவ்வளோ பெரிய
குச்சி வைச்சிருக்காரு?

சுயத்தின் தலை
படமெடுத்தது;
‘‘அதுவா?
தாக்க வர்ற எதிர்கட்சிக்காரனுங்கள
தடுத்து நிறுத்தி
தப்பிக்கத்தான் கண்ணு!’’

பி.சி.யில்
அடிவாங்கிய பூனை
பழிவாங்கியப் புலியாகி
மிடுக்குடன் மீசையைத்
தடவிக் கொண்டது.

## சுமையின் சிறகு!

உமக்கொரு
நாற்காலி இல்லை;
உம்மையே
நாற்காலியாக்கி விட்டனர்.

கள்வனைப் போல்
வருவீர்; என்றீர்;
காவல் துறையை
நிறுத்தி வைத்திருக்கின்றனர்.

சாம்பல் கிடைக்காத
யோபுக்கள்
'ஸ்டே ஆர்டர்' வாங்க
நீதிமன்றங்கள் தோறும்
நிற்கின்றனர்.

நீதிபதிகளே பேராயர்கள்,
'லாயர்'களே ஆயர்கள்,
லட்சியங்களுக்காக
பிளக்கப்பட்ட திருச்சபை
லட்சங்களுக்காகப்
பிளக்கப்படுகிறது.

''பணம் பறிக்க
பைபிளைப் பயன்படுத்துபவன்

துரோகி,
சிலுவையை
கத்தியாகப் பயன்படுத்தும்
வஞ்சகன்!''
கலீல் கிப்ரானின்
கத்தி முனையில்
கழுத்தை வைக்கிறது
நிகழ்.

●

## ஹைக்கூ!

குடிசை இருண்டு கிடக்கிறது...
கோவிலுக்குள் விளக்கெரிகிறது -
கோவில் பிள்ளை!

●

போட்ட உண்டியலை
எடுக்க இயலாதா?
ஒரு உபதேசியார்!

●

# அசைபோடும் உயர்திணைகள்!

அவரவர் இல்லங்களுக்கு
வழிகாட்டினால் போதுமென்ற
சுயநல சுவிசேஷத்துடன்
வாசல்களைத் தாண்டாத
60 வாட்ஸ் காகித
வால் நட்சத்திரங்கள்!
இறையியலின் கதவுதிறக்கும்
இயந்திர பரபரப்பில் -
ஆவின் 'பூத்து'களாகப் போன
மாட்டுத் தொழுவங்கள்!

கலிலேயா ஜெயிலிலும்
கலவரம்;
சத்திரங்கள் எங்கும்
சட்ட ஒழுங்கு கதவடைப்புகள்!

வருமானத்திற்கும் அதிகமான
சொத்து சேர்த்த வழக்கில்
எஸ்டேட் ஏரோதுக்கள்!

பெத்லேகம் எங்கும்
யுத்தத்தைவிட புழுதி பறக்க
கார்கில் யுத்த நிதிக்கான
கலை நிகழ்ச்சிகள்!

சினிமா ஸ்டார்களை பின் தொடர்ந்து
திரையரங்க டிக்கெட் கவுண்டர் நெரிசலில்,
பரிசுப் பொருள்களுடன்
'பர்சு' களையும் பறிகொடுத்த
பரிதாப ஞானிகள்!

வானுக்கும் பூமிக்குமுள்ள
வர்த்தக மாநாடு
தோல்வியில் முடிந்தது -
நமக்கொரு பாலகன் கொடுக்கப்பட்டாலும்,
மரபணு சோதனையில்
மரியாளும்
யோசேப்பும்!

●

## விளம்பரம்!

மிஷினரியைத் தாங்குகிறோம்;
தசமபாகம் தருகின்றோம்;
ஆவிக்குரிய பெருமையில்
அலட்டுகிறவர்கள் அறியவில்லை;
வலக்கைக்கும் இடக்கைக்கும் உள்ள
வித்தியாசத்தை!

●

## கரண்ட் கட்!

கிறிஸ்து யாரென்று
ஏரோதுக்கு குழப்பம்
அன்று;
ஏரோது யாரென்று
எல்லோருக்கும் குழப்பம்
இன்று!

✦

உழவர் சந்தைகளான
ஊசி கோபுர ஆலயங்களில்
கோழிக் கறியைவிட
குறைவான கொள்முதல் விலையில்
கொல்கொதா மாம்சம்!

✦

தமிழ்நாடு கருவேல மரங்களை
'ஈவ் டீசிங்' செய்யும்
'தைவான்' கிறிஸ்மஸ் மரங்கள்!

✦

ஆஸ்துமாவில்
ஆத்துமாக்களை சந்திக்க முடியுமா?
கிறிஸ்துமஸ் தாத்தாக்கள்!

✦

தபால் இலாக்காவின்
சத்திர கதவு மூடுதலால்
தாமதமான கிறிஸ்து பிறப்பு!

✦

குளிரிலும் சேவை செய்யும்
கூரியர் சர்வீஸ்களாய்
60 வாட்ஸ் நட்சத்திரங்கள்!

✦

சித்தி தொடர்
சி.டி.அதிர்வுகள்
அரசியல் பஜனைகள்
அபாய கூச்சல்களில்,
அமுங்கிப் போன
மரியாளின் துதிபாடல்!
ஏ.ஆர்.ரகுமான்
கோரஸ் குழுவில்
பரம சேனையின் திரள்!

✦

நரபலிசாமியார்,
வயாகரா விளம்பரம்,
குடும்பக் கட்டுப்பாடு,
கோகிலா எங்கே போகிறாள்?
சமத்துவபுரம் நூறு,
உலக அழகி யாரு?
கம்ப்யூட்டர் வசதியுடன்
கடத்தல் தாதாக்கள்!

''கன்னட ராஜ்குமார்
கடத்தப்பட்டார் - ஆனாலும்
கலிலேயா குமாரன்
கொடுக்கப்பட்டார்!

அறுப்பு குறைந்து
ஆட்கள் அதிகமாகிப்போன
நெருக்கடி நிலையிலும்,
அழிவைக் குறித்த அச்சத்திலும்,
பழகிப்போன
பண்பாட்டு நெரிசலிலும்,

ஓட வேண்டிய
ஓட்டப் பந்தைய
தடகளத்தில்
சாவகாசமாய்,
நடந்து வந்தது,
நம் தவறுதான்!

✦

ஆடுகளாக அல்ல;
அரபுக் குதிரைகளாக
சேனைகளுக்குள் பாய்ந்து;
உலகத்தை ஜெயித்து
ஊழியத்தை விதைப்பதே,
கிறிஸ்து பிறப்பின்
அர்த்தத்தை புதுப்பிக்கும்!

●

## ஹைக்கூ!

இடுப்பிலே கயிறுகட்டிய
இரண்டுகால் வெள்ளாடுகள்,
ஆயர்கள்!

●

# வெளியேவராத விடிவெள்ளி!

இருமினால்
புகை வருகிறது!

கருப்பு எண்ணையாகிப் போன
கலிலேயா கடல்...
சீமோன் பேதுருக்களின் படகுகளில்
எந்திர துப்பாக்கிகள்....

விமானங்களுக்கும்
பறவைகளுக்கும்
வித்தியாசம் தெரியவில்லை...

விமான சத்தம் கேட்டால்
பதுங்குகின்ற மனோபாவம்
பழகிவிட்டது.....

வெடிச் சத்தம் கேட்டால்தான்
தொட்டிச் செடிகள்
பூக்கின்றன...

'ஆந்த்ராக்ஸ்' பீதியில்
'பான்ட்ஸ்' பவுடரையும்
பார்க்க பயம்...
திடீரென
தீண்டாமையில் -

தபால்காரர்...
கிறிஸ்மஸ் மரத்தில்
துப்பாக்கிகளை
தொங்கவிடும் சிறுவர்கள்...
இது
வளர்சிதை மாற்றமா?
வரலாற்றின் ஏமாற்றமா?

✦

மனுஷ குமாரனின் பிறப்பு....
மாட்டுத் தொழுவத்திலா?
மலை குகையிலா?

காபூல் முதல்
பெத்லேகம் வரை
ஆபேல்களின் அழுகுரல்கள்!

வடக்கு கூட்டணி படையின்
முன்னேற்றத்தால்
கிழக்கிலிருந்து
வராமலேயே போன
வான சாஸ்திரிகள்!

வழி தெரியாமல்
வர்த்தக மையத்தில்
நசுங்கிப் போன
நட்சத்திரம்!

கட்டிடங்களை தகர்க்கும்
கசாப்பு இறையியலின்
புகை நெடியில்
தொலைக்காட்சிகள்
தும்முகின்றன.

ஒரு லட்சம்
'ஒசாமா'க்களின் நடுவில்
ஒற்றை இயேசு!

மனுஷ குமாரன்
தலைசாயும் இடமெல்லாம்
மனித குண்டுகள்!

தேசங்கள்
தொலைக்காட்சிகளாகி விட்டன.
தீவிரவாதம்
'ரிமோட் கண்ட்ரோலாகி' விட்டது.

எல்லா அதிர்வுகளையும்
உள்வாங்கி
உயரத்தில் மிதக்கும்
உலைகலனாய் பூமி!

✦

குயவனின் சக்கரம்
களிமண்ணை வனைகிறது?
காலச் சக்கரம் சுழல சுழல
மனிதன் மட்டும்
இன்னும் களிமண்ணாய்!

'குளோனிங்' நுட்பத்தில்
ஆடு வந்தது?
மனிதன் வரலாம்...
பூமி?

எனக்கு நம்பிக்கையுண்டு!
இந்த
யுத்த கள பூமியிலும்
எங்கோ ஒரு இடத்தில்
குண்டு வீச்சு இல்லாத
ஏதோ ஒரு
ஏதேன் தோட்டம் இருக்கிறது!

●

# உலகத்தை ஜெயித்த ஒற்றை மேகம்!

வண்ணத்து பூச்சியின் சிறகுகளை
ஆணிகளால் அடித்து,
கைகுலுக்கிக் கொண்ட கழுகுகள்!

யூதாஸின் முத்தங்களால்
நெய்யப்பட்ட முள்முடியின் கீழே
கூச்சல்கள் கூடி கசக்கிய
மௌன மலர்!

துராடிக் கோலிலேயே
தொங்க விடப்பட்ட
மேய்ப்பனின் மேனியெங்கும்
ரத்த வாய்கால்கள்; - அந்த
அமர்ந்த தண்ணீரண்டை
அணிவகுக்கும் ஆடுகள்!

பிலாத்துக்களின் பொன்னடைகளை
வெட்கப்படுத்தும்
கல்வாரியில் பிழியப்பட்ட
கந்தையில்,
மானுடத்தின் ஆசீர்வாதம்
பிரசவமானது;
சபிக்கப்பட்ட மரத்தின் கிளை
புல்லாங்குழலானது!

அன்று அந்த,
ஆலயம் இடிக்கப்பட்டதற்கு
எந்த ஒரு
மனித உரிமை கமிஷன்களும்
மார்தட்டவில்லை;
எந்த ஒரு
உச்ச நீதி மன்றங்களையும்
தேவநீதி எட்டவில்லை!
மனுஷர்களை பிடிக்கவேண்டிய
மகத்துவ வலை
விலங்குகளின் கைகளுக்கு போன
விபரீதத்தால்...
நீட்டப்பட்ட
நீதியின் உள்ளங்கையில்
ரணங்களின்
'ரப்பர்ஸ்டாம்ப்' முத்திரைகள்!

✦

எந்த விளம்பரமின்றி
பூமியின் ஆழத்திலிருந்து
வெடித்துக் கிளம்பிய அந்த
விண்வெளி ராக்கெட்டின் கீழ்
கருகிக் கிடக்கும்
காய்பாக்களின் சிம்மாசனங்கள்;
எரிந்து சிதறிய
யூத எச்சங்கள்!

✦

உயிர்தெழுதலின் பிம்பங்கள்
கணிப்பொறியை தாண்டிய
ரசாயன சூட்சமங்கள்!

வலுகட்டாய
லெந்துகால சோகங்கள்;
ஏழுவார்த்தை தியானங்கள்;

வழக்கமான பாடல்களுடன்
ஈஸ்டர் வாழ்த்துக்கள்;

தொடர்ந்து வரும் இந்த
தொழில்நுட்ப வாழ்க்கை..
சிலுவை நிகழ்வுகளையோ,
உயிர்த்தெழுதலின் அதிர்வுகளையோ,
இறையியல் பதிவுகளாக்க
இயலவில்லை என்பதே
இந்த நிமிஷ யதார்த்தம்!

✦

தன் ரத்தத்தை
தன் மாம்சத்தை
பிட்டுத்தராத கரங்களுக்கு,
இயேசுவின் சிலுவை சுமக்க
எந்த ஒரு தகுதியுமில்லை;
உயிர்த்தெழுதலில்
பங்குமில்லை!

கால்பந்தை உதைப்பதுபோல
கல்லறைப் பாறை உதைத்து
உலகத்தை ஜெயித்த அந்த
ஒற்றை மேகத்தின்
காலடிச் சுவடுகளை அணிந்து,
நடக்க ஆரம்பிக்கட்டும்
நமது நற்செய்தியாத்திரைகள்!

உயிர்த்தெழுதல்...
உள்ளூர் மேடைகளின்
ஒளி ஒலி காட்சிகளல்ல;
உயிருக்குள் ஊதப்பட்ட
ஊழித் தீயின் அசைவுகள்!

✦

முகமூடிகளை புதைப்போம்;
முகங்களாக முளைப்போம்!

# திறக்கப்படாத கல்லறை!

உம் சிலுவை ரத்தத்தால்
சமத்துவபுரமான
கொல்கொதாவின் கீழே -
தொழில் நிறுவனங்களின்
பராமரிப்புத் தோட்டங்களின்
மத்தியில் -
உயர்ந்த சோடியம் விளக்காய்
உம் சிலுவை,
வருவதும் போவதுமான
வாகன நெரிசல்.

சாலையோர வண்ணவிளக்கு
திறந்தவெளி ரெஸ்டாரண்டுகளின்
கண்ணாடிக் கூண்டுகளில் -
தலை கவிழ்ந்த
தந்தூரி சிக்கனாய் நீர்;
உரிக்கப்பட்ட உம்மேனியில்
வெங்காய மலர்வளையம்;
முதுகில் குத்திவைக்கப்பட்ட
முள்கரண்டி.

✦

உம் உயிர்த் தெழுதலின்
பிரவாகத்தில் -
சிலுவையைத் துடுப்பாக்கிச்
சிந்திக்கிறேன்.

சுத்தியலால் கோர்க்கப்பட்ட
சிலுவையை
சுத்தியலாக மாற்றி.
தங்களைத் தாங்களே
ஆணிகளாக்கித்
தலையிலடித்துக் கொண்ட
தற்குறி இதயங்கள்.

யூத மொழியில்
நீர் உதிர்த்த ஏழு வார்த்தைகளை
எழுபது வார்த்தைகளாகத்
திரித்த...
மனு கொடுக்கும்,
மாஜி ‘நாஜி’ கள்.
காலையில் உம் கல்லறை
கவர்னர் மாளிகையாகிவிட்டது;
நம்பிக்கை
வாக்கெடுப்புகளுக்காக
நாலைந்து சுட்கேஸ்களுடன்
சுவிஷேச ‘லல்லு’க்கள்
சூதக கிளிண்டன்கள்.

உம் கல்லறைமுன் கட்டப்பட்ட
ஐந்து நட்சத்திர விடுதிகளில் -
‘ஆயில் மசாஜ்’கள் அதிகரித்து
விட்டதால்,
நளதத் தைலத்திற்கும்
நல்ல கிராக்கி.

முப்பது ‘வயாகரா’க்களுக்காக
மீண்டும் முத்தமிடத்துடிக்கும்
மோக யூதாஸ்கள்,
சுற்றிலும் -
ஈஸ்டரை ‘எக்ஸ்போ’ - வாகக்
கொண்டாடும்
கிறிஸ்தவக் கிஷ்கிந்தாக்கள்!

✦

வெள்ளைக் கற்பூரமாக
வீதியில் கொளுத்தப்பட்ட
ஆஸ்திரேலிய அப்போஸ்தலர்
கிரஹம் ஸ்டீவர்ட் ஸ்டெயின்ஸ்.
‘ஜீப்’ காரையே
பரலோக ராஜ்ஜியமாக்கிக்
கொண்ட
பிலிப், திமோத்தி,
வலக் கையில்
ஆணி அறைந்தவனுக்கு
இடக்கையை நீட்டிய
உம் ஒப்புரவோடு -

நெருப்பு வைத்தவரை
நேசித்து மன்னித்த
திருமதி, கிரஹாம் ஸ்டீவர்ட்,
இவர்களுக்காக,
ஒடிசாவிலும், பீகாரிலும்
உம் உயிர்த்தெழுதல் நிகழட்டும்.

இங்கு -
விஷக் ‘கனி’கள்
மோதிரக் கையால் உம்
மூக்கில் குத்த
முயற்சிக்கலாம்.

அங்கு -
இன்னொரு முறை நீர்
எரிக்கப்படலாம்.

அதற்காக -
‘எம்மா’வுக்குப் போகும் வழியில்
உம் சீடர்களுடன் நீர்
உரையாடியது போல -
லாகூருக்கு பேருந்தில்,
பயணமாகும் தலைவர்களுடன்
பாதையெங்கும் பேசும்.

✦

திசைகளைத் திறந்த
தேவனே!
இன்னும் திறக்கப்படாத
கல்லறைக்குள்ளேயிருக்கும்
உம்முடன் -
செல்போன் மூலம் ஒரு
சிறிய கேள்வி;
கடைசி நேரத் தவிப்பிலும் -
கள்வனுக்கு மோட்சத்தில்
கருணையுடன் இடம் தந்தீர்;

ஒடிசாவில் கருகிய இந்த
ஊழியப் பூக்களுக்கு
மனோகர்பூரில் மட்டும்
ஏன் இடம் தரவில்லை?
பரலோக அரசில்
இடம் தருவதற்காகவா?

●

# விஷக்கனிகளால் விலக்கப்பட்ட ஒலிவ மரம்!

கரங்களே இல்லாதவர்கள்
கற்களை வீசும்
காட்சிகள்.

உடன்படிக்கைப் பெட்டியில்
கரன்சி நோட்டுக்கள்.

பரபாஸ்களுக்கு
பதவி உயர்வு.

பின் வாங்கியப்
பிலாத்துக்கள்.

தொழு நோயாளிகளின்
திருவிருத்தில்
அப்பங்களைக்
கற்களாக்கும் மூப்பர்கள்!

வெளிநாட்டுப் பணம்
வெள்ளை நிறக் கார் -
ஏழைகளின் வேர்வையை
இளநீராகப் பருகி,
‘‘தாலந்து’’களுடன்
தலைமறைவானத்
தலைவர்கள்.

கல்லறையைப் போல
கஜானாவும் காலி.

✦

''கால்'' வாரிகளால்
கல்வாரியெங்கும்
விறகுகளாகப் பிளக்கப்பட்ட
சிலுவைகள்.

அரளிச் செடிகளின்
ஆட்சியில்
வெற்றிலைக் கொடிகள்
வேரறுக்கப்பட்டன.

சூரியனைப் புதைத்துவிட்டதாக
மின்மினிகள்
கைகுலுக்கிக் கொண்டன.
புதைக்கப்பட்டது.
சூரியன் மட்டுமல்ல;
சுவிசேஷமும் கூட.

✦

தேவதூதர்கள் -
ஒடிக்கப்பட்ட சிறகுகளை
தைத்துக் கொண்ட
தேம்பியழுதபடி
தெரிவித்தனர்;
''அவர் எங்கும் இல்லை!''

மனித குமாரனே!
நியாயத் தீர்ப்பை
எழுதிக் கொண்டிருக்கும்
உம்
ஆள்காட்டிவிரல் நகத்திலும்

தேர்தல் கரும் புள்ளியா?
உம் மரித்தலில்
ஆலயத்தின் திரைகள்
அறுந்தன;
உம் உயிர்த்தலில்
ஆகாயம், பூமி
அறுந்து விழட்டும்!

✦

உம் ஆக்கினையின்
தாமதம் குறித்து -
கழைக் கூத்தாடிகளின்
வித்தைகளைத் தாங்கி -
சிலுவைகள்
கேள்விக்குறிகளாக
வளைந்து நிற்கின்றன!

என் தேவனே
என் தேவனே!
ஏன் இன்னும் இவர்களை
கைவிடாமல் இருக்கிறீர்?

●

## ஹைகூ!

அர்த்தம் தெரியாவிட்டாலும்
அர்த்தம் புரிகிறது
அந்நிய பாஷை!

●

சிலுவையில் அறையப்படாமல்
சீக்கிரம் வராது -
எழுப்புதல்!

●

# பேஷன் ஷோ!

சிலுவையின் தலையில்
‘டிஷ் ஆன்டனாக்கள்’,
கிறிஸ்மஸ் மரங்களைவிட
தேக்கு மரங்களுக்கும்,
கிரீட்டிங்ஸ் கார்டுகளைவிட
கிரெடிட் கார்டுகளுக்கும்
மவுசு.

கர்நாடகா காட்டுக்குள்
அலையும்
காப்ரியேல் தூதன்.

இன்டர்நெட்டில்
வால் நட்சத்திரம்.

இம்மானுவேலுக்கும்
ஏ.ஆர்.ரகுமானின்
‘ராப்’ தாலாட்டு.

ஆலயங்களை விட
‘மால்’களில்
திரளான சனங்கள்!

‘‘கூகுள் மேப்’’ வழிகாட்ட
காம்பாக்ட் டிஸ்குகளை
காணிக்கைகளாக ஏந்திவரும்
(விஞ்)ஞானிகள்.

எயிட்ஸ் பிரச்சாரத்தில்
மேய்ப்பர்கள்.

எல்நினோவின்
அலைகழிப்பில்
பெத்லேகம்.
போய்வா இங்கிலாந்து
''ரோஜா''வில் அமுங்கிப்போன
பெத்தலையில் பிறந்தவரை
போற்றித்துதி மனமே!''

மாட்டுத்தீவன வழக்கில்
மாட்டுக் கொட்டிலை
துருவிக் கொண்டிருக்கும்
அமலாக்க அதிகாரிகள்.

பரிசுத்தப்
பரிசோதனைக் கூடங்களில்
பலகையில் தவளையாக
அறையப்பட்ட பைபிள்.

✦

அரசியல்வாதிகளுக்கு -
பினாமிகளும்
சின்ன வீடுகளும்,
பார்களும் உண்டு.
மக்களுக்கு -
திரையங்குகளும்
ரேஷன்கடைகளும்,
டேட்டிங்குகளும் உண்டு.

மனித குமாரனுக்கோ
பேஷன் ஷோ முற்றங்களில்
கோர்ட் பெஞ்சுகளில் கூட
தலைசாய இடமில்லை!

●

## ஊனப்பட்ட வானம்!

நிஜத்தின் நிழலில்
அன்று -
முத்தின் முதுகில்
நத்தை.

மரணப்படுக்கையில்
மனிதநேயம்
முகவரியின் முகத்தில்
முட்களின் நகவரிகள்.

கைக்குட்டையாய்
பிழியப்பட்ட
கல்வாரிமேகம்.

✦

வானம் ஒரு
வாக்குச் சாவடியை திறந்தது;
கருப்பு மனிதமோ
கள்ள ஓட்டு போட்டது
தாழ்ந்த கிளைகளை
தச்சன் செதுக்கினான்.

தலைகொழுத்த மரங்கள்
தச்சனை செதுக்கின.

நிலவின் தோளில் விழுந்த
நெம்புகோல்
மானுடப் பூட்டைத் திறக்கும்
மரச்சாவியானது.

✦

நட்சத்திரத்தை
புதைத்து விட்டதாக
மின்மினிகள்
கைகுலுக்கி களித்தபோது;
வானமே
நட்சத்திரமாக முளைத்திருந்தது.
''அநீதி
புதைத்து வைக்கும் போது
அது -
நீதியாக முளைத்து நிற்கும்''
தத்துவ வெளிச்சத்தில்,
கல்லறைப் பாறையில்
மரணம் தன் அழுக்கை
துவைத்துக் கொண்டது.

✦

நிழலின் நிஜத்தில்
இன்று -
கொல்கொதாவெங்கும்
ரியல் எஸ்டேட்கள்.

இரத்த நிலத்திலும்
காம்ப்ளக்ஸ் கட்டடங்கள்.
கெட்ட குமாரன்களுடன்
தானும் புறப்பட்டுப் போன
தகப்பன்கள்.
யூதாஸின் முத்தங்களால்

செய்யப்பட்ட
'லிப்ஸ்டிக்' உதடுகளில்,
'பாப்' இசையான
கீர்த்தனைகள்.

பிலாத்துகளின் அரண்மனைகளில்
பெட்ரோல் குண்டுகள்.

ஜெலட்டின் குச்சிகளால்
இரத்த எழுத்துக்களாய்
''மேலவளவு 2 கி.மீ.''
''மகதலேனா
மனித வெடிகுண்டா?''
சந்தேக ஆய்வுடன்
சமகாலச் சீமோன்கள்!
வருத்தப்பட்டு
பாரம் சுமப்போர்கள்
இளைப்பாறும்
இடங்களிலெல்லாம்
லத்தி அடிகள்!

✦

ஏழைகளின் இறைவனே!
எந்த ரேஷன் கார்டிலும்
குடும்பத் தலைவராய்
உம்பெயர் இல்லை.

நீர் பிட்டுத் தந்தது
சுவிசேஷ மீன்;
கடைசி கிறிஸ்தவனின்
கைக்கு வந்ததோ
கருவாட்டு முள்!

சிலுவையை
ஏர்முனையாக்கிய உம்
சிவப்புச் சித்தாந்தங்களைச்
செவிசாய்க்க யாருமில்லை;

ஏனெனில் பலருக்கு
செவிகளே இல்லை!

புத்திசாலித்தனமாக
குருத்தோலைகளால்
சிலுவைகள் செய்து கொண்ட
இவர்களது
''இண்டலெக்சுவல்''
இறையியலை
அப்பாவியாகிய நீர்
அறியாமல் போனீரே?

ஆகட்டும் பரவாயில்லை!
சுயேட்சையாக நின்று
அமோக மெஜாரிட்டியில்
எதிர்கட்சிகளைத் தோற்கடித்த
உம் உயிர்த் தெழுதல் திருநாளில்
உமக்கும் ஓர்
கட் - அவுட் உண்டு!

●

## ஹைக்கூ!

சிப்பிக்கு வெளியே
முத்து;
முன்னணையில் இயேசு!

●

ஒரிசாவில் கருகி எரிந்தது;
உலகம் முழுதும் கருகாமல் எரிந்தது ;
ஸ்டெயின்ஸ் குடும்பம்!

●

# அடித்தல் திருத்தல் இல்லாத ஆன்மீகம்!

திருச்சபைகள் இருக்கின்றன;
'திரு'க்கள்
திருடு போயின!
கானான் தேசம்
கைக்கு வராத
பஞ்சமி நிலமாகி விட்டது!

கானானின் எல்லையிலிருந்து
காயங்களுடன் மீண்டும்
எகிப்திற்கே திரும்பும்
இஸ்ரவேல் மக்கள்!

உஜாலாவின் வெண்மையோடு
ஒப்பனை ஊழியங்கள்!

தாமிரபரணியாகிப்போன
யோர்தான்;
காவல் துறையால்
கட்டாய ரத்த ஞானஸ்நானம் பெற்ற
மாஞ்சோலை ஆடுகளின்
ரத்தப் பழி;
மேல்தட்டு மேய்ப்பவர்களின் முதுகுகளில்

✦

கொல்கதாவின்
'மினியேச்சர்' களான
குடிசைகளில்
ஆணிகளை உள்வாங்கி
உயிர்த்தெழுதலின் பந்திக்காக
உயிரை சமைத்துக் கொண்டிருக்கும்,
உரிமை சிலுவைகள்!

சில பேராயர்களுக்கு
சிலுவை ஒரு
'வாக்கிங் ஸ்டிக்' ஆகிவிட்டது;
சிலுவைக் கைத்தடிகளுடன்
பம்பாய் தாதாக்களாக
பகட்டுத் தந்தைகள்!

சிலுவை -
இருட்டு இறையியலை நோக்கி
மார்ட்டீன் லுத்தர்
உயர்த்தி அடித்த
மர டார்ச் லைட்!

சிலுவை -
கிறிஸ்து பிறப்பில்
பெருக்கல் குறி;
கிறிஸ்துவின் வாழ்வில்
கேள்வி குறி;
கிறிஸ்துவின் இறப்பில்
கூட்டல் குறி;
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில்
ஆச்சரியக் குறி;
கிறிஸ்துவின் வருகையில்
கழித்தல் குறி!

✦

திருச்சபை ஆவணங்களின்
பல பக்கங்களில் -
கவிதைகள் செதுக்கப்பட்டன;
பல பக்கங்கள்
பரிசேயர்களால் பதுக்கப்பட்டன;
பல பக்கங்கள்
காலியாக மடிக்கப்பட்டன;

பல பக்கங்கள்
படிக்காமல் கிழிக்கப்பட்டன.

புரட்சியின் புதிய ஆவணங்களுக்கு
காலத்தின் அலுவலகங்கள்
காத்திருக்கின்றன!

எதிர்ப்புகளே இறையிலாகிப்போன
இந்த பூமியில் -
சீனாயில் மலையில் இறங்கியவர்
இந்திய மலைகளிலும்
இறங்க வேண்டாமா?

விவகார விவகாரத்திற்காக
நீதி மன்றங்களுக்கு
நிம்மதியில்லாமல் அலையும்
மணவாட்டி திருச்சபையின்
கண்ணீர் துடைக்க -
மணவாளன் இயேசு
மறுபடியும் என்று வருவார்?

'ஆதி'யின் வார்த்தை
மாம்சமாகி -
மாம்சத்தின் ரகசியம்
மௌனமாகி -
கர்த்தரின் வருகையை குறித்து -
கடைசியாக வந்த
'ஸ்கேனிங் ரிப்போர்ட்'
''நெருப்பு நீதி !''

●

## யுத்தப் புகையில் யுரேனிய ரோஜா!

குடிசைகளைப் புசித்த
வெள்ளத்தின் நாவுச்சுழற்சிகளை
வேர்கடலை கொறித்து ரசிக்கும்
கேளிகைத் தன்மையுள்ள
வீடுகளுள் மானுடம்.

✦

6-ம் தேதி
அச்சுறுத்துத்தால்
வராமல் ஏமாற்றிய
வால் நட்சத்திரத்தின்
சிதறி தெறித்த கற்களை
சேமித்து மகிழும் பூமி.

✦

பெத்லகேமின் நிலவெடிப்புகளுக்குள்
முளைத்த பீகாரின்
காவி நிற நட்சத்திரத்தை,
நம்ப மறுக்கும்
கன்னியாஸ்திரிகள்.

✦

எண்பதாம் வயதில்
நான்காம் திருமணம் செய்த
நடிகரின் நம்பிக்கையோடு
மோனிகாவின் அந்தப்புரங்களில்
முகங்கவிழ்ந்து கிடந்த
ஏரோதுக்கள் மீது,
பழகிப்போன
பாலியல் வழக்குகள்.

✦

நாகரீக நட்சத்திரங்களின்
நடையழகுப் போட்டிகளுக்கு
நடுவர்களாக -
கீழ்திசையிலிருந்து
மேல்திசைக்கு
விமானத்தில் பறக்கும்,
ஞானிகள்.

✦

கிறிஸ்மஸ் தினத்தின்
ஒரே ஒரு இரவு மட்டும்
ஆலயங்களை அலங்கரித்து -
வருடத்தின் மற்ற
எல்லா இரவுகளிலும்
ஒயின் ஷாப்புகளை அலங்கரிக்கும்
சீரியல் செட்டுகள்.

✦

மாட்டுத் தொழுவத்திலிருந்து
நேரடி ஒளிபரப்பு;
எந்த சேனலில்
இரட்சகர் பிறக்கிறார்?

கோவிலை மறந்து
குழம்பித் தவிக்கும்
குடித்தன மக்கள்.

✦

ஏழைகளின் ராஜா
கொட்டத்தில் பிறந்த
குற்றத்திற்காக -
இரண்டு வயதுக்குட்பட்ட
இளந்தளிர்களுக்கல்ல -
பிராய்லர் கோழிகளுக்கும்
வெள்ளாடுகளுக்குமே
வெட்டுக்கள் விழுகின்றன.

✦

கானான் தேசம்
''காண்ட்ராட்'' நிலமாகிவிட்டதால்
எகிப்திற்கே மீண்டும் திரும்பும்
இஸ்ரேல் மக்கள்.

✦

இந்த முறையும் -
'மேன் ஆப் தி மேட்ச்'
அமெரிக்க அதிபரின்
வெள்ளை மாளிகையின்
போர்ட்டி கோவிலும் -
ஈராக்கின்
இருண்ட பதுங்கு குழிகளிலும் -
பாலியல் வன்முறைக்குப்
பலியான சரிகாவின் சமாதியிலும்
இம்மானுவேலுக்குத் தலைசாய இடமில்லை.

பொசுங்கிய சிறகுகளுடன்
நடந்து நடந்து,
நற்செய்தியை அறிவித்த
தேவ தூதர்களின்
தொங்கிய தலைகளுக்குப்பின்
அணுகுண்டு வெடிப்புகளின்
அனல் ஒளிவட்டங்கள்.

✦

கதிர்வீச்சின் வெப்பத்தில்
கருகிய போதிமரத்தின் கீழ்
சித்தங்கலங்கி
புத்தர் சிரித்தார்;

✦

எப்போதும் கருகிக்கிடக்கும் -
சிலுவை மரத்தைத் தன்
கண்ணீ ரின் ஈரப்பதத்தால்
இலை துளிர்க்க வைக்க
இயேசு அழுதார்!

✦

ஆக்டோபஸின் குழல்கரங்களால்
பூமியின் இருள் சூழ்ந்தாலும் -
ஒரு சிறிய மெழுகுவர்த்தியாய்
இதயத்தை ஏற்றிவைப்பதே,
இயல்பான இறையியல் நம்பிக்கை!

✦

# புதிய ஏதேன்...!

ஆண்டவரே!
உமது கிடையில்
ஓநாய்களின்
உற்சாக ஊளைகள்;
ஆட்டு மந்தைகள்
வெளியேறுகின்றன!

அழுக்கைச் சுத்திகரிக்கும்
அடிமை மீன்களை
தொழுநோய்த் தூண்டில்கள்
தூக்கிலிடுகின்றன!
தூற்றுக் கூடைகளில்
மனித மாமிசம் பெருக்கி
ஒப்பனை மேசியாக்கள்,
உயர் அதிகாரத்திற்கு
வினியோகிக்கின்றனர்!

✦

குடிசை கொல்கதாக்களில்
தலைமுறைச் சிலுவைகளில்
அடிமைகள்
ரத்தம் சிந்துகிறார்கள்!

✦

உங்கள்
தாய்ப்பாலுக்காக,
வேர்வைப் பால் சுரக்கும்
சமாரியர்களுக்குச்
சாணிப்பால்
புகட்டினீர்கள்!

✦

மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன்!
மண்கலயத்தில்
துப்பப்பட்ட எச்சிலே,
நாளைய மானுடத்தின்
ஞானஸ்நான நீர்!

✦

இவர்கள்,
பிலாத்துக்களைப் போல்
தொட்டிச் செடிகள் அல்ல;
யோவானைப் போல்
காட்டு மூலிகைகள்!

✦

இவர்கள்,
சபிக்கப்பட்ட
அத்திமரங்கள் அல்ல,
கானா ஊர்
கல்யாண ஜாடிகள்!
இனி இவர்கள்,
தீர்க்கதரிசிகளைத்
தேடப் போவதில்லை;
நியாயத் தீர்ப்புக்காக
கோடரியாக
நிற்கிறார்கள்!

✦

தேவனே!
அப்பங்கள் போல்
அதிகாரங்கள்
பிட்கப்படுவது
எப்பொழுது!

✦

ஒற்றை தாலந்தைப் போல்,
ஒன்றுமில்லாமல்,
ஏழைகளை
புதைத்தவர்களுக்கு
எதிராக...
உங்கள் சிலுவைகளை
உயர்த்துங்கள்;
பூமியை உழுது,
புதிய ஏதேன்
சிருஷ்டிக்க வேண்டும்!

●

## ஹைகூ!

நான்காம் முறை
கூவியது சேவல்;
பேதுருவின் மனசாட்சி!

●

மரத்திலே பறவை
கூடுகட்டும்;
மரம் பறவையின் முதுகிலே
கூடுகட்டும்;
சிலுவை!

●

# ஒரு ஆலயத்தின் கதை...!

அன்று உம்
அன்பு விழிகள்,
அமில விழிகளாயின;
கருணை விழிகள்
கந்தக விழிகளாயின!

✦

வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறைகள்,
உம்
தகப்பனது வீட்டை
தாசிகள் மடமாகப்
புழங்கியதைத்
தாங்க இயலவில்லையா?

இங்கு வரும்...

ஆலயங்களின்
அந்தபுரச் சுல்தான்கள்,
பத்துக்கட்டளைகளையும்
பரிசுத்த வேதாகமத்தையும்,
தவணைமுறையில்
தள்ளுபடி விற்பனை
செய்வது கண்டு...

கல்லை அப்பமாகக்
கேட்கும்
பட்டினிச் சாத்தான்கள்
பயந்து நடுங்குவதைப்
பாரும்!

✦

அன்று
நீர் அடித்தீர்;
இன்று
யார் அடிப்பார்?

✦

நீர்
இறங்கி வந்து
இவர்களை அடித்தாலும்,
உம்மை
அடித்து விரட்ட
அடியாட்கள் இறக்குவார்கள்,
இந்த
அரசியல் வியாபாரிகள்!

✦

உம்மை
வேரோடு பிடுங்கி
விற்றுவிட்டு,
தூங்கி வழியும்
தூதர்களின் முகங்களை
என்று அறையும்
உம்
எரிதழல் விரல்கள்?

அன்று யூதாஸ்
விட்டெறிந்த வெள்ளிகளை
இன்று வரை சேகரித்து,
சிலுவைச் சிதைமூட்டுகிறார்கள்
உம்
சீர்திருத்தப் புத்திரர்கள்!

தம் கற்களை
வீசாமலேயே
வீடுகட்டிக் கொண்ட
இவர்களில் ...

யோவானின்
ரத்தம் பார்த்து,
சப்தமில்லாமல் பிணமான
சகரியாக்கள் சிலர்!

பச்சை மரங்களுக்காக
அழுவதிலேயே
பட்ட மரத்தை
மறந்தவர் சிலர்!

பிலாத்துவின்
பிள்ளைகள் சிலர்!

பேதுருவின்
நண்பர்கள் சிலர்!

மூழ்கிப்போன
நோவாக்கள் சிலர்!

மூழ்க யோசிக்கும்
யோனாக்கள் சிலர்!

எதேச்சதிகார மரத்திலிருந்து
இறங்க மறுக்கும்
சகேயுக்கள் சிலர் !

கல்லறையே சுகமென
கண்ணயரும்
லாசருக்கள் சிலர் !

✦

அன்று முதல்
இன்று வரை,
உம்மைப்
பிடிக்க இயலாமல்
பின்னிட்டு விழும் இவர்கள்,

திருச்சபைகளை
குழிபறித்து,
பீடங்களின் மார்புகளில்
பிரமீடுகள் எழுப்புகின்றனர்!

திருச்சபைகளின்
தொழு நோயாளிகளான
இந்தத்
திருட்டுத் தரிசிகள்,
தம்
படுக்கைகளோடு
பணத்தையும்
சுருட்டிக் கொண்டு
சுகமடைந்து செல்லுகின்றனர்!

✦

இனியும் நீர்
இவரிடம் உயிர்த்தால்,
உம்மைக்
காட்டியும் கொடுத்து
கூலியைக் கூட்டுமாறு
குழைந்து நெளிவார்கள்!

✦

அடிமைகளின் தலைவனே!
எங்கள் அப்பங்களை
அபகரித்துத் தின்ற
இன்றைய யூதாஸ்கள்
அரண்மனை உப்பரிகைகளில்
துயிலுகின்றனர்!
பூகம்பம் எப்பொழுது?

✦

கிழக்குகள்
'கெத்சமனே' யாவதற்கு,
மேற்கிலிருந்து
உம்செங்கோல்
மின்னட்டும்!

●

# இரண்டாம் பிரசவம்...!

எந்த வழி நடக்க
இந்தக் கடலைப்
பிளந்தார்கள்?
எந்தப்
பசுமைப் புரட்சி வேண்டி
உம்மை
உழுது பார்த்தார்கள்?
ஆதிவாசியான நீர்,
இன்றைய திருச்சபை
ஏழைகள் போல்
அரை நிர்வாணமாய்
அமர்ந்திருந்ததால்
சாட்டைகளால் உமக்கு
சட்டையணிவித்தார்களா?

இவர்கள் அறிந்தே செய்த
ஆராய்ச்சியில்;
பரிசுத்த அப்பத்தை
ஆணிகளால் பிளந்து,
திருரத்தத்தின் அடர்த்தியை
திறனாய்வு செய்து
தோற்றுப் போனார்கள்!

✦

உமது
பாத்திரம் முடிந்தது,
ரத்தப் பிரளயம்
வடிந்தது!
எமது பாத்திரங்கள்
தொடருகின்றன!
எங்கள் அம்மணங்களைப்
பரிகாசிப்பவர்களுக்கே
ஆடைகள் நெய்கிறோம்!

எப்பொழுதாவது
இரக்க எச்சிலை
எங்கள் மேல்
உமிழும் தலைவர்கள்,
வலக் கரத்தால்
வழங்கும் கூலிகளை
வழக்கம் போல்
இடக்கரத்தால்
இழுத்துப் பறிக்கின்றனர்!

✦

சிலுவையின் கீழ்
கடை விரித்து,
யூதாஸ் காரியோத்துகள்
ஆலயங்களின் முற்றங்களில்
முத்தங்கள்
விற்பனை செய்கின்றனர்!
எங்கள் மீது
கற்களை வீசும்
கரும்புள்ளிக் கரங்களுக்கு
எப்படி நீர்
கனிகளை ஆசீர்வதிக்கலாம்?

நோயாளிகள்
நாங்கள்;
உம்
ஆத்தும மருந்தின்
ஆதார சூத்திரம்
என்ன?
வாசனை அப்பங்கள்
வேண்டாம்!
உம் வாயிலிருந்து வந்து விழும்
வார்த்தை அப்பங்களே
எங்கள்
வாழ்க்கைக்குப் போதுமானது!
எம்
இதய நாவுகள்
ஜீவ தண்ணீருக்காக
வறண்டு தவிக்கின்றன!

வேர்களில்
வெட்டுக்காயங்கள்;
ஆயினும்,
எம் கிளைகள்
உமது பெயரையே
உச்சரித்துக் குலுங்கும்!

✦

மாளிகை விருந்துகளின்
மதுவெறி உளறல்கள்,
சேரிக்காதுகளில்
சிலுவைகளாக விழுகின்றன!

ஒடுக்கப்பட்ட உதடுகள்
ஸ்பரிசிக்கும் படியான
திருவிருந்து ஒன்று
தேவை!

பதவி நாற்காலிகளில்
பார்த்தீனியங்கள் செழிக்கின்றன!

சம்பளங்களுக்காகப்
பாவம் செய்யும் இவர்கள்,
பாவத்தின் சம்பளத்தைப் பற்றி
பயப்படுவதில்லை!

✦

கானகம்
அலறுகிறது,
கர்த்தரே உம்
களைக் கொத்திகள்
எங்கே?

●

# ஆட்டுத் தொழுவம்....!

தோரணங்கள்
சலசலக்கும்
தொழுவங்களில்,
ஆட்டு மந்தைகள்
ஆர்ப்பரிக்கின்றன!

✦

அதோ ...
மேய்ப்பனின் ரோமத்தில்
ஆடை நெய்யும்
அம்மண ஆடுகள்!
ரணங்களின் மேல்
ரத்தப் புழுக்கையிடும்
அராஜக ஆடுகள்!
ஆத்துமாக்களை
அசைபோடும்
அசைவ ஆடுகள்!
சிலுவையின் நிழலில்
தங்க இடம் கேட்ட
தாழ்ந்த ஆடுகள்!

பிலாத்துவின் கூடாரத்தில்
தலையணையில் சயனித்திருக்கும்
தற்குறி ஆடுகள்!

✦

அயலானுக்காக
அழும் ஆடுகள்;
அவை
கண்டுபிடிக்கப்பட்ட
ஆடுகள்!

அயலானை
அருவருக்கும் ஆடுகள்;
அவை
காணாமல் போன
ஆடுகள்!

சந்தையில் அடிக்கப்படும்
சமாரிய வழி ஆடுகள்;
அன்புவழி நடந்து
அறுபடும்
அப்பாவி ஆடுகள்!

குள்ளநரிகளுடன்
கூட்டணியிட்டுக்
கட்சி வளர்க்கும்
காரியவாத ஆடுகள்!

உடனுக்குடன்
கட்சி தாவி
உதிரத்தை உறிஞ்சும்
ஓநாய் ஆடுகள்!

உபதேசம் வழங்கி
உண்டியல் ஏந்தும்
ஒப்பனை ஆடுகள்!

பாமரனின் கண்ணீரை
பருகிக் கொழுக்கும்
பச்சோந்தி ஆடுகள்!

சாதி மரங்களில்
ஒட்டு இலைமேயும்
ஆதாய ஆடுகள்!

சிலுவையின் கீழ்
சில்லறை மேயும்
சினோடு ஆடுகள்!
தர்மத்தை கொன்று
தர்மம் பேசும்
தலைமைப் பீட ஆடுகள்!

✦

உற்றுக் கவனியும்..
உம்
தொழுவத்தில்
துப்பாக்கிச் சத்தங்கள்!
ஆட்டுக் குட்டிகளின்
குளம்புகளில்,
ஆதிக்க லாடங்கள்!
மேய்ப்பர்கள்
ஓநாய்களுடன் ஒப்பந்தமிட்டு,
ஆலோசனை சங்கத்
தேர்தல் இரவுகளில்,
ஆடுகளைக் கப்பம்
கட்டுகின்றனர்!

வாரும் மெய்யான மேய்ப்பரே....!
தொலைந்து போன
தொண்ணூற்றென்பது ஆடுகளை
ஒருங்கிணைக்கும்
உத்தரவாதத்துடன்......

திருச்சபை வனாந்திரத்தில்
உம்
பிரம்மை கலைக்கும்
ஊழிக் காற்று
பீறிட்டு வீசட்டும்!

# எங்கள் கிறிஸ்மஸ் மரம்!

ஒப்பனை நட்சத்திரத்துடன்
கர்த்தர் பிறப்பு,
நசுங்கிய சிலுவை சுமந்து,
நடந்து வருகிறது!
கோவில் பிள்ளைகள்,
அழுக்கு வேட்டியுடன்,
ஆலய மணி அடிக்க,
பளபளக்கும் வண்ணத்துப்பூச்சிகள்
'பைபிள்' சுமந்து வருகின்றன!

ஒரு கிறிஸ்மஸ் தினத்தில்...
சாலைக்
கொல்கதாவில்
ஜனத்திரள்...
ஒரு
கரித்துண்டு ஓவியன்
சில்லறைக் காசுகளுக்காக,
வண்ணச் சிலுவையில்
அனாதை ரட்சகனை
அறைந்து கொண்டிருந்தான்!

✦

எங்கள்
கிறிஸ்மஸ் தாத்தா,
அனாதை ஆசிரமத்தில்
குறுகிக் கிடக்கிறார்!

எங்கள்,
கிறிஸ்மஸ் கேக்,
அப்பம் போல்
பலுகிப் பெருகவில்லை!

எங்கள்
உபதேசியார் வீட்டு
கிறிஸ்மஸ்க்கு,
உலக ரட்சகர்
வட்டிக்கடையின் தயவால்
வருகை புரிகிறார்!

✦

எங்கள்
அனாதை இம்மானுவேல்,
அரசுத் தொட்டிலில்
அழுகிறார்!

எங்கள் தெரசாக்கள்,
நெல்மணிகளுக்குள்
புதைக்கப்படுகின்றனர்!
எங்கள்
நட்சத்திர வேர்வையை
மின்மினிகள்
விழுங்குகிஙன்றன!

எங்கள்
குடிசைகளின் விலா,
பிலாத்துக்களால்
உதைக்கப்படுகிறது!

எங்கள்
மெழுகுவர்த்திகள்,
சாதீய உதடுகளால்
ஊதியணைக்கப்படுகின்றன!

எங்கள்
ஆலய ஒலி பெருக்கி காதுகளில்,
அரசியல் கீழ் வடிகிறது!
இவைகளுக்கிடையில்,

எங்கள்
கிறிஸ்மஸ் மரம்
சிலுவை தான்!

✦

தராசுத் தட்டின்
தாழ்ந்த பகுதியே
எடைமிகுதி
என்பது இயற்பியல் விதி!

இந்த இருண்ட
திருச்சபைகளுக்கு
ஒரு
ஆகஸ்ட் 15
அறிவிக்கப்பட வேண்டும்!
ஆனால் அதை,
இந்திய சுதந்திரம்போல்
இருட்டில் பிச்சைபெற
இயலாது!

அதை...
விடியல்களால் பிசைந்து
சூரிய சக்கரச் சுழற்சியில்
குயவு செய்தால்...
குருட்டு இரவுகள்
விடியும்!

●

# நீ மின்மினி அல்ல!

வா.....!
வரலாற்றுப் பிழைகளை,
வழித்தெறி!
நீ
யவீருவின் மகள்;
எழுந்திரு!
உன்
வேர்வைத் துளிகள்
விடுதலைக் கருக்களின்
வித்து!

கண்ணீர் குடம் சுமக்கும்,
ரெபேக்காளே!
தலை நிமிரு;
நித்திரைக்கு இது
நேரமல்ல!
தாஜ்மால்களுக்காக
தவம் கிடக்காதே;
மாட்டுத் தொழுவமே
மதிப்பானது!

கல்வீசுபவர்களைக் குறித்து
கவலை வேண்டாம்;
கண்ணீரைத் துடை;
கரைகளை உடை!

உன்
எச்சிலே
‘மாரா’வின்
மதுர நீர்!

✦

சமையலறையில்
நீ
சதைக்கல்,
சமூகத்திற்கு வா.
நீ
விதை நெல்!

✦

சீயோன் குமாரத்திகளுடன்
சேராதே;
மகதலேனா போல்,
கண்ணீரை,
‘நளதம்’ தைலமாக்கு!
‘ரூத்’ தைப் போல
நல்ல மருமகளாக
நடந்து கொள்!
‘தெபொராள்’ போல
பள்ளி எழுச்சி பாடு!

‘எஸ்தரை’ப் போல
அடிமைகளை விடுவிக்க
அரசியல் செய்!
‘யாகேல்’ போல
கூடார ஆணியால்
கொடுமைகளைக்
கொலை செய்!

✦

நீ கர்ப்பத்தில்
'மன்னா' சுமக்கும்
காடை!
'திலைலா' வைப் போல்
மதுக்குவளை ஏந்தாதே!
'ராகாப்' போல்
சிவப்பு நூலால்,
சிந்தனையை
நெய்து கொள்!

மணவாளன்
வரப்போகிறார்;
ஐந்து கன்னியர்போல்
ஆயத்தமாயிரு!

நீ.
பூமியின்
விலா எலும்பு;
உன் கும்மிக் கோல்கள்;
கொல்கதாவைப் புரட்டும்
நெம்புகோல்கள்!

உன்
கருப்பையைச் சற்று
கடன் கொடு!
'அப்போஸ்தலர்கள்' பலரை
அவசரமாக
சூல் கொள்ள வேண்டும்!

வரிந்து முடி;
வாரினால் அடி!

●

# திருக்கூத்து!

ரபி...!
உம்
யோர்தான் முழுக்க
ரத்தக்குமிழிகள்;

உம்
கன்மலை முழுக்கக்
கஞ்சாச் செடிகள்!

உம் சிலுவைப் பாதை எங்கும்
வேதாகமத்தை
விரித்து வைத்து
சூதக சுவிசேஷகர்கள்,
சூதாடிக் கொண்டிருக்கின்றனர்!

விதை விதைக்கப்
புறப்பட்டவர்கள்...
வேட்டையாடப்படுவதால்
விழுந்தடித்து,
வீடு திரும்புகின்றனர்!
ஆயினும்
நல்ல நிலம் தவிர
நாலைந்து விதைகள்
விழுந்திருந்தன...

ஆலயங்களில்....
அந்தப்புரங்களில்
ஆட்சி பீடங்களில்...
அரசியல் மைதானங்களில்...
விஷ வேரோடி,
ஒட்டு இலைகள்
சலசலக்க...
சாதிப் பூக்கள்
குலுங்க,
தலைவர்கள்
முளைத்திருந்தனர்!

✦

எப்பொழுதும் கிடைக்கிறது,
'இடுக்கமான
வாசல்' அருகே
'பிளாக்' டிக்கெட்டுகள்!

எண்ணெய் கிடைக்காத
கன்னியர்....
திருமண வீட்டுச் சுவரில்
திருட்டுத்தனமாய்
ஏறிக் குதிக்கின்றனர்!

திருமண உடை அணிந்தவர்கள்
வெளியில் நிற்க,
திருமண உடை அணியாதவர்கள்,
திருச்சபையின் உள்ளே
பிரசங்கித்து உலவுகின்றனர்!

கபிரியேல் தூதர்கள்
கிளிக் கூண்டுகளில்!
நியாயப் பிரமாணம்,
குளிர்காயக்

கொளுத்தப்படுகிறது!
தள்ளப்பட்ட கற்கள்,
மூலைக்குத்
தலைமைக் கற்களான பொழுது...

மூலைக்குத்
தலைமைக் கற்களாயிருந்த
முதற்கற்கள்,
கொலை வெறியுடன்
கூச்சலிடுகின்றன!

முதல் மணியில்
அழைக்கப்பட்டவர்களை
முச்சந்திகளில் கொன்றுவிட்டு...
கடைசி மணியில்
அமைக்கப்பட்டவர்கள்.
கள்ள தீர்க்க தரிசிகளிடம்
கைக்கூலி பெற்று,
திராட்சைத் தோட்டத்திற்குத்
தீவைத்துத் திரும்புகின்றனர்!

அறுவடைக்கு வந்த
அரிதார புத்திரர்கள்...
சுட்டுப் பொசுக்குவதற்கு
கோதுமைகளைக் கட்டி வைத்து,
களைகளை
களஞ்சியங்களில்,
சேமித்து வைக்கின்றனர்!

விதவைகள்
வீட்டுச் செலவுகளுக்காக,
காணிக்கைப் பெட்டிகளை
கம்பியால் நெம்புகின்றனர்!

துணிக்கைகள் கிடைக்காத
நாய்க்குட்டிகள்,
எஜமானனை நோக்கி
எரிச்சலுடன் குரைத்தபடி
வெளியேறுகின்றன!

கொல்கதா எங்கும்
சிதறிக் கிடக்கும்
'மனித மன்னா'க்களை
கோயில் கழுகுகள்
கொத்தித் தின்னுகின்றன!

✦

ஆண்டவரே...!
உம்
புண்ணிய பூமி
துக்க வஸ்திரம்
அணிந்திருக்கிறது!
நீர்
பிட்டுத்தந்த
ஜீவ அப்பத்தை
எச்சில் ஓநாய்களே
கவ்வித் தின்னுகின்றன!

இங்கு
பாவங்கள்
'பாபேல்' கோபுரம் போல
தலை உயர்ந்து நிற்கின்றன!

பூமிக்கு உப்பாக
இருப்பவர்கள்.....
வேர்வைச் சாரமெடுக்கப்பட்டு,
விரட்டப்படுகிறார்கள்!

பூமிக்கு
வெளிச்சமாக வீசுகிறவர்கள்,
இருளால்
கருக்கப்படுகின்றனர்!

✦

அன்பு ஆயனே...!
‘காம்பவுண்ட்’ கிறிஸ்தவம்
சேரிக்கு வந்ததாக
செய்தியில்லை!

பிலாத்துக்களையும்,
யூதாஸ்களையும்,
நீர்
கை கழுவும்!
உம்
சிலுவையை,
சீமான்களை நோக்கித்
திருப்பி வையும்!
அவர்களை...
தத்தரிகிட...தத்தரிகிட...!

●

## நன்றிக் கடன்!

கத்தோலிக்கச் சபையிலிருந்து
லூத்தரனைப் பிரித்தார்
மார்ட்டீன் லூத்தர்

மார்ட்டீன் லூத்தர் பிரித்துத் தந்த
மக்கள் இறையியலின்,
மாண்பைப் பிரித்தனர்;
லோக்கல் லூத்தரன்!

●

# விஷக்கனிகள்!

கற்பக விருட்சங்களில்
சாணை தீட்டிய
உன்
கோடரிகளின் கூர்மையை
அயலானின் இடுப்பிலா
ஆழம் பார்ப்பது?
உன்
விஷ நாவுகள் ஏன்
மனித நேயத்தின்
குதிகாலைக் குறிவைத்தே
தீண்டுகின்றன?

போ....!
மெழுகைத் தின்னும்
உன் அக்கினி நாவுகளை
பூக்களின் மகரந்தங்கள்
புறக்கணிக்கின்றன!

உன்
ஒலிவமரத்தின் கனிகள்
விரியன் பாம்புகளால்
சிருஷ்டிக்கப்பட்டவை!
வனாந்திர யாத்திரைகளில்

உன்
திசைகாட்டி முட்கள்,
எல்லைகளின் முகங்களில்
எச்சில் ரத்தம்
உமிழுகின்றன!

உன்
ஆடம்பரக் கீடங்களின்
அபிஷேகங்களுக்கு,
ஏன் உன்
தாயின்
மார்பகங்களைப் பிழிந்து
தைலங்கள் தயாரிக்கிறாய்?

கயவனே!
களஞ்சியங்களுக்கான
விளைச்சல் நிலங்களில்,
ஏன் உன்
காட்டுப் பன்றிகளை
அவிழ்த்து விடுகிறாய்!

உன் மாம்சத்திலிருந்து
மற்றொரு 'மாம்சம்'
'பீனிக்ஸ்' போல
உயிர்க்க வேண்டும்!
உன் மதகுகளின் கரைகளில்
புறாக்கள் அமருகின்றன!
ரத்த உதடுகளால்
அவற்றை
முத்தமிட முயலாதே!

✦

வா...!
தன்னைத்தாழ்த்துகிறவன்
உயர்த்தப்படுவான்!
முகமதியனின்
நெற்றித் தழும்புகளையும்
முழங்கால் தழும்புகளையும்
முத்தமிடு!
இந்துவின்
விபூதி குங்குமத்தில்
சமாதான சோஷலிசத்தின்
சக்தி சேகரி!

சீக்கியனின்
உடைவாளாய்
சிலுவையை ஏந்து!
புத்தனின் போதிமரத்தை
கிறிஸ்மஸ் மரத்தைக்
கேள்!

கண்ணன்,
நபி,
கர்த்தர்,
அநீதிக்கெதிரான
அவதாரக் குறியீடுகளே...
ஆய்வு செய்!
உன் சிந்தனையைச்
செதுக்கு....
குன்றக்குடியில்
குழந்தையேசு பிறப்பார்!

மசூதியில்
ராமபிரான்
மண்டியிட்டுத் தொழுவார்!

முகமது நபி,
திரு நீறு பூசித்
தீ மிதிப்பார்!

✦

கேள்...!
ஒடுக்கப்பட்டவர்களுக்கு
எதிராக உன் கோபுரங்களை
உயர்த்தாதே!

உன்
மர்ம விஷக்கடிகளால்
மனித நேயம்
மரிக்கும் பொழுது
உன்
உத்தியின் படியே,

மணவாளன்
சம்மட்டிகளுடன்
மதிப்பார்!

அன்று
சவக்குழிகளின்
வயிறுகளில்
பிரபுக்களின் அரண்மனைகள்,
கெம்பீரிக்க இயலாதபடி
கீழே .....
வி
ழு
ம்
!

●

# பத்தாத கட்டளைகள்....!

1. ஆலயங்களில் அதிகார அரசியல் பேசாதே!
2. ஒன்றுமில்லாதவரை நோக்கி உண்டியல் ஏந்தாதே!
3. தாழ்த்தப்பட்டவன் என தள்ளிவைப்பவனிடம் தகராறு செய்யாமல், தாழ்ந்து போகாதே!
4. அயல்நாட்டு நிதியுதவியை அமுக்கிப் பிழைக்காதே!
5. கர்த்தரின் நாமத்தை உச்சரித்து கசாப்பு இறையியல் செய்யாதே!
6. பிட் நோட்டீஸ் அடித்து பிறரை தூற்றாதே!
7. சொந்த அப்பாயின்மெண்ட்டுகளைச் சொருகாதே!
8. ஒடுக்கப்பட்டவரின் உதிரத்தை மாளிகை விருந்தில் பறிமாறாதே!
9. உன் கட்சியில் இல்லாதவனை ஒன்றுமில்லாமல் ஒழிக்காதே!
10. பேராயர்கள் போல் பிரச்சனைகளை மட்டும் பேசாதே!

●

# இதோ மனிதன்....!

மனித மடுவின்
காய இடுக்குகளில்,
கூச்சல்களின் குருதி ஊற்று
கொப்பளிக்கிறது!

பூவின் சிரசில்
முள்முடியின்
முத்தக் கற்பழிப்புகள்!

இருட்டின்
கர்ப்பப் பையில்
ஜீவ தீபம் திக்குகிறது!

கசங்கிய
காகித மேனியில்
ரத்த ஹைக்கூக்கள்!

முக நிலவில்
எச்சில் மேகங்கள்!

✦

ஊமைகளின்
பாஷை சுமந்து

பூமியை அசைத்த நாவு,
புல்லாங்குழல் போல்
பொத்தல்களாகி நின்றது!

நீதி
முகம் துடைத்துப் பிழிந்த
ரத்தக் கைக்குட்டை,
இதய இலையில்
ஈரம் கொட்டுகிறது!
கால விசாரணைக் கூண்டில்,
பகலுக்கு எதிராக
இரவுகள்,
பொய் சாட்சிகளைத்
தோலுரிக்கின்றன!

வெளிச்ச ஆடை
உடுத்திய மெழுகுவர்த்தியை,
தொழுநோய் விரல்கள்
துகிலுரிக்கின்றன!

✦

சாபங்களின் சந்ததியால்
சபிக்கப்பட்ட
ஒருதவம்,
வரங்களின் வாரிசுகளுக்காக
வலிகளை ஜீரணிக்கிறது!

மௌனத்தைப்
பொதிசுமக்கும் உதடுகளை,
கேள்வி முஷ்டிகள்
கிழித்துப் பிறாண்டுகின்றன!

களைகள்
காட்டிக் கொடுக்கின்றன;

கொழு,
குற்றவாளியாக
நிற்கின்றது!

அபஸ்வரத்தின்
ஆவேச ஊளைகளால்
தாலாட்டின்
கரு கலைகிறது!
நிஜம்...!
வானத்தின்
ஜீவ சமிக்கை,
பூமியை
மகுடாபிஷேகம் செய்து
புறப்பட....
பிரக்ஞை கலைந்த
பிற்போக்குப் பிண்டங்கள்,
ஸ்தம்பித்து உறைந்தன!

✦

கொல்கொதா முலையின்
சிலுவைக் காம்பு
பீய்ச்சும் ரத்தப்பாலை...
ஓ!
ஒடுக்கப்பட்ட உதடுகளே,
ஒருங்கிணைந்து சுவையுங்கள்!

●

## ''நல்'' அடக்கம்!

''கர்த்தருக்குள் மரித்தார்,''
எல்லோருக்கும் அறிவிக்கப்பட்டது;
நல்லடக்கம் முடிந்தது!

எல்லோருக்கும் தெரியும் அவர்
''குடியிலே மரித்தார்'', என்பது!

●

## ஆண் - பெண்!

மண்ணை மனிதனாக்கினார்;
எறும்பை பெண்ணாக்கினார்!
விலாவின் சந்தை அடைக்க,
சதையை மண்ணாக்கினார்!

மண்
மனுஷி என்று
திரித்துவம் மூன்றாக்கினார்!

●

# ஒடுக்கப்பட்டவனே உண்மையான தலீத்...!

சாணக்கிய கோடாரிகள்
புல்லாங்குழல்களில்
சாணை தீட்டுகின்றன!
தர்மசக்கரங்களின் கீழ்
ஒடுக்கப்பட்டவர்களின்,
கபாலக் கூடுகள்!

✦

தலீத் என்றச் சொல்லுக்குள்
சாதியை திணித்ததும்
ஒருவகைச் சாணக்கியத் தனம்!
உயர்ந்த சாதி என்றாலும்
ஒடுக்கப்பட்டவனே
உண்மையான தலீத்!

சாதிய நுகத்தடிகளால்
நசுக்கப்பட்ட
வரலாறுகள்,
காயங்களின்
வேர்களில் நின்று
கந்தகம் வீசுகின்றன!

ஒவ்வொரு
பிரபுக்களின்
தலையணைகளிலும்,
ஒரு நூறு
ஒடுக்கப்பட்டவர்களின் பிணங்களை
தோண்டி எடுக்கலாம்!

✦

காத்திருக்காதே!
களப்பலிகளின்
ரத்தச் சகதியில்
கை கழுவிக் கொண்டே
காருண்யம் பேசும்,
கபட நாவுகளை
கத்தரி!

தெருமேடைகளில்
தீண்டாமை கற்பித்து,
அந்தப் புரங்களில்
தாழ்த்தப்பட்ட பெண்களை
பாலியல் வன்முறை செய்யும்
ஓநாய்களின் தோல்களை
உரி!

✦

காலனிகளுக்கெதிராக
கலகம் கற்பி!
ஆலயங்களின் உள்ளே
சாதிப் புறாக்களை விற்கும்
திருச்சபைகளின் முதுகை
திருக்கை வாலால்
அடி!

மண்கலய எச்சிலால்
மானுடத்தைப் பிசைந்து,
பூமியின் கண்களை,
புழுதி தட்டித்திற!
சேரியின் கருவறைக்குள்
சிவப்பைச் சிந்தாத
சூரியனைப் பறித்து
சூறை உடை!

தரித்திரர் மீதான
தகனபலிகளை
பரீட்சித்துப் பார்க்கும்
விஷக் கரங்களை
வெட்டி ஏறி!

தசை நீக்கிய
எலும்புத் துண்டுகளால்,
இயேசு நாதர்களை
உருவாக்கு!
உனக்குரிய முகத்தை
உன்,
உதடுகளாலேயே
அச்சுக்கோர்!

✦

பூமியின்
எல்லாத்திசைகளிலிருந்தும்
நீ
புறப்பட்டு வரும் பொழுது...
கல்லறைகள்
பிளந்து கிடக்கும்,
ஆ....!!!

●

# கி.பி.யின் எல்லையில் ...

பாவப் பல்லாங்குழியில்
மனிதக் காய்கள்!
‘ஒரேப்’ மலையில்
ரத்த ஊற்று!
சாதி மரத்தில்
சகேயுங்கள்!
அப்பங்களை
கற்களாக்கும்
‘பெயல் செபூக்கள்’!

✦

‘சவுரி’ சிம்சோன்களால்,
சபைகள்
நிரம்பி வழிகின்றன!
கேபிள் டி.வி.யில்
கிறிஸ்து அழைக்கிறார்!
தூதர்கள்,
‘பீர்’ போதையில்
பிதற்றுகின்றனர்!
மணவாளனை வரவேற்க
அந்திக் கிறிஸ்துக்களே -
ஆயத்தமாகின்றனர்!

ஊரைச் சுற்றி
வெளிச்சம்;

தண்டின் கீழ்
இருட்டு!
மெழுகுவர்த்திகள்
அழுகின்றன!

✦

பிதாவே...!
நீர்
மண்ணால் பிசைந்த
மனிதம்...
மண்ணாகவே
இருக்கிறது!
உம்
நியாயத்தீர்ப்பு நாளை
சற்றுத் தள்ளிப் போடும்!

மன்னிப்புகள்
மறுதலிக்கப்படுகின்றன;
எங்களைப்
பழிவாங்கியவர்களை
நாங்கள் சற்றுப்
பழிவாங்க வேண்டும்!

அதன் பின்...
யோசேப்புவின்
அரிக்கட்டு போல,
நீதியின் தலை
நிமிர்ந்து நிற்கட்டும்!

●

## நியாயத் தீர்ப்பு!

வானத்தின்
தாழ்ப்பாள் தெறிக்கிறது!

மெசியா,
அக்கினியை உமிழ்ந்து
ஆக்ரோஷித்து,
சேரியிலிருந்து
உயிர்த்தெழுகிறார்;
''வருத்தப்பட்டு பாரம்
சுமக்கிறவர்களே...!
என்னிடத்தில்
இனி உங்களுக்கு
இளைப்பாறுதல் இல்லை!
விரியன் பாம்புகளுக்கெதிராக
உங்கள்
வெட்டறுவாட்களை
வீசுங்கள்!

இதோ ....
மனித குமாரனை
பலிபீடங்களில்
தலை சாய்த்துப்போட்ட
பிலாத்துக்களே இனி
சிலுவையில் அறையப்படுவர்,

யூதாஸ்களே இனி
காட்டிக் கொடுக்கப்படுவர்!

இதோ ...
சேரி முழுக்க
சிலுவைப் பாதை சமைத்த
உங்களிடம்,
குருத்தோலைச்
சிலுவைகளை அல்ல;
இரும்பு சிலுவைகளையே,
உங்களது தோள்களில்
ஏற்றுகிறேன்!

உங்களுக்கான
ஞானஸ்நானங்கள் இனி
ரத்தப் பலிகளால்
ஆசீர்வதிக்கப்படும்!
நல்ல நிலங்களில்
பிணங்களையும்,
கெட்ட நிலங்களில்
தானியங்களையும்
சூதாகப் பயிரிட்ட,
உங்களுக்கெதிராக
வானபரியந்தம்,
வக்கிரத்தைத் துப்புகிறது!

விதை நிலங்களில்
எலும்புத்துண்டுகளைப்
பயிரிட்ட உங்களை,
அறுவடை செய்ய
இதோ ...
அடைக்கலான் குருவிகள்
ஆர்ப்பரிக்கின்றன!

மணவாட்டிகளை
விபச்சார விடுதிகளில்
விற்றுப் பிழைக்கும்,
உங்களுக்கு
மன்னிப்பு வழங்குவதாக
மணவாளனுக்கு
உத்தேசமில்லை!

✦

எண்ணெய்க் கிண்ணங்கள்
நொறுங்கிக் கிடக்கின்றன!
அணைந்த திரிகள்
ஆன்மீகம் பேசுகின்றன!

✦

கேட்காததை நீங்கள்
தேடிக் கொண்டிருப்பதால்தான்,
திறக்கப்படாமல் உங்களுக்குத்
தீர்ப்பு வருகிறது!

புல்லுள்ள இடங்களில்
நரிகளாகவும்,
அமர்ந்த தண்ணீரண்டைகளில்
முதலைகளாகவும்
வாழும் உங்களுக்கு,
ஆணவமே,
ஞானத்தின்
ஆரம்பமாக இருக்கிறது!

✦

என் அங்கிகளைப்
பகிர்ந்து கொண்டீர்கள்!

இதோ .....
உங்களை நான்
உலைக்கலன்களுக்குப்
பகிர்ந்தளிக்கிறேன்!

பிதாவின் வீட்டில்
பிசாசுகளுக்கு விருந்தளித்த
நீங்கள்,
பூமியின் அந்தகாரத்திற்கு
போஜனமாகப்
பிச்சையிடப்படுகிறீர்கள்!

திராட்சை ரசத்தில்
காடியைக் கலக்கியும்,
ஐயாயிரம் அப்பங்களை
ஐந்து லட்சம் அப்பங்களாக
கள்ளக் கணக்கெழுதிய
உங்கள் கரங்களுக்கு,
இதோ ...
தொழுநோய்களையே
தோற்றுவிக்கிறேன்!

மலட்டு மரக்கிளையை
மோசேவின் கைத்தடி போல்
முன் சுமந்து செல்லும்
மூடர்களே....
இதோ...
உங்கள்
கஜானாக்கள்
பிளக்கட்டும்!
காட்டுப் புஷ்பங்களுக்கு
எதிராக,
வெட்டுக் கிளிகளை விரட்டி

ஆட்டுரோமம் போர்த்தி
அலைபவர்களே....
இதோ ....
அடித்துப் பீறும்
ஓநாய்களை உங்களிடம்
பாயவிடுகிறேன்!

விரியன் பாம்புக்குட்டிகளை
வேர்களாகக் கொண்ட
அத்திமரங்களே.....
உங்கள்
விஷக்கனிகள்
விழுந்ததால்
'மாவு' புளிக்காமல்
மக்கிப் போனது!

இதோ ...
கொல்கொதாவும்,
பர்வதங்களும்,
குமுறுகின்றன,
காற்றையும் கடலையும்
கட்டுப்படுத்தப்போவதில்லை;
அவை
மனிதகுமாரனின் பிறந்த நாளை
மகிழ்ந்து கொண்டாடட்டும்!

இதோ ...
அடித்துத் துவைக்கப்படும்
பூமியை
ஆகாயத்திலிருந்து
மேற்பார்வையிடுகிறேன்!

✦

இனி
உமக்கொரு பாலகன்
பிறக்கமாட்டார்;
உமக்கொரு குமாரன்
கொடுக்கப்பட மாட்டார்!
ஆயினும்,
ராஜாதிகாரம் அவர்
தோளின் மேலிருக்கும்!
இதோ...
யுகமுடிவு பரியந்தம்
இல்லாமல்,
ஒளிப்பட்டையங்கள்
அவர்,
பார்வையிலிருந்தபடியே
உன்னைப்
பயணப்படுத்தும்!

உனக்குரிய
‘கானான்’ தேசத்தை
அவர்
கட்டளையிடுவார்!
அங்கு...
உழைக்கும் சந்ததியினர்,
உலகத்தின் ஜீவகர்ப்பத்தில்
சூரியன்களை சூலாக்கும்,
வேர்வை வித்துக்களை
விதைப்பர்!

அதுவே
புரட்டப்பட்ட பூமியின்
ஒடுக்கப்பட்டவருக்கான
உயிர்த்தெழுதல்,
எனப்படுவதாக!

●

## ஒரு இரத்த சாட்சி!

இவன்
புழுதியின் கர்ப்பத்திலிருந்து
புறப்பட்டவன்!
எதேச்சதிகாரத்தின்
உதடுகளால்
எச்சிலால் துப்பப்பட்டவன்!

விடுதலையின்
உறக்கத்தை உசுப்ப,
விலா எலும்புகளால்
புல்லாங்குழல்கள்
செய்பவன்!

✦

இவன்...
பிரளயத்தின்
முகவரி!
எதார்த்தங்களின்
எரு!
பசி
வியர்வை வழியும்
பாத்திரம்!
காயங்களின்

கஜானா!
இவன்...
ரணங்களில் வடியும்
ரத்தம்!
ஒடுக்கப்பட்ட உணர்வுகளின்
உதிரச் சிவப்பு!

✦

இவன்...
தாகங்களின்
தழும்பு!
ஞானத்தின்
வித்து!
இருட்டின்
தாய்ப்பால்!

✦

இவன்
பேசுவதில்லை!
நியாயங்கள் போல்
ஊமையானவன்!
அநீதியின்
துலாக் கோல்களால்
அறையப்பட்டவன்!
புதை குழிப் பூக்களில்
புரண்டு சுகிக்கும்,
பூர்ஷ்வாக்களின்
புட்டங்களில் எத்தும்
இவன்....
புறஜாதியினருக்கும்
தன்,
ரத்தத்தை
ரசமாகப் பகிர்ந்தளிப்பவன் !

இருளை புசித்து
வெளிச்சத்தைச்
சுவாசிப்பவன்!
நீதியின்
ரத்த சாட்சியான
இவன்...
அநீதியைக்
கொன்று ஜெயிக்க
ஆவேசமாக வாழ்பவன்!

சமுதாயத்தின்
செல்லரிக்கப்பட்ட வேர்களைச்
சிரசில் சுமந்து கொண்டு
பள்ளி எழுச்சி கீதங்களைப்
பாடிக்கொண்டே
பயணப்படும் இவன்...
புதைக்கப்பட்ட நேயங்கள்
வெடித்துக் கிளரும்வரை
வீழப் போவதில்லை!

அடிமை விலங்குகளின்
கண்ணிகளால்,
அடக்குமுறைத் தளைகளை
அடித்து நொறுக்கும்வரை,
இவனது அறைகூவல்,
கன்மலைகளின்
பள்ளத்தாக்குகளில்
கவிதைகளாக எதிரொலிக்கும்!

✦

மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன்!

உன்னத நேயங்கள்
உயிர்தெழும் வரை
எழுதுகோல் சிலுவை
இவன்,
விரல்களின் முதுகில்
விழுவது,
லிபி!

●

## கலாச்சாரக் கழுதை!

ஆதிக்க வர்க்கத்தின்
அரபுக் குதிரைகளை அழைக்காமல்,
வண்ணானின் கழுதையை
வாகனமாய்த் தேர்ந்தெடுத்து
இயேசு தொடங்கினார்
எதிர்கலாச்சாரம்!

●

# பட்டுப்போன கிறிஸ்மஸ் மரம்!

அனாதை ஆசிரமங்களில்
அழுக்கு மூட்டைகளுடன்
கிங்கிணித் தாத்தாக்கள்!
பிளேக்கின் பீதியில்
பிளவுபட்ட பெத்லேகேம்!

தடாக்களில்
தாவீதுகள்!
இட்லி விற்கும்
மாரியாள்கள்;
ரிக்ஷா வலிக்கும்
யோசேப்புகள்!
கொட்டாவிகளுடன்
குளிர் பஜனை!
'மெசியா'க்களைக் கொல்ல
ஆட்டோக்களில் சுற்றும்
அதிரடி ஏரோதுக்கள்!

✦

'அசுத்தம் செய்யாதே!'
திருச்சபைகளின்
தெருக்களில்,
தேவ வசனமாய்
விளம்பர வசனம்!

✦

அலங்கரிக்கப்பட்ட
பிணங்களைப் போல்
ஆலயங்கள்!
மாட்டுத் தொழுவங்கள்
ஆக்கிரமிப்புக் குற்றங்களுக்காக
அகற்றப்படுகின்றன!

✦

தாவீதின் முன்னணையில்
தாலாட்டுக்களையல்ல,
அதிர்வேட்டுக்களை எழுப்பி
ஆவேசக் குலவையிடுங்கள்!

அதோ! - ஒரு
கரித்துண்டு ஓவியனின்
கைவண்ணத்தில்,
சாலையில் இயேசு
ஜனித்து விட்டார்!

●

## ஹைகூ!

இருண்ட கெத்சமனே!
எப்பொழுதும் போல்
கையளிக்கப்படுவது...
இயேசு!

●

## வேதவினாடி - வினா!

ஆண்டவர் உயிர்த்தார்;
ஆலோசனைக் சங்கத்தை
அழைத்தார்;
''நிகழ்ந்ததைக்
கூறுகிறேன்;
ஏழையும், பணக்காரனும்
ஆலயம் நுழைந்து
அமர்ந்தனர்.

அருளுரை வசன எண்களை
ஆயர்வாசிக்க...
அயல்நாட்டு அச்சுப் பதிப்பில்
பளபளக்கும் வேதாகமத்தை,
பணக்காரன் புரட்டினான்!

ஏழையிடம் எந்தவித
எதிர்வினையும் இல்லை;
வேதாகமத்தையும்
பிரிக்கவில்லை!
இருவரில்
எவன் விசுவாசி?

தொப்பை குலுங்க
துள்ளினார் ஒருவர்;

‘‘பணக்காரனே
பக்தியான விசுவாசி!
திமிர்பிடித்த ஏழை
திருச்சபையின் விஷக்கனி!

மனுமைந்தன்
மறுதலித்துச் சிரித்தார்;
‘‘அப்படியல்ல
ஆலோசனைச் சங்கத்தாரே!
மாளிகையில் வேதாகமம்
தொட்டிச் செடியாக இருக்கிறது!
மற்றும் அதை,
படிக்காததால்
புரட்டினான்
பணக்காரன்!
வேதாகமம்,
மண்குடிசையில் புழங்கப்படும்
மண்பாண்டமாக இருக்கிறது!
கணக்கற்ற முறை
புரட்டியதால்,
கந்தலாகக் கிடந்தது
ஏழையின் வேதாகமம்!
மற்றும் ஏழை,
பகலும், இரவும் அதைப்
பதியமிட்டிருந்ததால்
தீண்டவில்லை
திருமறையை!
ஊசியின் காதில்
ஏ.சி.கார்கள்
என்றும் நுழையாது!’’

மனுமைந்தன்
மறைந்தார்;
‘மெஜாரிட்டி’ இழந்ததுபோல்
ஒருவருக்கு ஒருவர் விழித்தனர்
உறுப்பினர்கள்!

●

## ரத்தச்சொட்டு!

எம் தேவனே!
எம் தேவனே!
ஏதேன் முதல்
உசிலம்பட்டிவரை
ஏன் எம்மைக்
கைவிட்டீர்?

✦

தீப்பெட்டிகளுக்காகச்
சவப்பெட்டிகளாகி....
ஊதுபத்தியின் சுகந்தத்திற்காக
வேர்வைக் கவிச்சியுடன்
விலா ஒடிந்து...
தொழிற்சாலைகளின்
புகை போக்கிகளில்,
கரியமில வாயுவாக
கனவுகளைக் கலைத்து...
இல்லற முற்றத்தில்
எச்சமாகப் பிதுக்கப்படும்
இளம் பெண்ணே...
தலித் தகூமி!

●

## உபதே(வே)சிகள்!

கடவுளே!
இப்பொழுது நாங்கள்
கல்வாரிகளுக்கல்ல;
‘கால்’ வாரிகளுக்கே
கவலைப் படுகிறோம்!

கால்நடைப் பயணத்தில்
ஏற்றுமதியாகி,
கடற்கரை வழியில்
இறக்குமதியான,
உன்
இறைவழி மண்டபங்களின்
கருப்புக் கதவுகளில்,
தற்போதைய,
நவீன நற்செய்தி...

நாய்கள் ஜாக்கிரதை!

●

# சிவப்பு வானம் செய்வோமாக!

சமத்துவ பீடத்தின்
சாதி வேள்விகளில்,
சடங்காச்சார பிரமாணங்கள்
சாத்தான்களால்
ஓதப்படுகின்றன!

இங்கு
கொப்புளங்கள் மீது
கோபுரக் கலசங்கள்!
ஆதிக்கச் செக்குகளில்
நசுக்கப்படும் இந்த
எள் விதைகளில்
பிழியப்படும் எண்ணெய்;
பிரபஞ்சத்தின் வித்து!

✦

இவர்களின்
எழுதுகோல்கள்,
எழுப்புதலைச் சுமக்கும்
இரும்பு புல்லாங்குழல்கள்!
இந்த உணர்ச்சிக் கலவையில் -
ஆர்ஷித்துக் கிளரும்
கிறிஸ்தவ கிரணங்கள்,
கடைசி நூற்றாண்டின்
காலக் கருவறைக்கு,

எஃகுக் குழம்பை
ஏற்றமிட்டு இறைக்கின்றன!
தம்...
சிந்தனைச் ‘சிரஞ்சி’யில்,
சீழ்வடியும் சமூகத்திற்குச்
சிகிச்சை செய்யும்
இவர்கள்,
சாம்பல் படுக்கையில்
சரித்திரத் தாய்ப்பாலால் -
மண் பிசைந்து
‘மானுடம்’ செய்கிறார்கள்!

இவர்களது
சேற்றுக் கால்களில்
சிலுவைச் சங்கிலியில்
இரும்புக் குண்டாய்
இந்த பூமி,
பிணைக்கப்பட்டுள்ளது!
இயேசுவின் வருகைக்காக
இதயங்களில்
புல்செதுக்கும்
இவர்கள் -
அடித்தள பூமிக்கு
ஆன்மீக
அட்சரேகை!

மலக்கிருமிகளின்
மண்டப மாநாடுகளில்,
இவர்கள் -
சுட்டுத் தந்த
சுவிசேஷ அப்பங்களை,
எந்த
ஆண்டகைகளின்
மோதிரக் கரங்களும்,
முத்தமிட்டு
ஆசீர்வதிக்கவில்லை!

✦

இவர்கள் இந்த
இருட்டுக் கல்வாரியின்
‘ரேடியம்’ சிலுவைகள்!
இந்த
சிவப்பு ரோஜாக்கள்
விடியல் அத்தருக்கே,
விழி கசக்குகின்றன!

✦

வானுக்கும் பூமிக்கும்,
வரலாற்றுச் சிலுவையில்
அறையப்பட்ட அடிமைகள்,
தார்மீகக் கைதிகளின்
தாகம் தணிக்கும்,
ஆர்டீஷியன் ஊற்றுக்கள்!

இவர்களது
தறி நெசவுகளில்,
இழையப்படுவது
இன்னொரு வளிமண்டலம்!

இவர்களது,
சிலுவைப் போர்
உயிர்த் தெழுதல் காணும் வரை
உறங்கப் போவதில்லை!

வான பரியந்தம் வளர்ந்து,
பூமியின் ஜனங்களை
கூட்டிப் பெருக்கும்
இவர்களின் எழுச்சி...
‘யெகோவா’ வின்
எட்டாம் நாள் அற்புதம்
எனப்படுவதாக!

●

## வடுக்களின் வாழ்க்கை !

‘‘வயல்களை இச்சித்துப் பறித்துக்கொண்டு
வீடுகளை இச்சித்து எடுத்துக் கொண்டு,
புருஷனையும், அவன் வீட்டையும்,
மனுஷனையும் அவன் சுதந்திரத்தையும்
ஒடுக்குகிறவர்களுக்கு ஐயோ!’’

இறந்த ஏழைகளை
புதைப்பதற்கு
‘இரத்த நிலம்’ கூட
சொந்தமில்லை!
கரிசல் ‘நீக்ரோ’க்கள்
‘கர்பியூக்’களின் கீழ்
சிலுவையில் அறையப்படுகின்றனர்!

✦

குடிசைப் ‘பெத்தேல்’களுடன்
கொளுத்தப்பட்ட வெண்மணிகள்,
வரலாற்று வயலில்,
நெல்மணிகளாக முளைக்கின்றனர்!

பொதுக்கிணறுகளில்
தண்ணீர்மொள்ள
தடுக்கப்படும் ‘ரெபேக்காள்’கள்,
தீண்டாமைக்கு எதிராக,

திருக்கை வால் சுழற்றுகின்றனர்!
பற்கடிப்புகளுக்குப்
பலியான பத்மினியின்
மேனியில் வழிந்த ரத்தத்தில்
உப்புச் சிலையாக
உறைந்தது நீதி!

✦

இடக்கன்னத்திலும்
அறைந்து விட்டு,
வயிற்றில் அறையும்
வக்கிர கரங்களை
வகுத்து எறி!

ஏரோத்துக்களின் புட்டங்களில்
எட்டி உதை!

அடிமைகளுக்கான
விடுதலை இசைக்கு,
'நெல்சன் மண்டேலா'வை
ஆர்மோனியத்தின் கருப்புக்கட்டையாக
அழுத்து!

எதேச்சதிகார பூமியை
இளநீர் சீவும் வெட்டறுவாள்
எவன்?

●

# தனத்தின் விழிகளுக்காக...!

கில்லட்டினில்
பூவின் தலை!
சாதியச் செக்கில்
சிசு விதை!

இன்னதென்று அறிந்தே
பூக்களை
ஆணிகளால் அறையும்
அழுக்கு மனிதம்!

சிறுபிள்ளைகளுக்கான
பரலோக ராஜ்ஜியம்,
பூமியிலேயே
புதைக்கப்படுகிறது!

✦

குவளையைத் தீண்டிய
குற்றத்திற்காக
சிலுவையில் அறையப்பட்ட
வண்ணத்துப்பூச்சியே!
புதைக்கப்பட்ட நீதியின்
ரத்த நாளங்களில்
புயல் வீசுகிறது!

நீ
உமிழ்வதற்குக் கூட
முகமில்லாமல்
உளுத்து நிற்கிறோம்!

# கடைசி மணிவேளை...!

யாருக்கும் கடிதம் போடாமல்
ஒரு பிரளயம் வரும்!
தச்சனின் மைந்தன்
தர்மத்தை இழைப்பார்!
மாளிகை அறிக்கைகள்
மலம்துடைக்கம் காகிதங்களாகும்!
மரித்தோரிலிருந்து
'மானுடம்' பிறக்கும்!
விழியின் சிவப்பு
விடியலைத் துப்பும்!
பருவங்கள் கூத்தாடி
பறையொலி முழங்கும்
நெருப்புச் சலவையில்
நிறுவனங்கள் வெளுக்கும்!

●

# இரவுச் சூரியன்!

ஏழைகளின்
வாழ்க்கையைப் போல்
இருண்ட இரவு!
தூசித் தொழுவத்தினுள்
நிலவின் கண்ணீர்த்துளியாக
நிர்வாணமாக பாலகன்!

எதார்த்தத்தை
எண்ணும்பொழுது
இருதயம்
தலைகுனிகிறது....
இயேசுவுக்கும் சுதந்திரம்
இருட்டிலா கிடைக்க வேண்டும்?

சிந்தனை
சிலுவை சுமக்கிறது!

அழப்பிறந்த கண்களில்
அப்பத்தின் பிரகாசங்கள்!
அவருக்கு
திருச்சபையின் அரசியல்
தெரியவந்தால்
அவதரிப்பை மறுதலித்து
ஆயர்பணி புரிந்திருப்பாரோ?

இனியும் அந்த
அம்மணக் குழந்தைக்கு
தழும்புகளைத் தடவிக்கொண்டு
தாலாட்டுப் பாட இயலாது!

விடியலுக்கான
சுடு சூரியனை
சோர்ந்து விழாமல்
சுமந்துவர வேண்டும்!

அதுவரை...
விழி சிந்தும்
இரத்தத்துளி,
தூளியாக மாறி
தூங்க வைக்கட்டும்!

●

# வேறுபாடு!

இயேசு சிலுவையிலறையப்பட்டார்
என்பது சரித்திரம்;
நமக்காக அறையப்பட்டார்
என்பதே கிறிஸ்தவம்!

இயேசு மரித்தார்
என்பது கடந்தது;
இயேசு உயிர்த்தார்
என்பதே நடந்தது!

●

# அம்புலி அப்பம்!

அப்பத்தின்
அஸ்திவாரம்
ஆழமானது!

அருணோதயம்
அழகிய அப்பம் தந்தது...
அஸ்தமனமோ அதை
அகோரமாய்த் தின்றது!

அப்பம் தன்னைப்
பிட்டுத் தந்து
பெருமிதம் அடைந்தது...
மானுடமோ அதை
ரத்தத்தில் துவைத்து
ரசித்தது!

அப்பத்தின்
அகிம்சையும்
அந்தரங்கமானது!

அம்புலியும்
அப்பத்தைப் போல்தான்...
அம்புலி
பௌர்ணமிக்குப் பின்
அமாவாசையானது!

அப்பமோ
அமாவாசைக்குப் பின்
பௌர்ணமியானது!

அப்பத்தின்
அவதாரமும்
ஆச்சரியமானது!

அப்பம்,
என்றும் தன்னை
அகங்காரமாக
அறிமுகப்படுத்தியதில்லை....
அதிகப் பிரசங்கிகளுக்காகத்தான்
அது தன்மேல்
ஆழமான காயங்களை
அப்பிக் கொண்டது!

அப்பத்திற்கும்
அட்டவணை உண்டு,
அப்பம்...
ஆகாயத்தின்
அடையாள அட்டை!
அப்பம்...
ஆன்மாவின்
அட்சய பாத்திரம்!
அப்பம்...
அடிவானம்
நம்மிடம் வைத்த
அடமானம்!
அப்பம்...
நாணயத்தின்
நாணயம்!

அப்பம்...
அந்தஸ்து பார்ப்பதில்லை!
அடிமைகளின் இதயங்களிலேயே
அது
அரியாசனமிட்டு
அமர்ந்திருக்கிறது!

அப்பத்தின் விரல்கள்
அழுத கண்ணீரை
துடைப்பதுண்டு....
அதேபொழுது
அப்பத்தின் வாசம்
அழுத கண்ணீரிலும்
அடிப்பதுண்டு!

அப்பம்
அத்திமரங்களில் காய்ப்பதில்லை!
அப்பத்தின் விழுதகள்
ஆகாயத்திலிருந்து
ஆரம்பிக்கின்றன!

இன்னும் இங்கு
அதிசயம் புரிந்த
அப்பத்தின் அகராதி
அர்த்தப்படுத்தாமலேயே இருக்கிறது!
அதனால்தான்,
அப்பத்தைக் கேட்டால்
நமக்கு
அதிரசம் வழங்கப்படுகிறது!

அங்காடிகள் சில
அச்சடித்து விற்கும் அப்பம்,
ஆபத்தானது!
அப்பம்,

ஆன்மாவின் ஆகாரம்!
ஆகையால்,
பரிசுத்த
ஆவியால் சுட்ட
அப்பத்தை மட்டுமே
அமலுக்கு கொண்டுவர வேண்டும்!

அப்பம்,
அமினாக்களை
ஆதரிப்பதில்லை!
தன்
அபிமானிகளை மட்டும்
அது ஆசீர்வதிக்கிறது!

நம்மில் மீண்டும் ஓர்
அப்பத்தை நெய்வதற்கு
அமர்ப்பணம் செய்வோம்;
அதுவரை அடிமைகளின்
வேர்வைத் துளிகளையே
அப்பங்களாக எண்ணுவோம்!

●

# போலியும் - கேலியும்!

போலி பிஷப்புகளால்
நிஜ பிஷப்புகளுக்கும்
நிம்மதியில்லை!

கணக்கற்றத் திருமணம்;
காண்ட்ராக்ட் ஊழல்;
காமக் களியாட்டம்;
கர்த்தரின் பெயரில் சூதாட்டம்,
இறுதியில்,
எயிட்ஸ் பரிசோதனை;
மயக்கநிலை விசாரணை;
மக்களின் வேதனை!

பாலியல் லீலைகளுக்கு
பைபிளை விசிட்டிங் கார்டாகப்
பயன்படுத்தும் இந்த
கிறிஸ்தவ பிரேமானந்துக்களுக்காக
இயேசு கிறிஸ்து
இன்னொரு முறை
சிலுவை சுமப்பாரா? - அல்லது
சுமக்க வைப்பாரா?

●

# நிஜம் எது?

மெய்யாகச் சொல்கிறோம்
மேசியாவுடன் நடந்தோம்.....

உமது அன்புடன்
உம்முடன் நடந்தோம்....

கசாப்பு ஆடுகளாய்
கதறினோம்!
‘ஒருகன்னத்தில் அறைந்தவனுக்கு
மறுகன்னத்தைக்காட்டு’ என்றீர்!

கன்னத்தைக் காட்டுவதற்குள்
கழுத்தையல்லவா
கொய்து கொண்டுபோகிறார்கள்!

உமது சிலுவையுடன்
உம்முடன் நடந்தோம்...
சித்திரவதைகள் பல!
இடி அமீன்களின்
இராஜ்ஜியத்தில்
சிலுவைக்கும்
இடிதாங்கி வைக்க வேண்டிய
இக்கட்டான நிலை
எங்களுக்கு!

உமது பொறுமையுடன்
உம்முடன் நடந்தோம்...
‘ஒருவன் உன்னை
ஒருமைல் தூரம் வரை
பலவந்தப் படுத்தினால் - அவனோடு
இரண்டு மைல் தூரம்
இன்னமும் செல்’ - என்றீர்.
உமது தயவால்
ஊனமுற்றோர் சங்கத்தில்
இப்பொழுது நாங்கள்
உறுப்பினர்கள்!

ஐயா...!
நீர்
முன்னால் செல்லும்,
நாங்கள்
பின்னால் வருகிறோம்!

உமது விசுவாசத்துடன்
உம்முடன் நடந்தோம்...

குருடர்கள் சிலர்
‘தாவீதின் குமாரனே
எங்களுக்கு இரங்கும்’ - என்றனர்!
அப்பொழுது நீர்
மெய்யாகவே என்னை
விசுவாசிக்கிறீர்களா? என்றீர்!
அவர்களும்
‘ஆம்’ - என்றனர்!
நீர்,
‘உமது விசுவாசத்தின் படியே
உங்களுக்கு ஆகக் கடவது’ - என்றீர்!
அப்பொழுது அவர்கள்....
அப்படியே இருந்தார்கள்!

நாங்களோ
யோபுவைப் போல்
புலம்பத் தவங்கினோம்!
இருட்டு மூலையில்
விசுவாசம் சற்று
வெளிச்சமாக கசிந்தது!

உமது மன்னிப்புடன்
உம்முடன் நடந்தோம்...
பழிவாங்குதல்
மன்னிப்பைப் போல
மகிழ்ச்சியாக இருப்பதில்லைதான்.
ஆனால்,
மன்னித்த பின்
பழிவாங்கப்படுதல்
எந்த தேச நீதி?

உமது போதனையுடன்
உம்முடன் நடந்தோம்...
'காதுள்ளவன்
கேட்கக் கடவான் - என்றீர்!

பிறவிச் செவிடுகள் சில
உம்மை நோக்கி
ஊமை என்றழைக்கின்றனர்!

இன்னும்
என்ன செய்வது?
நீர் எழுதிய
சாட்டை தீர்ப்புதான்
எங்களுக்குச் சம்மதம்!

●

# நீதியில் பிரியமாயிருக்கிறேன்...

நீதி
அநீதியிலிருந்து
ஆரம்பிக்கிறது;
அதன் கிரீடம்
முள்முடி!

கண்ணைக் கட்டிருக்கும் நீதி
தன்
தராசு முள்ளால்
கண்ணையும் குத்தி விடுவதுண்டு!

அன்று
நீதியின் நிலம்
பிலாத்து என்ற
பினாமியால் அபகரிக்கப்பட்டது.

இறையரசின்
உச்சவரம்பு சட்டமோ
உயிர்த்தெழுந்து அதை
ஒடுக்கியது!

மேய்ப்பன் கண்ணீரில்
ஒப்புதல் கையெழுத்திட்டால்,
ஆடுகள் கூடி
ஆணிகளால் தீர்ப்பெழுதின!

ஆனால்,
ஆத்தும நீதியோ அவனது
கண்ணீரைக் களிம்பாக்கி
காயங்களை ஆற்றியது!

நீதி
சிறகு விரித்தால்
பூமி புள்ளியாகிவிடும்!

இயேசுவின் விரல்
நீதித் தராசின்
நிலையான முள்!
தூய்மைக்கு எழுதப்பட்டதுதான்
தொழு நோயாளிகளுக்கும்,
விசுவாசிகளுக்கு எழுதப்பட்டதுதான்
விபச்சாரிகளுக்கும்!
அவரது சட்டம்
மசோதாக்களால்
மாற்றப்படுவதில்லை!
அவரது நீதி
சாட்டையையும் எடுத்தது;
சமாதானத்தையும் தொடுத்தது!

நீதியின் வழி
நியூட்டனின் விதி!
இல்லையெனில்
யூதாஸ் விற்ற நீதி
தீர்ப்பை அவனுக்கே
திருத்தி எழுதியிருக்குமா?

இடைக்காலத்தில்
நீதியின் தலை

ஒரு
உண்டியலைப் போல்
உடைக்கப்பட்டு விட்டது!
இனியும் அதை
கருணை மனு எழுதி
கையில் பெற இயலாது!
அன்றைய மன்றத்தில்
நீதி,
ஒரு தட்டில் அப்பத்தையும்,
மறுதட்டில் கல்லையும் வைத்துக்
கணக்கெடுக்கப்பட்டது!

இன்றைய மன்றம்
நீதிக்கு கைவிலங்கு பூட்டி,
சாவியை அதன்
சட்டைப் பையிலேயே
போட்டுவிட்டது!

நீதிக்கு
காக்கிச்சட்டை மாட்டிவிட்டால்
அதன் பிம்பம்
கருப்புச் சட்டைமாட்டி
கைகொட்டுகிறது!
இனியதற்கு
சிவப்பு சட்டை
மாட்டினால் தான்
சீர்திருத்தம் வரும்!

இக்காலத்திலும்,
அநீதியின் கூச்சல்கள்
ஆலயங்களில் எதிரொலிப்பதால்,
சமத்துவத்தின் மார்பில்
சகதி பூசப்படுகின்றது!

அச்சகதியை களைய
நீதி நதியை
தேசியமயமாக்குதல் வேண்டும்!

நீதி
கள்ள தீர்க்கதரிசிகளை
கணக்கெடுத்துக் கொண்டிருக்கிறது!
ஹிட்லரின் படை
பனிவெளியில் உறைந்தது போல்,
நிகழ்காலத்தின் அநீதி
நிச்சயம்
நெருப்பில் எரியவரும்!

●

## விலை!

''இலவசமாய் பெற்றதை
இலவசமாய் வழங்குங்கள்,''
வாசித்து மூடினேன்;
விலைகொடுத்து வாங்கிய
'வெல்வெட்' பைபிளை!

●

# சிலுவை சுமக்கலாம் வாருங்கள்!

கழுமரம்
கலப்பையானது
நீதி,
சிலுவையின்
கையைப் பிடித்து
கண்ணீர் வடிக்கிறது!

சிலுவை,
சுதேசவானின்
சுதந்திர கொடிமரம்!

நீதிராஜனின்
நிழற்குடை!

சிலுவை மரத்தின்விதை
வானிலிருந்து விழுந்தது,
பூமியும் அதை
புடம்போட்டு பூத்தது!

சிலுவை மரத்தின் வேர்
கண்ணீரை உறிஞ்சி,
உயிர்த்தெழுதலால்
ஒளிச்சேர்க்கையடைந்திருப்பதால்,

வன்ம பூமியிலும்
சிலுவைக்கு,
சித்தாந்தமிருக்கிறது!

சிலுவை தன்மேல்
தங்கம் பூசப்படுவதை
தாங்கிக் கொள்வதில்லை!
ஆணிகளால் கோர்க்கப்படுவதையே
ஆத்மபூர்வமாக விரும்புகிறது!

சிலுவை தனக்கு
சிங்காரிப்பவர்களை
சிபாரிசு செய்வதில்லை!
செக்கிழுக்கப்படுவதையே
சிலாக்கியமாக நினைக்கிறது!

சிலுவை ...

ப
ரி
சு
த்
பாவத்தைக் த கடக்கும் பாலம்
த்
தி
ன்
ஏ
ணி

இது
சிலுவைப்பதிகாரத்தின்
சிறப்பு விதி!

இன்னும் இங்கு
சிலுவை,
சோதனைக் குழாயிலேயே
சொருகப்பட்டுள்ளது,
எல்லா தேசங்களிலும்
சிலுவை மரத்தில்,
சில்லறை காய்க்க வைப்பதிலேயே
கவனம் செலுத்தப்படுகிறது!

சிலுவை,
அறுத்தவனுக்கே
பால் சுரக்கும்
அதிசய மரமல்லவா?

சிலுவையின் முனை
கொழுவைவிடக் கூர்மையானது!
ஆனால்,
அதில் இன்று
கத்தி தீட்டப்படல் கண்டுதான்
கவலையாக
இருக்கிறது!

சிலுவை....
சின்னம் மட்டுமல்ல,
அது
சீர்திருத்தத்தின் சிருஷ்டி!
வாழ்க்கையின்
அழுக்குகளைத் துவைக்கும்
வண்ணான் குறி!

ஆனால்
இன்றைய தேதிவரை
அந்த திசைகாட்டியை
தீமைகளை நோக்கி

திருப்பிவைத்து நாம்
திருப்தியடைகிறோம்!

சிலுவை
சுத்தியல் சுமப்பவர்களால்
சூழப்பட்டு நிற்கின்றது!
அது,
அரண்மனைகளின்
ஜன்னலாக மாறிவிடாமல்,
ஜாக்கிரதையாக இருத்தல் வேண்டும்!

சிலுவை,
சுமப்பதற்கு ஆள் இல்லாமல்
சும்மாகவே இருக்கிறது!
இனி எத்தனை வருடங்கள்தான்
சிலுவையின் பிரதிகளை,

கூரையில் சொருகிவைத்து
கும்பிடப் போகிறோம்!
இயேசு சுமந்தது
இருக்கட்டும்!
சீமோன் சுமந்த சிலுவை
ஏன் நமது
சிந்தனையில் இறங்கவில்லை!''
சிலந்தி பிடித்த சிலுவையை
நாம் தோள்களால்
தூசி துடைக்க வேண்டாமா?

சிலுவை
நீரோக்களின்
பிடிலாக இருப்பது
பிற்போக்குத்தனம்!
சிலுவை...
கலங்கரைவிளக்கம்,

கள்ளத் தோணிகளை
கவிழ்த்தி விடுங்கள்!

சிலுவை மரத்தின் வேர்கள்,
கரையான்களால்
அரிக்கப்படுகின்றன!
சிலுவைமரம்
உளுத்து போவதற்குள்
நாமதற்கு
உரமாக வேண்டும்!

இனியும் அந்த
கரையான்களை
காதலிக்க முடியாது!

சிலுவை
மூலிகைமரம்,

வாருங்கள்...
அந்த
மூலிகையை பிழிந்து
திருச்சபைகளின் மூர்ச்சையை
தெளிய வைப்போம்!

●

# கர்த்தரைக் காதலிக்கிறேன்...

கர்த்தரை நான்
காதலிக்கிறேன்!

அவரது
ஆடையைத் தொட்ட
அவளைப்போல்
ஆச்சரியம் எனக்கு!

அவரது
முள்முடி எனக்குப்
பூக்களை நெய்கிறது
அவரது
தழும்புகள் எனக்குத்
தலையணைகள்!

அவரது
இமைகள் எனக்கு
விசிறிவிடுகின்றன;

அவரது
கண்ணீர் எனக்கு
தாய்ப்பால் தருகிறது!

எனது பாத்திரம்
அவரது ரத்தத்தால்
நிரம்பி வழிகிறது!

எனது எழுதுகோல் புல்லாங்குழலில்
அவரது பெயரே
சங்கீதமாக ஒலிக்கின்றது!

மண்ணைக் குழைத்து
கண்ணைத் திறந்ததுபோல,
அவர் தன்னைக் குழைத்து
என்னைத் திறந்திருக்கிறார்!

கர்த்தருக்குள் தொலைந்த என்னை
கர்த்தராலேயே மீட்க முடியும்!
ஊன் பொய்;
உமது வழியே மெய்!

ஆட்டுக் குட்டி
அழுகின்றது;
வேறு எதுவும் வேண்டாம்;
உமது விரல்களின்
ஸ்பரிசமே வெளிச்சம்!

●

## ஹைக்கூ!

அஞ்சல் வழிப் பாடத்திட்டத்தின்
ஆரம்ப துணைவேந்தர் -
பரிசுத்தப் பவுல்!

●

## தாகத்தால் தவிக்கிறோம்!

எங்கள்
கிறிஸ்மஸ் மரங்கள்
இப்பொழுது சிலுவைகள்!
ஒப்பாரிகளே எங்கள்
ஞானப்பாட்டுக்கள்!

கர்த்தரே
கவனியும்!

எங்கள்
தொழுவங்களில்
துர்நாற்றம்!
எங்கள் ரசங்களில்
காடி கலக்கப்படுகிறது!
எங்களுக்கான
ரொட்டித் துண்டுகளில்
நூலாம்படை!
நீர் வழங்கிவிட்டுப்போன
புளித்த மாவிலும்
இப்பொழுது பூச்சிகள்!

தட்டினோம்....
ஜன்னலும் சாத்தப்பட்டது!

தேடினோம்....
கண்கள் குருடாக்கப்பட்டன!
கேட்டோம்....
இருப்பதும் பிடுங்கப்பட்டது!

எங்களிடம்
அப்பங்களைப் பெருக்கும்
அமுதசுரபிகள் இல்லை!
தண்ணிரை ரசமாக்கும்
தகுதி எங்கள்
தலைவர்களுக்கும் இல்லை!

எங்கள்
அயல்நாட்டு மன்னாக்கள்
மர்மமாக மறைக்கப்படுகின்றன!

எங்களது
'பாத்திரங்'களை
தேர்தலெனும்
அடகு கடைகளில் நாங்கள்
விற்றுவிட்டதால்,
அன்றாடம் நாங்கள்
அழுத கண்ணிரையே
அருந்துகிறோம்!

(நீர்),
நிறைந்து வரும்வரை
காகங்கள் போல நாங்கள்
கற்களை
சுமந்து கொண்டிருப்போம்!

ஆண்டவரே!
நீதியின் மேல்
பசிதாகம் உள்ளவர்கள்
ஆதிமுதல் அபாக்கியவான்களா?
புலம்பியது போதும்!
எங்களது
திசைகளைத் தீர்மானிக்க
தெளிவானதொரு தீர்க்கதரிசி
திருப்பியனுப்பப்படல் வேண்டும்!

இல்லையெனில்,
அர்த்தங்கருதி
திருமறையின் வசனங்களை
திருத்தி விடுவார்கள்!

●

## விழுவதும் - எழுவதும்!

நிற்கவர்களை விழவைப்பதல்ல;
விழுந்தவர்களை எழவைப்பதே
இயேசு செய்த அற்புதம் !

ஏன் புரிவதில்லை
இன்றைய ஊழியக்காரர்களுக்கு?
''மேஜிக்'' அல்ல;
''லாஜிக்''கே கிறிஸ்தவம்!

●

# இரத்த தானம்!

இயேசுவின் ரத்தம்
கண்ணீரும் வியர்வையும்
கலந்தது!

இறையியல் தத்துவத்தில்
இயேசுவொரு சோஷலிஸ்ட்!
இயலாதெனில் வியர்வை
விதைகளாக
விருத்தியடைந்திருக்குமா?

அவரது ரத்தம்
கொல்கொதாவின்
மேடுபள்ளங்களைத் தான்
மேவியிருக்குமா?

சொந்த ரத்தத்தை
சுனையாக்கிய இயேசுவின்
யுத்த ரகசியத்தால்
நரம்புகள் நாணேற்றுகின்றன.

நம்
பாதங்களைக் கழுவிவிட்ட
பாதரச ரத்தம்
பரிசோதிக்கப்பட்டது
பாவம்!

இயேசுவின்
இரத்தப் பிசுக்கு நம்
பிள்ளைகளின் முதுகில்
இன்னமும் பிடித்திருக்கிறது!

எத்தனை கன அடி
கண்ணீர் அதை
கழுவி விட முடியும்?

●

## இறையியலா? - பொறியியலா?

இந்தியரல்லாத வில்லியம் கேரி
செராம்பூர் பல்கலைக்கழகம் அமைத்தார்;
இந்திய இவாஞ்சலிஸ்ட்
பொறியியல் பல்கலைக்கழகம் அமைத்தார்!

தமிழ்நாட்டின் எழுப்புதலுக்கு
தாமதமான காரணம்;
இறையியலை விட இங்கு
பொறியியலுக்கே
போதுமான வருமானம்!

●

# அவர் இங்கு இல்லை !

பூவைக்
கண்ணீரால் குளிப்பாட்டினீர்கள்,
அதன் காம்பை
கத்தரித்துக் களித்தீர்கள்!

வியர்வையைத்
தேனாக்கித் திளைத்தீர்கள்,
இரத்தத்தைப் புளிக்க வைத்து
ரசமென ரசித்தீர்கள்!

வானம் தந்த முகவரியை
கல்லறையிலே
கிறுக்கி வைத்தீர்கள்;
அப்பம் தந்த விரல்களை
ஆணிகளால் தைத்தீர்கள்!

விதையை பிணம் என
பெருமைப்பட்டீர்கள்;
விதை விருட்சமானதும்
சிறுமைப்பட்டீர்கள்!

சிப்பியின் முகத்திலே
எச்சிலைத் துப்பினீர்கள்;
அது சிரித்துக் கொண்டே
முத்தைத் துப்பியது!

செடியைப் பிடுங்கி
தலைகீழாய் நட்டீர்கள்;
பூ புதையுண்டது,
வானத்திற்கு வேர்
வலிமையுடன் வளர்ந்தது!

தச்சனை
ஆணியால் அறைந்தீர்கள்;
வான வாசலின்
கதவொன்று திறந்தது!

நிலவை
இழைத்து இழைத்து
பிறையாக்கினீர்கள்;
அது
அமுத சுரபியென நிரூபித்து
ஆத்மப் பாலால் வழிந்தது!

சூரியன் மறைந்ததும்
அஸ்தமனம் என
ஆனந்தப்பட்டீர்கள்;
அது அடுத்த புறத்தில்
அருணோதயமானதும்
அழ ஆரம்பித்தீர்கள்!

ஆடையைப் பங்கிட்டுக் கொண்ட
நீங்கள் அவரது,
நிர்வாணத்தை
நினைக்கவில்லை என்பது
நிஜம்!

கல்லறை இங்கிருக்க
விழிப்படைந்த அவர்,
இங்கு இல்லை!
திரும்ப வரும் வரை
தேடிக் கொண்டிருங்கள்!

●

# எழுப்புதல் எப்போது?

கர்த்தரைச் சேவிக்கிறவர்
உறங்குவதுமுண்டு,
கிறங்குவதுமுண்டு!

எங்களது
ஆயர்களின் அங்கிகள்
இரவு உடைகளாகிவிட்டன;
எங்களது உபதேசியார்கள்
நிருபத்தை தலையணைகளாக்கி
நிம்மதியாகத் தூங்குகின்றனர்!

பரிதாபமான
எங்களது பாடகர் குழுவினர்,
கொட்டாவிகளுக்கு மட்டும்தான்
இப்பொழுது
வாயைத் திறக்கின்றனர்!

கர்த்தரின் நாமத்திலே
காணிக்கைப் பெட்டிகள் மட்டும்
இங்கு கண்விழித்திருக்கின்றன!

எப்படி எழுப்புவது
இந்த லாசருக்களை?
இறந்த நூற்றாண்டின் புழுதி
இவர்களது இமைகளில்
இன்னமும் ஏன்?

இயேசுவைத்
தூங்கவைக்கும் தாலாட்டுகளை
இனி
எத்தனைக் காலங்கள்
தயாரிப்பது?
அவர்
விழித்திருந்த வருடங்களை
விவாதிக்க வேண்டாமா?

இஸ்ரயேலேரைக் காக்கிறவர்
உறங்குவதுமில்லை
தூங்குவதுமில்லை!
இஸ்ரயேலேரை மட்டுமல்ல
'இந்திய கிறிஸ்தவர்களையும்' - என
இமைகளின் கீழே
எழுதிவையுங்கள்!

கண்மூடி ஜெபம் செய்தல்
கர்த்தருக்கு மட்டும்தான்!

இங்கு இனி
சிலுவைகளையெல்லாம்
சாவிகளாக மாற்ற வேண்டும்?
ஆலயங்களில்
அப்பங்களுடன் சில
அலாரங்களையும் தரவேண்டும்.
திருத்திராட்சை ரசம்
தீவிரமாக முகங்களிலே
தெளிக்கப்பட வேண்டும்!

கல்லறைச் சட்டங்களைத்
தோலுரியுங்கள்!
உறக்கத்தை விதைத்து
எவனும்
வெளிச்சத்தை அறுக்கிறதில்லை.

ஊழியம் என்பது
உறக்கத்திற்காக அல்ல;
விடியலைக் காண
விழிகளைத் தரவேண்டும்!

நிரூபத்தைத் தவிர
எழுப்புதலையும் இங்கே
இலவசமாக்குங்கள்;
மேய்ப்பனின் வருகைக்காக
ஆடுகள் போல
ஆயத்தமாயிருங்கள்!

மேய்ப்பர்களும்
சாஸ்திரிகளும்
விழித்திருந்ததனால்தான்
கர்த்தர் பிறந்த தொழுவம்
காட்டப்பட்டிருக்கிறது!

அயரவேண்டாம்!
ஆலயங்களும், சீடர்களும்
அலறி எழும்வரை
ஆத்தும் மணிகள்
அடித்துக் கொண்டேயிருக்கட்டும்!

●

# சக்திகளே சாவிகள்!

சில ஆலயங்களில்
காசு போட்டால்தான்
கதவுகள் திறக்கப்படுகின்றன!

இறையியலின் கதவுகள்
இங்கு ஏன்
இழுத்து மூடப்பட்டுள்ளன?

ஆராய்ந்தால்,
ஆலயங்களில் பல
அரசியலுக்கு அருமையானவை,
அகிம்சைக்கு அர்த்தமில்லாதவை!

எனவேயதன்
அகழிகளைத் தாண்டுவதற்கு
சத்தியமாக
நமக்குச் சாத்தியமில்லை.

தெரிந்தும் நாமேன் அந்த
அரண்மனைகளின் வாசல்களை
அழுத கண்ணீ ரால்
தெளித்துக் கொண்டிருக்கிறோம்?

அர்த்தம் தெரியாமலேயே
அல்லேலூயா போட்டால்

அதன்
வாசல்கள் நமக்கு
வழிவிட்டு விடுமா?

இயேசுவைப் பாருங்கள்!
வானத்தை திறப்பதற்கு
சிந்தையைப் பிழிந்து
சிலுவைச் சாவி செய்து கொண்டார்!
நாம்
கண்களை மூடிக்கொண்டு
கதவுகளின் பூட்டுக்களை
கம்பிகளால் நெம்புகிறோம்.

கண்களைத் திறவுங்கள்!
சாவிகள் செய்ய
சக்திகள் சேகரிப்போம்!

தின்று கொழுத்த
திமிங்கலத்தின் வயிறு
திறக்கப்பட்டிருக்கிறது.
கட்டளைகண்டு
கடல் பிளந்தது போல
கதவுகளும் பிளக்கலாம்!

காத்திருத்தலும் ஒருவகைக்
கண்ணியம்தான்!
மகிமை மனசு வைத்தால்
குடிசைகளும் இங்கு
கோயில்கள் தான்!

நிருபம்,
வார்த்தைகளால் தன்
வாசல்களைத் திறந்திருக்கின்றது,
அமைதி கிட்டும் வரை
ஆத்ம திருப்தியோடு
அதனுள் அமர்ந்திருப்போம்!

இன்னும் கதவுகள்
உடைக்கப்படுதலா உறுதி!
திருப்தியாயிருங்கள்!

ஒரு
திறனாய்வுக்கு அவை

திறக்கப்படாவிடில்
இயேசுவின் கல்லறையைப் போல
தகர்க்கப்படுதல் தான் தர்மமாகி விடும்!

●

## சம்பிரதாயங்கள் !

வெள்ளையாடை அணிந்தவர்
பெந்தகோஸ்தே என்றால் -
அரசியல்வாதிகள் அனைவரும்
பெந்தகோஸ்தேவா?
நகையில்லாமல் இருப்பது
பரிசுத்தம் என்றால்;
நகையணிந்தவர்
அசுத்தம் என்பதா?

அணிவதும் தவிர்ப்பதும்
அவரவர் விருப்பம்;
இறையியலுக்கும் இதற்கும்
எந்த சம்பந்தமும் இல்லை!

பாத்திரத்தின் வெளிப்புறத்தை அல்ல,
பாத்திரத்தின் உட்புறத்தை
சுத்தம் செய்யுங்கள்
என்றார் இயேசு;

கவலை விடுங்கள்;
கண்களை மூடியபின்
கையில் இருக்கும் -
கால்பவுன் மோதிரத்தையும்
கழற்றி விடுவதால்,
கல்லறைக்கு போகும்முன்
கடைசியில் அனைவரும்
பெந்தகோஸ்தே!

●

## எழுந்திரு வாலிபா!

இளைஞனே!
திடப்படுத்தலுக்குப்பின் நீ
பலவீனப்படுத்தப்படுவதும் தெரியும்!
இராபோஜனத்திற்குப் பின் நீ
இரத்த சோகையடைவதும்
எனக்குப் புரியும்!

ஆகவே நானுனக்கு
அறிமுகப்படுத்துவது
ஆராதனைக் கஞ்சிகளையல்ல;
புதுக்கவிதையினுள் சில
புரதச் சத்துக்களைத்தான்!

கிறிஸ்மஸ் வந்தால்
சிரிப்பதற்கும்,
லெந்து காலங்களில்
அழுவதற்கு மட்டுமே உன்னை
ஆயத்தப்படுத்துவார்கள்!
தேதி குறித்து
உணர்ச்சிகளை உந்திவிட,
நீ ஒன்றும் நடிகனல்லவே?

பேசிவிடுவாயோ என
பிரசங்கத் தொட்டிலில்
தாலாட்டுவார்கள்;

ஏசிவிடுவாயோ என
பாடகர் குழுவிற்காக
பயிற்சியளிப்பார்கள்!

அத்தனையும் ஏற்று நீ
ஆயத்தமானாலும்
உனது உரிமை,
ஒப்பாரிவைக்கும் பொழுது
ஒதுங்கியே இருப்பார்கள்!

அடி மனசுக்குள்
அழுக்கை அப்பிக் கொண்டு
அங்கி வெள்ளையைக் காட்டி
ஆச்சரியப்பட வைப்பார்கள்,
திருவிருந்திற்குப் பின்
இவர்கள் கை கழுவுவது
சாப்பாட்டிற்கு மட்டுமல்ல
சமத்துவத்திற்கும் தான்!

இரு!
இரண்டு கைகளாலும்
உன்னை ஆசீர்வதித்துவிட்டு
மூன்றாவது கையாக
ஒரு
உண்டியலையும் நீட்டுவார்கள்!
இதைவிட ஒரு
பிச்சைக்காரனுக்குப்
பிச்சையிட்டு நீ
பெருமிதப்படலாமே!

உண்மையிது!
உண்டியல்களின்
உள்ளங்கைகளைவிட,
தொழுநோயாளிகளின் கைகள்
தூய்மையானவை!

பலமானவனே!
இயேசுவின் பிறப்பின் போது
பளபளப்புகளைக் கண்டு
பரவசப்படாதே!
கந்தலின் மீதே உன்
கவனமிருக்கட்டும்!
அவரது இறப்பின்போது
தண்ணீர்ப் பந்தல்களில்
தவமிருக்காதே!
கட்டாயச் சோகத்தை
கழற்றி எறிந்துவிட்டு
அது,
உயிர்த்தெழுதலுக்கான உத்தியென்பதில்
உன்னிப்பாக இரு!

பெட்டியினுள் பூட்டி
வெளியில் விசிறிவிடுவார்கள்;
தேர்தலெனும்
ஏலப்பண்டிகையின் போது
உனது விலையை
நிதானமாக நிர்ணயிப்பார்கள்!

முத்திரை முகம் காட்டினால்
மறைமுகமாக நீ
கைகளிலே ஏந்திவரும்
சிலுவையை உனது
முதுகிற்கு மாற்றவும்
முயற்சி செய்வார்கள்!

அறிகிறாயா?
நீர் மோரை விட உன்
ஆயுள்விடும் கண்ணீருக்கு
அடர்த்தி அதிகமென?

இறையியலின் இன்னொரு தூணே!
ஆலயங்களின் அடித்தளம்
சாதிகளால் பூசப்படுவதைக் கண்டு - நீ
ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்,
இயேசுவெனும்
இளைஞனைப் போல்
ஆலயங்களினுள் நீ
ஆத்திரப்பட வேண்டும்!

சுயநிறக்காரனே!
அரசியல் வெள்ளையடித்த
ஆலயங்களை அலட்சியப்படுத்து;

அவற்றை
ஆதரித்து அமர்வதை விட
கல்லறைத் தோட்டத்தில்
வசனப் பூக்களையாவது
வாசித்துப் பறிக்கலாம்!

உன்னை
அறைய நினைக்கும்
ஆணிகளை அலட்சியப்படுத்து;
ஆணிகளே
வாட்களானதாக
வரலாறு இல்லை!

உன்
சுட்டு விரலுக்குள்
சூரியன் இருக்கிறது;
அதை நீ
திருப்பும் திசையெல்லாம்
வெளிச்சம் அடிக்குமென
விளங்கிக் கொண்டால் போதும்!

●

## திடன் கொள்!

உன் சிறகுகளுக்கு
இப்படி ஒரு
இலையுதிர்காலம்
எப்பொழுது வந்தது?

சாபத்தை வரமாக்கியவளே!
உனது வரலாற்றை
வரிசைப்படுத்தும் பொழுது
வருத்தமாகவும் இருக்கிறது;
வலிமையாகவும் இருக்கிறது!

உனது வரலாறு
சிறுகதையாக்கப்படல் கண்டு
சினமாக இல்லையா உனக்கு?

கிறிஸ்தவ கடைகளின்
கண்ணாடி கூண்டுகளுக்குள்
உனது
பொம்மை வாழ்க்கையில்
புதுமை என்ன இருக்கிறது?

உனது
கிறிஸ்மஸ் கண்ணீர்
பட்டுப் புடவைகளுக்காக
சிந்தப்படுவது பரிதாபம்!
நீ
முக்காடிட்டு மூடியிருப்பது
மூட நம்பிக்கைகளுக்குமா?

தையல் தங்கையே!
அழுக்குகளைத் துவைக்க நீ
ஆயத்தமாக வேண்டும்!

ஆலயங்கள் உனது
தாய்வீடுகளல்லவா?

அல்லி அரசு
ஆபத்தானது அல்ல,
அன்பானதும் கூட!
இளைஞர்கள் பலர்
வளராமலேயே
வயதாகும் நிலையில்,
தளர்ந்த நீ தலை நிமிர வேண்டும்!

எத்தனைக் காலங்கள் தான்
உப்புச் சிலையாக நீ
உறைந்திருப்பது?

கைப்பிரதிகள் எழுதாத
இயேசுவின் விரல் உனக்காக,
இளகிய மனசுடன் எழுதியிருக்கின்றது.
உன் கூந்தல் நதி
இயேசுவின்
பாதங்களெனும் கரைகளினுள்
பயணப்பட்டிருக்கிறது!

வெள்ளை விதவையின்
கண்ணீர் காணிக்கையை
இயேசு
அற்புதமாக ஆய்வு செய்திருக்கிறார்!

இயேசுவின் மகிமை நிலை
முதன் முதலாக
மகதலேனா மரியாளுக்கு
மனது வைத்து காட்சியளித்திருக்கின்றது!

ஏழு பிசாசு பிடித்தவளுக்கும்
இரக்கம் காட்டப்பட்டிருக்கின்றது!
சுடர் விழியே!
உனது
சொந்த பலத்தை
சுமையாக நினைக்கும்
சூழ்ச்சிகளை சுட்டுவிடு!
மன்னிப்புகளுக்காக
மண்டியிட்டது போதும்!
மறுவாழ்வு இயலாத மன்னிப்புகளை
நிச்சயமாக நீ
நிராகரித்து விடு!

மாதர் சங்கங்களை
மறந்து விடு!
அவை
சிற்றுண்டி கூட்டங்களுக்கு மட்டுமே
சிறப்பானவை!

வன்மையானவளே!
வாலிப வக்கிரங்கள்
சூழ்ந்ததா வாழ்க்கை?

தெரசாவின் -
முகச் சுருங்களில்
உலகச் சமாதானம்
உருகி வழிய உணராயோ நீ?

மடியிலே
மகவை கட்டிக்கொண்டு
புதுமைப் பெண்ணொருத்தி
போர்க்களம் புகுந்திருக்கிறாளே!

வரலாற்றை
வயிற்றிலே சுமந்தவளே!
இன்னும் பல ஞானிகளை - நீ
இனம் காட்ட வேண்டும்;
ஈன வேண்டும்!

இளைய புயலே!
இறையியலின் தூசி பறக்க
எழவேண்டும் - அத்தோடு நீ
எழுத வேண்டும்!

எங்கே?
அடுப்பை பற்றவைக்கும்
உனது
அழகிய விரல்களைத் திருப்பி
அநீதியை
பற்றவை பார்க்கலாம்!

## முரண்!

ஊழியக்காரர் ஜெபித்து
கார் வேண்டும்! - ஆனால்
ஊழியக்காரர் நடக்கவேண்டும்!
ஊழியக்காரர் ஜெபித்து
வசதி வேண்டும்! - ஆனால்
ஊழியக்காரர் எளிமை வேண்டும்!
இப்படியும் சில எதிர்பார்ப்புகள்...

ஊழியக்காரர் காரில் வரவேண்டும்.
இல்லையெனில்
கன்வென்ஷன் மரியாதை கிடையாது!
தொலைக்காட்சி பிரசங்கியாக
இருக்க வேண்டும்! - இல்லையெனில்
தொடுதல் அற்புதம் நடக்காது!
இப்படியும் சில எதிர்பார்ப்புகள்...

அது சரி;
எது சரி?

# பரிசுத்தத்தின் பரிணாமம்....

இயேசுவின்
உள்ளங்கைத் தழும்புகளை,
எனது
எழுதுகோலால்
தைக்க இயலாதா?

இயேசு ஒரு
எதார்த்தவாதி!

அவரது பல பருவம்,
தந்தையாக,
மகனாக,
ஆசிரியராக,
மாணவனாக,
சகோதரனாக,
நண்பனாக,
தலைவனாக,
தொண்டனாக,
மருத்துவராக,
முக்கியமாக,
'மனிதனாக'
பகுத்தறிவை நம்முள்
பதியமிட்டிருக்கிறது!

அவர்
மரித்தோரிடத்திலிருந்து
''எழுந்தார்'' என்கிறது
கல்லறைக் கல்வெட்டு!

அந்த இராஜ குமாரனை
இராசயன பரிசோதனை
செய்யும்பொழுது
அவர்,
மகிமையால் கருவானார்,
மனிதனாய் உருவானார்,
பின்,
மனிதனால் இரையானார்
மகிமையால் இறையானார்! - என

ஆய்வின் விதி
அடர்த்தி காட்டுகிறது!

அவரது பாடுகள்
பாமர வர்க்கத்தின்
விடியலுக்கான
பட்டயங்கள்!

மானுட எழுச்சிக்காக
தன்
மாம்சத்தை பகிர்ந்தளித்த
அந்த
சிலுவைச் சிபிக்கு
சிரம் தாழ்த்துவோம்!

●

## வாசல்களைத் திறவுங்கள்!

அநீதியின் விலங்குகளை
அறுத்தெறியுங்கள்!
சிலுவையை
நீதியின் செங்கோலாக
நிமிர்த்தி வையுங்கள்!

அடுத்தவருக்காக
சிலுவை சுமத்தல் வேண்டாம்,
தங்களது சிலுவைகளை
தாங்களே சுமங்கள்!
அன்றுதான்,
உண்மையான உயிர்த்தெழுதலுக்கு
உத்தரவாதம் இருக்கும்!

அடுத்தவர்க்காக
அலப்புதல் 'ஜெபம்' வேண்டாம்;
தங்களுக்காக தாங்களே
தாழ்ந்து நின்று ஜெபியுங்கள்!
அன்று
கர்த்தரின் கரங்கள்
பள்ளங்களுக்கும், உள்ளங்களுக்கும்
பாலம் அமைக்கும்!

அட்டூழியத்தை
ஆதரித்தல் ஆபத்தானது,
அது
அந்தகாரத்தில் நம்மை
அமிழ்த்தி விடும்!

தீர்க்க தரிசிகளைத் தேடுங்கள்:
இயலாதெனில்
திருப்தி கிடைக்கும் வரை
தியானியுங்கள்!

மெழுகுவர்த்திகளாய்
மெலிய வேண்டாம்;
ஒரு
விடியலுக்காய் விழித்திருங்கள்!

ஆலயங்களில்
ஆடம்பரச்சத்தம்
அருவருப்பானது!
அமைதியான
சுத்த சூழ்நிலையே
சுகமானது!

மதத்தை 'மத' மாக்கிப்
பிளிருகின்றவன் பிசாசு!
மதம்,
மிதமாகவே மிளிரட்டும்!

பத்துக் கட்டளைகளை
பத்து விரல்களாக்கி
பரிசுத்தமாகப் பயன்படுத்துவோம்!
அதில்
ஒரு விரல் குறைந்தாலும்
நாம் ஊனம்தான்!

கண்டிப்பாக
கல்லறைச் சட்டைகளைக்
கழற்றி விடுங்கள்!
அப்பம் நெய்த ஆடை
அழகானது!

அருமையானவர்களே!
அர்த்தமில்லா பூட்டுக்கள்
அபத்தமானது!
வானத்தை வரவேற்க
முதலில்,
வாசல்களைத் திறவுங்கள்!

## சிறகு சிலுவையானது!

மலைச் சிகரங்களை
பிரசங்க மேடையாக்கிய அவர்
கம்பீரமானவர்!

நேரடி சொற்பொழிவில்
நிலைக்கொண்டு
கைப்பிரதிகளில் கவனம் செலுத்தா அவர்
புதுமையானவர்!

பதுக்கப்பட்ட இறையியலால்
ஒதுக்கப்பட்ட பாமரர்களுக்கு அவர்,
சிநேகிதமானவர்!

விஞ்ஞானக் கூடமொன்று
வியாபாரக் கூடமாதல் கண்டு
வேகம் கொண்டெழுந்த அவர்
வீரமானவர்!

அழுகிய விரல்
மெழுகென எரிவதைக் கண்ட அவர்,
வித்தியாசமானவர்!

பிள்ளைகளின் பிரியமும்
ஏழைகளின் பசியையும் இனம் கண்ட அவர்
இரக்கமானவர்!

தையல் இல்லா ஆடை அணிந்து
ஆடம்பரம் வெறுத்த அவர்,
எளிமையானவர்!

எதிரிகளுக்கும் உவமைகளால்
உண்மை அறிவித்த அவர்,
கண்ணியமானவர்!

மரணவிரல்
நீளுவதை நிதானித்து அதற்கு
மோதிரமாவதற்கு
முடிவு செய்த அவர்
உறுதியானவர்!

கண்ணீரைக் கடலாக்கி
மேனியைப் படகாக்கி
ஆகாயக் கரையேறிய அவர்,
மகிமையானவர்!

மொத்தத்தில்,
தன் ரத்தத்தால்,
முகப்பிரதி தந்த அவர்,
முக்கியமானவர்!

ஆனால் அவரது,
பிறவி மேன்மை
பேசிக்கொண்டும்,
நல்லவர் போல் கை
வீசிக் கொண்டிருக்கும்
நாம்...?

●

# நெருப்புச் சுவாசம்!

சிலுவை மரம்
ஆணிகளைக் காம்புகளக்கி
உள்ளங்கைப் பூக்களில்
தேன் வடித்த தேதி இருக்கிறது!

வார்த்தையால் வரப்புக்கட்டி
கண்ணீரை விதைத்து
காணாமல் போனவரை
துப்பறிந்து துதிக்க வேண்டாமா?

இன்று
அமுத சுரபி ஒன்றை
முதுமக்கள் தாழிகள்
விழுங்கிவிட்டதாக
விலாசம் கிடைத்திருக்கிறது!

சிலுவை ஒரு
தொலைக்காட்சி கோபுரம்!
ஆனால்
திருச்சபைகள் எனும்
தொலைக்காட்சி பெட்டிகளில்
காணாமல் போனவரின்
செய்தி அறிக்கையில்,
கர்த்தரின் பெயரும்
கண்ணீரோடு உச்சரிக்கப்படுகிறதே!

தன்னைக்
கண்ணீர்த் துடைக்கும்
கை குட்டையாய் நூற்க
சிலுவையெனும் இராட்டையில்
சிவப்பு நூலாக நுழைந்தவர் இயேசு!
அவர்
சிலுவைக் குடையின் கீழ்
இரத்த மழைபொழிந்திருப்பது
ரகசிய ரணம்!

தச்சனுக்கு
சிலுவை செய்த வம்சத்திற்கு
உண்மை விளங்கவில்லை.
அது
கவிஞர்களின் கைகளில்
கலப்பையானது!
இனி எமது
பேனாச் சிலுவைகள்
பூச்சி மருந்தடிக்கும்
புனிதப்பணி துவங்கும்!

இனி இங்கு,
மகிமையோடு, மானுடமும்
உயிர்த் தெழும் -
ஒளிநாள் உதிக்கும்வரை
பேனாச் சிலுவைகள்
எங்களது
விரல்களின் முதுகிலேயே
விழுந்திருக்கும்!

●

# முத்தங்கள் விற்பனைக்கு...

திருச்சபை நந்தவனம்
தீப்பற்றி எரிகிறது;
பிலாத்துக்கள்
பிடில்கள் வாசிக்கின்றனர்!

சமாரியர்களும்
திருடர்களாகிப் போன
இந்தச்
சந்தர்ப்பவாத சமுதாயத்தில்
விஷக்கனிகளே
வியாபாரமாகின்றன!

உண்மைகள் பேசுகிறவன்
பொய்களால் உதைக்கப்படுகிறான்!

மேய்ப்பனை
கசாப்பு கடையில் விற்றுவிட்டு,
தொண்ணூற்றி ஒன்பது ஆடுகளும்
இப்பொழுது
துராட்டிக் கோல்களுடன்.....

வேதாகம வசனங்கள்
வீதிகளில்
அம்மணச் சிறுவர்களாய்
அங்கும்....இங்கும்......

மலிவு விலை முத்தங்கள்
தேர்தல் சந்தைகளில்,
தீவிர வியாபாரம்!

இயக்கங்கள் பல
திருமறையின்
இடைச் சொருகல்களாக
தேர்தல் வாக்குறுதிகளைத்
திணிக்கின்றன!

இந்த
அத்திமரங்களின் ஆட்சியில்
ஆகாரமும்,
ஆதாரமும் கிடைக்காததால்
ஐயாயிரம் ஜனங்கள்
அகதிகளாகத் திரும்புகின்றனர்!

ஆலயங்களின் வெளியே
நலிந்தவர் வரிசையில்
நசரேத்து இயேசுவும் நிற்கிறார்!

இந்த
இருண்ட பள்ளத்தாக்குகளில்
எத்தனை
நட்சத்திரங்கள் முளைத்தாலும்
இறுதியில்
எதார்த்தமே,
சிலுவை சுமக்கிறது!
ஆண்டவரின் நாமத்தால்
அற்புதங்கள் செய்பவர் வாழ்வில்
ஏனோ,
அற்புதங்கள் நிகழவில்லை!

இந்த
வேத வியாபாரிகளின்
கோடரி விரல்களுக்கு
பட்டுப் பூச்சிகளின் இறக்கைகளா
பலியாவது?

மலங்களை
அப்புறப்படுத்துங்கள்;
மனிதகுமாரன்
வருகிறார்!

நீதி நாள்
நெருங்குகிறது!
அன்று
புன்னகையின் வெப்பத்தால்
பூமிவெடிக்கும்!

●

## பைரசி!

எவர் வெளியிட்டால் என்ன?
எல்லா பாடல்களும்
MP3- யாகக் கிடைக்கும்!

நற்செய்தி கூட்டங்களில்
பைரசி விற்கிறவர்கள்
நற்செய்தி கேட்பதில்லை;

பாடல்கள் பைரசியாக்கும்
இவர்கள் தம்
பாவங்களை பைரசியாக்குவதை
எப்படி புரியவைப்பது?

●

## உழவர் சந்தையும் –
## உயிர்த்தெழுந்த யூதாஸ்களும்!

அயலான் மீது கல்லெறிபவர்கள்
சொந்த இடிபாடுகளை
சோதிப்பதில்லை!
பாவிகளே பாவங்களுக்கெதிராகப்
பேசுவது பேஷனாகிவிட்டது!

பேசப்படுகின்ற இறையியல்
கடைபிடிக்கப்படுவதில்லையென்பதே
கிறிஸ்தவத்தின் கேன்சர்!

கத்ரீனா, ரீட்டா
வர்தா, கஜா,
வில்மா
புயல்களை விட வேகமாக
காணிக்கை வசூலிக்கும்
ரசீது ஊழியங்கள்.

எழுப்புதலுக்கான வானந்திரயாத்திரையில்
எப்போதுமே 'டிராபிக் ஜாம்'!

அன்று –
ஏதேன் தோட்டத்தில்
ஒரே ஒரு விஷக்கனிமரம்:

இன்று -
விஷக்கனி மரங்களே
ஏதேன் தோட்டம்!

அன்று -
யோர்தானை பிளந்தது
எலியாவின் அங்கி;
இன்று
யோர்தானை அழுக்காக்கியது
லூசிபரின் லுங்கி!

✦

போஸ்டர் அடிக்காத
பாஸ்டர் எவருமில்லை;
இயேசுவைப் போல்
விளம்பரம் நாடாதவர்
ஒருவருமில்லை!

செல்போன், சி.டி., பேஸ்புக், யூடியூப்,
தொலைக்காட்சி ஊழியங்களின்
பெருக்கம்;
ஆனால் அதில்
இயேசு கிறிஸ்து
இரண்டாம் பட்சமாய் இருப்பதுதான்
வருத்தம்!

உயிர்த்தெழுந்த பல யூதாஸ்களால்,
ஊழியங்கள் பல இப்பொழுது
உழவர் சந்தைகளாகிவிட்டன!

புதுவாழ்வின் போலித்தனங்களுக்கு,
பழைய வாழ்வின் நிஜங்களே
பரவாயில்லை என்பது;
பரிதாபமான உண்மை!

பொருளாதாரத்தை முன்னிட்டே
ஊழியர்கள் உபயோகிக்கப்படுகின்றனர்!
ஏ.சி.காரில் வந்தால் -
யூதாசுக்கும் அதிகமரியாதை;
சைக்கிளில் வந்தால் -
இயேசுவுக்கும் அவமரியாதை!

தீர்க்கதிரிசனங்களை
நம்ப முடிகிறது;
தீர்க்கதரிசிகளை
நம்ப முடியவில்லை!

ஊழியங்களை
நம்ப முடிகிறது;
ஊழியக்காரர்களை
நம்ப முடியவில்லை!

தலையில் கைவைத்து
ஜெபிக்கும் சிலர் - அடுத்து
பாக்கெட்டில் கைவைப்பது
பழக்கமான நிகழ்வு!

✦

ஆவிக்குரிய தவறுகள்
அநேகம் மலிந்துவிட்டன;
குற்றம் சாட்டுகிறவர்கள்
குற்றம் சாட்டப்படுகின்றனர்!
உண்மையை ஏற்றுக் கொள்ள
எவரும் இங்கு
உள்ளம் திறப்பது இல்லை!

அப்பங்களுக்கல்ல;
அற்புதங்களுக்கே ஊழியங்கள் என்ற
உறுதியான நிலைப்பாடு தேவை!

களைகளையும் கதிர்களையும்
இரண்டையும் வளரவிட்டு பிரிப்பதே
நியாயத் தீர்ப்பு;
இரண்டையும் பிரிக்கும் அறுவடை வேளை
எப்போது? என்பது தான்
எம் எதிர்பார்ப்பு!

●

## 8-ம் வார்த்தை !

என்னை எவரும்
சிலுவையில் அறையவில்லை;
சிலுவையையும்
ஆணிகளையும்
என்னில் நானே
இணைத்துக் கொண்டேன்;
உனக்காக!

●

# அழுக்கு அப்பங்கள்!

மார்ட்டின் லூத்தரே...
அன்று...
சுற்றிலும் இருள்,
வெளிச்சக் கீற்றாய்
உம் விழிகள்!

கடைசி குடிமகனுக்கும்
கர்த்தரை அறிமுகப்படுத்தும்
ஆவலில் உம்மால்,
ஆடம்பர ஆலயங்களின்
கதவுகள் மூடப்பட்டன;
அறிவாலயத்தின்
கதவுகள் திறக்கப்பட்டன!

உமது ஊற்றுக்கண்
பகுத்தறிவின் வேர்களை
நனைத்ததால்,
உமது வார்த்தைகள்
மன்னிப்புச் சீட்டுகளை
மறுதலித்தன;
மறுதலித்த
உமது வார்த்தைகளே
மருந்துச் சீட்டுகளாக
மாறிவந்தன!

எனவே உமது,
தாயின் கருவறைக்குத்
தலை வணங்குகிறோம்!

அன்றைய பிலாத்துக்கள்
ஆடம்பர சுகங்களை
அனுபவித்த பொழுது
நீர் மட்டுமே
ஆத்தும் பசிதாகத்தோடு
வித்தியாசமான வேத பிச்சைக்காரனாய்
வீதிவலம் வந்தீர்!

முதலாளித்துவ யூதாஸ்கள்
உம்மை
முத்தமிட முயலும்போது
தொடர்ந்து நீர்;
ஏமாளியாகயிராமல்,
சாட்டையை எடுத்தால்
உமக்கு
சரித்திரம் உண்டு!

விசுவாசத்தால்
(நீ)திமான் பிழைத்தான்;
நீதியும்
மானமும் பிழைத்தது!

இன்று
என்ன செய்கிறார்கள்
உம் புதல்வர்கள்?

சாதிக்கொரு திருச்சபை
ஜனிக்கத் துவங்கிவிட்டது!

மிரட்டல் வசனங்களை
மேற்கோள்கள் காட்டும்
கள்ளக் கதாநாயகர்கள் பலர்;
கைதட்டல்களுக்கிடையே
வசூலில் சாதனை புரிகின்றனர்!

அரசியல்வாதிகளால்
ஆசீர்வாதங்கள் விற்கப்படுகின்றன!

நீதிமான்களின்
ரத்தம் தொட்டு,
நியாயப பிரமாணங்கள்
எழுதப்படுகின்றன!

செங்கோல்கள் பல
உறிப்பானை அடிப்பதிலேயே
உற்சாகம் காட்டுகின்றன!
தலைவர்கள் பலர்,
கர்த்தரின் வருகைக்காக அல்ல,
கஜானாவின்
வரவு செலவுகளைக் குறித்தே
கவனமாக இருக்கின்றனர்!

களஞ்சியம்
கவனிப்பாரற்றுக் கிடக்கிறது,
அடைக்கலான் குருவிகளுக்கோ
தானியங்களைப் பிரிப்பதில்
தகராறு!

முதற் கற்களுக்கும்
மூலைக் கற்களுக்கும்
நடக்கும் மோதல்களில்,
அஸ்திவாரமே ஆடுகிறது!

ஊனப்பட்ட உணர்வுகளுடன்
கிறிஸ்தவம்,
கிழடுதட்டி நடக்கிறது!

அன்று நீர்
தேவைக்காக, பிளந்தீர்;
இன்று இவர்கள்,
திருடுவதற்காகப் பிளக்கிறார்கள்!

பிளவுபட்ட திருச்சபைகளுக்காக
பிரார்த்தனைகள் வேண்டாம்!

ஆங்காங்கே,
திருச்சபையின் இடுக்குகளில்
தீபங்கள் சில
திக்கித் திக்கி,
விடியலைப் பற்றி
விவாதித்துக் கொண்டிருக்கின்றன!

நீதியின் தரிசனத்தில்,
ஆக்ரமிப்புகளின்
அடுத்த கதி...
அழிவு...!

அழிவின்
அடுத்த விதி...
ஆரம்பம்!

●

## கன நித்திரை!

தந்தை பெர்க்மான்ஸ்
ஆராதிக்கின்றார்:

டி.ஜி.எஸ்.தினகரன்
ஜெபிக்கின்றனார்...

மோகன் சி.லாசரஸ்
பிரசங்கிக்கின்றார்...

இன்னும் ஏன்
தூங்குகின்றாய்?

●

# ஒரு அடிமையின் ஜெபம்!

பரமண்டலங்களிலும்
பாமரர்களிடமும் இருக்கும்
எங்கள் பிதாவே...
ஒடுக்கப்பட்டவர் மத்தியில்
உம்முடைய
நாமம் பரிசுத்தப்படுவதாக...

உம்முடைய சித்தம்
பரமண்டலங்களிலே
செய்யப்படுவது போல்,
எங்களை சித்திரவதை
செய்பவர் மத்தியிலும் செய்யப்படுவதாக...

எங்களுடைய
ஆகாரங்களை பிடுங்கிக்
கொண்டவரிடம் இருந்து,
அடித்துப் பிடுங்கி
எங்களுடைய ஆகாரத்தைத் தாரும்...

எங்களுடைய
உடமைகளையும் உரிமைகளையும்
பிடுங்கிக் கொள்பவர்களை
நாங்கள் மன்னிப்பதைப் போல் -
தயவு செய்து நீர் அவர்களை

மன்னிக்க வேண்டாம்!...
எங்களுக்குத்
தீமைகள் செய்பவரை நீர்
சோதனைக்கு உட்படுத்தியருளும்...

அதேனென்றால்,
ராஜ்ஜியமும், வல்லமையும் மகிமையும்
என்றென்றைக்கும் அவர்களிடம்
இருக்கிறது என்பதை
சற்று சிந்தியும்...ஆமென்!

●

## எதிர்காற்று!

பேதுரு மறுதலித்தான்;
யூதாஸ் காட்டிக் கொடுத்தான்;
இருவரும் மனம் மாறி
மனம் கசந்து அழுதனர்!
பேதுரு கல்வாரி
நோக்கிச் சென்றான்;
யூதாஸ் தன்னைத் தானே
கொன்றான்!

பேதுருவைப் போல் யூதாசும்
சிலுவையின் கீழே சேர்ந்திருந்தால்,
கல்வாரி ரத்தம்
கட்டாயம் அவனையும்
கழுவி ஏற்றுக் கொள்ளும்!

குற்ற உணர்விலிருந்து வெளியேறாமல்
குழம்பி மடிகிறவர்கள்,
இறைமீட்பின் எல்லை தெரியாத
ஏமாளிகள்!

●

# சாம்பல் மேட்டில் ஒரு சங்கீதக்காரன்!

சங்கீதக்காரனொருவன்
சாம்பல்மேட்டில் அழுகிறான்!

தன்னை
எரிக்கவந்த தீக்குச்சிகளில்
கூடுகட்டிக் கொண்டும் -
முட்களின்மேல் அமர்ந்து
பூக்களை நெய்து கொண்டும் -

தன் -
கண்களின் வெளிச்சத்தில்
கவிதை எழுதிக்கொண்டும்
விழி சிந்தும் கண்ணீரை
விதைகளாக வீசிக்கொண்டும்

சங்கீதக்காரனொருவன்
சாம்பல்மேட்டில் அழுகிறான்!

தனது
தங்க நாற்காலிகளைப்
புறக்கணித்தும்,
இருதயங்களை பிசைந்து பிசைந்து
இருக்கைகள் செய்ய இயலாதா? எனவும் -

தன்னை நிராகரித்தவரை
தானும் நிராகரித்து,
அவர்மேல் தன்
இருதயத்தை பிய்த்து எறிந்து
இனங்காட்ட ஏங்கிக் கொண்டும்....

சங்கீதக்காரனொருவன்
சாம்பல்மேட்டில் அழுகிறான்!

தனது காயங்களை
பேனாவால் தைத்துக் கொண்டும்,
சுய நெருப்பில்
திரியாகத் தன்னை
நிர்பந்திக் கொண்டும்
வெளிச்ச மரத்தின்
ஒட்டுத் தாவரமாக உயிர்வளராதா? என -
உருகிக் கொண்டும்.

சங்கீதக்காரனொருவன்
சாம்பல்மேட்டில் அழுகிறான்!

சூரிய சாம்பலை தன்
கவிதைகளில் தூவிக்கொண்டும் -
தொலைவில் தொங்கும் நிலவை
குடிசைகளின் விளக்காக
கொண்டுவர இயலாதா? எனவும்

சங்கீதக் காரனொருவன்
சாம்பல் மேட்டில் அழுகிறான்!

அவன்
அம்மணம் வேண்டும்
அதிசயக் குழந்தை!
தங்க ஆடை தந்தாலும்
தரித்துக் கொள்ளச் சம்மதிப்பானோ?

கண்களுக்கும்
உதடுகளுக்கும் ஊஞ்சல் கட்டி
எச்சில் பசையில் மௌனத்தை
ஒட்டிவைத்து ருசித்துக் கொண்டிருக்கிறான்!

சமத்துவ அணைக்கட்டு
சன்னமாக ஒழுகுவதைக் கண்ட....
அவன்,
பேனா விரல் நுழைத்த
பீட்டரெனும் சிறுவன்!

இன்னும் அவன் தன்
ரத்த எழுத்துக்களில்
ரசாயனம் சேகரித்துக் கொண்டும் -
தன்
கண்ணீரும் விதைகளாக
முளைக்கும் என
கர்வமாக அழுகிறான்!

எனினும் அவனது
கவித்துவ இதழ்கள்
வெளிச்சப் புன்னகையை
வெளிச் சிந்தும் எனும்
நம்பிக்கையோடு,

அந்தச் சங்கீதக்காரன் -
சாம்பல் மேட்டில் அமர்ந்து
அழுது ஜெபித்தபடி
எழுதிக் கொண்டேயிருக்கிறான்!

●

# தஞ்சை தந்த புஞ்சை!

## (தஞ்சை வேதநாயகம் சாஸ்திரியார்)

சிலுவையெனும்
சோடியம் விளக்கின் கீழ்
ஆணிகளின் தழும்புகளுடன்
அமர்ந்து சிந்திக்கிறேன்;
நூற்றாண்டுகள் தாண்டி - உம்
முற்றத்தின் வாசலில்
கேள்விகளுடன் நிற்கிறேன்!

✦

பகல்கள் தொலைந்து போன
பரிதாப யுகத்தில்.....
நீர்,
விட்டு போன
வேத வெளிச்சத்தை நெசவு செய்ய
இதயத்தின் தோள்களில்
இரண்டு கரங்கள்
முளைக்கின்றன!
எனக்குள்
ரத்தம் வற்றிய
ரகசிய தேதிகளில்,
உம்
ரசவாத வார்த்தைகள்

நரம்புகளை நாற்றங்கால்களாக்கி
இதயத்தை ஏற்றங்காலாக்கி
உயிருக்குள் மோட்சத்தை
உழுது பயிர் செய்த
உன்னத நாட்கள்
உண்டு!

✦

வண்ணத்துப் பூச்சிகளின்
சிறகுகளில் அமர்ந்து
வார்த்தைகளை சேகரித்தவரே!
உமது நூற்றாண்டிலிருந்து
உதிர்ந்த இறகுகள்கூட,
இந்த நூற்றாண்டின்
இறுதி வரை -
மன்னா மழையாக
வானத்திலிருந்து
தூறிக் கொண்டேயிருக்கின்றன!

உமது இலக்கிய அறுவடையில்
நீர் சிந்திய
கோதுமை மணிகளை
சேகரிக்க முடியாமல்
எங்கள்
தூற்றுக் கூடைகள்
திணருகின்றன!
உம்
கவிதைக் கரங்கள்
கர்த்தரின் கரங்களாகவே
இயங்கியிருக்க வேண்டும்;
எனவே தான் -
நீர்
அள்ளித்தந்து ஆசீர்வதித்த

131 அருந்தமிழ் அப்பங்களை
பிட்கப் பிட்க
பலுகிப் பெருகிக் கொண்டே
பந்தி வைக்கின்றன!

✦

உம்
நற்செய்தி நந்தவனத்தினுள்
தாவீதின் தாகத்துடன்....
ஒற்றை மேகமாய்
உலாவுகின்றேன்!

கவிதைகளுக்குள்
அருவிகளாகத் தெறித்த
உம்
ஆன்மீக இழைகள் -
நாடகங்களுக்குள்
நளின நதிகளாக
நடந்து சிலிர்க்கின்றன!

வறட்டு மானுடம்
வாழ்க்கையை நாடகமாக்கி
வாழும் பொழுது -
நாடகத்தினுள் வாழ்க்கையை
பொதிவு செய்த - உம்
வித்தகம் கண்டு
வியக்கின்றன என்
வேர்களின் முகங்கள்!

✦

குற்றாலத்தில்
குளித்துக் கொண்டிருந்த
குறிஞ்சித் தமிழை

விமானம் இல்லாமலேயே
பெத்லேகம் அழைத்து வந்து,
யோர்தான் நதியில்
ஞானஸ்நானம் தந்த உம்
நவீனத்துவம்...

மரங்களோடு
மனிதர்களையும் இழைத்த
ஞானத்தச்சன் இயேசுவை
பாட்டாளியாகச் செதுக்கிய உம்
பகுத்தறிவுப் பரப்பு...
வறண்ட கிறிஸ்தவ
நாடகச் சமவெளிக்குள்
வாயக்கால்களை திறந்த உம்
வரலாற்று உழைப்பு...

எண்ணும் பொழுது -
உலகத்தின் எல்லா
ஒலிவ மரச் சிலுவைகளும்
ஒருங்கிணைந்து தலைகுனிகின்றன!

ஞான நொண்டிக்கு
சிலுவை ஊன்றுகோலானது;
உமது எழுதுகோல்
சிலுவைக்கே
ஊன்று கோலானது!

✦

திருச்சபைகளின்
அகழிக் கதவுகள் திறக்க
தஞ்சையின் தலையில் நின்று
தமிழ் யுத்தம் நிகழ்த்தியவரே!

திருச்சபைகள் இன்று
நாடக மேடைகளாகிவிட்டன;

ஒப்பனை முகங்களுடன்
அமெச்சூர் நடிகர்களாக
ஆன்மீகத் தலைவர்கள்;
கைதட்டும் ரசிகர்களாக
'கடைசி பெஞ்ச்' விசுவாசிகள்!
உம்
பெத்லேகம் குறவஞ்சியில்
'ஆயில் மசாஜ்' வசதியுடன்
ஐந்து நட்சத்திர விடுதிகள்!

குறிஞ்சி மலையை
கொல்கொதா மலையாக்கி
சிலுவை மரக்கிளைகளில்
தாவி விளையாடும்
அரசியல் குரங்குகள்!

✦

திரைகள் இல்லா இந்தத்
திருச்சபை தெரு நாடகங்களில் -
அனைவருமே -
கவிழ்த்தி வைக்கப்பட்ட
கதாபாத்திரங்கள் தான்!

இப்பொழுதெல்லாம்
கட்டியக் காரர்கள்
கார்களில் வந்திறங்கி
குறிஞ்சியை விடக் குளிர்ச்சியான
ஏ.சி. ரூம்களில்
இளைப்பாறுகின்றனர்!

எங்கள் பாட்டுடைத் தலைவர்களின்
பெருமைகளை நாங்கள்
நக்கீரனில் வந்தால்தான்
நம்புகிறோம்!

உடன்படிக்கைப் பெட்டியாக
காலத்தை இழைக்கும்
ஞானத் தச்சனிடம்,
சவப் பெட்டிகளுக்கான
அளவுக் குறிப்புகளுடன்
ஜனத்திரள் கூட்டம்!

ஞான நொண்டிகள்
தொலைக் காட்சி ஜெபங்களிலேயே
தொடப்படுவதால் -
சிலுவைகளுக்குப் பதிலாக
ஆன்டனாக்களே எங்கள்
ஆலய ஆல்டர்களை
அலங்கரிக்கின்றன!

ஞான நொண்டிக்கு நீர்
சிலுவையை ஊன்றுகோலாய் தந்தீர்;
இன்று -
ஊன்று கோலே
சிலுவையாக மாறிவிட்டது!

✦

பூச்சிப்பாட்டில்
எல்லா
சாதி பூச்சிகளையும்
சமத்துவப் பேழைக்குள்
நுழைய வைத்தவரே!
நீர் -
வான சாஸ்திரி அல்ல;
வாழ்வின் மேஸ்திரி!

உம்
கவித்துவக் கருவறையின்
கதவருகே நின்று
கண்ணீர் சிந்துகிறேன்!

ஆலயங்களின்
எலக்ட்ரானிக் ஆர்கன்களில்
வண்ணத்துப் பூச்சிகளாய்

சிக்கிக் கொண்ட உம்
பரிசுத்தப் பாடல்களுக்காக
வழக்காடுபவர் யார்?

தமிழையே ஆங்கிலமாக
''தங்லீஷ்'' உச்சரிக்கும்
உம்மக்களின் உள் நாக்குகளை
எந்த அக்கினி வந்து
உரிக்கப் போகிறது?

✦

உம் தமிழுக்குள்ள
அணுசக்தியின்
சூத்திரம் உணராமல் -
உம் தலைப்பாகையின்
நீள அகலம் குறித்த
ஆய்வுக் கவலைகளை
அலட்சியம் செய்கிறேன்!

தபால் தலைகள்
உமக்குத் தேவையில்லை;

உமது முதுகில்
முத்த எச்சில் பதிக்க
யூதாஸ்கள்,
இன்றும் இருக்கின்றனர்!

வக்கிரமான
வெண்பளிங்கு சிலைகள்
வேண்டாம்;
காக்கைகளுக்கு

கட்டணமில்லா கழிப்பறையாகவும்,
சாதிக் கலவரங்களுக்கு நீர்
சவுக்கு விறகாக
பிளக்கப்படுவது நியாயமில்லை!

உமது கீர்த்தனைகளை
சுத்த சுதியில்
பாடிப் பழகுவதே
உமக்கு நாங்கள் செய்யும்
உயிர் அஞ்சலி!

இந்த பூமி
இருக்கும் வரை உம் -
பாடல்களின் பரிணாமங்கள்,
பல
வால் நட்சத்திரங்களாக
வந்து மோதிக் கொண்டேயிருக்கும்!

உம்
மாபெரும் எழுதுகோலை
மன்னர் சரபோஜி
மனோகரா கோபுரமாக
மணலில் பதித்ததாக - என்
கவித்துவ பிம்பம்
கர்வம் கொள்ளும் அந்த
ஒளி நிமிஷத்தில் உம்
உயிர்த்தெழுதல் நிகழ்வதாக
உணர்கிறேன்;

பூமிக்குள் புதைந்த நிலக்கரி
வருடங்கள் தாண்டி,
வைரமாவது போல - உம்
பாட்டு வேதியல் கண்டு
பரவசமடைகிறேன்,
பாதை தொடர்கிறேன்!

●

## கனவு காணுங்கள்!

தேசம் திருச்சபைக்கும்,
திருச்சபை தேசத்திற்கும்
உண்மையாக இருப்பது
ஒருவகை ஊழியம்!

இந்தியாவின் நலனுக்காய்
இடைவிடாமல் ஜெபிக்கும்
கிறிஸ்தவம்
இந்தியாவிற்கு எப்படி
அந்நியமாகும்?

இயேசுவை கடவுளாகப்
பார்ப்பதை விட -
நண்பராக பார்ப்பதே
நல்ல அடையாளம்!
சிலுவையில் அறைந்தவருக்கும்
சேர்த்துதான் அவர் ரத்தம் சிந்தினார்
என்பதே செய்தி!

மற்றவரைபோல கிறிஸ்தவரும்
மதவாதியாக இருந்தால்
மற்றவருக்கும் கிறிஸ்தவருக்கும் உள்ள
மாற்றம்தான் என்ன?

பட்சிப்பதல்ல;
ரட்சிப்பதே கிறிஸ்தவம்;
சபிப்பதல்ல; ஆசீர்வதிப்பதே கிறிஸ்தவம்!

தேசிய கீதத்தில் -
எல்லா நதிகளும் பாய்கிறது;
அதைப் பாடுகிற ரத்தங்கள் மட்டும் ஏன்
தனித்தனியே ஓடுகிறது?

இந்திய மண்ணை
கண்ணீரோடு முத்தமிட்டு
கதறி அழுகிறேன்!

சாதியால் -
மொழியால் -
இனத்தால் -
மதத்தால் -
மனிதனைப் பிரித்துப் பார்ப்பவர்கள்
மனித நேயத்தை மறுதலிப்பவர்கள்!

மதத்திற்குக் குண்டு வைப்பவர்கள்
மதவாதிகள் அல்ல!
கட்டுகிறதை இடிக்கிறவர்கள்,
ரோஜாப்பூவை
துப்பாக்கியால் சுடுகிறவர்கள்!
ஒரு மனிதனுக்கு எதிராக
இன்னொரு மனிதன் எழுந்தால்,
அவன் எந்த மதத்தையும்
சாராதவன் என்பதே உண்மை !

சிறுபான்மை பெரும்பான்மை என்பது
அவரவர் மனப்பான்மையிலேயே இருக்கிறது;
முதலில் கிறிஸ்தவன்,
இரண்டாவது இந்தியன்,
மூன்றாவது தமிழன்,

நான்காவது மனிதன் - என்பது
வாக்குவாதம்;

முதலில் மனிதன்,
இரண்டாவது தமிழன்,
மூன்றாவது இந்தியன்,
நான்காவது கிறிஸ்தவன் என்பதே
சரியான வாதம்!

அவரவர் கொள்கையில்
அழுத்தமாக உட்கார்ந்திருக்கிறீர்களா?
நிச்சயமாக நீங்கள்
தேசியகீதம் ஒலிக்கும்போது
எழுந்து நின்றுதான் ஆகவேண்டும்!

✦

மத நல்லிணக்கம் என்பது
ஏதோ
கட்சி சார்ந்த கொள்கையல்ல;
''வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே
எல்லோரும் என்னிடம் வாருங்கள்!''
என்ற இயேசு கிறிஸ்துவின்
இறை முழக்கம்!

ஐயா அப்துல் கலாம்;
இஸ்லாமியர்!
மதிப்புமிகு மன்மோகன்சிங்;
சீக்கியர்!
அன்னை சோனியா,
அடிப்படையில் கிறிஸ்தவர்!
மதிப்புமிகு வாஜ்பாய்,
இந்து நெறியாளர்!

இதுவே,
நான்கு சிங்க முத்திரைக்கான
நல்ல அடையாளம்!

அன்னை தெரசாவை
இந்தியா ஏற்றுக் கொண்டது
அன்பினாலா?
மதத்தாலா?

காந்தியின்
கடையனுக்கும் கடைத்தேற்றம்
இயேசுவின்
மலைப் பிரசங்கத்தின்
மறுவடிவம் என்பதை
தேசப்பிதாவே
தெரிவித்துள்ளார்!

அர்த்தமுள்ள இந்துமதம் எழுதிய
கவியரசு கண்ணதாசன்
இறவா காவியம்
இயேசு காவியம் எழுதினார்!

பாரதியார் முதல்
பா. விஜய் வரை
இயேசுவைப் பாடாத கவிஞர்.
எவரும் இல்லை!

இயேசு கிறிஸ்துவாக நடிக்க
இறுதிவரை,
மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கும்
மனவிருப்பம் இருந்தது!
தமிழினத் தலைவர் கலைஞர்,
இயேசுவைக் குறித்த இலக்கிய மேற்கோள்கள்
எத்தனையோ காட்டியுள்ளார்!

ஆலயம் தோறும்
அன்னதானமிட்ட
அன்னை ஜெயலலிதா அவர்களுக்கு
அடித்தள கிறிஸ்தவர் மேல்உள்ள
அன்பைக் காட்டுகிறது!

பாதிரியார்களும், இசைஞானியும்
திருவாசகத்தைச் சிம்பொனியாக்கியது
மதமா?
மனித நேயமா?

✦

உலக அரங்கில்
இந்தியா ஒரு வல்லரசு
உள்ளங்கள் ஒருங்கிணைந்தால்
அதுவே நல்ல இறையரசு!

இந்தியா என்றாவது ஒருநாள்,
விஷக்கனிகள் இல்லாத
விஞ்ஞான ஏதேனாக மாறும்!

பலவித நிறங்களில்,
பலவிதக் குரல்களில்,
பலவித செயல்களில்,
பறவைகள் இருக்கலாம்!
ஆனால்,
பறப்பது மட்டுமே
பறவையின் இயல்பு;

பறவைகள் போல்
கூட்டமாகப் பறப்போம்;
பாகுபாடுகள் மறப்போம்!

●

# அஃறிணைகளும் - உயர்திணைகளும்!

**நட்சத்திரம்;**
ஆருடத்தை நம்பி
அரண்மனை சென்ற
வான வல்லுநர்களை
தொழுவத்திற்கு திருப்பி
துதிக்க வைத்தது நான்தான்!

**கழுதை;**
மரியாள்
மனித குமாரனைச்
சுமந்தாள்;
இவர்கள் இருவரையும்
சுமந்து நான் இறைபேறு பெற்றேன்!

**ஒட்டகம்;**
நான் தண்ணீர்
அதிகமாகக் குடிக்கும்
பாலைவனப்படகு!
என்னைவிட அதிகமாக
'தண்ணியில்' மயங்கிக் கிடக்கும்
தலைவர்களை,
பெத்லகேமில் கண்டு
பீதியுற்றேன்!

**ஆடுகள்;**
அடிப்பதற்காகவே எங்களை
வளர்த்திடும் மேய்ப்பர்கள் மத்தியில்,
அடிக்கப்படுவதற்காக
அவதரித்த ஒரு
மேய்ப்பனைக் கண்டு
அதிசயித்தோம்!

**மாடுகள்;**
'ஆபிரகாம் ஃபுட்' என
கேலி செய்யப்படும் என் தொழுவத்தில்
ஆண்டவர் பிறந்ததினால்,
அரண்மனைகள்
தலைகுனிந்ததினால்
ஆனந்தம் கொண்டேன்!

**சத்திரம்;**
உள்ளூர் எம்.எல்.ஏ க்களும்
உயர் அதிகாரிகளும்
உற்சாக பானத்தில்
உள்ளே மயங்கிக் கிடப்பதால்
மனித குமாரனுக்கு இடமில்லை;
என்பதில் எனக்கு
மனவருத்தம் தான்!

**தொழுவம்;**
இரக்கத்தினால் அல்ல,
எதாவது வாடகை கிடக்குமென
எனது எஜமானன்
என்னைத் திறந்து விட்டான்,
இயேசு பிறந்தபோது
எட்டிப்பார்க்க மறந்து விட்டான்!

**கந்தல்;**
கசக்கி எறியப்பட்ட நான்
கர்த்தருக்கு ஆடையானேன்,
உங்கள் ஆடம்பரங்களுக்கெதிரான
ஆண்டவரின் அடையாளமானேன்!

**முன்னணை;**
நான் இயேசுவை
முன் நிறுத்தினேன்,
நீங்களே,
இயேசுவைத் தவிர எல்லாவற்றையும்
முன் நிறுத்துகிறீர்கள்

உயர்திணை மனிதர்களே!
எல்லாம் அறிந்தும்
இறையியல் புரிந்தும்
உங்களால் உடைக்கப்பட்ட
உள்ளூர் திருச்சபைகளைக் கண்டு,
இறங்கி வந்த இம்மானுவேல்,
தேம்பியழும் ஓசை
திசைகளெங்கும் ஒலிக்கிறது!

கனவில் வந்த,
காப்ரியேல் தூதன் கூறினான்;
''மெய்யாகவே நான்
உங்களுக்குச் சொல்லுகிறேன்,
'ஸ்டே ஆர்டர்களும்
ஜாமீன்களும், பெயில்களும்',
இல்லாத கிறிஸ்துபிறப்பே
உங்களுக்கு
உண்மையான கிறிஸ்து பிறப்பு''

கனவு கலைந்தது
நிஜம் கலையாத

நீண்ட பெருமூச்சுடன்
ஜெபிக்க ஆரம்பித்தேன்;

‘‘ஆண்டவரே!
இந்தமுறை
மாட்டுத் தொழுவத்தில் அல்ல,
திருச்சபைக்காக வழக்காட
நீதிமன்றத்தில் தான் நீர்,
நிச்சயம் அவதரிக்க வேண்டும்!

●

# கிறிஸ்மஸ்மரம் Vs சிலுவைமரம்!

மோட்டார் படகுகளில்
வங்கக் கடலில்
வழிமாறி அலையும்
வான சாஸ்திரிகள்!

முள்வேலிகளுக்கு நடுவில்
முன்னணையைத் தேடும்
மேய்ப்பர்கள்!

செல்களின் தாக்குதல்களில்
சிறகிழந்த காப்ரியேல் தூதன்!
ஈழத்தின் ஓலத்தில்
அமுங்கிப் போன
மரியாளின் துதிபாடல்!

எந்தக் கட்சியிலும் இல்லாததால்
ஆலயத்தின் வெளியே
அலைந்து திரியும் சிமியோன்!

ஏரோதுக்களையே
சிரச்சேதம் செய்யும்
ராஜபட்சேக்கள்!

மூடப்பட்ட சத்திரங்களின்
வாசல்களில்
‘ஹோண்டா சிட்டிக்கள்’,
திறந்து வைக்கப்பட்ட
தொழுவங்களின்
வாசல்களில்
ஆடுகளும் - மாடுகளும்!

கிறிஸ்மஸ் தாத்தாக்கள்,
கேக்குகள், இனிப்புகள்,
வாழ்த்து அட்டைகள்,
கேரல் ரவுண்ட்,
கிறிஸ்மஸ் மரம்.

புத்தாடைகள்
கட்டாயக் களிகூருதல்,
எல்லாம் இருந்தும்
ஏதோ ஒன்று இல்லை!

கிறிஸ்து பிறப்பு,
கிறிஸ்தவர்கள் கொண்டாடும்
பண்டிகையா? அல்லது
கிறிஸ்தவர்கள் அல்லாதவர்களுக்காக
கொண்டாடப்படும் பண்டிகையா?

கிறிஸ்து பிறப்பின் முந்தின
ஒரு ஞாயிற்றுக்கிழமை
ஆலயத்திலிருந்த கிறிஸ்மஸ் மரம் ஒன்று
‘ஆல்டரில் இருந்த
சிலுவை மரத்தை நோக்கி
ஆணவமாக வினவியது,
‘‘அடிப்படையில் நம் இருவருக்கும் உள்ள
ஆறு வித்தியாசங்கள் என்ன?’’
சிலுவை மரம்
சிரித்தபடி கூறியது,

''கேள் கிறிஸ்மஸ் மரமே!
1. வருடத்திற்கு ஒருமுறை
உனக்கு உயிர் வருகிறது,
வருடம் முழுதும் எனக்கு
உயிர் இருக்கிறது!

2. நீ அநேக பொருட்களை
அலங்கரித்துக் கொள்கிறாய்,
நான் ஆத்துமாக்களை மட்டுமே
அலங்கரித்துக் கொள்கிறேன்!

3. நீ கிறிஸ்துவை
அடையாளப்படுத்துகிறாய்,
கிறிஸ்துவோ என்னை
அடையாளப்படுத்துகிறார்!

4. நீ பசுமையாக இருந்து
காய்த்து போகிறாய்,
நான் காய்ந்த பின்
பசுமையாக இருக்கிறேன்.

5. நீ பண்டிகை முடிந்ததும்
வெளியே தூக்கி எறியப்படுகிறாய்,
நான் வெளியே தூக்கி
எறியப்பட்டவைகளை
உள்ளே சுமந்து வருகிறேன்!

6. இப்போதும் நீ
கிருத்துவமாக
கேள்வி கேட்டுக் கொண்டிருக்கிறாய்,
நான் திரித்துவமாக
பதில் கூறிக் கொண்டிருக்கிறேன்!''

கூறிமுடிந்த சிலுவை மரம்
தாழ்மையுடன் செப்பியது,

‘‘மன்னிக்க வேண்டும்
கிறிஸ்மஸ் மரமே!
உன்னை ‘வேர்பிரிப்பது’
என் நோக்கமல்ல,
நீ ‘வேர்பிடிக்க’ வேண்டுமென்பதே
என் வேண்டுகோள்!’’

தத்துவம் உணர்ந்த கிறிஸ்மஸ்மரம்
தலைகுனிந்தது!

கிறிஸ்மஸ் மரமோ?
சிலுவை மரமோ? - நம்
வாழ்வை அதில் இணைக்காவிட்டால்
இவையெல்லாம்
மலட்டு மரக்கட்டைகள்தான்!

●

# தேவ சித்தம்!

தேவசித்தம் என்பது
செயல்படுத்திய பின் அறிவதல்ல,
செயல்படும் முன்னும் அறிவதல்ல,
செயல்படும்போதே
சேகரிப்பது -
மன்னாவைப் போல!

தேவசித்தம் என்பது
ஆவிக்குரிய குறிகேட்பதல்ல,
ஆவியானவரின் குறிப்பறிந்து நடப்பது!

தேவசித்தம் என்பது கட்டாயப்படுத்தியல்ல,
காத்திருந்து பெறுவது!

கிறிஸ்தவத்தின்
நீண்ட யாத்திரையில்
அவரது சித்தத்தை
அறிந்தும் செயல்படாமல்
அழிந்தவர் பலர்!

அவரது சித்தத்தை
அறியாமலேயே விலகிய
ஆவிக்குரிய செவிடர் பலர்!

செய்து முடித்த பின்
அவரது சித்தத்தை
போனால் போகிறது என்று
கேட்பவர் பலர்!

ஒன்றுமே செய்யாமல்
அவரது சித்தத்திற்காக
உட்கார்ந்திருப்பவர் பலர்!

சித்தத்தை துவங்கும்போதே
தோற்றுப் போனவர் பலர்!

சித்தத்தை துவங்காமலேயே
தோற்றுப் போனவர் பலர்!

சித்தத்தை
பாதி வழியிலேயே
உடைத்தவர் பலர்!

இறுதி வரை நிறைவேற்றி
இளைப்பாறியவர் சிலர்!

''என்னை நடத்துகிறார்!'' எனும்
பிணியாளர்கள் சிலர்!

சித்தத்தை அறியாதவர்களுக்கு
சில அடிகள்,
சித்தத்தை
அறிந்தும் அறியாவர்களுக்கு
செம அடிகள்!

இதுவே அவரது சித்தத்தின்
முதற்படிகள்!

முதல் வழங்கப்பட்ட சித்தத்தை
முடிக்காமல்

அடுத்த சித்தத்திற்காக
அழுது ஜெபிப்பது
ஆவிக்குரிய காரியமல்ல!

தன் பாத்திரத்தை நீக்கும்படி
கெத்சமனேயில் அழுது ஜெபித்தவர்;
பாத்திரத்தை நீக்குவல்ல – அதில்
பானம் பண்ணி முடிக்க வேண்டியதே
பரமபிதாவின் சித்தமென அறிந்து
சிலுவை மரணத்தில் அதை
சிறப்புடன் செய்து முடித்தார்!

சித்தத்திற்கு வெளியே இருப்பதுபோல் இருந்து
சித்தத்திற்குள் அமர்ந்திருந்தவர் யோபு!

சித்தத்திற்குள் அமர்ந்திருப்பது போல் இருந்து
சித்தத்திற்கு வெளியே செயல்பட்டவர் யோனா!

சித்தத்திற்குள் சித்தமாக இருந்தவர் தாவீது!
சித்தத்திற்குள் பரிசுத்தமாக இருந்து
பாடுபட்டவர் இயேசு!

தேவ சித்தத்தைப் பெறுவதைவிட – அதை
செயல்படுத்தவதிலேயே
சிக்கல்களும் சிலுவைகளும் அதிகம்!

'அவருக்குச் சித்தமென்றால்' – என்ற
ஆவிக்குரிய ஸ்டேட்மெண்டை
அடிக்கடி பயன்படுத்தும்
அறிவாளிகள் பலர் தங்கள் –
சொந்த சித்தத்தையே
சொருகி விடுகின்றனர்.

தேவசித்தம்
ஒவ்வொரு நாளும்
வானம் நம்மை வழி நடத்துவது! நாம்
வானத்தை வழிநடத்துவதல்ல!

பரமண்டலத்தில் உம் சித்தம்
செய்யப்படுவது போல்
பூமியிலும் உமது சித்தம்
செய்யப்படுவதாக! என்று
வழக்கமாக ஜெபிக்கிறவர்கள்
பூமியில் செய்யப்படும் தங்களது சித்தத்தை
பரமண்டலத்தில் செய்யப்படுவதற்காகப்
பாடுபடுகின்றனர்.

தேவசித்தம்
சூழ்நிலைகளுக்குத் தகுந்தபடி
சுவிசேஷத்திற்குத் தகுந்தபடி
தேவனால் மாற்றியமைக்கப்படுமேயன்றி
மனிதனால் மாற்றப்படுவதல்ல, அதன்
மறைபொருளில் புரிவதல்ல!

அவரது சித்தத்தை உணர்ந்து
அதை நிறைவேற்றுவதில் உள்ள
நடைமுறைச் சிக்கல்களால்
ரத்தமில்லாமல் போன
பரிசுத்தவான்கள் பலர்;
தரைக்கும் வானத்திற்கும் இடையே
மாம்ச சிலுவையில் தொங்குகின்றனர்!
செவிகளில் விருத்தசேதனம் உள்ளவர்கள்
கேட்கவும்
இருதயத்தில் விருத்தசேதனம் உள்ளவர்கள்
உணர்ந்து செயலாற்ற இயலும் என்பதே
சித்தத்தின் சிறப்பு விதி!

விவாகங்களுக்கு
வேலை வாய்ப்புக்கு
ஊழிய அர்ப்பணிப்புக்கு
உலகக் காரியங்களுக்கு
முதலீடுகளுக்கு

முன்யோசனைகளுக்கு
தேவசித்தம் கேட்பது -
ஆவிக்குரிய காரியமா?
அந்தரங்க லாபமா?

அற்ப காரியங்களுக்காக
சித்தத்தை கேட்பதிலேயே
ஆவிக்குரிய வாழ்வு முடிந்து விடுகிறது!
அப்பங்களுக்கல்ல
அற்புதங்களுக்கே
ஆண்டவரின் சித்தம்
அருளப்படுகிறது!

நம்மை வழிநடத்தும்
சித்தத்தோடு - நாம்
மற்றவரை வழிநடத்தும்
சித்தத்தை அறிந்து கொள்வதே
சிறப்பான சித்தம்!

தேவ சித்தம்,
பிசாசின் சித்தம்,
மாம்ச சித்தம்,
மற்றவரது சித்தம்,
நான்கு சித்தங்களுக்கு
நடுவில் யோபு -
வெற்றி பெற்றது வேதசித்தம்;
அதற்கு நடந்ததொரு
ஆவிக்குரிய யுத்தம்!

''சித்த முண்டு சுத்தமாகு!''
எனும் தேவசித்தம்
விசுவாசத்திற்கும்
விண்ணப்ப ஜெபத்திற்கும் நடுவே
மறைமுகமாக கிரியை செய்வது,

மாம்சத்திற்கும்
மனக் கணக்கிற்கும்
நடுவில் அல்ல!

தேவசித்தம்
கேட்பது,
உணருவது
ஒப்புக் கொடுப்பது,

உடனே துவங்குவது
உண்மையாகச் செய்து முடிப்பது,
உலக ஊதியம் எதிர்பாராமல்
அடுத்த சித்தத்திற்கு அர்ப்பணிப்பது
இதுவே -
உண்மையான தேவசித்தத்தின்
விதிமுறைகள் - அதை
உணர்ந்து விலகட்டும்
உள்ளத்திரைகள்!

ஆமை - முயல் ஓட்டப்பந்தயக் கதை
அனேகருக்குத் தெரியும்,
சித்தம் அறிந்து
சிறிது சிறிதாக முன்னேறுகிறவன்
ஆமையென்றாலும் வெற்றி பெறுவான்!
சித்தம் அறியாமல்
சீறிப்பாய்கிறவன்
முயல் என்றாலும்
முட்டாளாய் தோல்வியடைவான்!

இப்பொழுதெல்லாம் நாம் அனைவரும்
அடிக்கடி செய்ய வேண்டிய
அவசர ஜெபம்,

‘‘பரலோகப் பிதாவே!
திருச்சபைகளின் அநேக
அரசியல் சத்தக்களில்
அமுங்கிப் போன உம்
மெல்லி சத்தத்தை உணரக்கூடிய
சிறப்பான செவிகளைத் தாரும்!
இல்லையெனில்,
செவிட்டு மிஷின்களையாவது
வாங்கித் தாரும்!
ஆமென்!’’

தேவசத்தத்தை
கேட்கக் காதுள்ளவன்
கேட்கக் கடவன்,
தேவசித்தத்தை
நிறைவேற்றத் தைரியமுள்ளவன்
நிறைவேற்றக்கடவன்!

●

# காலம் மாறிப்போச்சு!

கலர், கலர், புகைமூட்டம்,
லேசர் வண்ண விளக்குகள்,
'கார்டுலெஸ்' மைக்குகள்,
அலறும் ஸ்பீக்கர்கள்,
கிட்டார், கீபோர்ட்டுகளின்
கிழிக்கும் இசை,
நடனம், கும்மாளம்,
பளபளக்கும் கோட்டுகள்,
பாரின் செண்ட் வாசனைகள்,
அணிவகுக்கும்,
ஆடி, பென்ஸ், பிஎம்டபிள்யூ கார்கள்
'தங்குலீஷில்'
'வாரும் தூய ஆவியே!'
ஆப்பிள் லேப்டாப்புகளில்
அருளுரைகள்!
செல்போன்களில்
சாப்ட்வேர் பைபிள்,
வாட்ஸ்ஆப்பில்
வாக்குத்தத்தங்கள்!
ஏசி திருச்சபைகளில்
பொருளாதார ஆசீர்வாதங்களைக் குறித்த
போதனைகள்!

'பப்பு'களைப்போல மாறிவிட்ட
பரிசுத்த ஆலயங்களிலிருந்து
துக்கத்துடன் வெளியேறினார்
தூய ஆவியானவர்.

முதலாளித்துவ ஊழியக்காரர்களால்
வஞ்சிக்கப்பட்ட ஒருவர்
வருத்தத்துடன் புலம்பினார்.
''முன்பெல்லாம் -
ஊழியக்காரர்கள்
ஏழைகளாக இருப்பார்கள்,
விசுவாசிகள்
பணக்காரர்களாக இருப்பார்கள்!
இப்போது -
ஊழியக்காரர்கள்
பணக்காரர்களாக இருக்கிறார்கள்,
விசுவாசிகள்
ஏழைகளாகி விட்டனர்!''

●

# காய்கறி வியாபாரம்!

விளைச்சல் முடிந்து
காய்கறிகள் அனைத்தும்
கடைத்தெருவுக்கு வந்தன!

தங்களின்
விளைச்சலின் பெருமை எண்ணி
காய்கறிகள்,
தலைகனத்துடன்
தங்களைத்தாமே
புகழ்ந்து கொண்டன!

சிவப்பாக இருப்பதாக
சிங்காரித்துக் கொண்டது கேரட்!
ஒல்லியாகவும்
உயரமாக இருப்பதாகவும்
அலட்டிக் கொண்டது முருங்கைக்காய்!

தன் வடிவான
உடல்வாகு கண்டு
தனக்குத்தானே
வெட்கப்பட்டுக் கொண்டது
வெண்டைக்காய்!

தன் கலரை எண்ணி
காலரை தூக்கிவிட்டுக் கொண்டது
கேரட்!

தன் பசுமையை எண்ணி
பந்தா பண்ணிக் கொண்டது கீரை!

வியாபார வேளை
வந்தது!

கைவிரல்கள் பல
காய்கறிகளை
தேர்வு செய்தன!

தன்னைக் கிள்ளிப் பார்த்து
தேர்வு செய்வதாக
சிணுங்கியது கேரட்!

தன்னை முறுக்கிப் பார்த்து
தேர்வு செய்வதாக
முனங்கிய முருங்கைக்காய்!

தன் காம்பை ஒடித்து
தேர்வு செய்வதாக
கதறியது வெண்டைக்காய்!

தன்னை அழுத்திப்பார்த்து
தேர்வு செய்வதாக
அழுதது கத்தரிக்காய்!

தன்னை அடித்து
அலசிப் பார்த்து
தேர்வு செய்வதாக
அரற்றியது கீரை!

விளைச்சலில் இருந்து
வியாபாரத்திற்கு வந்த அனைத்தும்
விலைபோகவில்லை!

கடைக்காரனும் அது குறித்து
கவலை கொள்ளவில்லை,
காய்கறிகளுக்கும்
காரணம் புரியவில்லை.

அழைக்கப்பட்டவர்கள் பலர்,
தெரிந்தெடுக்கப்பட்டவர் சிலர்!

●

# பரம குயவனும் - பாத்திரமும்!

பாத்திரங்கள்
பலவிதம்,
ஒவ்வொரு பயன்பாடுகளும்
ஒருவிதம்!

மண் பாத்திரங்களை வனைய
மண்ணின் மேல்
அதிகாரம் உள்ள குயவனுக்கு
மனவருத்தம் என்னவெனில்,
உருவாக்கப்பட்ட பாத்திரங்கள்
உண்டாக்கின குயவனை நோக்கி
உச்சஸ்தாயியில் கத்துவதும்
உள் அரசியல் செய்வதும்
வழக்கமான வாழ்வாகிவிட்டதுதான்!

பாத்திரங்களை
வனைவதில் உள்ள
பலவித நிலைகள் -
ஆவிக்குரிய பரிமாணங்களின்
ஆழ்நிலையைக் காட்டுகின்றன.

மண்ணைப் போல்
மனிதனைத் தேர்ந்தெடுத்து

உலகக்காரியங்களிலிருந்து
ஒழுங்காக சலித்து வேர்பிரித்து,
இயேசுவாகிய
ஜீவத் தண்ணீரை
இதனுடன் கலந்து,
மிதித்தலும் பிசைந்தலுமாகிய
ஆவிக்குரிய சோதனைகளின்
அடுத்த கட்டம் தாண்டி,
வனைவதற்கு வளைந்து கொடுத்து
சுழலும் சக்கரத்திலிருந்து
சூளையின் அக்கினியில்
பரிசுத்த ஆவியால் புடமிடப்பட்டு
பயன்பாட்டுக்கு வருகிற
பாத்திரங்களின்
உற்பத்தி ரகசியங்கள்;
உடனுக்குடன் புரிவதல்ல!

வக்கிரத்தின் பாத்திரம்,
உடன்படிக்கைகளின் பாத்திரம்,
காடிகளின் பாத்திரம்,
கண்டுகொள்ளப்பட்ட பாத்திரம்,
தத்தளிப்பின் பாத்திரம்,
தண்ணீரால் கால்களைக் கழுவிய
தாழ்மையின் பாத்திரம்,
பின்னிட்டு விழுந்த பாத்திரம்,
மதுபானப் பாத்திரம்,
மகிமையின் பாத்திரம்
வண்டல்கள் இல்லாத பாத்திரம்,
வாய்களுடன் தகராறு செய்யும் பாத்திரம்...,
பாத்திரங்களின் ''பாலிடிக்சால்''
பரம குயவனுக்கும் வக்கீல் நோட்டீஸ்!

பாத்திரங்களை
வனைவதில் உள்ள
வானத்தின் குறிக்கோள்கள்
பாத்திரங்களுக்குப் புரிவதில்லை
என்பதுதான் இறையியல் சிக்கல்!

பாத்திரம் வனையும்போது
உண்டாகும் மறுகட்டுமானம்
மன்னிப்பின் தத்துவத்தை
மறைமுகமாய் உணர்த்துகிறது!

மறுபடியும் செப்பனிடக்கூடிய
மண்பாத்திரம் (எரே18;4)
திரும்ப செப்பனிட முடியாத
திமிர்வாதப் பாத்திரம் (எரே 19;11)
இரண்டுக்கும் நடுவே
இந்தப்பூமி
எந்தவகைப் பாத்திரம்?

பானபாத்திரக்காரனாகிய நெகேமியா
பைபிளில் ஒரு அதிகாரமாக மாறிய
பாத்திரத்தின் பாரம் என்ன?

உடைந்துபோன பாத்திரம் தாவீது
நிரம்பி வழியும் பாத்திரமான
நிஜ ரகசியம் என்ன?

உடைந்து நொறுங்கிப் போகுதலும்
ஒருவகை ஊழியம் என
ஆண்டவர் கிதியோனுக்கு உணர்த்திய
ஆவிக்குரிய புத்தகத்தில்
ஆழ்நிலை மறைபொருள் என்ன?

கொல்கதாவில் ரத்தம் சிந்திய பாத்திரம்

குயவனுக்கான நிலத்தை
கொள்முதலாக்கிய
குறிக்கோள் என்ன?

பாத்திரத்தின் ரகசியங்கள்
பாத்திரத்தின் உள்ளேயே
புதையலாக இருப்பதுதான்
பாத்திரத்தின் பெருமை!

பாத்திரத்தின் பயன்பாடுகள்
மட்டுமல்ல, அவை
உண்டாக்கப்பட்ட தத்துவங்களின்
உட்பொருள் அறிக!

கனமான பாத்திரம்
கனவீனமான பாத்திரம்
இரண்டிற்கும்
இறையியல் பயன்பாடு உண்டு!
(ரோ 9;21)
அளவில் பெரிய பாத்திரம்
அபூர்வமான பயன் மூலமும்
அளவில் சிறிய பாத்திரம்
அடிக்கடி பயன்படும் மூலமும் -
பாத்திரங்களுக்குள் நடக்கும்
''பரிசுத்த'' சண்டைகளால் -
பாத்திரங்களின் பயன்பாடுகள் -
குண்டு வெடித்துச் சிதறுகின்றன!

''பாத்திரத்தை எடுத்துப் போடும்!- என
இயேசு ஜெபித்தார்! - ஆனால்
பரம குயவனின் கட்டளையால்
பானம் பண்ணி முடித்தார்!

பாத்திரங்கள் தங்களைப்
பயன்படுத்திக் கொள்ள

பாத்திரங்களுக்கே
அதிகாரமில்லை என்பதே
கிறிஸ்தவத்தின் கிரயத் தத்துவம்!

பல பாத்திரங்கள் இணைந்தால்தான்
''சமையல்'' நடக்கும் எனும்
ஐக்கியத்தின் தத்துவம் புரியாத
''ஐடியல் ஹோம்'' பாத்திரங்களால்
திருச்சபையின் ஊழியங்கள்
தினமும் பட்டினி கிடக்கிறது!

ஷோகேஸ்களில்
பார்வைக்கு மட்டுமே
வைக்கப்பட்ட பாத்திரங்கள்,
உட்புறத்தையல்லாமல்
வெளிப்புறத்தையே மட்டும்
சுத்தம் செய்யும் பரிசேயப் பாத்திரங்கள்,

விலைபோன பாத்திரங்கள்,
அடகுவைக்கப்பட்ட
ஆவிக்குரிய பாத்திரங்கள்,
ஒன்றை ஒன்று
அளவு பார்த்து பெருமூச்சு விடும்
பொறாமை பாத்திரங்கள் -,
கவிழ்த்து வைக்கப்பட்ட
பாத்திரங்கள்,
அரைத் தூக்கத்தில்
காலியான பாத்திரங்கள்,
கானாவூர் கல்யாணப் பாத்திரங்கள்,
நிகழ்கால நெருக்கடிகளால்
நெளிந்து போன - பாத்திரங்கள்,
ஈயம் பூசின பூசாத பாத்திரங்கள்,
அத்தனை வகை பாத்திரங்களுக்கும்
''ரா மெட்டீரியல்''...

மண் -
இரும்பு -
செம்பு -
வெள்ளி -
தங்கம் -
அலுமினியம் -
பிளாஸ்டிக்- பீங்கான்- கண்ணாடி!

எதுவாக இருந்தாலும்
பாத்திரங்கள்
அடிப்படையில்
பாத்திரங்களே!

ஒவ்வொரு பாத்திரங்களும்
தேவைக்கேற்ப தேர்ந்தெடுக்கப்படும்
தேவைகள் முடிந்ததும்
திருப்பி வைக்கப்படும்.
சமயத்தில்
தேர்ந்தே எடுக்கப்படாலும்
திருத்திட்டம் செயல்படும்!

நவீன யுகத்தில்
''நான்ஸ்டிக்'' பாத்திரங்கள்
மகிழ்ச்சியானவை!
ஆனால்
''நான்'' மட்டும்தான்
பாத்திரம் என்பவை
வீழ்ச்சியானவை!

பாத்திரங்களே;
பணிந்து கொள்ளுங்கள்!
படைத்தவர் நம்மை
'மண்' என நினைவு கூர்கிறார்!
நாம் அல்ல,
அவரே நம்மை உண்டாக்கினார்!
அல்லேலூயா!

●

## மரியாளின் துதிபாடல்!

அப்போது மரியாள்,
''என் ஆத்துமா
கர்த்தரை கனம் பண்ணுகிறது,
என் ஆவி
என் இரட்சகராகிய தேவனிடத்தில்
கேள்வி கேட்கிறது!

அவர் ஏன் தன்
தாழ்மையின் அடிமைகளை
தவிக்க விட்டு பின்,
தப்புவிக்கிறார்?

எல்லா சந்ததிகளிலும்
என்னை பாக்கியவதி என்று
பாராட்டினவர்கள் ஏன்,
முச்சந்திகளில் பெண்ணை நிறுத்தி
மூலதனமாக்கிப் பின்,
முதற்கல்லை வீசுகிறார்கள்?

வல்லமையுடையவர்
மகிமையானவைகளை
''என்கவுண்டர்'' மூலம்
எனக்குச் செய்தார்,
அவருடைய நாமம்

பரிசுத்தமுள்ளது,
ஆனால் ஏன்,
அரசியல் உதடுகள் அதை
ஆதாயமாக்கியது;

தனியார் தொலைக்காட்சிகளில்
தவணை முறையில் -
விளம்பர ''சிலாட்டு''களாய்
விற்கப்படுகிறது?

அவருடைய இரக்கம்
அவருக்குப் பயப்படாதவர்கள் மேலும்,
தலைமுறை தலைமுறையாய் ஏன்
தந்தருளப்படுகிறது?

அவர் தம்முடைய
பராக்கிரமம்
செய்கிறபடியால்,

நொய்டாவிலும்
ஹைதராபாத்திலும்
அக்கிரமம் செய்தவர்கள்
அடையாளம் காட்டப்படுகின்றனர்!

இதய சிந்தையில்
அகந்தையுள்ளவர்களாகி
அக்கிரமம் செய்கிறவர்கள்,
ஏழைகளின் சொத்தை
ஏப்பம் விடுகிறவர்கள்,
வீடு கட்டித் தருவதாக
பணம் வசூலித்து
''சூட்கேசு''களுடன் ஓடியவர்கள்,
பக்தியின் போர்வையில்
பாலியல் கூத்தாடியவர்கள்,
அமைதியின் அடிவயிற்றில்

குண்டு வைத்தவர்கள்,
சுயலாபத்துக்காக
சொந்தக் கட்சி துவங்கிச்
சுருட்டுகிறவர்கள்,

மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டே,
மக்களை ஏமாற்றுகிறவர்களை
சிதறடிக்காமல் சேகரித்து
சிறைக்குள் தள்ளினார்,
ஆயினும் சிரச்சேதம் செய்யாமல்
ஏன்,
ஆயுளை நீட்டினார்?

தாதாக்களின் ஆசனங்களைத் தள்ளி,
தாழ்மையானவர்களை உயர்த்தினார்,
இலங்கை அகதிகளை மட்டும்
ஏன்,
எல்லையிலேயே நிறுத்தினார்?

பசியுள்ளவர்களை,
கையேந்தி பவன்களின்
பாதையோர அடுப்புகளால்
நன்மையால் நிரப்பினாலும்
ஐசுவரியமுள்ளவர்களை
வெறுமையாக அனுப்பாமல்
பேங்க் பேலன்சுகளை உயர்த்தினார்,
ஏன் அவர்களை
'பப்பு' களிலும்
'பார்' களிலும்
நிரப்பினார்?

நம்முடைய பிதாக்களுக்கு
அவர் சொன்னபடியே
ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும்
என்றென்னைக்கும்
இரக்கம் செய்ய நினைத்து,
தம்முடைய தாசனாகிய
இஸ்ரவேலரை ஆதரித்தார்,
அதன் வழிவந்த
இந்திய ஏழை மக்களை
ஏன் மறந்தார்?'' என்றாள்!

கூடங்குளம்
அணுமின் பிரச்சனையில்
அலைக்கழியும்
வால் நட்சத்திரம்!

ராமர் பாலத்தை
கடக்க முடியாத
வான சாஸ்திரிகள்!

கட்டாய ஹெல்மெட்டுகளுடன்
டூவீலரில் மேய்ப்பர்கள்!
ஒசாமாவின் தீவிரவாதத்துடன்
உலமெங்கும் ஏரோதுகள்!

சேரிகளை கோலிசெய்து,
ரியல் எஸ்டேட்
பங்குச் சந்தைகளின்
தலைநகரமான பெத்லேகம்!

போக்குவரத்துப் புகையின்
ஆஸ்துமாவில் கிறிஸ்மஸ் தாத்தா!

விறகு வெட்டிகள்
சுமந்த செல்லும்,
வேர்கள் இல்லா கிறிஸ்மஸ் மரம்!

இயேசுவுக்கும்
இப்போது பவுடல் பால்!
சிகரெட்டுகளைப் போல்
செங்கோல்களிலும்
மண்டையோட்டுக் குறிகள்!

புத்தாடை, கேக், பிரியாணி,
கிரீட்டிங்ஸ கார்ட், கிறிஸ்துமஸ்மரம்,
சீரியல் செட், கேரல் ரவுண்ட்,
இவைகள் மட்டுமா கிறிஸ்து பிறப்பு?

பொருளியல் மட்டுமே சார்ந்த
கிறிஸ்து பிறப்பை
புறக்கணிப்போம்!

இவைகளைத் தாண்டி
இறை விடுதலையுள்ள
இலக்கை மையப்படுத்தி
தன்னை இனங்காட்டி எழுகிறது
இயேசுவின் பிறப்பு!

கேள்விகளைச் சுமந்த
மரியாளின் கர்ப்பத்தில்
அடைக்கப்பட்ட காற்று,
ஏழைகளுக்கான தென்றல் என்றாலும்
அது -
ஏற்றத் தாழ்வுகளை சமமாக்கும்
எழுப்புதல் புயலாய் புறப்பட,

இறையியலுக்கும்
இதயங்களுக்கும் தேவை
இப்பொழுது ஒரு,
‘ஸ்டெம் செல்’, சிகிச்சை!

●

# நட்சத்திரங்களும் சீரியல் செட் பல்புகளும்!

அணு உலை பிரச்சனையா?
அரிசி உலை பிரச்சனையா?
குழப்பத்தில் குடிமக்கள்!
நிரந்தரமாக வரும்
நீலம் புயலைப் போல
நிம்மதியில்லா சம்பிரதாயங்கள்!

மின்வெட்டால்
இருளில் மூழ்கிய
பெத்லகேம்!
இன்வெட்டர் உதவியுடன்
வாசலில் எரியும்
வால் நட்சத்திரம்!

எரிவாயு தட்டுப்பாடால்
மனப்புலம்பலுடன்
மரியாள்கள்!

வட்டிக் கடையின்
வாசலில் யோசேப்புகள்!

தொழுவத்தின் கொசுக்கடிகளால்
தூதர்களுக்கும்
டெங்குக் காய்ச்சல்!

பெட்ரோல் விலை உயர்வால்
வராமலேயே போன
வான சாஸ்திரிகள்!

'ரெட் கிராசைச்' சுற்றிலும்
'ஃப்ளு கிராஸ்', ஆடுமாடுகள்!

சகோதரனின் கண்ணிலிருக்கும்
உத்திரத்தைப் பார்க்கும்
சமகாலச் சமுதாயம்,
அவன் கண்ணிலிருக்கும்
உதிரத்தைப் பார்ப்பதில்லை!

கிறிஸ்மஸ் மரத்தில்
விலக்கப்பட்ட கனிகள்,
அறுவடைகால
ஆசீர்வாத தட்டுகளில்
அடிமைகளின் சாபங்கள்!

முதற்பலனாம்
இயேசு பாலகனின்
முக்கியத்துவம் உணராதவர்களுக்கு
கடைசிகால அறுவடை குறித்தும்
கவலை இல்லை!

அடையாளம் இல்லாத விசுவாச சந்ததி
புனித வெள்ளியில்
''மோர்'' குடிக்கிறது.
கிறிஸ்து பிறப்பில்
''பீர்'' குடிக்கிறது!

கண்ணாடிப் பெட்டிக்குள்
வேதாகமத்தை விரித்து
வைத்தது போல,
ஆசீர்வாத பிரசங்கங்கள்,

இறையியலுக்கும் ஏ.சி. மிஷினை
பொறுத்தி விட்டன!

கிறிஸ்து பிறப்பின்
கால கட்டங்களில்
நடைமுறை பொருளாதாரத்தால்
நம்மை நாமே
சிலுவையில் அறைந்து கொள்கிறோம்!
பரிசேயர்கள் அன்று
சிலுவை மரத்தை
கிறிஸ்மஸ் மரமாய்
அலங்கரித்து மகிழ்ந்தனர்,
நாம் இன்று,
கிறிஸ்மஸ் மரத்தை
செக்கு மரமாய்
சுமந்து அழுகிறோம்!
கிறிஸ்துவின் பிறப்பு
பொருளாதாரம் சார்ந்தல்ல,
''அருளாதாரம்'' சார்ந்தது!

கிறிஸ்மஸ் தாத்தாக்களை
கண்டு குதூகலிக்கிறோம்,
வீட்டில் உள்ள முதியோர்களை
மறுதலிக்கிறோம்;
அனாதை ஆசிரமங்களுக்கு
அனுப்பி வைக்கிறோம்!
பலகாரங்களை
பகிர்ந்து கொள்கிறோம்,
அதிகாரங்களை பகிர்ந்து கொள்ள
அடித்துக் கொள்கிறோம்!

காழ்ப்புணர்வுகளை மனதில்
வைத்துக் கொண்டு
கைகுலுக்கி வாழ்த்துகிறோம்!

உலகமெங்கும்
பரப்ப வேண்டிய நற்செய்தியை,
வாழ்த்துச் செய்திகளுடன்
குறுக்கிக் கொள்கிறோம்!

''கிருபாதார பலி''களை
மட்டன், சிக்கன் மணமணக்க
முடித்துக் கொள்கிறோம்!
நமது மேஜர் சீன்களில்
சம்பிரதாய முரண்பாடுகளால்,
இயேசு பாலகன்
பொம்மையாகவே
புன்னகைக்கிறார்!

பிறகு எவ்விதம்
இயேசு பிறப்பை
கொண்டாடுவது?
ஆவியிலே எளிமையுள்ளவர்கள்
அவரைத் தரிசிப்பார்கள்!
அரண்மனைகளின் கூச்சல்களை விட
மாட்டுத் தொழுவத்தின் மௌனமே,
மதிப்பு மிக்கது!

நம்மை ஐஸ்வரியவான்களாக்க
அவர் தரித்திரர் ஆனார்,
ஆடம்பரங்களால்
அவரை ஐஸ்வரியராக்கி,
மாதக் கடைசியில் நாம்

தரித்திரராய் நிற்பதை
மனித குமாரனே விரும்புவதில்லை!

நம் சமநிலை
விசுவாச வாழ்வியலே
அர்த்தமுள்ள கிறிஸ்து பிறப்பை,

மேன்மேலும்
அர்த்த பூர்வமாக்குகிறது!
'சீரியல் செட்' பல்புகளைக் காட்டிலும்
நட்சத்திரங்களே
இயற்கையானவை -
நிரந்தரமானவை,
நற்செய்தியானவை!

●

## பழைய கல்யாண கோட்!

ஸ்பெக்டரம் அலைவரிசை,
காவேரி நீர்,
முல்லை பெரியாறு,
கூடங்குளம்,
அரசியல் மாற்றங்கள்,
அழிக்கப்பட்ட ஈழம்,
கேலிக்கூத்தான உண்ணாவிரதம்,
எப்போதும் போல்
பிரச்சினைகளுக்கிடையே
இம்மானுவேல் பிறந்தநாள்!

பண்டிகைகளை சிலுவையாக
பழகிப்போன இந்த நாட்களில்
பால்விலை உயர்வால்
பசியால் அழுகிறார்
பாலகன் இயேசு!

நூலக இடமாற்றம் போல
அன்று -
தங்க இடமில்லாமல் அலைந்த
இயேசு கிறிஸ்து
இன்று -
குப்பைத் தொட்டிகளிலும்

குடும்பப் பிரச்சினைகளிலும்
குறைமாதக் குழந்தையாகி விட்டார்!

யூத், ஐ.டி மக்களுக்கு
இதோ இன்று ஒரு நற்செய்தி!
வெப்சைட்டிலும்
யூ டியூபிலும் உங்களுக்காக
இரட்சகர் பிறந்திருக்கிறார்!
500 தரும் 5000 பேர்
5000 தரும் 500 பேர்
தவணை முறைத் திட்டங்களுக்குத்
தள்ளப்பட்ட பாரம்பரிய விசுவவாசிகளுக்கு
எப்போதும் போல் இருக்கிறது
பண்டிகை புத்தாடையாக
பழைய கல்யாணக் கோட்டும்
பழைய பட்டுப் புடவையும்!

இயந்திர வாழ்வில்
இடிபாடுகளுக்குள்ளே -
எத்தனை கிறிஸ்தவ குடும்பங்கள்
என்று எவருக்கும் தெரியாது!

டிசம்பர் மாதத்தில்
ஆங்காங்கே தொங்கும்
காகித நட்சத்திரங்களை
கணக் கெடுக்கிறேன்,
கண்ணீர் வந்தது!
அன்று -
ஒரு நட்சத்திரத்தின் கீழ்
ஒரு இயேசு பிறந்தார்!
இன்று -
இத்தனை நட்சத்திரங்களின் கீழ்
எத்தனை இயேசு பிறந்திருக்கலாம்?
ஏன்...?

●

# புலம் பெயரும் யோசேப்புகள்!

காக்கையின் மூலம்
உணவு தந்தனுப்பிய
கர்த்தரைப் பார்க்காமல்
காக்கையை எதிர்பார்த்திருக்கும்
ஒரு கூட்டம்.....

எரிகோவின் சுவரை
இடிந்து விழப்பண்ணியவரை
ஏறிட்டுப் பார்க்காமல்
எரிகோவின் சுவரின் கீழே
வணிகவளாகக் குடைகள் அமைத்து
வாழும்
ஒரு கூட்டம்...

காற்றையும் கடலையும்
கட்டுப்படுத்திவரை
கண்டு கொள்ளாமல்
'லைப் ஜாக்கெட்' உதவியுடன்
விசுவாசக் கப்பலில் பயணிக்கும்
ஒரு கூட்டம்...

ஐயாயிரம் பேருக்கு ஐந்து
அப்பங்களை பகிர்ந்தளித்தவரை

கண்டு கொள்ளாமல்,
‘சைனீஸ்’ உணவகங்களில்
அலை மோதுகிற
ஒரு கூட்டம்...

சிலுவையின் இறையியல் தத்துவத்தை
உணராமல் - அதை
சீரியல் செட்டுகளால் அலங்கரித்து -
காணிக்கை வரவு செலவுகளை குறித்தே
கண்ணாக இருக்கும் ‘கமிட்டி’
ஒரு கூட்டம்......

‘ஆயர்கள்’ எல்லாம்
‘லாயர்’கள் ஆகி,
முதலாம் வருகையின்
முக்கியத்துவத்தை உணராமல்,
இரண்டாம் வருகையின்
நியாயத்தீர்ப்பு நாளுக்காக

‘ஸ்டே ஆர்டர்’ வாங்கித் திட்டமிடும்
ஒரு கூட்டம்...

வாசலில் தொங்கும்
‘60’ வாட்ஸ் வால் நட்சத்திரம்
அடிக்கடி மின்வெட்டால்
திக்கித் திணறி
வெளிச்சம் உமிழ்கிறது!

எஸ்.எம்.எஸ். வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம்,
இ.மெயில்களில்
இம்மானுவேல் பிறந்தநாள் விழா!
கிறிஸ்து பிறப்பின் தத்துவம்,
உள்ளங்கை செல்போன்களுக்குள்
சுருங்கிப்போன சுவிசேஷமாகிவிட்டது!

பாலியல் வன்முறைகளுக்கு
பழகிப் போன இந்த தேசத்தில்
மாட்டுத் தொழுவத்தை விட்டு வெளியே வர
மரியாளுக்கும் மனபயம்!

சாதிச் சண்டைகளில்
குடிசைகள் கொளுத்தப்பட்ட
பெத்லகேம் கலவரங்களில்
வான சாஸ்திரிகள் வரஇயலாதபடி
சாலையெங்கும்
வெட்டிச் சாய்க்கப்பட்ட
விசுவாச மரங்கள்!

மேய்ப்பர்களையே
உரித்துச் சாப்பிடும்
அராஜக ஆடுகளின் தேசத்தில்
ஏரோதுகளுக்கும் ராஜபட்சேக்களுக்கும்
எந்தவித வித்தியாசமுமில்லை!
புலம் பெயர்ந்த யோசேப்புகளின்
புலம்பல்களால்
பச்சையான கிறிஸ்மஸ் மரங்கள்
பட்டுப் போய் விட்டன!

''பயப்படாதீர்கள்!'' என்று
சொல்லுகிறவர்களாலேயே
பயம் வருகிறது!
பேரா. பிரியகுமாரன்
கூறியது போல்,

கும்பிடுகிற கரங்களை
வெட்டுகிறவர்கள் இங்கே
கூட்டமாக நிற்பதால்,
திருச்சபையின் மிஷனரி வரலாறு
தேம்பி அழுகிறது!

‘ராயர்’ மூவர் பின் செல்ல....
பாடல் ஒலிக்க
இருளில் ஏற்றப்பட்ட
மெழுகுவர்த்திகள்
திருச்சபைகளின் வழக்குகளை எண்ணி
ஏங்கி அழுது கரைகின்றன!

ஞாயிற்றுக் கிழமைகள் தவிர
எங்கள் திருச்சபைகள்
கோஷ்டி மோதல்களால்
கோர்ட்டு வளாகத்திலேயே
குழுமி நிற்பதால்.
கோபித்துக் கொள்ளாதீர்கள்....
இந்தக் கிறிஸ்து பிறப்பும் எங்களுக்கு
கோர்ட்டு பெஞ்சுகளில்தான்.
வருகையின் ஞாயிறுகள் கூட
‘வாய்தா’க்களைப் பொறுத்துத்தான்!

●

# சிலுவைச் சித்தன்!

கொல்கொதா மலை
மனிதர்களால் வழிந்தது!
பலர்,
சிலுவையை நோக்கிச்
சிரித்துக் கொண்டிருந்தனர்,
பலர்,
சிலுவையை நோக்கி
அழுது கொண்டிருந்தனர்!

சிலுவைச் சித்தன்
பேச ஆரம்பத்தான்;

''அழுவதாலும்
சிரிப்பதாலும்
சிலுவையின் அர்த்தத்தை
மொழி பெயர்க்க முடியாது!
சிலுவையின் மொழி
தவ மௌனம்!

சிலுவையை நீங்கள்
அர்த்தப்படுத்திக் கொள்கிற
உத்திகள்
அபத்தமானவை!

ஊசிக் கோபுரங்களில்,
ஓடும் வாகனங்களில்,
கழுத்தில் தங்கமாக,
வீடுகளில் ஓர் அங்கமாக,
பலவிதப் பரிமாணங்களில்
சிலுவையைப் பயன்படுத்தும்
நீங்கள்,
அந்தச் சிலுவையோடு
உங்கள் வாழ்வை,
இணைத்துக் கொள்ளாமல்
வலம் வருவது உங்கள்
வசதிக்காகத்தான்!

சீர்கெட்ட மனிதர்களே!
சிலுவையோடு அறைப்படாவிடில்
நீங்கள்,
வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறைகளே!''

சிலுவைச்சித்தனை சிலர்
கற்களால் அடிக்க முயற்சிக்க,
அவ்விடம் விட்டு அவன்
அகன்று போனான்!.

●

# சிலுவையும் – சிலந்திப்பூச்சிகளும்!

சிலுவையின் பரிணாமங்கள்
சிந்தனைக்கு அப்பாற்பட்டவை!

இயேசுவின் ரத்தத்தால்
ஈரப்பதமாகியதால்தான்
மரக்கட்டை சிலுவை
மனித நேயமாய் துளிர்த்தது!

சிலுவை சுமக்காமலேயே
சிம்மாசனம் ஏற ஆசைப்படுகிறவர்கள்
குறுக்கு வழியில்
கொல்கதாவைக் கடந்து செல்கிறவர்கள்!

உபத்திரவங்களுக்கு
ஒப்புக் கொடுக்காதவர்கள்,
உயிர்த்தெழுதலுக்கும்
ஒப்புக் கொடுக்காதவர்கள்!

கானாவூர் கல்யாண வீட்டிலேயே
களிகூருகிறவர்கள்,
கெத்சமனே அனுபவத்திற்கு வராமல்
கிறிஸ்துவோடு இணைய முடியாது!

அவர் எனக்காக
யாவையும் செய்து முடித்தார்!

பலருக்கு இது
ஆவிக்குரிய தப்பித்தல்!

அவருக்காக நாம் என்ன
செய்து முடித்தோம்? - அல்லது
செய்யத் துவங்கினோம்?
இதுவே நமக்கு
ஆவியானவரின் கற்பித்தல்!

இயேசு நமக்காக
ரத்தம் கொடுத்தார்,
இயேசுவுக்கு
ரத்தம் கொடுப்பவர் எவர்?

சிலுவையைச் சுற்றிலும்
சிலந்திப் பூச்சிகள்
நெய்த வலையில் -
உயிர்த்தெழுதல்
உணவுக்கான ஒரு பூச்சியாய்
உணர்வில்லாமல் கிடக்கிறது!

சுமப்பதற்கு ஆளில்லாமல்
சும்மா கிடக்கும் சிலுவை,
ஆலய ஊசிக் கோரங்களில்
அனாதையாய் நிற்கிறது!

கழுத்தில் சிலுவை சுமக்கும்
''காங்கிரிகேஷன்'' கிறிஸ்தவர்கள்
அதை
முதுகில் சுமக்க
முயற்சிப்பதில்லை!

சிலுவைக்கு,
முத்தம் கொடுப்பவர் உண்டு,
சிலுவைக்காக
ரத்தம் கொடுப்பவர் யார்?

சிலுவைக்கு
முட்டுகொடுப்பவர்
பலர்;
சிலுவைக்கு
தோள் கொடுப்பவர்
எவர்?

தங்கம், வெள்ளி
சிலுவைகளுக்கு பஞ்சமில்லை,
இரும்புச் சிலுவைகளை ஏனோ
இதயங்கள் ஏற்பதில்லை!

அது -
வரலாற்றின்
வாழ்வின் புரட்சி!
ஆனால் -
சிலுவைகளுக்குப் பதிலாக
ஆணிகளும், சுத்தியல்களுமே இங்கு
அதிகமாக இருக்கின்றன!

சிலுவை -
விழிகளின் இருளுக்குள்
வெளிச்சம் பாய்ச்சிய
டார்ச் லைட்!

சிலுவை -
வாழ்வின் சேனல்களுக்கு
வானம் நிறுவிய சாட்டிலைட்!

சிலுவை -
பூமியின் புஜகத்தில் குத்தப்பட்ட
நோய் தீர்க்கும் சிரஞ்சி!

சிலுவை -
வேர்கள் இல்லாமலேயே
விழுதுகள் பரப்பிய விருட்சம்!

சிலுவை -
உலகத்தின் நிழலுக்கு
உன்னதம் விரித்த
உயர்ந்த நிழற் குடை!

சிலுவை -
ஏழுகனிகளைக் கொடுத்த
இறையியல் ஆப்பிள் மரம்!

சிலுவை என்ற
கூட்டல் குறியின் கீழ்
கழித்தல் குறியாய் நிற்கிறது
காலம்!

கனிதருவதற்கு முன்பே - அதன்
காய்களை களவாடுவதிலேயே
கவனமாக இருக்கும்
சுயநலக்காரர்களால் -
சிலுவை மரம் -
பழம் தருவதற்கு முன்பே -
பறிக்கப்பட்டு பட்டுப் போயிற்று!

சிலுவையைச் சுற்றிலும் -
ஆணி அறைந்தவர்கள்,
'அந்தோ பரிதாபம்' என்றவர்கள்,
அழுதவர்கள்,
ஆனந்தப்பட்டவர்கள்,
ஆராய்ச்சி செய்தவர்கள்,
அனுபவித்த கள்வர்கள்,
தடுமாறிய உறவினர்கள்,
தலைமறைவான சீடர்கள்,
அனைவருக்கும் மத்தியில்
எந்தக் குழுவோடு நாம்
இணைந்திருக்கிறோம்?

சிலுவை நம்மிடம் வினவுகிற
சிறப்பு தேர்வு கேள்விகள்

கீழ் வருவன;

1) சிலுவை அனுபவம்
பார்க்கிற அனுபவம் மட்டுமல்ல,
பங்கேற்கிறவர்கள் யார்?

2) சிலுவையின் கீழே
மற்றவர்களோடு நின்று
இயேசுவைப் பார்க்கிறோமா? - அல்ல
சிலுவையின் மேலே
இயேசுவோடு இணைந்து,
மற்றவர்களைப் பார்க்கிறோமா?

3)சிலுவைகளைச் செய்து
அடுத்தவர் தோள்களில்
சுமத்துகிறோமா? - அல்ல
நமக்காக செய்யப்பட்ட சிலுவைகளை
நாமே சுமக்கிறோமா?

4) நாற்பது நாள் லெந்து காலம்,
இரங்கல் கூட்டமா?
எழுப்புதல் முன்னோட்டமா?

கல்வாரித் தோட்டம்
'கால்வாரி'களால்
களை மண்டிக் கிடக்கிறது!

குண்டு குழியுமான
கல்வாரிப் பாதையில்
குருவிகள் கூட பறப்பதிலலை!

ஈஸ்டருக்குப் புத்தாடை வாங்க
புறப்படும் பலர்,

கல்வாரியின் கந்தையைக் குறித்து
கவலை கொள்வதில்லை!

நாற்பது நாள் உபவாசம்
ஏழுவார்த்தை தியானம் -
கறி, மீன் தியாகம்,
சடங்குகளும்
சம்பிரதாயங்களுமாக
மாறி மாறி வருவதைத் தவிர
மாற்றம் எதுவுமில்லை!

பெரிய வெள்ளி தயிர்சாதம்
ஈஸ்டர் பிரியாணி,
இயேசு எதிர்நோக்கும்
இறையியல் இதுவல்ல!

சிலுவை குறித்த,
பாடல் எழுதுவதும்
பாடல் பாடுவதும் எளிது?
அதில் பயணம் செய்வது
அரிது!

பாடுகளுக்கு பயப்படுகிறவர்கள்
பரலோகத்திற்கு வெளியே
பர்மனெண்டாகத் தங்குகிறவர்கள்!

வாழ்வின் சூழல்களோடு இணையாத
எந்தவொரு வழிபாட்டு முறைமைகள்,
வறட்டுத் தத்துவங்கள்....
ஒன்று சேராத உலர்ந்த எலும்புகள்;
கதவு திறக்காத கல்லறைகள்!

சிலுவைப்பாடுகள்
நோய் தரும்
வாதைகள் அல்ல, அது

நோய்தீர பிழியப்பட்ட
மூலிகை ரசவாதம்!

இயேசுவின் மரணத்தைச்
சுமக்கிறோம்! ஆனால்
இயேசுவின் உயிர்த்தெழுதலை
பிரசங்கிக்கிறோம்!
பரிசுத்த பவுலின்
பார்வையே கல்வாரி சிலுவையின்
சரியான நீள அகலம்!

இயேசுவின் மரணம்
ரத்த சாட்சியாய் மரிக்க நம்மை
உந்திவிடுகிறது!

இயேசுவின் உயிர்த்தெழுதல்,
ரத்த சாட்சியாய் வாழ நம்மை
உயர்த்தி விடுகிறது!

விதையாக விழுந்து
மரிப்பது மட்டும் கிறிஸ்தவமல்ல,
முறையாக முளைத்தெழுவதே
முதன்மையான கிறிஸ்தவம்!

பூமியின் கீழே நின்று பார்க்கையில்
சிலுவை புள்ளியாகத் தெரிகிறது,
சிலுவையின் மேலே இருந்து பார்க்கையில்
பூமி புள்ளியாய்த் தெரிகிறது!
நாம் யார் யார்
எங்கேயிருந்து;
எப்படிப் பார்க்கிறோம்?

●

# காணிக்கையின் கதை!

காணிக்கை குறித்த
தெளிவான வெளிப்பாடு
திருச்சபைக்கு இல்லை!
இருப்பவை இல்லாமைக்கும்
இல்லாமை இருப்பவைக்கும்
பகிர்ந்தளித்து பரவுவதே
பரிசுத்த காணிக்கை!

காணிக்கை போட்டு
கைவலித்தவர்களைவிட
காணிக்கை எடுத்து
கைவலித்தவர்களே அதிகம்!

இயேசுவின்
உள்ளங்கை தழும்புகளையே
உண்டியல்களின் ஓட்டைகளாக்கி
விட்ட
இவர்கள்,
திருச்சபையின் சுனாமிகள்;
பிசாசின் பினாமிகள்!

காணிக்கை -
கர்த்தருக்குத் தரும்
கௌரவம்;

கள்ளத்தனத்திலிருந்து
காப்பாற்ற
கர்த்தருக்குத் தரும்
கருப்பு லஞ்சமல்ல!

பழைய ஏற்பாட்டில்
படைக்கப்பட்ட
ஆடு மாடுகள்
அடைக்கலான் குருவிகளே
பரவியில்லை;
புதிய ஏற்பாட்டில்
இவர்கள் செலுத்தும்
ஆலய காணிக்கையில்தான்
எத்தனை வகை
அரசியல் உத்திகள்?

அமுக்கி குலுக்கி
சரித்து காணிக்கையிட
கர்த்தர் கட்டளையிட்டார்;
அடிக்கடி தலைவர்கள்
அமுக்கி குலுக்கியதால்
சரிந்து விழுந்ததென்னவோ
சபையின் ஆத்துமாக்கள்தான்!

அவனவன்,
கட்டாயமாகவும்
விசனமாகவும்
காணிக்கை தந்ததால்
மகிழ்ச்சியாக இருப்பதென்னவோ
மத்தியஸ்தர்கள்தான்!

கல்லூரிகள்,
கட்டிடங்கள்,
தோட்டங்கள்,

தொலைக்காட்சி ஊழியங்கள்,
காணிக்கை வசூலிப்பது
சுவிசேஷ பிரபல்யத்திற்கா?
சுய விளம்பரத்திற்கா?

வசூல் ராஜாக்களின்
கைகளில் மணியார்டர் பாரங்கள்;
இயேசு ராஜாவின்
கண்களில் ஈரங்கள்!
கூகுள் பே;
குடும்பங்கள்
பே... பே...!
மேய்ப்பர்கள் -
ஆடுகளை மேய்ப்பதைவிட
காம்புகளில் பால் கறப்பதில்லையே!
கவனம் செலுத்துகின்றனர்!

சபையில் சேகரிக்கப்படும் காணிக்கை
மீண்டும்
சபைக்குச் சேருவதே
சரியான காணிக்கை!

வேர்வை காணிக்கை
நன்றி காணிக்கை;
நல்ல காணிக்கை
கள்ளக் காணிக்கை;
ஏழை காணிக்கை
பணக்காரக் காணிக்கை;

அத்தனையும் ஆசீர்வதிப்பது
மணவாட்டி;
ஆராய்ச்சி செய்வது
மணவாளன்!

சம்பளத்திலிருந்து
காணிக்கை தருபவர்கள்
விசுவாசிகள்;
காணிக்கையிலிருந்து
சம்பளத்தைப் பெறுபவர்கள்
ஊழியர்கள்!
இந்த இரண்டிலும்
தவறில்லை; இதை
இயந்திரமாய் செய்வதுதான்
முறையில்லை!

ஏழை விதவையின் காணிக்கையை
இயேசு பாராட்டினார்!
காணிக்கை வியாபாரிகளை
கசையடியால் விரட்டினார்!
சங்கமல்ல; அது
ஆராதனையின் ஒரு
அங்கம்!

ஊழியத்தின்
உண்மையான பரிணாம வளர்ச்சி,
பையாகவும் பெட்டியாகவும்
இருந்த
காணிக்கை வடிவங்கள்,
''பக்கெட்டுகளாக'' மாறியது தான்!

'காணிக்கையும்
தசமபாகமும் இல்லாமல்
எப்படி சபை நடக்கும்?'
கமிட்டி சிங்கம் ஒன்று
கர்ஜித்தது!
காணிக்கை போடுவது சரி;
காணிக்கை போட வைப்பது வரி!

சபைகளில் -
இயேசுவின் இரண்டாம் வருகை
நிச்சயமோ இல்லையோ;
இரண்டாம் காணிக்கை
நிச்சயம் உண்டு;

முதலாவது காணிக்கை
உடன்படிக்கை பெட்டி
இரண்டாவது காணிக்கை
உடன்பாடில்லாத வட்டி!
காணிக்கை போடுவதோடு
காங்கிரிகேஷனுக்கு திருப்தி;
கணக்கு எழுதுவதோடு
கமிட்டிக்கு திருப்தி;
வேடிக்கை பார்க்கும் கர்த்தருக்கோ
வேதனையான அதிருப்தி!

கல்லறைக்கும்
கல்யாணத்திற்கும்
காணிக்கை தரும்
விசுவாசிகளுக்கு
தேவபாதுகாப்பே - இந்த
திருச்சபையின் ரசீதுகள் தான்!
எதிர்பார்ப்போடு
காணிக்கை தரும் இவர்களிலும்,
பஸ் டிக்கெட்டுகளை
காணிக்கையாக
பவ்யமாக போடுகிறவர்களே
பரவாயில்லை!

''மாதம் ஒரு
மிஷனரியை தாங்குகிறோம்
தசமபாகம் தருகிறோம்''

ஆவிக்குரிய பெருமையோடு
அலட்டுகிறவர்கள்,
இடக்கைக்கு
தெரியவேண்டுமென்றே
வலக்கையால் வழங்குகிறவர்கள்!

காணிக்கை
சமத்துவத்தின் முகம்; இன்றோ
சாதுர்ய நுகம்!
காணிக்கையின் கணக்கு விபரங்கள்,
திருச்சபையின்,
கனத்த புத்தகங்களில்
கம்ப்யூட்டர்களில் இல்லை;
அது...
உக்கிரணக்கணக்காக
உன்னதத்தில் இருக்கிறது!

காணிக்கையிட வந்தவர்களை
நோக்கி
கர்த்தர் கூறலாம்;
''உங்களில்
உள்நோக்கமில்லாதவன்
காணிக்கையிடுங்கள்!
இல்லையெனில்
ஆளை விடுங்கள்!''

அப்போது -
எவரும் காணிக்கை இடாமல்
எழுந்து சென்றதை கண்டு
கர்த்தர் மனம் நோகலாம்!

# எழுப்புதல் எது?

எழுப்புதல்;
கூட்டம் கூட்டுவதல்ல,
குறிக்கோளை நாட்டுவது!

எழுப்புதல்;
பிரசங்கமல்ல; பிரவேசம்!

எழுப்புதல்;
பேசிக்கொண்டிருப்பதல்ல,
செய்து கொண்டிருப்பது!

எழுப்புதல்;
கூடுவதும் பாடுவதுமல்ல,
ஓடுவதும் தேடுவதும்!

எழுப்புதல்;
மத மாற்றமல்ல;
மனதை மாற்றுவது.

எழுப்புதல்;
கைப்பிரதி விநியோகிப்பதல்ல,
கைப்பிரதியாக இருப்பது!

எழுப்புதல் தீ
அழிப்பதல்ல,
வெளிச்சம் காட்டுவது!

எழுப்புதல்;
அரசியல் சொல்வதல்ல,
அரசியலை ஆள்வது!

எழுப்புதல்;
கிறிஸ்தவர்கள்
எம்.பி., எம்.எல்.ஏ.,
அமைச்சர்களாக இருப்பதல்ல,
எம்.பி., எம்.எல்.ஏ.,
அமைச்சர்கள்
கிறிஸ்தவர்களாக இருப்பது!

எழுப்புதல் பிரசங்கிகள்,
கத்திப் பேசுவதே
எழுப்புதல் என கருதுபவர்கள்!

உள்ளூர் ஊழிய ஐக்கியங்களுக்குப்
பஞ்சமில்லை!
‘பெலோஷிப்!’ அநேகம் உண்டு.
ஆனால்,
‘ஷிப்பில்’ எந்த ‘‘பெலோ’’வும்
ஐக்கியமாயிருப்பதில்லை!

டொரான்டோ,
கொரிய எழுப்புதலை பிரசங்கிக்கும்,
நான்கு ஊழியர்களை
பானையில் விட்டால்
நண்டுகளின் கதையாகிவிடுகிறது!

எழுப்புதல் எது?
சுய அறிமுகம் -
சைக்கிள் விநியோகம் -
கோழி பிரியாணி
குத்திக்காட்டும் பிரசங்கங்கள்

இவைகள் மட்டுமே
கூட்டங்களின் குறிக்கோள்கள்!
இரண்டாவது தெருவில் இருக்கும்
போட்டி சபையின் போதகரோடு
உள்ளுக்குள் வன்மம் கொண்டு
ஒப்பனையாக கரம் சேர்த்து ஜெபிக்கும்போது
இந்தியாவிற்கு எப்படி
எழுப்புதல் வரும்?

சாதி வெறி,
காணிக்கை வரி,
ஆத்தும் ஆளுமை,
வார்த்தைக்கும்
வாழ்க்கைக்கும் முரண்பாடுள்ள
அரசியல் அரங்குகளில்,
எழுப்புதல் -
தூக்கில் தொங்குகிறது!

நுனிக்கிளையில் அமர்ந்து
அடிக்கிளை வெட்டும்
ஆவிக்குரிய அறிவாளிகளால்
எழுந்து கட்ட முடியாமல்
வீழ்ந்து கிடக்கிறது
திருச்சபை எழுப்புதல்!

மார்ட்டின் லுத்தர்
சபைக்குள் நின்று கொண்டே
சபையைச் சுத்தம் செய்தார்!
செருப்புத் தொழிலாளி
வில்லியம் கேரி
செராம்பூர் பல்கலைக்கழகம் அமைத்தார்!
பவுல் முதல்
பால் யாங்கி சோ வரை

சிந்தித்தவர்கள் மட்டுமல்ல
செயல்பட்டவர்களும் கூட!
எழுப்புதலின் பிறப்பிடம் சிலுவை;
அந்த
சிலுவையில் அறையப்படாத எவரும்
சீர்திருத்தவாதி இல்லை!

எழுப்புதல் கூட்டங்களா?
எவ்வளவு காணிக்கை தருவீர்?
காணிக்கை,
பிரசங்கங்களின் சம்பளமல்ல;
கர்த்தரின் வார்த்தை தரும்
கௌரவம்!

உங்களில்
காணிக்கை வாங்காமல்
பிரசங்கம் செய்யும் ஒருவனை
காட்டுங்கள்!
கர்த்தருக்கு தரும் காணிக்கை
கவரில் வைத்த பணமல்ல,
கணக்கற்ற ஆத்துமாக்களே!

நம்மில்
தாவீதுகள், தானியேல்கள்,
எஸ்தர்கள், ரூத்துகள்
இன்னும் இருக்கிறார்கள்!

வெளிநாட்டு ஊழியங்கள்
வெள்ளை நிறக் கார்கள்
சூட் அணிந்த சுவிசேஷகர்களால்
எழுப்புதல் இல்லை. - அது
கடைநிலை ஊழியர்களின்
கரங்களில் உள்ளது!

எழுப்புதலுக்கான ஜெபக்குறிப்புகள்
மாற வேண்டும்!
இந்தியாவின் எழுப்புதலுக்கு ஜெபிக்கும்
ஏழை விசுவாசிகளின்
வாழ்வுத் தரம் உயர்ந்தாலே
அதுவே
இந்திய எழுப்புதலின்
முன் அடையாளம்.!

சீமோன் பேதுருவின்
முதல் பிரசங்கத்தில்
3000 பேர் இரட்சிக்கப்பட்டனர்.
இன்று
3000 பிரசங்கங்கள் மத்தியில்
முதலாவது இரட்சிக்கப்பட்டவர்களே;
கடைசியாக மீண்டும் திரும்ப வந்து
கைகளை உயர்த்துகின்றனர்!

கிறிஸ்தவர்களே -
திரும்பத் திரும்ப
இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருப்பதே
எழுப்புதலுக்கான
இன்றைய தாமதம்!
'ஸ்டெயின்ஸ்' குடும்பத்தை
எரித்த சாம்பலின் மிச்சம்
இன்னமும் இருக்கிறது!
அந்த சாம்பலில் இருந்து
பீனிக்ஸ் பறவையாக
எழுந்து பறப்பவன் யார்?

அழுக்குகளைத் துவைக்கும்

ஆற்றுப் பாறைகள் இங்கே;
அழுக்குத் துணிகள் எங்கே?

பத்துப்பேரில்
திரும்ப வந்த ஒருவன் இங்கே;
மற்ற ஒன்பது பேர் எங்கே?
சிலுவைகள் இங்கே;
சுமப்பவர்கள் எங்கே?
கேள்விகள் நீண்டு கொண்டே போகின்றன;
பதில்கள் கிடைக்கும் வரை
இந்தியாவிற்கும்
எழுப்புதலுக்கும்
எவ்வித சம்பந்தமுமில்லை!

## துதி ஆராதனை!

ஒலிபெருக்கிகளின்
அலறல்கள் இல்லாத
துதி ஆராதனைகளில்
தேவன் -
பிரியமாய் இருக்கிறார்!

துதி -
கர்த்தரின் -
பாதங்களின் கீழ் நின்று
பாடுவது! - அவரது
காதுகளின் அருகே நின்று
கத்துவதல்ல!

துதி -
வானத்தைக் கிழிப்பதல்ல;
வானத்தை வரவழைப்பது!

துதி -
அடிவயிற்றிலிருந்தல்ல,
அடிமனதிலிருந்து
ஆரம்பிப்பது!

துதி -
குரல் வளத்தைப் பொறுத்தல்ல,

மனவளத்தைப் பொறுத்தே
மகிமையடைவது!

துதி -
பாடத் தெரிந்தவர்கள்
பாடுவதல்ல,
பாடத் தெரியாதவர்களையும்
பங்கேற்க வைப்பது!

துதி -
பார்க்கிற அனுபவமல்ல,
பங்கேற்கிற அனுபவம்!

துதி -
மலட்டுக் கூச்சல் அல்ல,
மகிமையின் பாய்ச்சல்!

துதி -
சத்தமல்ல,
யுத்தம்!

துதி -
சிறைகளை உடைப்பது,
சீயோனுக்கு அழைப்பது!

துதி -
ஓநாய்களை விரட்டுவது,
பேய்களைத் துரத்துவது!

துதி -
கட்டுகளை உடைப்பது,
காணிக்கையாய் நம்மைப் படைப்பது!

துதி -
கைகளை உயர்த்துவது மட்டுமல்ல,
இதயங்களை உயர்த்துவது!

துதி –
அசைவதல்ல,
இசைவது!

துதி –
தனியுடைமை விடுதலை
மட்டுமல்ல, – அது
பொதுவுடைமையாய்
தலைமைத்துவத்திற்கு
வழி நடத்துவது!

துதி –
சபையின் ஓர்
ஆராதனை அங்கம், அது
ஊனமான பலியாக
இருக்கக் கூடாதென்பதே
உண்மையான வேதனை!

மைக்கை எடுத்தால் – பலர்
மைக்டைசன்களாக
மாறிவிடுகின்றனர்!

தாவீதின் சுரமண்டலம் – அன்று
சவுலுக்குள்ளிருந்த
பொல்லாத ஆவியை விரட்டியது!
இன்று –
சவுல்களின் சுரமண்டலங்கள்
தாவீதுகளையே விரட்டுகின்றன!

உண்மையான துதிபலியின்
சுகந்த வாசனையை
நுகர முடியாமல்
கரும்புகை நடுவே
கர்த்தரின் பரமண்டலம்!

இசைந்து வாசிப்பதே
இசைக்கருவிகள்,
இதயங்கள் இசைவதே
துதியின் தகுதிகள்!

பலரின் துதிகளில்
எரிகோவின் சுவர்கள்
உடைவதை விட,
காம்பவுண்டு சுவர்களே
அதிகம் உடைகின்றன!

இடிமுழக்க ''டிரம்ஸ்'' களுக்கு
பதிலடி கொடுக்கும் வகையாக
காதுகளில் பஞ்சுகளுடன்
கடைசி நாற்காலிகளில் சிலர்!

துதியின் இலக்கு -
சத்தத்தைப் பொறுத்ததல்ல, தேவ
சமூகத்தைப் பொறுத்ததே!

துதியின் ஆடைகள் -
பளபளப்பாய் இருப்பதை விட
பரிசுத்தமாய் இருப்பதே
பலிபீடத்தின் விதி!

'இ மைனர்'
'எஃப் மேஜர்'
வசமாகாத - பல
முரட்டுக் குரல்கள்
சேராபீன்களின்
சிறகுகளை முறிக்கின்றன!
பாமாலைகள் -
பல சமயங்களில்
குரங்குளின் கையில்
பூமாலைகள்!

தமிழை ஆங்கிலமாகப் பாடும்
ஆங்கிலேய வழி ''கொயர்''களால்
பிற சமயத்தினருக்கு,
ஆண்டவர் இயேசு கிறிஸ்து -
ஆங்கிலேயராகவே
அறிந்து கொள்ளப்படுகிறார்!
சூழ்நிலைக்குத் தகுந்தபடி
துதியின் சுதி ஒலிப்பதே
இறையியலின் விதி;
தமிழிசையே நல்ல
வழி!
எலியாவிற்கு மெல்லிய
சத்தமாய் வந்தவர்,
பவுலும் சீலாவும் பாடும்போது
நில நடுக்கமாய் வந்துநின்றார்!
எரிகோவில் எக்காள சத்தமாய் -
பெந்தகோஸ்தே நாளில்
பெருங்காற்றாய் பிரவேசித்தவர்,
மலைகளின் தனிமையில்
மனிதகுமாரனோடு
மனம் விட்டுப் பேசினார்!

துதி -
பாடல்கள் மட்டுமல்ல,
தேடல்கள்!

துதி -
வார்த்தைகளின் கோர்வையல்ல,
வாழ்க்கைகளின் வேர்வை!
வாழ்க்கையை பிரதிபலிக்காத
எந்தவொரு துதியும்
வற்றிப்போன நதி!

இசையின் -
அளவுகோள்களில் மட்டுமல்ல,
ஆண்டவரை மையப்படுத்தாத
எந்தவொரு துதியும்,
அபதுதி ஆராதனை!

பாராம்பரிய திருச்சபைகள் முதல்,
பரவிவரும்
பெந்தகோஸ்தே சபைகள்வரை
தமிழை ஆங்கிலமாகப் பாடினால்
இயேசு கிறிஸ்துவை இன்னொருமுறை
சிலுவையில் அறைவது போன்றது!
தமிழிசை வழிபாடுகளை
அடுத்த தலைமுறையினருக்கு
அறிமுகப்படுத்த வேண்டும்!
ஆங்கிலத்தை ஆங்கிலமாகவும்
தமிழை தமிழாகவும் பாடுவதே
தொந்தரவில்லாத துதி ஆராதனை!
சுத்தமான தமிழ்,
சுவிசேஷத்திற்கு எதிரானதல்ல!
தம் தம் தாய்மொழி
உணர்வோடும் உண்மையோடும்
ஒழுங்கான உச்சரிப்போடும்
ஆண்டவரைத் துதிப்பதே
அவருக்கேற்ற தூய்மையான
துதி ஆராதனை!

மாறாதவரை
வழிபடுவோம்,
மாற்றங்களுக்கு
வழி விடுவோம்.

●

## உப ''வேஷம்''!

பலர்
பட்டினியை தங்கள்
உபவாசம் என
அர்த்தப்படுத்துகின்றனர்!

சிலர் -

''டயட் கண்ட்ரோலு''க்காய்
உண்ணாமல் இருப்பதை
உபவாசம் என உரைக்கின்றனர்!

''உண்ணாமை'' மட்டுமே
உபவாசம் என வேதம்
ஒருபோதும் உபதேசித்ததில்லை!
(ஏசாயா 58;3-7)
உண்ணாமல் இருப்பது மட்டும்
உபவாசமல்ல,
உணவை பகிர்ந்து கொடுப்பதும்
ஒருவகை உபவாசம்!

கோழிக்கறி வாசனையுடனே
கூட்டத்தில உபவாசிக்கிறவர்கள்
மருந்தை நினைக்கும் போதே
குரங்கை நினைக்கும் வகை,

உபவாசத்தின்போது
உணவை நினைக்காமல் இருக்கும்
மக்கள் எத்தனை தொகை?

இப்பொழுதெல்லாம் -
அரசியல்வாதிகளின்
உண்ணா விரதங்களுக்கும்,
ஆவிக்குரிய கிறிஸ்தவர்களின்
உபவாசங்களுக்கும்
அதிக வித்தியாசமில்லை!

ஒருவார பயணத்திற்கு
ஒரே நேரத்தில் தண்ணீர் சேமிக்கும்
ஒட்டகத்தின் உபவாசம்
ஒருபோது அவசியமில்லை,
ஒட்டகப்பையும் இரைப்பையும்
ஒன்றாவதில்லை!

உபவாசங்கள் -
எத்தனை வகை இருந்தாலும்
இயேசுவும் ஏசாயாவும் உரைத்ததே
உபவாசத்தின்
உள்ளார்ந்த வெளிப்பாடுகள்!

தேசங்களுக்காக...
தேவைகளுக்காக...
தீர்மானங்களுக்காக...
தீவிரவாதங்களுக்கெதிராக...
திருச்சபை வளர்ச்சிக்காக...
தீராத வியாதிகளுக்காக...

அத்தனை உபவாசங்களும்
அவசியம் - அதை
கையாளும் முறையில் இருக்கிறது;
ஆவிக்குரிய இரகசியம்!

உபவாசம் -
பிரச்சினைகளிலிருந்து
தப்பித்துக் கொள்ள அல்ல,
பிரச்சினைகளுக்குள் நுழைந்து
தீர்வுகளைச் சொல்லுவது!

நாற்பது நாட்கள் உபவாசித்த பிறகும் -
இயேசு பிரச்சினைகளை
எதிர்கொண்டார்!

ஒருவேளை அவர் -
கல்லை அப்பமாக மாற்றியிருந்தால் -
பரமபிதாவின் அரசில் அவர்
பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கலாம்!

இயேசு -
மனிதகுமார அவதரிப்பின்
மறைபொருள் அறிந்தவர்!

உபவாசத்தின் வல்லமையை
மாம்சத்திற்கு உபயோகிக்காமல் -
சீர்திருத்த அற்புதங்களுக்கே அவர்,
சேமித்துச் செலவழித்தர்!
கல்லை அப்பமாய் ஆக்காமல்,
வார்த்தையை அப்பமாக்கி வழங்கியதால் -
ஆகாய தூதர்கள் இறங்கினர்.
அரிய உணவை வழங்கினர்!

உபவாசம் -
ஐம்புலன்களையும் அடக்கி எழும்
ஆவிக்குரிய மின்சக்தி!
முறையின்றி கையாண்டால் - அது
முனை மழுங்கிய கத்தி!

கூடி உபவாசித்தல்
கோடி நன்மை - அது
குறிக்கோளுடன் இருப்பதே
உபவாசத்தின் தன்மை!

இத்தகைய சாதிப் பிசாசுகளை
உபவாசத்தாலன்றி ஜெயிக்க முடியாது!
உண்மைதான்!
இப்போது சாதிப் பிசாசுகளும்
உபவாசத்துடன் உலாவுவதால் - நாம்
சாதாரணமாக உபவாசிக்க முடியாது!

எதிர்ப்புகளை உடைத்த
இயேசுவின் உபவாசத் தத்துவம்
'எஸ்கேபிசம்' அல்ல,
'என்கௌண்டரிசம்!'

முகமதியரின் நோன்புகளை
விசாரித்தால்,
முகத்தில் அறைவிழுகிறது!
எச்சில் கூட விழுங்காமல்
நோன்பிருப்பது அவர்களது
இறை நம்பிக்கை!

தண்ணீர் குடிக்காமல்,
'குளுகோஸ்' கலந்து அடிக்காமல்,
எத்தனை பேருக்கு
உபவாசிக்க முடிகிறது?

இடை இடையே
ஆப்பிள் ஜூஸ்,

ஆட்டுக்கால் சூப்புடன்
தொடரும் உபவாசம்,

பரிசேய முகவாடலுடன்
பாடலுடன் முடிகிறது!

ஒரு ஊழியரின் அட்வைஸ்
‘‘தண்ணீர் குடிக்காமல் உபவாசித்தால்
கிட்னி பெயிலியர் ஆகிவிடும்!’’
இன்னொரு ஊழியரின்
எதிர் கமெண்ட்,
‘‘தண்ணீர் குடித்தால்
உபவாசம் பெயிலியர் ஆகிவிடும்!’’
தண்ணீரைத் தவிர்த்து,
‘‘உபவாசிக்க முடியாதா?
தண்ணீர் குடிப்பதும்
தவிர்ப்பதும் -
அவரவர் விசுவாசத்தின்
அளவுகோல்!

‘‘புசியாமலும் குடியாமலும் இருந்தனர்’’
என்பது வேத வரி,
ஒன்றை எடுத்து மற்றதை மறைத்தல் -
உபவாசத்தில் அது,
ஒத்துக்கொள்ளப்பட்ட
ஊழல் சதி!

காஷ்மீர் பூகம்பத்தில்
நான்கு நாட்களுக்குப் பின்
நாற்பதுக்கும் மேற்பட்ட குழந்தைகள்
மீட்கப்பட்டனர்,
நான்கு நாட்கள்
தண்ணீர்கூட குடிக்காமல்
தரைக்கடியில் கிடந்த
தளிர்களைக் குறித்து யோசிப்போம்!

உடல் திடம் இல்லாத
குழந்தைகளுக்கு இருந்தது
மனோதிடம், ஆனால்
மனோதிடம் உள்ள கிறிஸ்தவருக்கு
ஏன் இல்லை உடல் திடம்?

சோர்வுடன் அல்ல,
சுறுசுறுப்பாய் இயங்குவதே
உபவாசம்,
அந்தரங்கத்தின் உபவாசம்,
வெளியரங்கத்தில் பிரகாசம்!
உபவாசம் கிறிஸ்தவத்தின்
சம்பிரதாயமோ
சடங்கோ அல்ல,

உபவாசத்தில்
பசிதாகம் இல்லாமல்
இருப்பவர்களைப் போலவே,
ஆவியில், நீதியில் -
பசிதாகம் உள்ளவர்களும்
பாக்கியவான்கள்!

இயேசுவின் உபவாசத்தால்
இறையரசு மலர்ந்தது.
தானியேலின் உபவாசத்தால்
தடைகள் உடைந்தன,
எஸ்தரின் உபவாசம்
பதவி உயர்வு தந்தது.
நினிவேயின் உபவாசம்
நீதியின் கோபத்தை வென்றது!

உபவாசம் -
தேசத்தின் ஆசீர்வாதங்களுக்கான
திறவுகோல்!

ஐஸ்மோரில் மிதக்கும்
லெந்துகால ஒப்பனை உபவாசங்கள்;
ஒடுக்குவதற்காகவே நடத்தப்படும்
ஒடுக்கக் கூட்டங்கள்,
மாயக்காரர்களின் உபவாசத்தினை
மறுதலிப்போம்!

உண்மையான உபவாசம்
விலங்குகளை உடைப்பது.
வெற்றி இலக்கை அடைவது!
தீக்குச்சிகளாய் நம்மை கிழிப்பது.
திறப்பின் வாசல்களில்
தீபங்களாய் திரும்பவும்
நம்மை உருமாற்றுவது!

உபவேஷங்களை
உடனடியாக உதறுவோம்,
உலகத்தை ஜெயிக்கும்
உறுதியான நிலைப்பாடுகளுடன்
உபவாசங்களைத் தொடருவோம்!

# வேரில்லா கிறிஸ்மஸ் மரங்கள்!

''கொக்கு பறபற''வில்
குறியான இதயங்கள்
மரியாளின் துதிப்பாடலை
மதிப்பதே இல்லை!
மரியாளுக்கும் அன்று
கற்பு குறித்த
கலாச்சார சர்ச்சை!

கலிலேயா முழுதும்
கார்வெடி விபத்துகள்!

தொடர் மழையால்
தேங்கிய நீரால் -
மாட்டுத் தொழுவத்தில்
மலேரியா கொசுக்கள்;
யானைக்கால் நோயுடன்
யாதவர் கூட்டம்!

மழை நிவாரணத்தொகை
மனித நெரிசலில்
மரித்துப் போன
மந்தைகளும் மேய்ப்பர்களும்!

ஒட்டகங்களை விற்றுவிட்டு
'ஓப்பல்' கார்கள் வாங்கிய
சாமர்த்திய சாஸ்திரிகள்!

உணவுக்கு எண்ணெய் திட்டம்போல்
பாவத்திற்கு ரட்சிப்பு என்ற
பரலோக பண்டமாற்று திட்டத்திலும்
ஓநாய்களின் ஊழல்!

'பர்கர், பீட்சாக்'களின்
படையெடுப்பால்
அதிரசங்களும் அச்சுமுறுக்குகளும்
அநாகரிக உணவுகளாகிவிட்டன!
யூதேயா முதல்
காஷ்மீர் வரை...
மனித ரத்தம் - பூமிக்கு
மலிவுவிலை மதுவாக
மாறிப்போனது!
'லகலகலகலக' ஏரோதுகளின்
மண்டபங்களில் ஒலிக்கும்
''ராரா'' பாடல்களால்
ஆண்டவர் இயேசுவுக்கான,
ஆராரோ பாடல்கள்
'அவுட் அப் பேஷன்!'

நீதிபதியையே
நீ யார்? என்று கேட்ட
சதாம் உசேனின்
கேள்வியைப் போல்
கிறிஸ்து பிறப்பும்
''கிரிட்டிக்கலா''கவே இருக்கிறது!

வாசல்களில் தொங்கும்
வால் நட்சத்திரங்கள்

இதயங்களில் பிரகாசிப்பதில்லை;
வேர்கள் இல்லாத
கிறிஸ்மஸ் மரங்களைப் போல்
சிலுவைகளுக்கும் இப்போது
‘சீசன்’ சீரியல் செட்!

அன்று -
ஜான்சன் பேபி பவுடர் கூட
இல்லாமல் இருந்த
இயேசு பாலகனுக்கு -
இன்று
ஏகப்பட்ட இறையியல்
பவுடர், பீடிங் பாட்டில்கள்!

சானியா மிர்சாக்களின்
ஆடைகளைக் குறித்த
ஆவேச ஆராய்ச்சிகளுக்கு மத்தியில்
இயேசுவின் கந்தலுக்கான
இறை அர்த்தம்
இன்றுவரை எடுபடவில்லை!
போனஸ் கவர்களின்
எடைக்குத் தகுந்தபடி
பொருளாதார நுகத்தடிகளை சுமந்தபடி
போத்தீஸிலிருந்தே
கிறிஸ்மஸ் புறப்படுகிறது!

இறப்புகளைக் கொண்டாடும்
பண்டிகைகள் மத்தியில் -
பிறப்பைக் கொண்டாடும்
பண்டிகை குறித்துப் பெருமிதப்படலாம்.
ஆயினும் அதன்
உண்மையை சற்று
உரசி உணரலாம்!

கிறிஸ்து பிறப்பு:
மாளிகைகளுக்குப் பூகம்பம்
மண்குடிசைகளுக்கு ஆன்மீகம்!
ஆயினும்
ஏழைகளுக்கு உதவி செய்யும்
இறை மனப்பான்மை,
பண்டிகைகளுக்கு மட்டுமே
ஏன் பரந்தமனப்பான்மையாக
வெளிப்படுகிறது?

ஆடைகளை
அணிவதும் வழங்குவதும் மட்டுமே
கிறிஸ்து பிறப்பு என்பது
கேள்விக்குறி!

லெந்து காலங்களில் கட்டாய சோகமும்
கிறிஸ்மஸ் காலங்களில் கட்டாய மகிழ்ச்சியும்
மாறிமாறி வெளிப்படுத்துவது
மன்னிக்க முடியாத நடிப்பு!

பூமிக்கு இயேசுவை
பரிசுப் பொருளாய்
வழங்கியது வானம், அதை
பிரித்துப் பார்ப்பதில்
நடந்த போட்டிதான்
பெரும் சோகம்!

கடவுளை குழந்தையாகப் பார்ப்பது
காலத்தின் மகிழ்ச்சி, ஆனால்
அவரை குழந்தையாகவே எண்ணுவது
அரசியல் சூழ்ச்சி!

இயேசு பிறப்பை
ஆன் லைனில்,
வீடுகளிலேயே பார்த்துக் கொள்கிறவர்கள்

திருச்சபையின் அரசியலை
தெளிவாகத் தெரிந்திருப்பவர்கள்!

நடிகர்கள் கட்சி துவங்குவது போல்
இயேசுவின் அவதரிப்பும்
அரசியல் உத்தியாக ஆகியிருந்தால்,
கலிலேயாவிலும் பிரம்மாண்டமான
கட்சி மாநாடு நடந்திருக்கும்!

ஏழைகளோடு தம்மை
அடையாளப்படுத்திக் கொண்ட
கிறிஸ்து பிறப்பின்
அர்த்தத்தை அறியாதவர்கள் - அதை
பணக்காரத்துவப் பண்டிகையாக்கி விட்டனர்!

வர்க்கபேத அடிப்படையில் நடந்த இந்த
வரலாற்றுப் பிளவு
திருச்சபையின் விழிகளை
ஏன் இன்னும் திறக்கவில்லை!

ஞானிகளுக்கு நட்சத்திரம்,
மேய்ப்பர்களுக்கு வாய்மொழி,
கர்த்தரின் இந்த
'கம்யூனிகேஷன்' நுட்பம்
இப்போதைய நற்செய்தியாக
ஏன் இருப்பதில்லை?

கடும் குளிர் இரவிலும்
காணிக்கை வசூல்!
பரிசுகள் தரவேண்டிய
கிறிஸ்மஸ் தாத்தாக்கள்,
பாத்திரங்கள் ஏந்த வேண்டிய
பரிதாபம்!

இந்த கிறிஸ்மஸ்
விழா காலத்தில்
இரண்டு விதி செய்வோம்,
ஒன்று -
காணிக்கை எடுக்காத
கேரல் ரவுண்டை
கட்டாயமாக்க வேண்டும்!
இரண்டு -
கிறிஸ்தவரல்லாத
பிற சமயத்தவருக்கே
கிறிஸ்து பிறப்பின் நற்செய்தியை
'கேரல் ரவுண்ட்'
எடுத்துச் செல்ல வேண்டும்!

இல்லையெனில் -
இந்த பண்டிகை கால
சம்பிரதாய பூகம்பங்கள்
எத்தனை 'ரிக்டர்' ஸ்கேலாக இருந்தாலும்

அதிகமான விரிசல்கள்
ஆலயங்களுக்குத்தான்!

எப்போதும் போல்
என்னால் கிறிஸ்து பிறப்பை
கொண்டாட முடியவில்லை!
ஏனெனில் -
கிறிஸ்து பிறப்பின் அர்த்தம்
உண்மையான
கிறிஸ்து பிறப்பின் அர்த்தமாக
உணரப்படவில்லை!

'ஷூ பாலீஷ்' முதல்
'ஒர்க்ஷாப்' வரை
சந்திக்கும் சிறுவர்கள்...

இயேசுவின் பிம்பங்களாக
எனக்குத் தெரிகின்றனர்!

இதோ!
வேப்பமரக் கிளையில்
அழுக்குப் புடவை தொட்டிலில்
சாலைப் பணியாளர்கள் மத்தியில்
சிசுபாலன் இயேசு
செம்பட்டை தலைமுடியுடன்
சிணுங்கி அழுகிறார்!

உங்களிடம் ஒருகேள்வி
கேட்கிறேன்;
கிறிஸ்மஸ் என்பது
பலகாரங்களை சுட்டு
பரிமாறிக் கொள்ளும்
வெறும் பண்டிகை மகிழ்ச்சியா?
இல்லை -
பாவங்களை போக்கவும்
பார்வோன்களை நீக்கவும்
பரலோகம் மீட்கவும் -
மனிதனின் ரட்சிப்புக்கு
மனிதனாகவே தம் குமாரனை அனுப்பிய
பரமபிதா அறிவிக்கும்
பாமர மக்களுக்கான நற்செய்தியா?

●

# வாக்குத்தத்தம்!

வாக்கைத் ‘தத்தம்’ செய்து
வழங்குவதே வாக்குத்தத்தம்;
அதன் மூலம்
வானத்தின் சித்தத்தை நிறைவேற்றுவதே
வாக்குத்தத்தின் நோக்கம்!

புதிய வருட வாக்குத்தத்தத்திற்காகப்
போராடி ஜெபிப்பவர்கள்.
தங்களுக்குக் கொடுக்கப்பட்ட
பழைய வருடத்தின்
வாக்குத்தத்தம் நிறைவேறியதா எனப்
பரிசீலிப்பதில்லை!

வசனத்தை வாக்குத் தத்தமாய் பெற
முயலுகிறோம் - ஆனால் அந்த
வசனம் வாழ்வில் நிறைவேற
எத்தனை பேர் உழைக்கிறோம்?

வாக்குத்தத்தத்தின் நிறைவேறல்
அதை வழங்குபவரால் மட்டுமல்ல;
வாங்கிக் கொள்கிறவர்களின்
வாழ்வியல் செயல்பாடுகளை
பொறுத்தே அமைகிறது!

கடவுளால் கொடுக்கப்பட்ட
அநேக வாக்குத்தத்தங்கள்
மனிதர்களால் உடைக்கப்பட்டவை!

வாக்குத்தத்தங்களை
வாங்குவதைவிட - அதன்
நிறைவேறுதலுக்கே
நீண்டதொரு போராட்டம்!

புதிய வருடத்தில்
ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களுக்காக
ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்;
போராட்டமான வசனங்களை
ஏன் புறக்கணிக்கிறோம்?

கிறிஸ்தவ வாழ்க்கை
ஏ.சி.யில் இருந்தல்ல;
யோபு அமர்ந்த
சாம்பல் தூசியிலிருந்தே
துவங்குகிறது; துலங்குகிறது!

பழைய வருட நற்செய்தி
புதிய வருட நற்செய்தி
இரண்டுக்கும் இடையே
இன்னும் அதிகமாய் தேவைப்படுகிறது
சதமவிகித நற்செய்தி!

புதுவருட ஆராதனைகளில்
பலருக்கு வாக்குத்தத்தங்கள்
கிளி கொத்தி எடுக்கும்
சோதிட சீட்டுகள்!

பக்கெட்டுகளிலும்
'வாலண்ட்ரியஸ்' களாலும்
பரிமாறப்படுகின்ற

வாக்குத்தத்தங்கள்
பலபேருக்குப் பின்னர்
பைபிள்களின் பக்க அடையாளங்களுக்காகப்
பயன்படுத்தப்படுகின்றன.

முதல் வாக்குத்தத்தம்
திருப்தியளிக்காததால்
திரும்பவும் ஒரு வாக்குத்தத்த வசனமெடுத்து
திருப்திப்பட்டுக் கொண்டார் ஒரு
திருச்சபையின் விசுவாசி!

தங்களுக்கு வந்த வாக்குத்தத்தத்தைவிட
அடுத்தவர்க்கு வந்த வாக்குத்தத்தங்களை
வாசிப்பதில் ஆர்வம் காட்டும்
ஆன்மீகவாதிகள் பலர்!

வாக்குத்தத்தம்
புதுவருடத்திற்கு மட்டும் என்று
அதை ஒதுக்கியவர்கள்
ஆன்மீக அறிவிலிகள்!
வருடத்தின் முதல் வாக்குத்தத்தம்
பீடத்திலிருந்து வருகிறது. ஆனால்
வருடம் முழுக்க வாக்குத்தத்தம்
வேதத்திலிருந்து வருகிறது!

கையைவிட்டு துழாவ
குலுக்கல் முறையில் எடுப்பது
வாக்குத்தத்தமல்ல!
இதயத்தைத் துழாவி

இறையியல் வழியில் எடுப்பதே
வல்லமையான வாக்குத்தத்தம்!

புதிய வருட வாக்குத்தத்தத்தை
சந்தேகிப்பவர்கள்,
தங்களுக்குத் தரப்பட்ட
பழைய வருட வாக்குத்தத்தங்களை
சொல்லச் சொன்னால்
ஊமையாகி விடுவதுதான் உண்மை!

ஆசீர்வாதமான வசனங்களை உரைப்பது
ஆத்துமாக்களை உற்சாகப்படுத்தும்
ஒருவகை ஊழிய உத்திதான்.
ஆனால்,
கானா ஊர் கல்யாண அனுபவம் மட்டுமல்ல
கல்வாரியின் அனுபவமும்
வாக்குத்தத்தத்தில் ஒன்று என்பதை
ஏற்க மறுக்கிறது நம்
இறையியல் புத்திதான்!

வாக்குத்தத்தம் - வெறும்
சீயோனின் வழி மட்டுமல்ல;
சிலுவையின் வலியும் தான் என்பதை
சிந்திப்பது நல்லது!
வாக்குத்தத்தம்
தண்ணீரை திராட்சை ரசமாய்
மாற்றுவது மட்டுமல்ல;
வேர்வையை ரத்தமாய்
மாற்றுவதும் கூட!

வருடங்கள் மாறுகின்றன;
வாழ்வியல் முறைமைகள்தான்
மாறவில்லை!
புதிய வருடத்தில்

நிறைவேறும் என
அநேகத் தீர்க்கதரிசனங்கள்,
பழையவருட நிறைவேறாத தீர்க்கதரிசனங்களை
பட்டியல் போட்டுப் பார்ப்பதில்லை.
ஏனோ ஆராதனையில் அதற்கு
நேரமில்லை!
புதிய வருடத்தில் நுழைவதற்காகக் கதறுகிறவர்கள்;
பழைய வருடத்திலிருந்து
வெளியேறுவதற்காகப் பதறுகிறவர்கள்!
வாக்குத்தத்தம்;
வருடத் துவக்கத்தில் மட்டுமல்ல;
வருட இறுதியிலும் முக்கியமானது!

பிறசமயத்தினர் வாக்குத்தத்தத்தின்
உடன் பங்காளிகள் என
வசனம் கூறுகிறது. (எபே 3;3)
பல சபைகளில்,
பிறசமயத்தினருக்கு எதிராக
வாக்குத்தத்த வசனங்களை
கையாளுவது கவலைக்குரியது!

ஆதாம் முதல்
அடித்தள விசுவாசிவரை
ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தம்
ஆயிரம் ஆயிரம்!
அதை வாங்கிக் கொண்டு
உள் அரசியலால்
உயிருடன் புதைத்து வருகிறது
ஊழிய மனித இனம்!

வாக்குத்தத்தத்தை
ஒற்றைத் தாலந்தைப்போல்
புத்தகங்களுக்குள்

புதைத்து வைப்பவர்கள்
மயிலிறகு குட்டிபோடும்
என நினைக்கும்,
ஆவிக்குரிய சோம்பேறிகள்
வாக்குத்தத்தத்தை அவமதிக்கும்
வடிகட்டிய பரிசேயர்கள்!

வாக்குத்தத்த தேசத்திற்கு
வாஞ்சையோடு புறப்பட்டவர்கள்,
வாக்குத்தத்தத்தை மறந்ததால்
வனாந்திரத்திலேயே புதையுண்டு போனது
வருத்தமான வரலாறு!

விசுவாசத்தினாலே பெறப்பட்ட
அநேக வாக்குத்தத்தங்கள்;
அவிசுவாசத்தினால் அழிந்து போயின!
வாக்குத்தத்தத்தை வழங்கியவர் அதை
உறுதிப்படுத்தியிருக்கிறார் - அதை
வாங்கியவர்கள்
உறுதியில்லாமல் போனது கண்டு
மனம் வருந்தியிருக்கிறார்!

வாக்குத்தத்தங்கள்
வாழ்வியல் தடுமாற்றங்களால்
நிறைவேறாமல் போவதுண்டு!
ஆயினும் ஆண்டவர் அதை
மனமிரங்கி மறுபடியும் புதுப்பிப்பதுண்டு!
வாக்குத்தத்தத்திற்காக
காத்திருப்பது மட்டுமல்ல;
அது கிடைத்தவுடன்
களப்பணியாற்ற வேண்டும் என்பதே
வாக்குத்தத்ததின் நிறைவேறுதலுக்கான
வலுவான சூத்திரம்!

வாக்குத்தத்தங்களை வாசல்களில்
வரவேற்பு அறைகளில்
வசனங்களாக, காலண்டர்களாக
ஆணிகளில் தொங்கவிடுகிறவர்களுக்கு
அது எச்சரிக்கை இறைசெய்தி!

வாக்குத்தத்தங்கள்
உயிர்த்தெழுதலுக்காக
உங்களிடம் வழங்கப்பட்டவை!
உங்களோடு இணைந்து
உயிர்த்தெழுந்து அவைகள்
ஊழியம் செய்யவில்லை எனில்
அவை,
வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள்!
வீசி எறியப்பட்ட விலைபோகாத
வெள்ளிச் சில்லறைகள்!

●

## வேத விசாரணை!

பரிசுத்த வேதாகமத்தின்
பயன்பாடு குறித்து
பூமியெங்கும் தன்
சுற்றுப் பயணத்தை முடித்து
கர்த்தரின் சமூகம் வந்து நின்றான்
காபிரியேல் தூதன்!

கர்த்தரின் குரல்
கம்பீரமாக வினவியது.

''தூதனே!
பயணத்தின் விபரம் என்ன?
பதில் கூறு!

''சர்வ வல்லமையுள்ள
ஆண்டவரே!
மகிழ்ச்சியான செய்திதான்,
பூமியில் வேதாகமத்தின்
விற்பனை நிலவரம்
விண்ணை முட்டுகிறது!
'பாக்கெட்' பைபிள் முதல்
'பாரின்' பைபிள் வரை,
கடைகளிலும்
கன்வென்ஷன் கூட்டங்களிலும்

ஆர்வமுடன் மக்கள்
அள்ளிச் செல்கின்றனர்!

ஆங்கிலம், தமிழ், மலையாளம்
தெலுங்கு, ஹிந்தி என
அனைத்து மொழி வேதாகமங்களையும்
கார்டினல் முதல்
கடைநிலை விசுவாசிகள் வரை
கைகளில் சுமந்து
ஆலயம் செல்வது அழகுக் காட்சி!

மட்டுமல்ல -
செல்போன்கள்
'ஐ பாட்' களிலும் இப்போது
'சாப்ட்வேர்' பைபிள் உள்ளது!''

ஆச்சரியத்துடன் தூதன் விளக்க,
கவனமுடன் கர்த்தர்
கேட்டுக் கொண்டிருந்தார்!

''அதுமட்டுமல்ல ஆண்டவரே!
வாகனங்கள், உறங்கும்போது
தலையணைக்கடியில்,
வீட்டு வரவேற்பு அறைகளில்,
ஆலய வாசல்களின்
கண்ணாடிக் கூண்டுகளில்,
வேதாகமத்தை
விசுவாசமாக வைத்திருக்கின்றனர்!

இ மெயிலில், எஸ்.எம்.எஸ்.
வாட்ஸ் ஆப் போன்ற
விஞ்ஞான வடிவங்களிலும்
வேத வசனங்கள்,
இரவும் பகலும்
பரிமாறிக் கொள்ளப்படுகின்றன!

சாலைச் சுவர்களிலும்
மலைகளின் பாறைகளிலும்
ஆட்டோக்களுக்குப் பின்னாலும் கூட
ஆசீர்வாத வசனங்கள்!
‘அப்போ கிரிபா’வுக்குக் கூட
அமோக ஆதரவு ஆண்டவரே!

மேலும் பலர்,
முழங்காலில் நின்று
முழு வேதாகமத்தைப் படிக்கின்றனர்!
பலர் காலை, மாலை வேளைகளில்,
கருத்தாக வசனங்களை வாசித்து,
அதை முத்தமிட்டு மூடிவைக்கின்றனர்!

வேதாகம கல்லூரிகளில்,
அறிவியல், சரித்திரக் கோட்பாடுகள் மூலம்
இரவும் பகலும்
அதைக் குறித்த ஆய்வு நடக்கிறது!

அறுவடைப் பண்டிகைகளில்
ஆசீர்வாதத் தட்டில் உள்ள
வேதாகமப் பொருட்களுக்கு
அதிக கிராக்கி!

மொத்தத்தில் பூமியில்
வேதாகமத்தின் விற்பனை நிலவரம்
மிகவும் உயர்ந்திருக்கிறது ஆண்டவரே!’’

மகிழ்ச்சியுடன் விவரித்த
தேவதூதன், கர்த்தரின்
‘ரியாக்ஷனுக்காக’ காத்திருந்தான்!

அமைதியாக ஆண்டவர்
ஆரம்பித்தார்!

‘‘தூதனே!
வேதாகமத்தின்
விற்பனை உயர்வு குறித்து நீ
மகிழ்ச்சியடைகிறாய்!
ஆனால் மக்கள் அதன்
கற்பனைகளை கைகொள்ளுவதைக் குறித்து
கவலை கொள்ளுகிறேன்!

முழங்காலின் நின்று
முழுவேதாகமத்தையும் வாசிப்பது
முக்கியமல்ல,
அக்காலத்தில்
பரிசேயர், சதுசேயர்கூட
அதை செய்தார்களே!
வாசிக்கிறவன் அதன்படி
வாழ வேண்டும்!

வேதாகம கல்லூரிகளில்
வேதாகமத்தின் நிலை
வேதனை அளிக்கிறது!
ஆராய்ச்சி எனும் பெயரில்,
பலவித ‘இச’ங்களையும்
சாதிகளையும், அரசியலையும்
வேதாகமத்தின் இடைச்செருகலாக
திணித்து விட்டனர்!

வேதாகமத்தைக் குறித்த பல
நவீன சகரியாக்களின்
அர்த்தமற்ற சந்தேகக் கேள்விகளால்
விசுவாசம் நாண்டு கொண்டு விட்டது!

வாகனங்களின்
பாதுகாப்புக்கு மட்டுமல்ல,
வாழ்க்கையின் பாதுகாப்புக்கே
வேதாகமம்!

கைகளில் சுமந்து செல்கிற பலர்,
இதயத்தில் சுமந்து செல்ல ஏனோ
மறந்து விட்டனர்!

ஆயர்களும் பேராயர்களும்
நீதிமன்ற வழக்குகளுக்குக் கூட
அதை சுமந்து செல்கின்றனரே?

வேதாகமத்திற்கு சிலர் இடுகின்ற
முத்தங்கள் பல சமயங்களில்
யூதாசின் முத்தங்களாக மாறிவிடுகின்றன!

வியாபாரிகள் பலர்,
வேதாகமத்திற்கு 'ரெக்சின்' ஆடைகட்டி
அழகு பார்க்கின்றனர்,
அதன் அர்த்தங்கள்
நிர்வாணமாக நிற்கின்றன!

பாதைக்கு வெளிச்சமாக,
கால்களுக்குத் தீபமாக இருக்க வேண்டிய
வேத வசனங்கள்,
அணைந்து போன திரிகளாக
அழுது கொண்டிருக்கின்றன!

வசனங்களை தங்களுக்குத் தக்கதாய்
வளைத்துக் கொண்ட அட்டூழியக்காரர்களின்
மாய்மால பிரசங்கங்களால்,
அதை,
மொழிபெயர்த்தவர்களின்
ஆன்மாக்கள்
மூச்சுத் திணருகின்றன!

'அருளாகக் கொடுக்கப்பட்ட
என்னுடைய வேதாகமம்
பூமியின் மக்களுக்கு
பொருளாக மாறிவிட்டது!

சிலுவையின் கரங்களைப் போல்
விரித்து வைக்கப்பட்ட
என்னுடைய வேதாகமத்தை
‘ஜிப்’ வைத்து மூடிவிட்டனர்!

வேதம் விசுவாசியை
சுமக்கிறதா?
விசுவாசி வேதத்தை
சுமக்கிறானா? என்பது
முக்கியமல்ல!

அதை வாசித்து வாழுகிறவனின்
பாதையின் தேர்வு,
பயணத்தின் நோக்கம்,
எல்லையின் இலக்கு,
இவற்றால் மட்டுமே
வேதாகமம் உயிருடன் உலாவுகிறது!

கர்த்தரின் இந்தக் கருத்தால்
தலைகுனிந்து
மறுமொழி கூறாமல்
தேவதூதன் மௌனித்து
மறைந்து போனான்.

●

# இயேசு எந்த சாதி...?

பெத்லேகேம் மாட்டுத் தொழுவம்,
கூச்சல், குழப்பத்தின் நடுவில்
முன்னணையில்
இயேசு பாலகன் -

இயேசு கிறிஸ்து
எந்த சாதியென்று...

கிறிஸ்தவ தலீத்துகள்,
கிறிஸ்தவ நாடார்கள்,
கிறிஸ்தவ வெள்ளாளர்கள்,
கிறிஸ்தவ வன்னியர்கள்,
கிறிஸ்தவ உடையார்கள்,
கிறிஸ்தவ தேவர்மார்கள்,
கிறிஸ்தவ செட்டியார்கள்,
கிறிஸ்தவ முதலியார்கள்,

சட்டையைப் பிடித்தபடி
சண்டையிட்டுக் கொண்டிருக்க;
எந்தச் சாதிச் சான்றிதழும்
இல்லாத
கலிலேய கலப்பு ரத்தத்தில் பிறந்த
இயேசு பாலகன்
கதறி அழத்துவங்கினார்,

தன்மீது திணிக்கப்படும்
சாதி அடையாளம் கண்டு!

கல்வாரியின்
கண்ணீர் சிலுவைக் காட்சி,

மரித்த இயேசுவை
மடியில் கிடத்தி அழும்
மரியாள்!

இயேசு கிறிஸ்துவை
எந்தக் கல்லறையில்
அடக்கம் செய்வதென்று....

கத்தோலிக்கத் திருச்சபை,
லுத்தரன் திருச்சபை,
பெந்தகோஸ்தே திருச்சபை
அட்வென்ட் திருச்சபை
செவன்த் டே திருச்சபை
மற்றும்
சுனாமி போல் எழும்பிய
சுயாதீன திருச்சபைகள்,
கைகளில் ‘மைக்’ குகளுடன்
களச் சண்டையில் இறங்க...

இவர்களின் போலித்தனமாக
‘எக்யூமெனிக்கல்’ ஒற்றுமையை
காண விரும்பாமல்,
மரித்து உயிர்த்தெழுந்த இயேசு,
சபைப் பாகுபாடுகளைத் துறந்து,
சானதானம் களைந்து
சமுதாயம் நோக்கி விரைந்தார்,
சரியான ஊழியம் செய்ய!
சாதி கிறிஸ்து அல்ல;
சாதிக்கும் கிறிஸ்துவே
உங்களுக்கு அடையாளம்!

# பிதா பேசுகிறேன்...!

''தந்தையே! எனது உயிரை
உமது கரத்தில் ஒப்படைக்கிறேன்!''

உச்சத்தில் ஒலித்த
உனது குரல் கேட்டேன்,
என் பிரிய மகனே;
பெரிய துக்கத்துடன் உன்
பிதா பேசுகிறேன்;

அன்று–
யோர்தானில் வைத்து
'இவர் என் பிரியகுமாரன்',
என்றேன்;
இன்று–
கல்வாரியில் உன் ரத்தம்
யோர்தானாக ஓட
கண்கலங்கி நின்றேன்!

நீ–
கேள்விக்குறிகளால்
வெல்ல முடியாத
ஆச்சரியக்குறி!
உப்பினால் சாரமேற்றப்பட்ட
உன்னத பலி!

மரியாளின் கருவறைக்குள் உன்னை
மனித குமாரனாய் அனுப்பிய
இறை திட்டம் சொல்லவா?

படைப்பில் பாவமில்லை;
படைக்கப்பட்டதில் சாபமில்லை!

பழைய ஏற்பாட்டில்-
நான் நியமித்த-
பலியின் கோட்பாடு
பரிதாப கேலியாய் போனது;
பலிகளின் மாம்சம்
பக்கெட் பிரியாணி ஆனது!
ஆடுகளின் ரத்தமும்
மாடுகளின் ரத்தமும்-

எந்த
மனித மீறுதல்களையும்
இறுதிவரை
சுத்திகரிக்கவில்லை!

எனவே நான்
சொந்த ரத்தம் சிந்த ஒரு
சுவிசேஷ திட்டம் தீட்டினேன்;
சிலுவை என்ற சோதனைக் குழாயில்
சொந்த மகனே; உன்னைச்
சொருகினேன்!

✦

என்னை மகனே! இயேசுவே!
நீ என்
நிழல் அல்ல; நிஜம்!
நீ நரபலி அல்ல;
பரமண்டலங்களில் இருந்து

இறங்கி வந்த
பாவ நிவாரண பலி!

உன்னால்-
கழுமரமாகிய சிலுவை
கொழு மரமாகியது;
கள்ளிச் செடிகள் மண்டிய
கொல்கதா மலை
கானான் தேசமானது!

சிலுவை; வீணையானது- நீ
உதிர்த்த ஏழு திருமொழிகளும்,
ஏழு ராகங்களானது!

✦

பசிகள் கூடி
பதம் பார்த்த
ருசி நீ!
இருளின் நாவால்
ஏற்றப்பட்ட ஒளி நீ!

என்-
தத்துவத்தின்
தலைமகன் நீ!

உன்னை-
பொத்தல்கள் ஆக்கினார்கள்; நீ
புல்லாங்குழல் ஆனாய்!
சிப்பியின் முகத்தில்
எச்சிலைத் துப்பினார்கள்; நீ
சிரித்துக் கொண்டே
முத்தை துப்பினாய்!

உன்னை-
ரத்தச் சலவை செய்தார்கள்; நீ
அவர்களின்
சித்த அழுக்கைப் போக்கினாய்!

பாவத்தைக் கழித்தல் குறியாக்கி-
மீட்பை கூட்டல் குறியாக்கி-
இரக்கத்தை பெருக்கல் குறியாக்கி-
இறைவாழ்வை வகுத்தல் குறியாக்கிய-
விடுதலைக் கணக்கின்
விடை நீ!

✦

என் இறை மகனே!
கொல்கதாவில் நீ
கொல்லப்பட்டதற்காக
என் மீது நீ
கோபம் கொள்ளலாம்!

கெத்சமனே தோட்டத்தில்-
உன் பாத்திரத்தை நீக்க நீ
பாடுபட்டாய்;

பாத்திரத்தை நீக்குவதல்ல;
பாத்திரத்தில்
பானம் பண்ணி நிறைவேற்றுவதே
என்
பரிசுத்த திட்டம்!

✦

வேர் இல்லா சிலுவைக்கு நீ
வேரானாய்;
பூ இல்லா சிலுவைக்கு நீ
பூவானாய்;

கனி இல்லா சிலுவைக்கு நீ
கனியானாய்;
அதனால்தான் நீ
தனியானாய்...!

அகோரச் சிலுவையில் உன்
ஆறு மொழிகளும்
மேகங்களாக பொழிந்தன;
உன் ஏழாவது
இறை ஒப்படைப்பின் மொழிதான்
வானமாக இருந்தது;

அதனால்தான்;
பாவம் இறந்தது;
பரிசுத்த பூமி பிறந்தது!

கொல்கொதா என்ற
ஒற்றை மார்பகத்தில்-
சிலுவைக் காம்பில் சுரந்த
சிவப்பு நிற தாய்ப்பால் நீ;
சவலைப் பிள்ளையாக கிடந்த
சமுதாயத்தின் வாயில் புகட்டிய
சங்குப் பால் நீ!

✦

வேறு எவர் கரத்திலும்
உன் ஆவியை
ஒப்படைக்காமல்-
என் கரத்தில் ஒப்படைத்ததால்,
மீட்பின் பொருளானாய்;
உயிர்த்தெழுதலில் உருவானாய்!
நீ மரணமடையவில்லை;
மூழ்கிக்கிடந்த மானுடத்தை மீட்க-

முத்துக் குளித்தாய்;
மூன்று நாட்கள்
மூச்சை அடக்கி
புதையல் எடுத்தாய்!

✦

என் மகனே! இயேசுவே!
மீட்பின் மெய்பொருளுக்காக
உனக்காக நான் கட்டமைத்த
உன்னத கல்வாரி எங்கே?
சிலுவையிலிருந்து சற்று
குனிந்து பார் இங்கே!

கல்வாரி முழுக்க
''கன்வென்ஷன்'' கூட்டங்கள்;
பலி பீடத்தைச் சுற்றிலும்
வணிக வளாகங்கள்!
கல்வாரியின் காட்சிகளை விட
திருச்சபையின்
தேர்தல் காட்சிகள்,
திகைப்பூட்டுகின்றன!
கல்வாரியை எண்ணி அல்ல;
கால்வாரிகளை குறித்தே
கவலை கொள்கிறேன்.

சிலுவையை விட
''செல்போன்''
ஆராதனைக்குரியதாகி விட்டது!
பிதாவாகிய நானே உன்னை
''பேஸ்புக்கில்'' தான்
பார்க்க முடிகிறது!

உன் இரண்டாம் வருகையை கூட
இவர்கள்-
''இன்டர் நெட்டில்'' தான்
எதிர்பார்க்கிறார்கள்!

விஞ்ஞானம்-
மெய் ஞானத்தை-
சிலுவையில் அறைந்துவிட்டது!
நான் ஒருமுறைதான்-
சிலுவையில் உன்னை
ஒப்புக் கொடுத்தேன்;
மனம் திரும்பாத மைந்தர்களோ...
ஒவ்வொரு முறையும்-
சிலுவையில் உன்னை-
ஒப்புக் கொடுக்கிறார்கள்!

✦

எனவே எனது-
இறை மீட்பில் ஒரு
மாறுதல் செய்ய
மனம், விரும்புகிறேன்!
முதல் வார்த்தை +முதல் வருகை-மன்னிப்பு
இன்று-இறுதி வார்த்தை+ இரண்டாம் வருகை-
தண்டிப்பு!
யூதாஸ்களுக்காக நீ
சிலுவையில் அறையப்பட்டாய்;
இனி-
உனக்காக யூதாஸ்களை
சிலுவையில் அறையப் போகிறேன்!

இதற்கும் இவர்கள்-
''ஸ்டே ஆர்டர்'' வாங்கினால்-

திருச்சபையின் அரசியல்
எனக்கும் தெரியும்;
நீதிமன்ற நுணுக்கங்கள்
எனக்கும் புரியும்!

ஏனென்றால்-
இப்போது நான்
''பிதா'' அல்ல;
''பேராயர்!''

எச்சரிக்கை;
விரைவில் வரும்
சுற்றறிக்கை!

●

# கூட்டுப்புழுவின் பரிணாமம்!

வனாந்திரங்களைத் தாண்டிய
களைப்புமிகு கால்கள்!

எப்பொழுதும்
கோடரிகளை சுமந்து நிற்கிற
மரம் வெட்டி மானுடத்தின்
மத்தியில்-
ஒலிவமரமாய்
ஓங்கி வளரும் உயிர்மை!

ஆணிகளும், சுத்தியல்களுமாய்
சூழ்ந்து நிற்பவர்கள் மத்தியில்,
சகிப்புத் தன்மையை வலியுறுத்தும்
சமுதாயம்!

இடிந்து கிடக்கும்
கட்டிட இடிபாடுகளில்-
தட்டுத் தடுமாறி
தனக்கான ஒட்டுக் கிளையை தேடும்
மல்லிகைக் கொடி!

வெள்ளத்தில்
ஊழித் தாண்டவத்தில்
நாய்களுக்கும் படகுதந்த
நன்றி உள்ளங்கள்!

கோஷங்கள், கூச்சல்கள்
அரசியல் அமளிகளின் மத்தியில்-
சங்கீதத்தை பதிவு செய்யும்
சாலையோர பார்வையற்றவனின்
புல்லாங்குழல்!

அன்பு தணிந்துபோன
அதிநவீன கூட்டுவாழ்க்கை!
அடையாளங்களைத் தேடும்
அரசியல் பரியேசர்கள்!

ஆலயங்களின் ஊசிகோபுரங்களில்
அலங்கார சீரியல் செட்டுகள்;
உள்ளே
அழும் மெழுகுவர்த்திகள்!

அழுத்தப்படும் ஆர்மோனியங்களிலும்,
கருப்பு-வெள்ளை
நிறபேதங்கள்!

ஆலயத்தின்
உண்டியல் பைகள்
அழுகின்றன;

''என்னை பணத்தால்
நிரப்பும் நீங்கள் -உங்களை
நல்ல குணத்தால்
எப்பொழுது நிரப்புவீர்கள்?''

சிலுவையிலிருந்து
இன்னும் விடுபடாத
இயேசு கிறிஸ்துவின்
எட்டாவது வார்த்தை;

‘‘ஆயினும்
நம்பிக்கையாயிருங்கள்!’’

✦

மௌனத்தைச் சுமக்கும்
ஒரு மொட்டு
மலராகும்போது
கூச்சலிடுவதில்லை;
ஆசீர்வாதங்களும்
அப்படியே!

புதிய வருடத்தின்
வாக்குத்தத்திற்காக
ஜெபநிலையில் இருப்வர்கள்,
பழைய வருட வாக்குதத்தத்தை
பாதிவழியிலேயே தொலைத்துவிடுகிறார்கள்!

ஆயினும் பரவாயில்லை;
ஒவ்வொரு வருடமும்
கூட்டுப் புழுவாக இருக்கும்
புதிய வருடம்,
முட்டிமோதி வெளிவந்து
வண்ணத்துப் பூச்சியாக
வானில் சிறகடிக்கின்றது!

இந்தப் பரிமாணம்
இறைவன் தந்தது;
இதேபோல் தான்
இறை நம்பிக்கையும் வந்தது!

●

# இயேசுகிறிஸ்து எந்த சாதி?

நேற்று:

குலம் - யூதர்
கோத்திரம் - யூதா
கடற்கரை - கலியேயா
அழைப்பு - நசரேயன்
கலப்பு - மோவாப்

இன்று:

தேவன் - தேவர்
திரித்துவம் - முககுலத்தோர்
மேய்ப்பன் - கோனார்
தச்சன் - ஆசாரி
மீனவன் - செம்படவன்
பிள்ளை - பிள்ளைமார்
தலீத்தகூமி - தலீத்
கழுதை - வண்ணான்
முதல்பேறு - முதலியார்
நாதர் - நாடார்

நாளை:

இயேசு குமுறுவார்;
‘‘சமத்துவச் சமுதாயம்

சமைக்கவந்த என்னை,
சாதியக் குழியில் தள்ளிவிட்டீர்கள்;
மீண்டும் சிலுவையில் அறையுங்கள் என்னை;
உயிர்தெழுதல் இல்லாதபடி
செத்துப் போகிறேன்!''

## கல்யாண மொய்!

கானாவூர் கல்யாணத்தில்
மொய்ப்பணம் வைக்காத இயேசு -
அற்புதத்தை
மொய்யாக்கினார்;
சம்பிரதாயங்களைப்
பொய்யாக்கினார்!

அன்னை மரியாளைப் போல்
அழுத்தம் கொடுத்தால்
நடக்காது அற்புதம்...
அந்தந்த வேளையில்
அற்புதம் நடக்க,
ஆத்துமா செய்யவேண்டும்...
அமர்ப்பணம்!

●

# ஆன்மீக அரசியல்!

அன்று-
அரசியல் தெரிந்ததால்
ஆடையை தொட்டாளா அவள்?

அரசியல் தெரியாததால்
பாடையை தொட்டாரா இவர்?

கானா ஊர் கல்யாணத்தில்
''மொய்பணம்'' வைக்காமல்-
பரிசேயர்களுக்கு
அற்புதம் புரியாமல்-
பாட்டாளிகளுக்கு
தண்ணீரை திராட்சை ரசமாக்கி
இயேசு புரிந்தது;
ஆன்மீகமா? அரசியலா?
இயேசுவின்,
சிலுவையில்
ஆன்மீகமும் அரசியலும்
இணைந்தது;
புதிய சித்தாந்தம்
வளைந்தது!

# எது திறப்பின் வாசல்?

ஆபிரகாமும், மோசேவும்
நின்ற திறப்பின் வாசலை,
ஆண்டவரையும்,
அவர்களையும் தவிர
வேறுயாரும் அறியார்கள்!

இங்கு-
அனைவரும் அறிய,
தொலைக் காட்சி நேரலையில்,
தொடர்ந்து அழுதுபுலம்புவதா
திறப்பின் வாசல்?- இல்லை,
ஆண்டவரின் கட்டளையின்படி
அறையை பூட்டி
தனித்து ஜெபிப்பதா திறப்பின் வாசல்?

மைதானத்தில் கூட்டமாக நின்று
மைக்கைப் பிடித்து கூச்சலிடுவதா
திறப்பின் வாசல்?- இல்லை,
ஆண்டவரின் கட்டளையின்படி
அறையை பூட்டி
தனித்து ஜெபிப்பதா திறப்பின் வாசல்?

எல்லோருக்கும் தெரியும்படி
ஜெபிப்பதா -
திறப்பின் வாசல்?- இல்லை,
எசேக்கிலேலைப் போல,
இறைவன் முன்,
குறுக்கிக் கிடப்பதா திறப்பின் வாசல்?

எது திறப்பின் வாசல்...?

1. உணவு இல்லாதவன்
வீட்டு வாசலில் நின்று
உணவு வழங்கும் இடமே
திறப்பின் வாசல்!

2. நோயுற்றவர்களுக்காக
மருத்துவமனைகளுக்கச் சென்று
மன்றாடும் இடமே
திறப்பின் வாசல்!

3. சிறையில் உள்ளவர்களை சந்தித்து
சீர்திருத்த செய்திகளை
வழங்கும் இடமே
திறப்பின் வாசல்!

4. சாதிப்பாகுபாடு இன்றி
தாழ்த்தப்பட்ட இடங்களுக்கு சென்று
தன்னை
அர்ப்பணித்து,
அரும்பணி செய்யும் இடமே
திறப்பின் வாசல்!

5. ஆட்டுக் குட்டிகளை
அடித்துப் புசியாமல்
ஆட்டுக்குட்டியானவரின் முன்
அணிவகுத்து நிற்கும் இடமே
திறப்பின் வாசல்!

6. ஆன்-லைனில்
கட்டாயக் காணிக்கை வசூலிக்காமல்,
சேரிப்பகுதிகளுக்குச் சென்று,
சேர்த்து வைத்திருப்பதை,
செலவழிக்கும் இடமே
திறப்பின் வாசல்!

7. ஆலயத்தின் உள்ளே
அமராமல்,
காணிக்கைப் பெட்டியின் முன்,
விதவையின் காணிக்கையை
உற்று நோக்கியபடி,
இயேசு இருந்த இடமே
திறப்பின் வாசல்!

8. இயேசு சிலுவை மரணத்திற்கு
தன்னை தயார் படுத்திக் கொண்ட,
கெத்சமனே தோட்டமே
திறப்பின் வாசல்!

9. வண்ணவிளக்குகளின் கீழ்
வார்த்தை ஜாலம் செய்யாமல்,
வார்த்தையின்படி நாம்
வாழும் இடமே,
திறப்பின் வாசல்!

10. செங்கடலின் முன் அல்ல,
சிறுமைப்பட்டவனின் முன்நின்று

சேவை செய்யும் இடமே
திறப்பின் வாசல்!

11. கனிகளை மட்டுமே
காண்கிற இடம் அல்ல,
விதையானது,
விழுந்து மரிக்கும் இடமே
திறப்பின் வாசல்!

12. தனது முழங்காலை
முடக்கும் இடம் அல்ல;
தள்ளாடும் முழங்காலை
தாங்கிப் பிடிக்கும் இடமே
திறப்பின் வாசல்!

பழைய ஏற்பாட்டுக்
கிறிஸ்தவர்களாக அல்ல;
புதிய ஏற்பாட்டுக்
கிறிஸ்தவர்களாக
புரட்சி செய்வோம்!

ஆடுகளுக்கும், ஓநாய்களுக்கும் உள்ள
வித்தியாசம் அறிவோம்!
வேதப்புரட்டு தீர்க்கதரிசிகளை
நம்பவேண்டாம்;
வேதம் உரைக்கும்
தீர்க்க தரிசனங்களை
நம்புவோம்;
கள்ள ஊழியர்களை
நம்ப வேண்டாம்;
நல்ல ஊழியங்களை
நம்புவோம்!

●

# மரம்- இறையியல் பார்வை!

மரம்-
ஏதேன் தோட்டத்தில்
பாவத்தின் கருவானது- பின்
பலிபீட விறகானது!

நோவாவிற்கு பேழையானது;
ஆலயத்தில்
ஆசாரி கை வேலையானது!
மோசேவிற்கு மேய்ப்பனின்
கைத்தடியானது- பின்
செங்கடல் முன்
செங்கோலானது!
கோடரிக்கு பிடியானது;
அதனாலேயே
அதற்கு வினையானது!

மரம்-
இயேசுவுக்கு சிலுவையானது;
அதன் மேல் பரிசேயருக்கு
பலகையானது!
ஆசாரியாக இயேசு
மரத்தை செதுக்கினார்-பின்
மரத்தில் பிரதான ஆசாரியராகச்
செதுக்கப்பட்டார்!

மரம்-
பேதுருக்கு கட்டுமரமானது,
இயேசுவுக்கு அது
பிரசங்க பீடமானது!
ஆலயங்களில் அருளுரை
திருமுழுக்குத் தொட்டிகளாக,
காணிக்கைப் பெட்டிகளாக,
இறுதி ஊர்வல சவப்பெட்டிகளாக,
உருமாறி ஊழியம் செய்கிறது,
இயேசுவைப் போல்
உயிர்த்தெழுகிறது!

மரம்
சகேயுவுக்கு கிளை தந்தது;
ஆதிநிர்வாணம் மறைக்க
இலை தந்தது;
யூதாசுக்கோ மரணத்தின்
விலை தந்தது!

புத்தனுக்கு
ஞானம் தந்தது
போதிமரம்; இந்த
சித்தனுக்குகோ
இயேசுவைத் தந்தது
சிலுவையின் கரம்!

முந்தின ஆதாம்
பறித்த கனிமரம்- பாவ
''கார்பன்டை ஆக்சைடை''
துப்பியது!
பிந்தின ஆதாம் இயேசு-
கனியாக தொங்கிய
சிலுவை மரம் விட்ட

‘‘ஆக்சிஜனால்’’
மானுடம் தப்பியது!

ஏ... மானுமே!
மரத்தை வெட்டாதே!
வெட்டினால் மத நம்பிக்கை
உள்ள நான்- அதை
சிலுவையாக எண்ணி
சீற்றம் கொள்வேன்!

ஆதிமரம்-
விலக்கப்பட்டது;
அத்திமரம் சபிக்கப்பட்டது;
ஆனாலும்-
மரம் புதிப்பிக்கப்பட்டது!

இறையியலில் மரம்,
கெட்டியானது;
அதனாலேயே-
உடன்படிக்கை பெட்டியானது!
உச்சமாக-
கழுமரம்
கொழுமரமானது!
சிலுவையே தரு;
இயேசுவே அதன்
இறை எரு!

மரம் -
இயேசுவுக்கு முன்ணணையானது;
அதனால் மரம்
உயர்திணையானது!

●

## (வாக்கு) வாதம்!

மரணம்
பக்தனைப் பார்த்து
கூறியது;
''விரைவில் உன்னை
அழைப்பேன்!''
பதிலுக்கு பக்தன்
கூறினான்;
இந்த பூமியில்
இயேசுவுக்கு நான்
இன்னும் தேவை!

என் ஊழியம்
நிறைவேறும் வரை
இயேசுவின் நாமத்தால்
இங்கு நான்
பிழைப்பேன்!
பின் அவர் அனுமதித்தால்,
உன்னை நான்
அழைப்பேன்!

●

## ‘சாதி’ தாண்டி சாதி!

தலீத்திற்கு தலீத்தானேன்;
நாடாருக்கு நாடாரானேன்;
வன்னியருக்கு வன்னியரானேன்;
தேவருக்கு தேவரானேன்;
பிள்ளைக்கு பிள்ளையானேன்;
ஐயருக்கு ஐயரானேன்;
முதலியாருக்கு முதலியாரானேன்;
செட்டியாருக்கு செட்டியாரானேன்;
உடையாருக்கு, உடையாரானேன்;
அருந்ததியருக்கு அருந்ததியரானேன்;
எப்படியாகினும்
எல்லோரும் இரட்சிக்கப்பட
இப்படி...
எல்லோருக்கும் எல்லோருமானேன்!

எதுவும் மாறவில்லை
என்பதால்-
சாதியைவிட்டு சாதிக்க
எனக்குள் நான்
மனிதனானேன்;
எனவே நான்
இறைவனானேன்!

இறைவனுக்குள்
மனிதனானேன்;
மனிதனுக்குள்
இறைவனானேன்!

''நானே மெய்யான ஒளி!'' என்ற
இயேசுவின் வழி-
'சாதி' யை தேடாமல்
'சோதி'யை தேடுகிறவனே...
இறை 'நீதி'யை தேடுகிறான்
என்பது
நிஜம்!

●

## கொரோனா செய்த ஊழியம்

ஆலயங்கள்
மருத்துவமனைகளாக
மாறின;
மருத்துவமனையாக
மாறியதால்;
அவை உண்மையான
ஆலயங்களாக
உருமாறின!

●

## பாவ அறிக்கை!

பாவிகளில்
பிரதான பாவிநான்;
பவுல்!
பாவிகளில்
பிரமாதமான பாவி
நான்!

●

# நித்திரைக்குப் பயப்படாதே!

கல்லறைப் பாறையை ஒரு
கால்பந்து போல்,
உதைத்து தள்ளி...
மரித்து உயிர்த்தார்;
புதைந்து முளைத்தார்!

கல்லறை என்பது
கட்டிலே;
மரணம் என்பது
ஆதாமின்...
அயர்ந்த நித்திரை தொட்டிலே!

✦

நித்திரைக்கு பயப்படாதே!
நேரம் வரும்...
விழிப்பாய்!

●

## ஒரு ஆலயம் பேசுகிறது!

(கொரோனா கால ஊரடங்கின்போது உதித்த கவிதை)

சமூக இடைவெளி இல்லாமல்
உங்களை
ஒருங்கிணைத்த நான்
இன்று-
சமூக இடைவெளிக்காக
சாத்தப்பட்டு இருக்கிறேன்!

எப்பொழுதும்
உங்கள் ஜெபங்களால்
நிரம்பி வழியும் என்
இதயம் இன்று...
மவுனத் திரைகளால்
மூடப்பட்டுக் கிடக்கறது!

எப்பொழுதும்
உங்களை நோக்கி
உற்சாகமாய் உலாவரும்
காணிக்கைப் பைகள்,
இன்று-
சுமக்க ஆளில்லாமல்
சும்மா கிடக்கின்றன!

✦

வெளிச்சமில்லாத
தனிமை மெழுகுவர்த்திகள்;
தீண்டாமைக் கொடுமையில்
திருவிருந்து!
அனாதையாகிப் போன
''ஆர்கன்'' கள்!

ஊமையாகிப் போன
ஊசிகோபுர மணிகள்!
'ஆன்லைன்' வெளிச்சத்தில்
அருளுரை மேடைகள்!
ஆணிகளில் தொங்கும்
பாடகர் குழு அங்கிகள்!
சுமக்கப்படாத சிலுவை!

''சபையாக'' இருந்த நான்
வெறும்,
''கட்டிட'', மாகிப் போனேன்!

ஆயினும் பரவாயில்லை;
உங்கள்,
கோர்ட் வழக்கு கூச்சல்களாலும்,
காரசார கமிட்டி சண்டைகளாலும்,
களைத்து போயிருந்த நான்
சற்று...
ஓய்வெடுக்க உதவியிருக்கிறீர்கள்!

✦

செல்போனுக்குள்
சின்னதாகிப் போன உங்கள்,
வழிபாட்டு முறைமைகளால்...
விலகிப்போனது நானல்ல;
நீங்கள் தான்!

இதுவரை...
செல்போனுக்குள்
வேதாகமத்தை
அடக்கி வைத்திருந்தீர்கள்;
இப்பொழுதோ...

செல்போனுக்குள் உங்கள்
கிறிஸ்தவ வாழ்வையே
அடக்கம் செய்துவிட்டீர்கள்!

✦

மூடப்பட்ட எனக்காக
முகங்குப்புற விழுந்து
அழுகிறவர்களே!

இயேசு கிறிஸ்து சொன்னதை
நினைவு கூறுங்கள்...
''ஒருவனுக்கு அவனது சரீரமே
ஆலயமாய் இருக்கிறது!''

✦

இதுவரை...
என்னை நீங்கள்
சுத்தம் செய்ததற்காய்
நன்றி!
இந்த
ஊரடங்கு காலத்தில்...
உங்களை நீங்கள்
சுத்தம் செய்து...
உள்ளே வாருங்கள்;
அதுவரை நான்,
ஆர்வமுடன் காத்திருக்கிறேன்!

●

# மீண்டும் அடிமரம் துளிர்க்கும்!
**(கிறிஸ்து பிறப்பு-2020)**

‘‘மாட்டுத் தொழுவத்தின்
மனிதக் கொசுக் கடிகளால்,
சின்னப் பாலகன்
சிணுங்கி அழுகிறார்!’’

‘‘நான் சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து
இறங்கி வந்தேன்- நீங்களோ,
சாதிகளின் பிதாக்களாக
சண்டையிட்டுக் கொள்கிறீர்கள்!’’
கொரோனா கிருமி உங்களை
அறைக்குள் அடைத்தது;
சாதிக் கிருமியால் சபையை நீங்கள்,
சிறைக்குள் அடைத்தீர்கள்!

எனவே இந்த,
தலைமுறை நோய் தீர்க்க
தடுப்பூசியாக இறங்கி வந்திருக்கிறேன்!
மிஷனரிகளின் இரத்தத்தால்,
சொரியூட்டப்பட்ட கிறிஸ்தவத்தின்
ஆழம் அறியாமல்-
உத்தரத்தில் வௌவால்களாக
தொங்கிக் கொண்டிருக்கும் உங்கள்,
மனுநீதியை மாற்ற,
மனித நீதியாக மலர்ந்திருக்கிறேன்!

தேர்தல் இல்லாத் திருச்சபைக்காக
தேம்பி அழுகிறேன்;
வழக்குகள் இல்லா திருச்சபைக்காக
வழக்கு தொடுக்க வந்திருக்கிறேன்!

எனது பிறந்தநாளில்
பிரியாணி புசிக்கிறீர்கள்;
ரகேல்களின் ஒப்பாரிகளை
ரசிக்கிறீர்கள்!

பென்ஷன் இல்லா
கிறிஸ்மஸ் தாத்தாக்களை
அனாதை ஆசிரமங்களுக்கு
அனுப்பி விட்டீர்கள்!

வேர் இல்லா கிறிஸ்மஸ் மரம்,
வெளிச்ச மின்மினிகளான சீரியல் செட்,
60-வட்ஸ் வால் நட்சத்திரம்,
வாட்ஸ்ஆப்- வாழ்த்துகள்-என
களை கட்டும் உங்கள்,
கிறிஸ்மஸ் பண்டிகையின் உற்சவங்களால்,
கந்தலோடு முனங்கி அழும் என்னை
கண்டு கொள்ளவேயில்லை நீங்கள்!

ஆயினும்-
இந்த முறை,
போலியோவில் சூம்பிப்போன
நீதியின் தூண்களை
நிமித்தி சரிசெய்யும்,
''கொத்தனாராக'' வந்திருக்கிறேன்!

சாதி அழுக்குகளை
நீதி சவக்காரத்தால்,
துவைத்து வெளுக்கும்

‘‘வர்க்க வண்ணானாக’’
வரலாறு பிளந்து வந்திருக்கிறேன்!

பிரதான ஆசாரியர்களின்
பிற்போக்கு சட்டங்களை,
மாற்றி அமைக்கும்
‘‘மனிதநேய ஆசாரியாக’’
மண்ணுக்கு வந்திருக்கிறேன்!
அதிகார மலங்களை அப்புறப்படுத்தி
தூய்மைத் திருச்சபையை தோற்றுவிக்கும்,
‘‘தோட்டியாக’’ வந்திருக்கிறேன்!

அறுந்து போன,
நீதியின் பாதரட்சைகளை தைத்து
நீயாயத் தீர்ப்பு பாதையில் நடத்தும்,
‘‘செருப்புத் தொழிலாளியாக’’ வந்திருக்கிறேன்!
உங்கள்–
அரசியல் சுனாமிகளுக்கு மத்தியில்,
ஆழ்கடலுக்குள் மனிதர்களை பிடிக்கும்,
அறுவடை மீன்பிடிப்பை
அறிமுகப்படுத்தும் ‘‘மீனவனாக’’ வந்திருக்கிறேன்!

விற்கப்பட்ட விளை நிலங்களைத் தேடி
விதைகளோடு நிற்கும்–
வேதனை ‘‘விவசாயியாக’’
‘தர்ணா’ நடத்த, தரையிரங்கி வந்திருக்கிறேன்!

பரம சேனையின் திரள்களே!
பாடுங்கள், உங்கள்
பாதுகாப்பு கவசங்களை உடைத்து
பட்டயத்தோடு இம்மானுவேல்,
பராக்கிரமமாய் வருகிறார்,
ஏரோதுக்களே ஓடுங்கள்!

அழுத சிசுபாலன் சிரிப்பார்,
அறுப்பின் மீதமான
திராட்சைகளை பறிப்பார்;
கனிதராத மரங்களை
தோட்டக்காரனாக, எரிப்பார்!

பின், மீண்டும்
அடிமரம் துளிர்க்கும்;
அதுவரை
உபத்திரவங்கள் இருக்கும்!

கிறிஸ்து பிறப்பு
பண்டிகை அல்ல;
பலியின் கோட்பாடு!
மீட்பின் வெளிப்பாடு;
பூமிக்குத் தரப்பட்டப்
புதிய ஏற்பாடு!
●

# இன்றையத் திருவசனம்!

திருச்சபையின் சுவர்களில்
தினமும எழுதப்படும்
திருவசனம்;
''இங்கு சிறுநீர் கழிக்காதே!''

திருச்சபையின் உள்ளே
தினமும் எழுதப்படும்
திருவசனம்;
''நாய்கள் ஜாக்கிரதை!''

திருச் சபையின்
ஆலயக் கதவிலே
தினமும் எழுதப்படும்
திருவசனம்,
''எச்சரிக்கை!
இது தனியார் சொத்து!
அனுமதியின்றி உள்ளே நுழைபவர்கள்
தண்டிக்கப்படுவார்கள்!''

●

# நிர்வாண நடனங்கள்!

எங்கள் தலைவர்கள்
மூழ்கி எழுந்ததால்
யோர்தான்
கூவமாகிவிட்டது!

திருச்சபையின்
பொருளாதார தேய்மானத்தினால்,
காக்கைகள்
இறைச்சித் துண்டுகளுக்கு பதிலாக
எலும்புத்துண்டுகளை
எடுத்து வருகின்றன!

ஆன்மீக மலட்டுத் தன்மையால்
அன்னாள்கள் இன்னமும்
அழுதுகொண்டே இருக்கிறார்கள்!

ஏதேன் தோட்டத்திலும்
ரியல் எஸ்டேட்டுகள்!
'கபாலிக்கு' இருக்கிற கூட்டம்
காலை ஆராதனைக்கு
இருப்பதில்லை!

புதிதாகத் தோன்றும்
போலி பேராயங்களால்,

கிறிஸ்தவ மேடைகளில்
கேலிக் கூத்து நாடகங்கள்!

500ரூபாய்க்கு
அறிவர் பட்டங்களும்
5000 ரூபாய்க்கு
'கர்டினல்' பட்டங்களும்
வியாபாரமாக்கி வழங்குவதே
இன்றைய 'எப்பிஸ்கோப்பல்!'

தம்மைத் தாமே
அருட்பொழிவு செய்துகொள்ளும்
போலி பேராயர்களால்,
கிறிஸ்தவத்தின் ஆணிவேர்கள்
அழுக ஆரம்பித்துவிட்டன!

'இரவில் திருடனைப் போல்
வருவேன்' என்றீர்,
ஆனால்-
பாகப்பிரிவினை நடத்தும்
இந்தப்
பகல் திருடர்களை
பட்சிக்கும் நாள் எது?

✦

இப்பொழுதைக்கு எங்கள்
விசுவாசப் பிரமாணம்;
எந்த 'பேஸ்புக்'கிலும்
இல்லாத இயேசுவை
மையப்படுத்துவதுதான்!

இந்த
நிர்வாண நடனங்களை

சரிகட்டும்
நீதிநாள் வரும்!
ஆடுகள் அன்று
ஓநாய்களை விரட்டும்;
மான்கள் அன்று
சிங்கங்களைத் துரத்தும்!
விலக்கப்பட்ட கனிகளை
விருந்துக்கு வைக்கும்
விஷக் கரங்கள்
வெட்டியெறியப்படும்!

●

## வேத தத்துவம்!

ஒரு முறை பிறந்தவன்
இருமுறை மரிக்கிறான்;

இரு முறை பிறந்தவன்
ஒரு முறை மரிக்கிறான்;

இரண்டு 'கேட்டகிரி'யிலும்
இல்லாதவன் தான்
திருச்சபைத் தலைவனாக
இருக்கிறான்!

●

# மழை வெள்ளம் + மனுவேலன்!

**(ஒரு மழைவெள்ள கிறிஸ்து பிறப்பு காலத்தில் எழுதியது)**

அணைப் பிரச்சனைகளை
அடித்து தள்ளியது
வெள்ளத்தின் நியாயத் தீர்ப்பு!

ஆக்கிரமிப்புகளால் சூழப்பட்ட
பெத்தலேகேமின் மழைவெள்ளத்தில்
மரியாளும், யோசேப்பும்
படகு பயணத்தில்...

ஹெலிகாப்டரில் வட்டமடித்து
வானத்திலேயே பார்வையிட்டுச் சென்ற
வான சாஸ்திரிகள்!

மாட்டிறைச்சி பிரச்சனையால்
மாடுகளுக்குத் தடா!

'குல்கர்னி' களின் மேல்
கருப்பு மை தெளிக்கும்
மேட்டுக்குடி மானுடம்- தன்
சத்திரத்தின் கதவுகளை
இறுகமூடிக் கொண்டது!

விளைச்சல் நிலங்களை இழந்த
விவசாய மேய்ப்பர்கள்!

கோவணன் பாடல் ஒருபுறம்,
சிம்புவின் பாடல் மறுபுறம்,
குடிப்பத்தில்
கேராபீன்கள், சேராபீன்கள்!

வானிலை அறிக்கைபோல்,
திருச்சபை அரசியலிலும்
தீடீர் தீடீர் மேலடுக்கு வளிமண்டல சுழற்சி!

நடந்து முடிந்த தேர்தலைப்போல
இம்மானுவேலனின் பிறப்பில்
எந்த வித பரபரப்பும் இல்லை;
LIVE டெலிகாஸ்ட்டும் இல்லை!

அம்மா உணவகங்களின் முன்,
அடித்து செல்லப்பட்ட குடிசைகள்முன்,
சேற்றுப் புண்கால்களோடு,
இலவச வேட்டி, சேலைகளுக்காக
இடித்துத் தள்ளி போராடும்,
ஏழை மக்களோடு
இம்மானுவேல் அழுகிறார்!

வெள்ளத்தின் அழிவுகளுக்கு - நாம்
வீசியெறிந்த பாலீதின் பைகளும்
ஒரு காரணம்!
புதிய வானம், புதிய பூமியை
எதிர் நோக்கும் நாம்;
பழைய வானத்தையும்,
பழைய பூமியையும்,
பராமரிக்கத் தவறிவிட்டோம்!

சீசன் துவங்குவதற்கு
சில மாதங்களுக்கு முன்பே அறிந்து
தன் பயணத்தை துவங்கி
வேடந்தாங்கல் வரும்
வெளிநாட்டு பறவைகளின்
நுண்ணறிவை நாம் பெற்றுள்ளோமா?

இயேசு கிறிஸ்துவின்
பிறப்பின் அர்த்தத்தை உணராமல்,
ஏரோதுவின் பக்கத்தில்
நின்று கொண்டு
நுண் அரசியல் செய்கிறோமா?

●

## தாழ்மையும் - மேன்மையும்!

தாழ்மை என்பது
தராசு தட்டின்
தத்துவம்!
ஒரு புறம் தாழ்ந்தால்
மறுபுறம் உயரும்!

''தன்னைத் தாழ்த்துகிறவன்
உயர்த்தப்படுவான்;
தன்னை உயர்த்துகிறவன்
தாழ்த்தப்படுவான்!''
இயேசுவின் கூற்று;
இறையியல் ஊற்று!

✦

முதல்வரிசை நாற்காலிகளுக்காக
முண்டியடிக்கிறவர்கள்,
பதவி நாற்காலிகளுக்காகப்
'பாலிடிக்ஸ்' செய்கிறவர்கள்,
தாழ்மையின் சிலுவை சுமக்க
தைரியம் இல்லாதவர்கள்!

✦

தாழ்மையை
தவறாகப் புரிந்து கொள்கிறோம்!
தாழ்மை என்பது வேறு;
தன்மானம் என்பது வேறு!

சீடர்களின் கால்களைக் கழுவி
தாழ்மையைக் கற்பித்த இயேசு,
களப்பணியில்,
கனம் செய்யாதோர் வாசலில்
காலணி தூசிகளை தட்டி வெளியேற
கட்டளையிட்டார்!

✦

ஒருவன் உன்னை
ஒரு மைல் தூரம்
உடன்வர பலவந்தப்படுத்தினால்,
அவனோடு
இரண்டு மைல்தூரம்
இன்னமும் செல்;
அவன்
மூன்றாவது மைலும் இழுத்தால்
முடியாது என்று சொல்!

✦

''ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தைக் காட்டு''-
என்றார் இயேசுகிறிஸ்து!

முதல் அடியை
முகத்தில் வாங்கி,
இரண்டாவது அடியில்
உதட்டு ரத்தத்தை துடைத்து பார்த்து-
மூன்றாவது அடியை வாங்காமல்,

முன்னால் பாய்ந்து,
அடித்தவனை புரட்டி எடுக்கும்,
MGR ன் சண்டைக் காட்சிகளை
இறையியலோடு
ஒப்பிட்டுப் பார்க்கிறேன் நான்!

●

# சலிப்பூட்டும் இருமல் போதனைகள்!

கொரோனா...
கடவுளின் கோபமா?
சாத்தானின் சதியா?
இயற்கையின் சாபமா?
தீர்க்கதரிசன நிறைவேறுதா?
சபைகளுக்குச் சாவுமணியா?
போதகர்களுக்கு தண்டனையா? என்ற
உங்கள்,
கூச்சல் மிகு பிரசங்கங்களால்,
எங்கள்,
காதுகள் கண்ணீர் விடுகின்றன!

திருமறை என்பது...
அரசியல், அரசு,
கூட்டுச் சமுதாயம், குடும்ப ஐக்கியம்,
இனவிடுதலை, ஒடுக்கப்பட்டவரின்
உரிமைக்குரல்,
பிணியாளரின் விடுதலை, மறுவாழ்வு,
கூட்டம், மருத்துவம்,
சாதிமறுப்பு, சமுதாயக் களப்பணி,
தொழில்சார் வாழ்வியல், சோதிடவியல்,
உளவியல், அறிவியல்,
பரிணாமக் கோட்பாடு, பாலியல் நெறி,

கணிதம், காலக்கோட்பாடு,
வரையியல், மெய்யியல்,
பொதுவுடைமை, கலாச்சாரம்,
பகுத்தறிவு, பகிர்ந்துண்ணல் - போன்ற
பல்வேறு இயல்களை,
உள்வாங்கிய
அறிவுச் சார்ந்த
ஆன்மீகக் கடல்!
இந்த-
உப்புக் கடலில்,
உள் நீச்சல் அடிக்காதவன்,
சிப்பிகளை கூட
சேகரிக்க முடியாது!

பொருளாதார ஆசீர்வாதங்களையும்,
தனிமனிதத் தற்பெருமைகளையும்,
திகிலூட்டும் தீர்க்கதரிசன பயமுறுத்தல்களும்,
மயிர் கூச்செரியும் உங்கள்
மாய்மால அற்புதங்களையும்...
ஏழைக்களுக்கான இயேசு
எதிர்த்து நிற்கிறார்!

கடல் போன்ற திருமறையை,
கோப்பையில் ஏந்திக் கொண்டிருக்கும்,
'கோட்' அணிந்த குழந்தைகள்,
மூக்குச் சளியோடு தங்கள்
மூளையையும் சிந்துகிறார்கள்!

உங்கள்...
அவசியமற்ற ஆராய்ச்சிகளையும்,
காணிக்கைக்கான கதறல்களையும்,
கேட்க விரும்பாமல்
கர்த்தரின் சமூகம் தன்
கதவுகளை மூடிக்கொண்டது!

‘அறிவு’ சார்ந்த ஆராய்ச்சிகளையல்ல;
‘தெரிவு’ சார்ந்த திருப்பணிகளே
திருச்சபைக்குத் தேவை!

‘‘இயேசுவின் மரணத்தைச் சுமந்திருக்கிறேன்,
ஆனால்,
இயேசுவின் உயிர்த்தெழுதலை பிரசங்கிக்கிறேன்!’’
என்ற
பவுலின் அறைகூவலே,
பரிசோதனை காலத்தில் தேவை!

கொரோனாவைத் தாண்டி...
ஆகச் சிறந்த அருட்பணிகள் உள்ளன!
உத்திரத்தின் இருக்கும்
ஒட்டடைகளை சுத்தம் செய்யும் காலமே,
ஊரடங்கின் காலம்!

ஆனால் நமது,
அஸ்திவாரத்தை மறந்து,
அலறும் பிரசங்கங்களால்,
ஆவிக்குரிய வாழ்வை
அசுத்தப்படுத்தாதீர்கள்!

இன்றைய தேவை...
இருமல் பிரசங்கமல்ல;
இயேசுவின் பிரசங்கம்!
பரிசேயரின் புளித்த மாவு
சுட்ட அப்பத்தை மீண்டும்
சூடுபண்ணி தருகிறவர்கள்;
இயேசுவின் இறையாண்மைக்கு
எதிரானவர்கள்!

வாழ்வு சார்ந்த பிரசங்கங்களை
வரவேற்போம்!

தயவுசெய்து நீங்கள்,
ஒப்பனைக் குரலில்,
ஒப்பாரி உபதேசங்கள்,
செய்யாமலிருந்தால் போதும்;
ஊழியம் இங்கு
ஒழுங்காக நடைபெறும்!

●

*(26.04.20- அன்று கொரோனா கிருமியால் ஊரடங்கு உத்தரவு பிறபிக்கப்பட்ட நாளில் எழுதப்பட்ட கவிதை)*

# ஊரடங்கில் நிகழ்ந்த உயிர்த்தெழுதல்!

ஓய்வு நாள் கிறிஸ்தவர்களை
ஒவ்வொருநாள்,
கிறிஸ்தவர்களாக்கியது,
ஊரங்கில் நிகழ்ந்த
இயேசுவின்
உயிர்த்தெழுதல்!

பூட்டிய கதவுகளுக்குள்
புழுங்கிக் கொண்டிருந்த
சீடர்களுக்கு,
அறைக்குள் நுழைந்து
ஆசீர்வதித்த இயேசு,
வீட்டுக்குள் முடங்கிய நமக்கு
வெற்றியை அறிவிக்கிறார்!

புத்தாடைகள் இல்லை...
ஆயினும்,
கல்லறையில்
மரணத்தின் ஆடையை
கழற்றிவைத்து விட்டு,
மகிமையின் ஆடையை
தரித்த இயேசு... நமக்கு,
முன்மாதிரி வாழ்வை
முன் வைக்கிறார்!

கிறிஸ்து பிறப்பையும்
ஈஸ்டரையும்,
பண்டிகையாகவே கொண்டாடி
பழக்கப்பட்ட நமக்கு இதுவொரு
பரிசுத்தப் பாடம்!

✦

கல்லறைப் பாறையை ஒரு
கால்பந்தை,
உதைத்துத் தள்ளி
உயிர்த்தெழுந்த இயேசு,

உங்களுக்கு முன்பாக,
ஊரடங்கை மீறி
ஊருக்குள் சென்றுவிட்டார்!

✦

விதைக்கப்பட்ட விதை,
மூன்றாம் நாள்,
முட்டிமோதி
முளைத்தெழுந்தது!
விறகாய் கிடந்த சிலுவைக்கு
வேர்கள் முளைத்தன!
நமது, ‘குக்கர் விசில்’களால் மட்டுமே
இந்நிகழ்வை
கொண்டாட முடியாது!

கிறிஸ்தவ வாழ்வின்,
அடிப்படைத் தத்துவத்தை,
அயலானுக்கு
அறிவிக்க வேண்டும்!

கல்லறைகளை குறித்துக்
கவலை கொள்ளாமல்,
கல்லறைக்குள்,
''அவர் இங்கு இல்லை!''என்ற
தத்துவத்தைத்
தரிக்க வேண்டும்!

''கொரோனா' வைக் குறித்து
குழம்பிக் கிடக்காமல்,
கொல்கொதாவின் வெற்றிகுறித்து,
விசுவாச வீரம் கொள்ளவேண்டும்!

சிறையிருப்பிலும் இயேசு
செயலாற்றுகிறவர் என்பதை
சிந்தையில் கொள்ள வேண்டும்!

✦

ஆலயங்கள் மூடப்பட்டதைக் குறித்து
அவநம்பிக்கைத் தேவையில்லை!
விசுவாசம் இழந்த
தோமாவுக்காக
வீட்டுக்குள் தோன்றி தன்,
காயங்களை காட்டி இயேசு
கடமையை உணர்த்தியதால்தான்,
இந்தியாவுக்கு
கிறிஸ்தவம் வந்தது என்பதை,
எண்ணுதல் வேண்டும்!

அன்று,
சாதித் தீண்டாமையையும்
இயேசு ஒழித்தார்;
இன்று- தோமாவை, தொட்டுப்பார்க்க,
அனுமதித்ததால்,

சமூக விலகம் என்ற
பகுத்தறிவு தீண்டாமையையும்,
இயேசு அழித்தார்!
சிலுவை நிகழ்வால், சீடர்கள்
அறைக்குள் பதுங்கி
அச்சம் கொண்டவேளையில்-
வெளியில் சென்று,
வெற்றி ஊழியம் செய்த,
வீர பெண்களை நினைத்து
விசுவாசம் கொள்ளவேண்டும்!

நாம்,
புதைக்கப்படும் கிறிஸ்தவர்கள் அல்ல;
விதைக்கப்படும் கிறிஸ்தவர்கள்
என்பதை,
விளங்கிக் கொள்ள வேண்டும்!

✦

ஊரடங்கள் கலங்கி
உள்ளே இருக்கும்-
உங்கள் வீட்டுக்குள் தோன்றி,
உயிர்த்தெழுந்த இயேசு,
உரைக்கிறார்...
''உங்களுக்கச் சமாதானம்!''
கொல்கதாவை வென்றநான்,
கொரோனாவையும் வென்றேன்!''

●

*(கொரோனா நுண்ணுயிர் கிருமியின் தாக்கத்தால், உலகம் முழுதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்ட, சூழ்நிலையில், 12. 04.2020 அன்று, இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த ஞாயிறு அன்று எழுதப்பட்ட கவிதை!)*

# கிருமியும்- கருமியும்!

வைரசின் வருகையால்
கிறிஸ்தவத்தின்
அத்தனை
ஆலயக் கதவுகளும்
மூடப்பட்டுவிட்டன;
ஆத்துமாக்களின்
இதயக் கதவுகளையும்
இணைத்தே!
இதுவரை
ஆண்டவரின் பெயரால்
அற்புதங்கள் செய்தவர்கள்,
'தனிமைப்படுத்துதல்' என்ற
வார்த்தையை வைத்து
தப்பித்துக் கொண்டனர்!

இதுவரை
ஆடுகளின் காம்பு வலிக்காமல்,
காணிக்கைப் பால் கரந்த
நல்மேய்ப்பர்கள்,
ஆடுகளுக்கு
உணவுதாராமல் ஒளிந்து கொண்டனர்!
'பக்கெட்டி'ல் காணிக்கை எடுத்த
பணக்கார பரிசுத்தவான்கள் எங்கே?

தசம பாகம் குறித்து
தலை தெறிக்க பிரசங்கித்தவர்கள்,
தலைகளை உள்ளே
இழுத்துக் கொண்டனர் இங்கே!

எடுப்பது மட்டுமல்ல...
கொடுப்பதும் ஊழியம் தானே?
திறப்பின் வாசலில் நின்று
தேம்பி அழுவதைவிட,

தெருவின் வாசலில் நின்று
தேம்பி அழுபவர்களுக்கு,
உணவு வழங்காத,
ஆவிக்குரிய ஐஸ்வரியவான்களை,
ஏழை லாசருக்களின் மூலம்,
எட்டி உதைக்கிறார்
இறைவன்!

கள்ளத் தீர்க்கதரிசனம் உரைத்து
கட்டாயக் காணிக்கை
வசூலிக்கும்,
ஆவிக்குரிய ஆன்லைன் வியாபாரிகளுக்கு,
ஐயோ!
பட்டினி கிடக்கும்
ஏழைகளுக்கு
உபவாசத்தை போதிக்கும்,
இந்த இறைவல்லுநர்களை கண்டு
இயேசுநாதர்,
எரிச்சலடைகிறார்!

கல்விப் பணியையும்,
மருத்துவப் பணியையும்,
இலவசமாக செய்ய,
மிஷனரிகளின் ஆன்மாக்கள்,

இந்த,
வேத வியாபாரம் கண்டு
விம்மி அழுகின்றன!

✦

இயேசுவின்,
இறை ஊழியத்தில்,
உணவு வழங்குதலும் ஒன்று!;
கிறிஸ்தவன் அதைச் செய்தால் நன்று!

நடனம் ஆடியவர்கள்
நற்பணிகள் செய்யட்டும்!
புகையின் நடுவே போதித்தவர்கள்-உணவு
பொட்டலங்கள் வழங்கட்டும்!
வண்ணவிளக்குகளின் கீழ்
வார்த்தை ஜாலங்கள் செய்தவர்கள்,
தெரு விளக்குகளின் கீழ்நின்று
திருப்பணி செய்யட்டும்!

காணிக்கை மூட்டைகளை விட,
அரிசி மூட்டைகளே,
அத்தியாவசியத் தேவை!
திருச்சபைகள்,
தெருச்சபைகளாகட்டும்!
ஜெப கோபுரங்கள்
உதவி கோபுரங்களாகட்டும்!
கிரியை இல்லாத விசுவாசம் செத்தது
என்கிறது வேதவசனம்;
நல்ல சமாரியான்களை
நடைபாதைகளில் காணவில்லை
என்பதே நிதர்சனம்!

✦

கிறிஸ்தவனே கேள்!
கிருமியை விட
கருமியே ஆபத்தானவன் என்று
கர்த்தர் உரைக்கிறார்!

●

## ‘ஹைடெக்’ கிறிஸ்மஸ்!

ஏழைகள் என்றென்றும்
இருக்கும் வரைக்கும்,
பணக்கார ஊழியர்களுக்கு,
பஞ்சமில்லை!
பொருளாதார ஆசீர்வாதம்
என்று போதித்தே,
‘பூர்ஷ்வா’க்களாக வாழுகின்றனர்!

எளிமையில்தான்
இறையியல் இருக்கிறது;
எடுப்பதில் அல்ல;
கொடுப்பதில்தான்
பொருளாதார ஆசீர்வாதம்
புறப்படுகிறது!

கந்தலை அணிந்த
கிறிஸ்து பிறப்பில்,
இவர்கள் அணியும்
காலணிகள் கூட
பல ஆயிரங்கள்தான்!
போகட்டும்!

உக்கிராணக் கணக்கை இவர்கள்
ஒழுங்காக எழுதாததால்,
நியாயத் தீர்ப்பு நாளில் இவர்கள்,
நிர்வாணமாக நிற்பார்கள்!

✦

சைக்கிளில் சென்ற
பேராயர். அசரியாவும்,
பேருந்தில் பயணம் செய்த
பேராயர். ஞானாபரணம் ஜான்சனும்,
இன்றுவரை
இதயங்களில் வாழுகிறார்கள்!

உங்கள்,
ஆடம்பரங்களினால்,
கிறிஸ்து பிறப்பு அன்றும்,
இயேசு கிறிஸ்துவை ஏன்
சிலுவையில் அறைகிறீர்கள்?

ஏழ்மை என்பது வேறு;
தாழ்மை என்பது வேறு!

✦

எளிமைக்கும், வறுமைக்கும்
வித்தியாசம் உண்டு!

தோற்றத்தில் கந்தல் அணிவது
வறுமை;
இதயத்தில் கந்தல் அணிவது
எளிமை!

உங்கள்,
மேட்டுகுடி வாழ்வு கண்டு
மெழுகுவர்த்திகள் அழுகின்றன!

சீரியல் செட், கிறிஸ்மஸ் மரங்களின்,
பளபளப்பில்,
பரவசப்படும் கிறிஸ்தவர்கள்,
சீர்மிகு சிலுவையின்,
ஆணிகளுக்கு அச்சப்படுகின்றனர்!

வீட்டில் இருக்கும் தாத்தாக்களை
அனாதை ஆசிரமங்களுக்கு அனுப்பிவிட்டு,
வீட்டுக்கு வரும்,
கிறிஸ்மஸ் தாத்தாக்களை கண்டு,
கைதட்டி களிகூறும்,
கிறிஸ்து பிறப்பை எண்ணி,
கர்த்தர் கவலை கொள்கிறார்!

பல சமயங்களில்,
வாசலில் தொங்கும்,
60-வாட்ஸ்,
வால் நட்சத்திரங்கள் கூட,
வாழ்வையும், வழியையும்,
மறைத்து விடுகின்றன!
நகையணியாத கிறிஸ்தவர்களின்
ஆடம்பரங்களையும்,
மேட்டிமைகளையும்
ஆராயும் போது,
நகை அணிந்த கிறிஸ்தவர்களே,
நடைமுறையில் இரட்சிக்கப்பட்டவர்கள்!

✦

பட்டுப் புடவை மரியாளும்,
கோட்-சூட் யோசேப்புவும்,
ஐ-போன் மேய்பர்களும்,
ஆடிகார் சாஸ்திரிகளும்,

ஏ.சி. தொழுவமும்,
பரமசேனையின் ‘தங்லீஷ்’ துதியும்
நிரம்பிய...
இன்றைய,
ஆவிக்குரிய திருச்சபைகளின்
‘ஹைடெக்’ கிறிஸ்து பிறப்பை,
ஆண்டவர் மறுதலிக்கிறார்!

தாழ்மையின் தத்துவம் நிறைந்த
கிறிஸ்து பிறப்பை முழங்குவோம்,
அடுத்த தலைமுறைக்கு
அதை வழங்குவோம்!

●

# சாத்தானின் சிறுநீர்!

கடவுளால்
அழைக்கப்பட்ட பல
முற்பிதாக்கள் குடியில் மயங்கி...
நெடியில் அழைப்பை இழந்தார்கள்!

குடி; சாத்தானின் சிறுநீர்;
சர்ப்பத்தின் உமிழ்நீர்;
குடுவைக்குள் அடைக்கப்பட்ட
எகிப்தின் வாதை!

முதலில்
மனிதன் குடிக்கிறான் - பின்
குடி மனிதனைக் குடிக்கிறது!

குடியின் வரலாறு குழப்பமானது!
உழைப்பின் களைப்புக்காக
கண்டுபிடிக்கப்பட்டது- பின்,
கலாச்சார திளைப்பாகவும்,
கயமைகளை பிழைப்பாகவும்
காலூன்றியது!

திராட்சை ரசம்,
தென்னங்கள்,
பனங்கள் என்ற

இயற்கை மாறி
செயற்கை விஷம் சேர்ந்தபின்...
குடியின் மாபெரும் பசிக்கு
மானுடம் இரையானது!

இயேசு...
கானா ஊர் கல்யாண வீட்டில்
தண்ணீரை
'ஒயினாக', மாற்றினார்
என்பவர்களுக்கு
ஒரு செய்தி!

புளிப்பான போதை ரசம் வேறு...
புளிக்காத விருந்து ரசம் வேறு...

இயேசு...
புளிப்பில்லா
ரசத்தையே புதுமை செய்தார்!
மதியை மயங்கச் செய்யும்
'காடியை',யை
சிலுவையில் மறுத்தார்!

குடி...
பாவங்களுக்கு வேரானது;
புதைகுழி நிறைந்த ஆறானது!

எவரையும் கெடுக்காமல்
என்னை கெடுத்து குடிக்கிறேன்
என்பவருக்கு,
''உன் சரீரம் ஒரு ஆலயம்;
அதில் சாக்கடை நீர் கலப்பது
என்ன நியாயம்?'

குடிகாரன் தரித்திரன் ஆவான்;
குடியினால் வீதியில் வீழ்வான்!
இறுதியாக ஒன்று...

எழுந்து கட்டுவோம் வாருங்கள்
என்பது இறையியல் அழைப்பு!
உச்சபோதை தலைக்கேறி
வேட்டியை கூட கட்ட முடியாமல்
வீழ்ந்து கிடந்தால்...
அழைத்தவருக்கோ திகைப்பு!

●

# என் வேளை இன்னும் வரவில்லை ...!

திருச்சபைகள் மீதான
நீதிமன்ற வழக்குகள் இன்னும்
நிலுவையில் இருப்பதால்...
என் வேளை இன்னும் வரவில்லை!

கடைசி மணி வேளை தாண்டியும்
சிலர் காத்திருப்பதால்
என் வேளை இன்னும் வரவில்லை!

இரசாயனக் கழிவுத் தண்ணீரால்...
திராட்சை ரச அற்புதம்
நிகழவில்லை என்பதால்...
என் வேளை இன்னும் வரவில்லை!

அனைத்து ஊழியங்களின்
'ஆடிட்டிங்', ரிப்போர்ட்
வரவில்லை என்பதால்...
என் வேளை இன்னும் வரவில்லை!

என் 'சந்தா', புதுப்பிக்கப்படாததால்...
என் வேளை இன்னும் வரவில்லை!

சிறுமைப்பட்டவர்களுக்கான
சிலுவை எது? என்று தெரியாததால்
என் வேளை இன்னும் வரவில்லை!

வேதாகமம் இன்னமும்
விற்கப்பட்டுக்கொண்டிருப்பதால்
என் வேளை இன்னும் வரவில்லை!

மேல் வீட்டறை பூட்டியே கிடப்பதால்
என் வேளை இன்றும் வரவில்லை!

புளித்த மாவு அப்பம் ஆகாததால்
என் வேளை இன்னும் வரவில்லை!

உங்கள் சாதித் தீண்டாமை
அழுக்குத் துணிகள் இன்னும்
சலவைசெய்யப்படாததால்
என் வேளை இன்னும் வரவில்லை!

சகேயுக்கள் அதிகார மரத்திலிருந்து
கீழே இறங்க மறுப்பதால்
என் வேளை இன்னும் வரவில்லை!

என்னை விற்பதற்கான
பேரம் படியாததால்
என் வேளை இன்னும் வரவில்லை!

கல்லறை இன்னும்
திறக்கப்படாததால்
என் வேளை இன்னும் வரவில்லை!

பத்து தீவட்டி கன்னிகைகளும்
கல்யாண மண்டபத்தில்
தூங்கிக் கொண்டிருப்பதால்...
என் வேளை இன்னும் வரவில்லை!

ராகேல்களின் கூக்குரல்கள்
இன்னும் ஓயாததால்
என் வேளை இன்னும் வரவில்லை!

கள்வனைப் போல்
காத்திருக்கிறேன்!
விரைவில் என் வேளை வரும்;
அன்று...
ஆடுகளும், ஓநாய்களும்
களைகளும், கதிர்களும் -
பிரிக்கப்படும்;
அநீதியும், ஆகாதவையும்
எரிக்கப்படும்!

●

# காணாமல் போன ஒற்றை ஆடு கண்ணீருடன் பேசுகிறது

எதற்காக
என்னை மீட்க வருகிறீர்கள்?
நான் இங்கேயே
இருந்துவிட்டு போகிறேன்!
மேய்ப்னையே
அடித்துப் புசித்த உங்கள்
கசாப்புக்கடை
கருணை கண்டு வியக்கிறேன்!

நீங்கள்
நல்ல மேய்ப்பர்கள் என்றால்
நானும் உடன் வருவேன்!
நீங்கள்... கள்ள மேய்ப்பர்களாக,
கயமைத்தனம்
உள்ளவர்களாக இருப்பதால்
உடன் வர அஞ்சுகிறேன்;
என்னை விட்டுவிடுங்கள் என
கெஞ்சுகிறேன்!

இயேசு என்னை
உதாரணம் கூறியதால்
அவருக்கு தோத்திரம்:
தேவ ஆட்டுக்குட்டி அவருக்கு
நீங்கள் செய்த கொடுமை
எண்ணி எனக்கு ஆத்திரம்!
அரசியல் முடைபிடித்த
உங்கள் தொழுவத்தை விட....
இப்போது நான் இருக்கும் இடமே
பாதுகாப்பானது!

உங்கள் மீட்பின் தத்துவம் குறித்து
எனக்கு அச்சமுண்டு;
மீட்பரையே மேய்ந்தவர்கள்
அல்லவா நீங்கள்?

யாக்கோபுவின் அரசியலால்
இன்றுவரை எங்கள் மீது
தேர்தல் கரும்புள்ளிகள்; காரணம்
பெரும்புள்ளிகள்!

ஆறறிவு உள்ள நீங்கள்
இனி எங்களை மீட்க வேண்டாம்;
ஐந்தறிவு உள்ள நாங்கள் உங்களை
மீட்க உத்தேசித்துள்ளோம்!

வெள்ளாடு, செம்மறி ஆடு என
எங்களை இரண்டு பிரிவாகத்தான்
பிரித்தார் கடவுள்; ஆனால்

மனிதர்களாகிய உங்களுக்குள்
எத்தனை சாதிபிரிவுகள்?

‘இலைகள், தந்து எங்களுக்கு
‘விலைகள், வைத்தீர்கள்!
எங்கள் புல்வெளிகளை தேர்தல்
போர்க்களமாக்கினீர்கள்!
அமர்ந்த தண்ணீரை
அரசியல் குட்டையாக்கினீர்கள்!
கோலை தடியாக்கி....
தடியை கோலாக்கினீர்கள்!

வாசல் வழியாக வராமல்,
வழக்கறிஞரோடு வருகிறீர்கள்!
பலிபீடத்தில் உயிர்தியாகம் செய்த
எங்களை பகடைகாய்களாக்கி
‘பாலிடிக்ஸ்’, செய்கிறீர்கள்!

மந்தை எங்களுக்கு தந்தை உண்டு;
மனிதர்கள் உங்களுக்கு சிந்தை உண்டா?
எதற்காக என்னைத் தேடுகிறீர்கள்?

காரணமாகத்தான் நான்
காணாமல் போனேன்!
உங்களிடம் மாட்டிக்கொண்ட
99-ஆடுகளை மீட்க
நான் வழக்குத்தொடுக்க விருக்கிறேன்;
உங்கள் ஆதாயத்திற்காக
அடைத்து வைத்திருக்கும்
அவைகளை விடுவிக்க வேண்டுகிறேன்!

மாண்புமிகு மனிதர்களே!
நல்ல மேய்பர்களை

நாங்களே
தேர்ந்தெடுத்துக்கொள்கிறோம்!
எங்களை கண்டுபிடிக்க
அலைய வேண்டாம்:

உங்கள் சந்தர்ப்பவாத
சாதி சமுதாயத்தைவிட
இப்போது இருக்கும் முட்புதரே
வசதியாக இருக்கிறது;
பிறகு பேசலாம்...
பேசிபேசியே எனக்குச்சற்று
அசதியாய் இருக்கிறது!

●

# ஆணிகள் பேசுகின்றன!

இயேசுவை
சிலுவையில் அறைந்ததால்
இன்று வரை அவமானம்
எங்களுக்கு....

இயேசுவை
அறைந்ததால்
எங்களுக்கும்
காயம் இருக்கிறது!

நாங்கள் அம்புகள்;
எய்தவர்கள்
மனிதர்களே!

நாங்கள் இயேசுவை
சிலுவையில்
இணைத்தோம்!

நீங்களோ
சிலுவையிலிருந்து
இயேசுவை பிரித்தீர்கள்;
சிலுவையை குளிர்காய
எரித்தீர்கள்!

நாங்கள்...
தலைகொழுத்தவர்கள் அல்ல
தலையில் அடிவாங்கும்
அடிமைகள்;

எடுப்பார் கைப்பிள்ளை
பொம்மைகள்!
மனிதர்களே!
நாங்கள் துருப்பிடிப்பவர்கள்;
நீங்கள் திமிர்பிடித்தவர்கள்!

ஏனெனில்.
நீங்கள்
இறையியல் படித்தவர்கள்;
எங்களை வைத்து
இயேசுவை அடித்தவர்கள்!

இயேசுவை
அறைந்ததால்
அவமானம் கொண்டோம்;
லூத்தர்
ஆலயக் கதவுகளில்
அறைந்த ஆணிகளால்
பெருமை கொண்டோம்!

இயேசுவின்
சீடர்கள் நாங்கள்
திரும்பத் திரும்ப
எங்களை அறையும்
சுத்தியல்களை
மன்னித்தோம்..

பல அளவுகளில்
பரந்து கிடக்கும்

நாங்கள்
காலண்டரை...
சவப்பெட்டிகளை....
திசைகாட்டிகளை....
அருளுரை மேடைகளை
ஆலயகதவுகளை
இணைக்கும்
அச்சாணிகள்!

நாங்கள்....
‘கால்’, ஆணிகள் அல்ல;
காலத்தை வென்ற
ஆணிகள்!
எங்களை
கண்டடைந்தவர்கள்
ஞானிகள்!
இறுதியாக எங்கள்
வேண்டுகோள்;
கூடார ஆணிகள்
எங்களை
கொலைகார ஆணிகளாக மாற்றி விடாதீர்கள்!

எனெனில்...
இயேசுவின்
ரத்தப்பழியும் பிசுக்கும்,
இன்னும்
எங்கள் மேல் இருக்கிறது;
அதற்கு,
மாற்றுபலன் செய்ய
எங்களுக்கும்
மனது இருக்கின்றது!

●

## வெஜ் - நான் வெஜ்!

திருவிருந்து
சைவமா? அசைவமா?

இயேசுவின்
உடலையும், உதிரத்தையும்
அடையாளமாய் உண்பதால்
அசைவமே!

அந்த அடையாளத்தை
மறந்தால் சைவமே!

காயீனின்
காய்கறிகளை மறுத்ததால்
கடவுள்
நான் வெஜ் பிரியரா?

பாவமன்னிப்பின்...
பலிகோட்பாடு உடல் மற்றும்
உதிரத்தில் உள்ளது;

அந்த உடன்படிக்கை
கோட்பாட்டை புரிந்து கொண்டால்
நல்லது!

சைவமான கனியை உண்டதால்
அசைவமான பலியை
ஆதி ஏதேனில் ஆண்டவர் செய்தார்;
அதன் அடையாளமாய்
தன் குமாரனை கொல்கொதாவில்
சமையல் செய்தார்!

மன்னா தின்று சலித்துபோன
இறைமக்கள் அசைவம் கேட்டு
ஆர்ப்பாட்டம் செய்ததால்..
விண்ணகமே
விருதுநகர் மெஸ் ஆனது;
கடவுளுக்கும் கடுப்பாகிப் போனது!

எலியாவிற்கு காகம் கொண்டுவந்த
இறைச்சி...
கடையில் வாங்கவில்லை;
காகம், இறைச்சியை உண்ணாததால்
தற்காலிக சைவமானதா? தெரியவில்லை!

ஏலியின் மக்களின் இறைச்சி வெறி....
ஏலிக்கும் சாபமானது;
இறைச்சியின் இறையியல்
கதை நீளமானது!

இயேசு...
சீடர்களுக்காக
மீனைச் சுட்டார்;
நமக்காக தன்னைப் பிட்டார்!

புசித்து குடித்து பூரிப்பாகலாம்;
ஆட்டையும், மாட்டையும்
அடித்து சமையல் செய்யலாம்!
ஆனால்....

தொண்டையில் கத்திவைக்காத
நீதிமான் கூட
கொழுப்படைப்பில் சாகலாம்!

நம் பிரியாணி
கொண்டாட்டங்களால்...
பிதா சலிப்படைந்திருக்கிறார்!
மனம் திரும்பியதால்தான்
மைந்தனுக்கு மாட்டிறைச்சி
கிடைத்தது;
மனம் திரும்பாதவனுக்கு
பன்றியின் தவிடு கூட
கதவு அடைத்தது!

வாழ்வு தரும் வார்த்தை உணவு
அவரிடம் உள்ளது;
ஆகாரமல்ல...
அவர்தரும் ஆதாரமே
நல்லது!

●

# பன்றிகளின் இறைவேண்டல்!

எல்லாம் வல்ல கடவுளே!
என்ன பாவம் செய்தோம்
நாங்கள்?
ஏமாற்றிய நண்பர்களால்
எல்லாம் தொலைத்த
இளைய குமாரனுக்கு
இறுதி நண்பர்கள்
நாங்கள் தானே?
அருவருப்பின்
அடையாளங்களான
நாங்களும் படைப்பு கடவுளின்
பாத்திரங்கள் தானே!

தீண்டாமை கொடுமையால்
தினம் அழும் நாங்கள்,
ஆடுகளை மேய்த்த யூதர்களுக்கு
அருசுவை உணவானோம்;
வளர்ப்புத் தொழிலில்
நல்ல பணமானோம்!

உம் அனுமதியால்
ஏதும் அறியா எங்களை
'லேகியோன்',
பயன்படுத்திக்கொண்டான்!

கர்த்தரின் பலிபீடத்தில்
பலியாகும் பாக்கியம்
கிடைக்காத நாங்கள்,
கடலில் அவருக்காக பலியாகும்
பேறு பெற்றோம்;
இறையாண்மை கற்றோம்!

முத்துக்களின் மதிப்பும்,
திருச்சபையின்
சொத்துக்களின் மதிப்பும்,
எங்களுக்கு தெரியாது; ஆனால்,
உமது மதிப்பு தெரியும்;
ஊழிய மேன்மை புரியும்!

கடுமையான
உபதேசங்களுக்கு
எங்களை உவமையாக்கினீர்;
அதனால் எங்களையும்
பெருமையாக்கினீர்!
ஆடுகள் போல் எங்களுக்கும்
தொழுவம் உண்டு!
எங்களுக்கும்
நீர்தான் மேய்ப்பன் இன்று!

எங்களை புசிக்கக் கூடாது
என்று சொல்லியே
எங்களை புசிப்பவர்களுக்காக
நாங்கள்
மன்றாடுகிறோம்!

மூக்குத்தி அணிந்த
எங்கள் முகம்,
முட்டாள் பெண்களுக்கு
உதாரணமானது;

மற்றபடி எங்கள் முகம்
உமது படைப்பில்
அழகானது!

எல்லாம் வல்ல கடவுளே!
எங்கள் வாழ்வில்...
'சகதி', உள்ளது; ஆனால்,
'சாதி', இல்லை!
மனித கழிவுகளைதான்
நாங்கள் உண்கிறோம்;
மனிதர்கள்,
மனிதர்களையே
உண்பதுபோல்,
நாங்கள்
உண்ணுவதில்லை;
ஏற்றத்தாழ்வுகளை
எண்ணுவதில்லை!

ஆயினும் நாங்கள்
இறை சித்தத்தை
ஏற்றுக்கொண்டு,
கடலில் குதித்து
தற்கொலை செய்தோம்,
அசுத்த ஆவிகளை அழித்து
ஊழியம் செய்தோம்;

அதன் நிமித்தம் உமது
இராஜ்ஜியத்தில்
எங்களை நினைவு
கூருவீராக!

●

# மீன்கள் பேசுகின்றன!

கடவுளின் படைப்பில்
கனமானாவர்கள் நாங்கள்;
பணமானவர்களும்
நாங்கள்!

சமுத்திரம்...
எங்களது தாய்வீடு
சமையல் சட்டிகள்
எங்கள் ஈடுகாடு!

திமிங்கலமாகி
திருப்பணி செய்தோம்;
செரிமானம் செய்யாமல்
யோனாவை கரையில்
உமிழ்ந்தோம்!

செங்கடல், யோர்தான்
பிரிந்த போதெல்லாம்
எங்கள் பயணம் தடைசெய்து
இறைபயணம்
தொடர வழிவிட்டோம்;
வணங்கி விட்டோம்!

உப்புத்தண்ணீரில்
வாழ்ந்த எங்களுக்கு
ஜீவத்தண்ணீர் கிடைத்தது;
அதனால் நாங்கள்
அழுவதில்லை!

தரையில் நாங்கள் வாழ்வதில்லை
அரசியல் வலையில்
வீழ்வதில்லை!

காலில் விழும் கலாச்சாரம்
கடலில் இல்லை;
நல்லவேளை எங்களுக்கு
கால்களே இல்லை!

நாங்கள் 'தங்க மீன்கள்', அல்ல
இயேசு 'தந்த' மீன்கள்
அவரது 'சொந்த' மீன்கள்!'

நாங்கள் விண்மீன்கள் அல்ல;
கர்த்தரின் கண்மீன்கள்;
கடலில் வாழும் யென்மீன்கள்!

எங்களை பிடித்த சீடர்களை
மனிதர்களை பிடிப்பவர்களாக
இயேசு மாற்றிவிட்டார்;
மறுவாழ்வு ஏற்றிவிட்டார்!

இரண்டு மீன்களாக
இருந்த நாங்கள்
இயேசுவின் கரங்களில்,
ஐயாயிரம் மீன்களாக
பெருகினோம்!

ஐயாயிரம்
மீன்களான எங்களை
சில கருப்புகரங்கள்,
இரண்டு மீன்களாக
கணக்கெழுதுவது
கண்டு மனம் வருந்தினோம்!

இயேசுவைப்போல் கணக்கு வழக்கில்
கண்ணியமானவர்கள்
நாங்கள்!

அதனால்தான் பாக்கி இல்லாமல்
வரிப்பணம் தந்தோம்;
வெள்ளிப்பணத்துடன்
கரைக்கு வந்தோம்!
மச்சங்கள் நாங்கள்
மிச்சங்கள் வைப்பதில்லை!

மனிதர்களுக்கு உணவாகும்
எங்களுக்கு உணவு
தருபவர் கடவுளே!
இயேசுவுக்கு மிகவும்
பிடித்த நாங்கள்...

அவர்
உயிர்தெழுந்த பின்புகூட
உணவானோம்...
அதனால் உயிர்த்தெழுதலில்
உறவானோம்!

திருச்சபையே; நில்...!
பதில் சொல்...!
இயேசு பிட்டுத்தந்தது
சுவிசேஷ மீன்!

ஆனால்
கடைசி கிறிஸ்தவனின்
கைக்கு வந்ததோ
கருவாட்டு முள்?

இயேசுவின் உத்தரவால்
வலை கிழியதக்க
வந்தவர்கள் நாங்கள்!
வலைகளை
திருடியவர்கள் எவர்?

●

# கிறிஸ்த்துப் பிறப்பு வாழ்த்து!

எடுப்பது அல்ல;
கொடுப்பது கிறித்ஸ்துப் பிறப்பு!
பிரிப்பது அல்ல;
இணைப்பது கிறித்ஸ்துப் பிறப்பு!

ஏழ்மை அல்ல;
தாழ்மை கிறிஸ்த்துப் பிறப்பு!
பிரியாணி அல்ல;
சிலுவையின் அச்சாணி கிறிஸ்த்து பிறப்பு!

உற்சாக ஒலி அல்ல;
உன்னத பலியே கிறிஸ்த்துப் பிறப்பு!
பண்டிகை அல்ல;
உடன்படிக்கையே கிறிஸ்த்துப் பிறப்பு!

பொருளாதாரம் அல்ல;
அருளாதாரமே கிறிஸ்த்துப் பிறப்பு!

தீவனத் தொட்டியில்
தீனியானார்;
வீழ்ந்த மானுடம் விண்ணகம் செல்ல
ஏணியானார்!

சிறுபான்மையை...
பெரும்பான்மையாக...
கொசுக்கள் மத்தியிலும்...
பசுக்கள் மத்தியிலும்... பிறந்த,
சிசுபாலன் இயேசு...
நுண்கிருமிகள் இல்லா
சீயோனுக்கு அழைத்துச் செல்வார்;
அதற்குமுன் சொல்வார்;
'தேவை முககவசம் மட்டுமல்ல;
அகக்கவசமும் கூட!

காரியேல் தூதன் சிறகிலே
போக்குவரத்து புகை!
GPS - உதவியுடன்
தொழுவம் வந்த ஞானிகள்!
செல்போனில் செய்தி கிட்டிய
மேய்ப்பர்கள்!

கருத்தரிப்பு மையங்கள்
பெருகிப்போன ஊரிலே...
பரிசுத்த ஆவியால் கருத்தரித்த
கன்னி மரியாள்!

யூ-டியூப் Live-ல் யோசேப்பு!
ZOOM மீட்டிங்கில் முடிந்தது
கிறித்துப் பிறப்பு!

இன்று...
'ஸ்மார்ட் சிட்டி',
ஆன ஊரிலே.....
அழுகுரல் இல்லா....
அரசியல் இல்லா.....
ஆணவம் இல்லா.....

அதிகாரம் இல்லா.....
பிரிவினை இல்லா...
‘ரியல் எஸ்டேட்’, இல்லா ...
சாதி இல்லா சமத்துவ
பெத்லேகம் தேவை!

மனசுக்குள்
மனித குமாரன்
பிறப்பாராக;
புரட்சியின் கதவுகளை
திறப்பாராக!

●

# சித்தியும் - முக்தியும்!

சித்தி என்பது மரணம்...
முக்தி என்பது ஜனனம்!
சித்தி என்பது இறையியல்...
முக்தி என்பது மெய்யியல்!
சித்தி என்பது சிறு உலகம்...
முக்தி என்பது பேருலகம்!

சித்தி என்பது சிற்றின்பம்...
முக்தி என்பது பேரின்பம்!
சித்தி என்பது ஆழி...
முக்தி என்பது ஊழி!
சித்தி என்பது இன்மை...
முக்தி என்பது மறுமை!
சித்தி என்பது பூமி...
முக்தி என்பது வானம்!

முத்தியின் முதல் நிலை சித்தி...
சித்தியின் இறுதி நிலை முக்தி!
சித்திப்பெற்றவன் சித்தன்!
முக்திப் பெற்றவன் பித்தன்!
புத்தி புதைகுழி...
சித்தி மறுவழி!
முக்தி பெருவெளி!

பட்டினத்தார் கரும்பும்
புத்தனின் போதிமரமும்
இயேசுவின் சிலுவையும்
ஈசனின் சங்கும்
முக்தியின் மோனக் குறியீடுகள்!

சித்திப் பெற்றவன்
உள்ளுக்குள் இருந்து
வெளியே தேடுபவன்!
முக்தியடைந்தவன்
வெளியே இருந்து
உள்ளுக்குள் தேடுபவன்!

சித்திப் பெற்றவன் மனிதன்...
முக்திப் பெற்றவன் இறைவன்!
சித்தி காரியம்...
முக்தி கருவி!

சித்திப்பெற்று செத்தவன்
முக்திப் பெற்று வாழ்பவன்!
புத்தியை தூக்கி எறி;
சித்திக்கு அலைந்து திரி...
முக்திக்கு திரியாய் எரி!
என்னை அதற்கு
எண்ணெய்யாக்கு!

●

# இரண்டாம் சலவை!

துணியை வேகத்துடன்
அடித்து துவைத்த
மனிதனைக் கண்டு
ஆற்றின் பாறை அமைதியாககூறியது;
நீ எத்தனை முறை என்மீது
அடித்துத்து வைத்தாலும் நான்
அமைதியாக அமர்ந்திருப்பேன்;
ஆவேசம் அடைய மாட்டேன்!

என்மீது நீ
அதிகாரம் கொண்டாலும்
உன் அழுக்கை போக்குவது
அடியேன்தான்!

துணியிலிருந்து
வெளியேறும் நுரைகள் எல்லாம்
உன் சமுதாயக்கறைகள்!

துணியின் அழுக்கை நீ
தேய்க்கும் சோப்பு நீக்குகிறது;
உன் உள்ளத்தின் கரையோ ஒழியவில்லை!

‘உன் அழுக்குகளால்
யோர்தானாக இருந்த நதி...

கூவம் ஆறாக குறுகிவிட்டது!
பொதி சுமக்கும் கழுதைகள்
போராட்டம் நடத்தாததால்
சபையில் உன் சலவை ஊழியத்தை
நீ சரியாக செய்வதில்லை!

எத்தனை சலவைகள்
செய்தாலும் உன்
சாதி அழுக்க
நீக்க முடியவில்லை!

நீ சேகரித்த
அழுக்கு துணிகளுக்குள்...
பரிசேயரின்
அங்கிகளும் இருக்கின்றன;
மகதலேனாக்களின்
அங்கிகளும் இருக்கின்றன!

அழுக்கில் ஒன்றுகூடிய
அங்கிகள்...
வெளுப்புக்குப்பின்
வெவ்வேறாக விரோதம்கொள்கின்றன,
தீண்டாமையை தங்களுக்குள்
திணித்துக்கொள்கின்றன!
சாதி 'அத்தர்'களை பூசிக்கொள்கிறன!
வருமானமுள்ள வாடிக்கையாளர்
துணிகளுக்கு குறிகள் இடும் நீ...

பாவமூட்டைகளை பரிசுத்த
ரத்தத்தால் வெளுத்த
சிலுவைக் குறியைப் பற்றி
சிந்திப்பதே இல்லை!

சிலுவையில் இயேசு
அழுக்கானார்;

மானுடம் வெளுப்பானது!
இயேசு...
சமுதாய அழுக்கை
நீக்கிய சவக்காரம்;
சரியான சலவைத் தொழிலாளியின்
அவதாரம்!

கொல்கொதா சிகரம்...
விண்ணகத்தின் வெள்ளாவிப்பானை;
பரிசுத்த ஆவி நீராவியாகி...
சலவைசெய்தது சாபத்தின் ஊனை!

இதோ...
இரண்டாம் சலவை வரும்...
எல்லோரும் பாவமூட்டைகளை
சுமந்து கொண்டு ஓடுங்கள்;
அப்போது வானத்தின் சலவைக்காரர்
கழுதையில் அல்ல; குதிரையில் வருவார்;
துணிகளை அல்ல...
துணிகரங்களை சலவை செய்வார்!

அதுவரை...
இன்னும் வேகமாக உன்
நியாயங்கள் கிழியும் வரை என்னை அடி;
ஏற்றுக்கொள்கிறேன் இந்த முள்ளை;
ஏனெனில் நான் இயேசுவின் பிள்ளை!

●

# இயேசுவின் தமிழ்தேசியம்!

யூத இனத்தில் பிறந்த இயேசுவை,
யூதர்கள் பலர் எற்றுக்கொள்ளவில்லை;
இயேசுவும் சோர்வடையவில்லை!
யூத சமுதாயத்தில் சாதிகோட்பாடு இல்லை;
இனக் கோட்பாடு உண்டு!
யூதர், ரோமர், கிரேக்கர்,
கரியேயர், மிதியானியர்,
பெலிஸ்தியர், எபூசியர்
கானானியர், சமாரியர் - என்று
இன்னும் பல இனமக்கள் வாழ்ந்த
நிலவரைவியல் கோட்பாடு கொண்ட
பெரும்பரப்பில்...
இயேசுவும்
இனக்கட்டுப்பாட்டில் இருந்தார்;
ஆயினும் அதைத் துறந்தார்!
''பிள்ளைகளின் அப்பம்
நாய்களுக்கு அல்ல!'' - என்றவர்,
பற்றுறுதியின் அடிப்படையில்
பரம சுகம் தந்தார்!

இன எல்லைகளை அழித்து
'இறையரசு ஒன்றே', என்றார்!

இயேசு எப்படி
தமிழ் தேசியத் தலைவராவர்?

''ஆரியவழி யூதர்,'' என்ற
அடைமொழி -
இயேசுவுக்குப் பொருந்தாது!
தீண்டாமை ஒழிப்பு -
நிலமீட்பு -
வர்க்கப்புரட்சி -
விடுதலை இறையியலாரின் கிளர்ச்சி -என
அத்தனைப் புரட்சியும்
இயேசுவுக்குள்அடக்கம்;
அதுவே தமிழ் தேசியத்தின் துவக்கம்!

தமிழ் மண்ணுக்கு
இயேசு வரவில்லை;
இயேசுவின் தத்துவம்
தமிழ் மண்ணுக்கு வந்தது;
தமிழை ஆட்கொண்டது!

நிலவிடுதலை மட்டுமா
தமிழ் தேசியம்?
இன விடுதலை மட்டுமா
தமிழ்தேசியம்?
மனவிடுதலையும்
தமிழ் தேசியம்!

உலகின் எல்லா இனங்களுக்கும்,
இயேசு
உதவி செய்கிறார்; ஆயினும்
தமிழனுக்கு மட்டும்தான்
தனியிடம் தருகிறார்!

தோமாவிற்கு தனித்து
காட்சியளித்ததால்தான்,
கேரளா வழிவந்த தோமா
பரங்கிமலையில் பலியானார்;
தமிழ்தேசிய வழியானார்!

பாகால் வழிபாட்டு ஆரியர்கள்,
பகுத்தறிவு மாடல் திராவிடர்கள் தாண்டி,
மூத்தகுடி தமிழ் இஸ்ரவேலருக்கு
கானான் தமிழகத்தை மீட்டெடுக்கும்
தமிழ்தேசிய மேசியாவாக இயேசு
களத்தில் நின்று செயலாற்றுகிறார்;
கிறிஸ்தவத் தமிழ்தேசிய
பாதை காட்டுகிறார்!

தமிழ் தேசிய சித்தாந்தம்
தமிழருக்கு மட்டுமல்ல;
தமிழரல்லாத தாழ்த்தப்பட்ட
இனக்குடி விடுதலையும் இந்த
தமிழ்தேசியத்தில் அடக்கம்!

தச்சன் இயேசு -
ஈழத்திற்கும், இஸ்ரவேலுக்கும்
இனப் போராளியே!
மளையாளிக்கும், மார்வாடிக்கும்
ஒடுக்கப்பட்ட இனத்தின்
உரிமைக் குரலே!
தமிழ் தேசியம்; பிரிவினைவாதமல்ல;
தமிழ் தேசியம்; இனஉரிமைவாதம்!

சாதிக்குள் ஒடுக்கப்பட்ட
சாதிக்கான விடுதலை போல -
இனத்திற்குள் ஒடுக்கப்பட்ட
இனத்திற்கான விடுதலையே -
தமிழ்தேசிய விடுதலை!
அழுத்தப்பட்ட அத்தனை
இனக்குடிகளுக்கும்...
தன்னைப் பகிர்ந்தளித்து
தமிழ்தேசிய விடுதலையின்
தத்துவ முதல் அடையாளம்;
தச்சன் இயேசுவே!

●

# தவளையும் – இறையியலும்!

ஒரு ஆய்வுக்கூடத்தில்
அறிவியல் பரிசோதனைக்காக
வயிறு கிழிக்கப்பட்டு
ஆணிகளால் அறையப்பட்ட
தவளை ஒன்று
ஆவேசமாகக் கத்தியது;

‘‘அறிவுகெட்ட ஆய்வாளர்களே!
ஆணிகளில் அறைப்பட்டதால்
இயேசுவை விட நான்
மேலானவன்!

இயேசுவை –
மரச்சிலுவையில் அறைந்தீர்கள்;
என்னை –
மரப்பலகையில் அறைந்தீர்கள்!
இயேசுவைத் துளைத்ததோ
மூன்று ஆணிகள்;
எனக்கோ
நான்கு ஆணிகள்!
ஈட்டியால் இயேசுவின்
விலாவைத் துளைத்தீர்கள்;
என்னையோ –

ஆய்வுக் கத்தியால்
அகலமாய் அடிவயிறு வரை
கிழித்தீர்கள்!

இயேசுவின் தலையில்
முள் முடி;
என்மீதோ
ஆய்வக அமில நெடி!

இயேசு -
மெய்ஞானத்திற்காய்
பாடுபட்டார்; நானோ
விஞ்ஞானத்திற்காக
பாடுபடுகிறேன்!

இயேசு -
ஏழு வார்த்தைகள்
பேசினார் - நானோ
ஏகப்பட்ட வார்த்தைகளால்
உங்களுடன் பேசுகிறேன்!

கத்திய தவளை சற்று
தழுதழுத்து கூறியது;

''இயேசுவை விட
நான் சிறந்தவன்; எனவே
வரலாற்றில், வழிபாட்டில்,
அவரைவிட மேலே எனக்கு
அதிக இடம் வேண்டும்!''

ஆய்வாளர் ஒருவர்
தவளையை ஆற்றுப்படுத்தினார்;

''அன்புத் தவளையே!
அறிவியல் ஆய்வுக்கு உன்னை
அர்பணித்ததால் -

தவளை நீ மனதளவில்
மனிதனானாய்;
தன் சாயலான மனிதர்க்கு
தன்னையே தந்ததால் -
மனிதரான இயேசு
புனிதரானார்!

நாங்கள் உன்னைச் செய்வதோ
உடல் பரிசோதனை;

இயேசுவுக்கு நடந்ததோ
சத்தியப் பரிசோதனை!
அறிவியல் ஆய்வுக்குப் பின் நீ
மரணமடைவாய்;
ஆன்மீக ஆய்வுக்குப் பின் இயேசு
உயிரோடெழுந்தார்!

உன்னால் அவரல்ல;
அவரால் நீ பிழைப்பாய்!
'மேலே', 'கீழே' என்பது
வர்க்க பேதம்;
கிறிஸ்துவே மையம் என்பதே
உண்மை வேதம்!''

இதயம் திறந்த தவளை
இயேசுவை ஏற்றுக்கொண்டு
இறந்தது;
இன்னொரு மனிதனாய்
எங்கோ பிறந்தது!

●

# ஒரு கல்லறைத் தோட்டத்தின் கண்ணீர் கண்டனம்!

கீழ் திசையிலிருந்து ஒரு
கிறிஸ்தவக் கல்லறைத் தோட்டத்தின்
கண்டனக் குரல்
கண்ணீரோடு ஒலித்தது;

''செல்லாமற் போன
மனிதக் காசுகள்,
செல்லரித்துப் போகும்
மண் உண்டியல் நான்!

சாதி வேறுபாடுகள் உள்ள
உங்கள்...
சபைக்கு வெளியே உள்ள
சமத்துவபுரம் நான்!
''எலக்ஷனில்' எதிர்எதிர்புறம் நின்ற
இருபார்ட்டிகளின் இறுதிமுடிவில்
ஒரே 'பார்ட்டியாக' இணைக்கும்,
உக்கிராணத் தோட்டம் நான்;
உயிர்த்தெழுதலின் வாய் நான்!

உங்கள்
அடக்க ஆராதனைகளில்
அழுதுகொண்டிருப்பவை,
மெழுகுவர்த்திகள் மட்டுமல்ல;
நானும் கூட!

குயவருக்கு புதைநிலம் வாங்க
தன்னை விற்ற பணத்தை
தானமாக்கினார் இயேசு;
தானமாகத்தந்த என்னைவிற்றதால்
ஏராளமான ‘‘கேசு!’’

‘‘வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறைகளே,’’ என்று
வேதபாரகருக்கு என்னை
உவமையாக்கினார் இயேசு!

உங்களது துர்நாற்றங்களை
உள்ளுக்குள் சகித்துக்கொண்டால்தான்,
என் மேலே -
ஊதுவர்த்திகளையும்,
மலர்மாலைகளையும்
நிரப்பி வைக்கிறீர்கள்;
பரிசுத்த வாசனைகளை
பரப்பி வைக்கிறீர்கள்!

சாதி, இனம் பாராமல்
எனக்குள்ளே எலும்பாக கிடப்பவர்கள்,
ஒரு வகையில் உங்களால்,
ஒடுக்கப்பட்டவர்களே;
உயிர்த்தெழுதலுக்காய்
விதைக்கப்பட்டவர்களே!

வேதனையாக இருக்கிறது;
காணிக்கைப் பெட்டியினுள்

காசுபோட்டால்தான்; எனக்குள்
சவப்பெட்டி வைக்கச்
சம்மதிக்கிறீர்கள்;

சாவில் பிரிவினை இல்லாத
என்னைச்
சபைக்கு ஒரு கல்லறைத் தோட்டமாக
பிரித்துக்கொண்டீர்கள்!

சீர்திருத்தம் இல்லாத உங்கள்
'சிமெண்ட் சிலுவை'களை என்னால்
சுமக்க முடியவில்லை!

'சகல பரிசுத்தவான்கள் தினத்தில்
உங்கள் -
முதற்பிதாக்களை எண்ணி
முக்காடிட்டு பாடுகிறீர்கள்!

உங்கள் -
'பாமாலை'களும்
'பூ மாலை'களும் -
திருச்சபையின் தேர்தலுக்கு முன்
'காமாலை' கண்களாகவே
எனக்குத் தெரிகிறது!
ஆலயத்தின் அருளுரைத் தொட்டிகளின் கீழ்
பரிசுத்தவான்களை
அடக்கம் செல்கிறீர்கள்;
பல சமயங்களில் -
அருளுரைத் தொட்டிகளையே

இங்கு
அடக்கம் செல்கிறீர்கள்;

இயேசுவின் கல்லறைபோல்
எப்போதுமே

திறந்த மனதுடன் இருக்கும் என்னை,
'வாய்தா' வாங்கியே
வாசல் கேட்டை பூட்டிவிட்டீர்கள்!

உக்கிராணத் தோட்டத்தில் இருக்கும் என்
உன்னத சமத்துவத்தை
உங்கள் -
குடும்பங்கள் -
கோவில் ச்முதாயம் ஏன்
கொண்டாடுவதில்லை!

நான் -
மரணத்தின் கட்டில் மட்டுமல்ல;
உயிர்த்தெழுதலின் தொட்டில்!
மரணம் என்பதை
''இளைப்பாறுதல்'' எனும்
விசுவாச மனிதனே;
மண்ணிலிருந்து பிறந்த நீ
மண்ணாவாய்;
மறுபடியும் உயிர்த்தெழுதலில் நீ
பொன்னாவாய்!

இறையியலின்
இறுதி வடிவம் நான்;
கருப்பு வேதாகமத்தை பல சமயங்களில்
சவப்பெட்டியாக சுமந்து செல்கிறாய்...
உன் கையில்;
கருப்புச் சவப்பெட்டியை
திறந்த வேதாகமமாய் வைத்திருக்கிறேன்
என் பையில்!
நீதி நாள் வரும்;
அழுக்கு அரசியல்களுக்கு
சலவை செய்யும் தேதி அது!
அன்று -

மண்ணுக்குள் இருப்பவன்
மறுரூபமடைவான்;
மண்ணுக்கு வெளியே இருப்பவன்,
எந்த சாதியினருடன் கூட வருவான்?

இறந்தபின் உங்கள்
சாதித்தலைவரை
'பாடி' என்று அழைக்கிறீர்கள்;
மூன்றாம் நாள் -
பாடியபடி பாலைத் தெளிக்கிறீர்கள்!

சங்கடமாக இருக்கிறது;
இனி -
'சாதி' விசுவாசிகளை
என்னில் புதைக்க வேண்டாம் என
கண்டனம் தெரிவிக்கிறேன்;
இல்லையெனில்-
எப்பொழுதும் போல
என்னை அயலானுக்கு விற்றுவிடுங்கள் என
அறிவிக்கிறேன்!

●

# கிறிஸ்தவ வர்ணாசிரமம்!

‘‘இனம்’’ உண்டு!
பின் எப்படி
கிறிஸ்தவத்தில் சாதி வந்தது?
சாதி உள்ள
சகதிச் சமுதாயத்தில்
கிறிஸ்தவம் வந்து மாட்டிக் கொண்டது!

‘‘சமஸ்கிருதம்’’ கோலோச்சிய
சனாதான காலத்தில் -
சமஸ்கிருத பண்டிதரிடம்
தமிழ் பயின்ற மிஷனரிகள்,
வேதாகமத்தை மொழிபெயர்த்ததால் வந்த
வில்லங்கம் இது!

வேதாகமத்தில் -
‘‘சாதி’’
‘‘கோத்திரம்’’ எனும்
வார்த்தைகளை வைத்து
வாதாடுபவர்கள் -
ஆங்கில மொழிபெயர்ப்பின்
ஆழம் செல்லாதவர்கள்!
சாதி (Category)
கோத்திரம் (Battalion - ராணுவச்சொல்)

குலம் (குலம் - Race)
இன்னும் கிறிஸ்தவத்தில்
சாதி உண்டு என்று
சாதிக்கும் கிறிஸ்தவர்கள்,
'இந்துத்துவா' வர்ணசிரமத்தின்
மிச்சங்களே; அல்லது
எச்சங்களே;

●

## இயேசுவின் கேள்வி!

அன்று -
முப்பது வெள்ளிக்காசுகளுக்கு
யூதாஸ் என்னை விற்றான்!

இன்று -
தினமும் என்னை விற்கும்
திருச்சபை யூதாஸ்களே...
G.S.T. யை
காரணம் காட்டி,

என் விலையை
சற்று கூட்டுங்கள்;

அது சரி -
அன்று என்னை விற்று
நிலத்தை வாங்கினார்கள்;
இன்று நிலத்தை விற்று
யாரை வாங்கப்போகிறீர்கள்?

●

# நாற்காலி!

நாற்காலிகளுக்காக
அலையத் தேவையில்லை;
நீயே -
நாற்காலிகள் செய்யும்
தச்சனாக மாறிவிடு -
இயேசுவைப் போல...!
பக்கத்து ''சீட்'' கேட்ட
சீடர்கள் அறியவில்லை;
பாடுபடும் சிலுவையே
பரிசுத்த சிம்மாசனம் என்று!

●

# கிறிஸ்தவ ஆத்திச்சூடி!

அ - அன்பானவர் இயேசு!
ஆ - ஆகாதவன் பிசாசு!
இ - இறையியல் படி!
ஈ - ஈகையே இறைவன் மடி!
உ - உண்மை சொல்!
ஊ - ஊழியம் செல்!
எ - எதிரியை மன்னி!
ஏ - ஏற்றமிகு சிலுவை எண்ணி!
ஐ - ஐங்காயங்கள் நினை!
ஒ - ஒடுக்கப்பட்டோரை இணை!
ஓ - ஓங்காரமாய் நீதி கூறு!
ஔ - ஔத்தடமாய் நீ மாறு!
ஃ - அஃதே கிறிஸ்தவம் பாரு!

●

# சிவப்பு நிருபம் செய்வோம்!

சுட்ட அப்பத்தையே
சூடுபண்ணித்தரும்
சுவிசேஷம் கண்டு
தேவன் திகைக்கிறார்!

திருப்பிப் போடாத அப்பங்களாக
திருச்சபை மனிதர்கள்!
புலம்பல்களை போதிக்கும்
புரட்டுக் கோலியாத்துகளை
தரையில் வீழ்த்துகின்றன
தாவீதின் கவண்கற்கள்!

பிலயாமின் கழுதைகளை
அடித்துப் புதைத்து,
அதன் மீது
கருப்புக் காணிக்கைக்
காளான்களை வளர்க்கும்
வனாந்திர ஒட்டகங்கள்
வாய்களில் மெல்லும் முட்கள்!

சாதிக் கோடரிகளால்
தரிக்கப்பட்ட,
லிபனோனின் கேதுரு மரங்களின்
கிளைகளில் -

காட்டுப் புறாக்களுக்கும்,
தகையாலான் குருவிகளுக்கும்,
தலைசாய இடமில்லை!

தள்ளுபடியான வெள்ளிப் பாத்திரங்கள்;
திராட்சை தோட்ட நரிகளாக
திருச்சபை நரிகள்;
ஒலிமுக வாசல்களில் ஓநாய்கள்;
ஈச்சமரங்களை மொய்க்கும்
ஈசல்கள்!

பரிசுத்தப் பந்தியில்
அழுகிப்போன
அத்திப் பழங்கள்!

கள்ளத் தராசுகளில்
சாதி எடைக் கற்களை நிரப்பும்
சமய வியாபாரிகள்;
பலிபீடத்துப் பணிமுட்டுகளை
பாபிலோனிலேயே பதுக்கிக்கொண்ட
நெபுகாத் நேச்சர்கள்;
போலி மேய்ப்பர்களின்
கோலும் - தடியும்
எவரையும் தேற்றவில்லை;
கோல் - ஆன்மீகம்;
தடி - அரசியல்!
கோல் - ஆடுகளுக்கு
தடி - நரிகளுக்கு;
இரண்டின் பயன்பாடுகளும்
இங்கு மாறின;
மதுக் குவளையில்
மார்ட்டீன் லூத்தரின்
நியாயப் பிரமாணங்கள் மூழ்கின!

இயேசுவின் இறையியல்
விடுதலைப் போராட்டம்
இங்க நீட்சியாக வேண்டும்!
அதற்கு ஒரு
சிவப்பு நிருபம் செய்வோம்;
மானுடம் உயிர்த்தெழும் வரை
பேனாச் சிலுவைகள்
விரல்களின் முதுகில்
விழுந்துகொண்டே இருக்கட்டும்!

●

# கர்த்தரிசமே கம்யூனிசம்!

கர்த்தர் இயேசு
அருள்முதல்வாதத்தையும்
பொருள்முதல்வாதத்தையும்
முன்வைத்தார்!

காரல் மார்க்ஸ்
ஆதிக்கத் திருச்சபையின்
ஆடம்பர அருள்முதல்வாதத்தை
பின்தள்ளி
ஏழைகளுக்கான
பொருள்முதல் வாதத்தை
முன்வைத்தார்!

கர்த்தரை அறியாதவரல்ல
காரல் மார்க்ஸ்!
காரல்மார்க்சின் 'மூலதனம்',
கர்த்தரின் மொழிகளே!

ஆகாரத்தை
பகிர்ந்தளித்ததாலும்,
முந்தினோர்க்கும்,
பிந்தினோருக்கும்

ஒரே கூலியை உவந்து
கொடுத்ததாலும்,
‘கம்யூனியன்’, என்ற
திருவிருந்தை
சாதி வித்தியாசம் இல்லாமல்
சபைக்கு அறிமுகப்படுத்தியதாலும்...
தன்னை விற்ற
முப்பது வெள்ளியினால்
நிலமில்லா குயவருக்கு
நிலம் தந்ததாலும்...
யூதர்களின்
சுத்திகரிப்பு கற்சாடிகளில்
‘ரசவாதம்’, செய்து...
யூதர்களுக்கே தந்ததாலும்...
தனியுடமை
நியாப்பிரமாணங்களை...
பொதுவுடமையாக்கியதாலும்...
உதிரத்தீட்டுகளை மட்டுமல்லாது...
சமூகத் தீட்டுக்களை அழித்து
சமத்துவம் மலர்த்தியதாலும்...
கம்யூனிசத்தின் முதல்
பிதாமகன் கர்த்தர் இயேசுவே!
கர்த்தரிசமே... கம்யூனிசம்;
கம்யூனிசமே கர்த்தரிசம்!

முற்போக்குமில்லாத...
பிற்போக்குமில்லாத...
புறப்போக்குகளை அவர்
தேர்ந்தொடுத்தார்;
அவர்கள் மூலம்
அரண்மணைகளை நோக்கி,
போர்தொடுத்தார்.

ஆடுகளை இடம்
வலமாகப் பிரித்ததால்...
இறைவன்
இடதுசாரியும் இல்லை...
வலதுசாரியும் இல்லை- அவர்
பாதசாரிகளின் பரமப்பிதா!

ரூத்தின் களம்...
கதிர்களின் களமல்ல:
கம்யூனிசத்தின் களம்!
ராகாப்பின் சுவர்வீடு...
வேசியின் வீடல்ல...
சிவப்புநூல் சித்தாந்த ஏடு!

சிலுவையில் அறையப்படும் முன்
இயேசுவை போர்த்திய
சிவப்புச் சால்வை...
பலியின் அடையாளம் மட்டுமல்ல;
பகிர்தலின் அடையாளம்!

வேதாகமம் கருப்புச் சட்டையை
அணிந்திருக்கலாம்;
உள்ளிருக்கும் வேதாகமம்
சிவப்பு உடல்!

கிறிஸ்தவக் கம்யூனிசத்தை
முதலில் அறிவித்தவர் இயேசு!
ஆலயத்தின் முதலாளிகளை
அப்புறப்படுத்தியவர் இயேசு!

கதிர் அறுவாளும்,
தச்சனின் சுத்தியலும்...
அவர் களப்பணியின் கருவிகள்!

அறுவடை மிகுதி;
ஆட்களோ கொஞ்சம்!
அப்புறம் என்ன?
சமத்துவப்பாடலோடு சபையை
கட்டுவோம் வாருங்கள்!

●

# போஸ்டர் இல்லாத தொழுவம் !

ஆடுகள் மேய்க்கும் எங்களுக்கு
அரசியல் தெரியாது;
ஆடுமேய்க்கும் தொழில்
அந்நிய வர்த்தகமானது புரியாது!

பாமரர் எங்களுக்காக
பரம சேனையின் திரள் கூட்டம்
இறங்கி வந்தது;
எங்கள் தலைவன் தாவீதின் வம்சம்
தரைக்கு வந்ததாக தகவல் தந்தது!
எங்களுக்கு படிப்பறிவு இல்லை -ஆனால்
பகுத்தறிவு உண்டு!

அதனால் தான்
படித்த ஞானிகள்
ஆரூடம் நம்பி,
அரண்மனையைத் தேடி போனார்கள்;
நாங்கள் வாய்மொழி நம்பி,
அரசனைத் தேடி போனோம்!

எந்த G.P.S.-ம்
எங்களிடம் இல்லை;
கூகுள் மேப் என்றாலே
குழப்பம் தொல்லை!

உலகத்தின் மேய்ப்பனைக் காண
உள்ளூர் மேய்ப்பர்கள்
உற்சாகமாய் புறப்பட்டோம்;
பெத்லேகேம் ஊருக்கு வந்த பின்
உள்ளுக்குள் திடுக்கிட்டோம்!

சாதி கலவரத்தால் மூடப்பட்ட
சத்திரம்!
சேரா பீன்கள் சிறகுகளில்
போக்குவரத்து புகை!
நசரேத்தின் இரவிலும்
K.C.F, பீட்சா டெலிவரிகள்!
ஏரோதின் அரண்மனைக்கு எதிரே
எலக்ஷன் கட்-அவுட்டுகள்!
மெட்ரோ ரெயில் சத்தத்திற்கிடையே
மாட்டுத் தொழுவத்தின்
உள்ளே நுழைந்தோம்;

இதோ! தீவனத் தொட்டியில்
தீனி;
திருமறையின் தேனீ;
திரித்துவத்தின் ஏணி!

அடிக்கப்படப் போகின்ற ஒரு
ஆட்டுக்குட்டி
மேய்ப்பனாக அவதரித்த
ஆச்சரியம் கண்டோம்;
அகமகிழ்ந்து நின்றோம்!

மேய்ப்பர்கள் எங்களை
மேன்மைப் படுத்திய மீட்பரே!
ஆடு மேய்ப்பனானதும்;
மேய்ப்பன் ஆடானதும்
வரலாறு;
ஆடுகள் கூடி ஒரு
மேய்ப்பனை உரித்தது
தகராறு!
நானே நல்ல மேய்ப்பன் என்றீர்;
நாங்கள் அவ்வழி தொடர்ந்தோம்!

99-பது ஆடுகளும் இன்று
தொலைந்து போயின;
மீதம் உள்ள ஒற்றை ஆடும்
ஓட்டுக்காக கைமாறி விட்டது!

கள்வர்கள்/ஓநாய்கள் மத்தியில்
கவலைக்கிடமானது எங்கள்
மேய்ப்புத் தொழில்!
அன்று
மேய்ப்பன் முன் செல்வான்;
ஆடுகள் பின்! தொடரும்;
இன்று ஆடுகள் முன் ஓட
மேய்ப்பர்கள் ஓடும் கதை தொடரும் !
இங்கு,
ஆடுகளுக்கும், மேய்ப்பர்களுக்கும்
எப்போதும் அடிதடிதான்!

எங்கள் அரசியலில்
அசைவம் சாப்பிடும்
ஆடுகள் கூட உண்டு!
சமயத்தில் எங்கள்
தூரட்டிக் கோல்கள்
தழைகளை அல்ல;
தலைகளை கூட கொய்துவிடும்!

மந்தைக்கு நீரே தந்தை - அதை
மந்தையும் மறந்தது தான் விந்தை!

எங்கள்,
எலக்ஷ்ன் தொழுவத்தில்
கோல் தடியானது;
தடி கோலானது!
ஆக மொத்தம்,
அமர்ந்த தண்ணீர்
குழம்பிய குட்டையானது!

நீர் கற்றுத்தந்த
மேய்ப்புத் தொழிலின் மேன்மை
எங்களுக்குத் தேவை!
ஆடுகள் கூடி உம்மை கொன்றதால் - நீர்
நல்ல மேய்ப்பனீர்;
உம்மை கொன்றதால்
உள்ளூர் கசாப்புக் கடையில்
ஆடுகளின் அழுகுரல்கள்!

நீயாயத்தீர்ப்பின் மேய்ப்பனே;
உன் இறுதி நாளில்
செம்மறி - வெள்ளாடு என
இடம் வலமாக
வகை பிரித்தீர்!

கள்ள ஆடுகளை எந்த கணக்கில்
வைக்கப் போகிறீர்?
கர்த்தர் எங்கள்
மேய்ப்பராய் இருக்கிறார்
நாங்கள் தாழ்ச்சியடைய மாட்டோம்;
ஆனால்,
திருச்சபை தேர்தல் வந்தால்
தொழுவத்தை சுற்றி
போஸ்டர் அடிக்காமல்
விடமாட்டோம்;
அன்று,
கழுதையின் மேல் ஆட்டுக்குட்டியாக
நீர் வந்த போது
கைதட்டியவர்கள்,
பாவத்தை சுமக்கும் தேவ ஆட்டுக்குட்டி
என்று யோவான் உம்மை
கூறிய போது,
குழம்பி யோசித்தவர்கள்,
சிலுவையில் நீர் ஆட்டுக்குட்டியாகவும்
உயிர் தெழுதலில் நீர் மேய்ப்பனாகவும்
மீண்டு வந்த போது,
மிரண்டு போனார்கள் - உம்
மீட்பின் ஆடுகள் ஆனார்கள்!

இன்றும் எங்களுக்குத் தேவை;
தூய்மையான ஒரு தொழுவம்,
மேன்மையான ஒரு மேய்ப்பன்,
ஆன்மீகமான ஒரு ஆட்டு மந்தை!
தூய நல் மேய்ப்பரே!
துதிக்கு நல்ல மீட்பரே!
சாதி இல்லா தொழுவம்,
வழக்கு,வாய்தா இல்லாத திருச்சபை
ஆடம்பரம் இல்லாத ஆராதனை
எங்களுக்குத் தாரும்!

மேய்ப்பனாக
மீனவனாக
தச்சனாக
அடித்தள வர்க்கத்தின்
அடையாளமாக உம்மை
அறிமுகப்படுத்திக் கொண்டீர்!

அதன் வழி நின்று
நல்ல மேய்ப்பனாக
எங்களை நாங்கள்,
திருத்திக் கொள்கிறோம்;
இல்லையெனில் நாங்கள்
திரும்பிச் செல்கிறோம்!

●

# பனையும் - வினையும்

சிலுவை
பனைமரத்தில் இயேசு...
இயேசு...

உருமாறி
கைமாறி
தடுமாறி

நுங்கின் குலையாக
கிழிந்த இலையாக
பங்கின் விலையாக
இயேசு...

சிலுவைப்
பனைமரத்தில்,
தந்தை இறக்கிய
மொந்தை...
வெறியேறிய மந்தை...
மேய்ப்பனையே
குடித்த விந்தை!

இயேசு...
உருமாறி
கைமாறி
தடுமாறி
சிலுவையேறிய
பனையேறி!
சிவப்பு
பதநீர் சிந்திய இளந்தாரி!

வினை
பனையானது
திரித்துவத்தின்
திணையானது!

●

## பேச்சு வார்த்தை!

பேசாக் கடவுளிடம்
பேச விரும்பவில்லை!

பேசும் கடவுளிடம்
பேச விரும்புகிறேன்....
பேச நினைத்தவைகளை....!

●

# வசன கவிதை வழிபாடு!

## வழிபாட்டு ஒற்றுமைக்கு வரவேற்பு;

**முன்மொழிபவர்;**

*வானத்தையும், பூமியையும் உண்டாக்கி, மண்ணால் பிசையப் பட்ட மனிதனுள் தம் ஜீவமூச்சை ஊதிய, தாயும், தந்தையுமாகிய இறைவனைத்தாழ்பணிய வாருங்கள்!*

*நீதியின் தலைமைகனே! நித்திரையைக் கலைத்தவரே! எம் மூதாதையரின் பாவரத்தம் முதுகில் பிசுபிசுக்க, உம் முன்னணை யில் முகம் குப்புற விழுகிறோம்! அத்தர்களைப் பூசி, ஆன்மீக அலங்காரங்களுக்குள் மூழ்கி, ஒப்பனை வாழ்வுக்கு உடன்பட்ட நாங்கள், இன்று உம் பரிசுத்த வயல்வெளியில், அறுவடைத் தானியங்களாக, உம் கருணைக் களஞ்சியத்தில் குவிந்திருக் கிறோம்! உம் கரங்களே, எங்கள் வாழ்வியல் பதர்களை சலித்துப் பிரிக்கும் முறங்கள்!*

## இதயத்தை சுத்திகரிக்கும் இறைவேண்டல் (அனைவரும்)

*உலகின் சிரசிலும், ஏழைகளின் இதயங்களிலும் அமர்ந் திருக்கும் எங்கள் இறைவெளிச்சமே! பொழுது விடிந்தாலும், எங்கள் இதயங்கள் இருண்டு கிடக்கின்றன. ஒலிவ மரங்களின் கீழ்*

*என்றும் நாங்கள் விறகு வெட்டிகளாகவே வீரமாக நிற்கின்றோம்! கால்பதியாத எங்கள் கல்வாரிகளில், கள்ளிச் செடிகள் மண்டிக் கிடக்கின்றன!*

*சிலுவையை நெம்புகோலாக்கி, எங்கள் கல்லறைப் பாறை களைப் புரட்ட கருணைபுரியும்! எங்கள் இருண்ட இதயங்களில் ஒற்றுமை வெளிச்சம் வீச, ஒரு குறியீடாகவும், ஒரு மாதிரிக்காகவும், எங்கள் கண்ணீரை எண்ணெயாக்கி, இப்போது இந்த உன்னத விளக்கை ஒளியேற்றுகிறோம்!*

## ஒளிவிளக்கு ஏற்றுதல் :- (அமைதி)

**பாடல் மூலம் தூய்மையடைதல் ; பாடல் : 1**

**பாவப்பட்டியல் :- (அனைவரும்)**

*பெற்றோராய் பரிவு செலுத்தும் இறைஉள்ளமே! இந்தக் கருவறை பூமியில், பாவ அணுக்களாய் நாங்கள் பலுகிப் பெருகுகிறோம்! மத, இன, சாதி மத்தியிலும், ஆதிக்க அடக்குமுறை அரசியல் கலவரங்களுக்கு மத்தியிலும், காலத்தின் திசைகள் கருகிக் கிடக்கின்றன! ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும், பெண்ணடிமை தீரவும், குழந்தைத் தொழிலாளிகள் விடுதலையடையவும், சமூக குற்றவாளிகள் மனந்திரும்பவும் உழைக்க நாங்கள் ஒதுங்கி அஞ்சுகிறோம்! கைவிரித்து வரவேற்கும் சிலுவைக்கடியில், கையேந்தும் தொழுநோயாளிகளை நாங்கள் கண்டுகொள்வதேயில்லை! மனித நேயத்தை உதட்டில் முத்திரை குத்திக்கொண்ட நாங்கள், ஆயுதக் கலாச்சாரத்திற்கு முன் அந்நியர்களாகவே ஒதுங்கிக் கொள்ளுகிறோம்! எங்கள் அயலானின் மீது அன்பு கூறவும், நல்ல சமாரியனாக நடந்துகொள்ளவும், எம் இதயக் கழிவுகளை, எரித்து அகற்றவும், உம் உன்னத அரசின் முன் எங்கள் உள்ளங்களை ஏறெடுக்கிறோம்! கெத்சமனேயில் வியர்வையை விதையாக்கிய உம் மைந்தன் வழியாக இப்பாவங்களுக்கு மன்னிப்பு வேண்டி மன்றாடுகிறோம்!*

*(அமைதி)*

## மன்னிப்பின் உறுதி;

### முன்மொழிபவர்;

*தண்ணீரை திராட்சை ரசமாக்கிய நம் கடவுள், நம் கண்ணீரையும், தித்திக்க வைப்பார்! சிலுவை சுமைதாங்கி மட்டுமல்ல; திசைகாட்டியும் கூட!அவரது வயல்வெளியில் எந்த விதையும், முளைக்காமல் போவதில்லை. கடவுளின் வல்லமை குறித்து அலைகளாக நம் நாவுகள் எழும்பித்துதிக்கட்டும்! உன்னதக் கடவுள் இந்த உறுதியை நமக்கு உரைக்கின்றார்!*

### அனைவரும்;

**முட்களால் செய்த சிலுவை**
**முக்தியின் பயணச் சலுவை**
**மன்றாடி நாம் செய்வோம் தொழுகை**
**மாறட்டும் மனித அழுகை!**
**தன்னலம் இல்லாத மெழுகின்**
**தத்துவம் எத்தனை அழகு,**
**உள்ளத்தில் நாம் செய்த உழவு**
**உன் கையில் அமரும் உலகு!**

### இறை பற்றுமை வேண்டல் :- (அனைவரும்)

*விண்ணையும், மண்ணையும், மாசற்ற ஆற்றலுடன் படைத்த தாயும், தந்தையுமாகிய கடவுளை தாழ்பணிந்து பற்றுமை கொள்கிறேன்! அவரது ஒரே இறைமகனாகிய இயேசு கிறிஸ்துவை இதயத்தின் ஆழத்திலிருந்து நம்புகிறேன்! அவர் தூய ஆவியரால் மரியாளிடத்தில் பிறந்தார்! பொந்தியு பிலாத்துவிடம் அநீதியின் கீழ் துன்புற்று, சிலுவையில் அறையுண்டு உயிரிழந்து புதைக்கப்பட்டார்! மூன்றாம் நாள் இறந்தவரிடத்திலிருந்து விதையாக முளைத்தெழுந்தார்! பின்வானம் நுழைந்து வல்லமை யான தந்தையின் வலதுபுறம் வசிக்கிறார்! அவர் அரியணையில் அமர்ந்து, இறந்தோரையும், உயிருள்ளோரையும் நியாயம் தீர்க்க நிச்சயம் வருவார்! தூய ஆவியரை தொடர்ந்து பற்றுமை*

*கொள்கிறேன்! சமத்துவத் திருச்சபையையும், தூயார்களின் கூட்டுறவு வாழ்கையையும், பாவமன்னிப்பையும், நித்திய உயிர்த் தெழுதலும், நிலையான வாழ்வும் நிச்சயம் உண்டென்று பற்றுமை கொள்கிறேன்! ஆமென்! (அதன்படியே ஆகக்கடவது)*

## விவிலியப் பாடங்கள்;

**அருளுரை:**

**பாடலின் மூலம் தூய்மையடைதல் : பாடல் 2**

**மனதை திருநிலைப்படுத்தும் மன்றாட்டு;**

**முன்மொழிபவர்;**

*என் வாழ்வின் உறைவிடமாகவும், உணவாகவும் இருக்கும் இறைவனே! இருளின் மைந்தர்களாக ஏங்கி அழும் எங்க ளுக்கு, உமது நித்திய ஒளியை தந்தருளும்! கள்ளத்தீர்க்கதரிசி களின் கரங்களில் நாங்கள் அகப்படாமலும், உம்மை என்றும் நிந்தியாமலும், உமது நித்திய வசனங்களில், நாங்கள் நிலைத்து நின்று வாழ வழி செய்வீராக!*

**அனைவரும் :**

*நீதியின் உள்ளங்கை தழும்பே! எம் உறக்கம் கலைக்க எழுவாய்! ஆடுகள் கூடி அழைக்கும்போது, ஆத்துமக் கதவை திறப்பாய்!*

**முன்மொழிபவர்;**

*முட்களையும் மலர்களாக்கும், முதன்மையான கடவுளே! உலகமெங்கும் உமது இறைபணியை இரவு, பகலாக விதைக்கும், இறைபணியாளர்களுக்காக வேண்டுகிறோம்! இரத்த சாட்சிகளாக இனி மரிக்க அல்ல; இரத்த சாட்சிகளாக வாழ வழி செய்தருளும்! வறுமை, வறட்சி, கலவரங்கள், போர்கள், இனவெறி, பசி, மத வேற்றுமை, அட்டூழிய அரசியல், நோய்கள், தற்கொலைகள், விபத்துகள், சாதிய கொடுமைகள், ஆணவக் கொலைகள், நீர் வளம் இல்லாமை, நிலநடுக்கங்கள், ஆழிப்பேரலை, நுண்*

*கிருமிகள் மற்றும் ஒடுக்கப்பட்டு நீதி புறக்கணிக்கப்பட்ட மக்களுக்காகவும், மன்றாடுகிறோம்! நம்பிக்கை, மனிதநேயமும் நலிவுற்ற இந்த உலகின் மத்தியில்; மருத்துவராக இறங்கிவாரும்; எங்கள் நடுவில் செயலாற்றும்;*

**அனைவரும்!**

அப்பங்கள் பெருகவில்லை - உம்
அடிமைகள் உறங்கவில்லை!
தச்சன் வீட்டு சுத்தியலே - இனி
தங்கு தடை ஏதுமில்லை!
சிலுவையைச் செஞ்சிலுவையாய் மாற்றி
எங்கள் சிந்தனையை குணமாக்கும்!

**முன்மொழிபவர்;**

நீதிக்கு துவக்கமாகவும், அநீதிக்கு
முடிவாகவும் வாழும் கடவுளே!
உலக அமைதி உதிக்கவும்,
உம்மை உள்வாங்கி
நற்செய்தி நாற்றுகள் செழிக்கவும்,
மனிதநேயம் மலரவும்,
இயற்கையை நேசிக்கவும்,
எங்கள் புலன்களையும்,
செயல்களையும்,
புதுப்பிப்பீராக!

**அனைவரும்;**

இயற்கையில் ஊடாடி
இறைவனை வணங்குவோம்!
சுற்றுப்புறச் சூழ்நிலையை
பாதுகாப்பதும்,
மாசற்ற மண்வளம்,
நீர் மேலாண்மையை
மறுசுழற்சி செய்வதும்,

இறை பணியின்
இன்னொரு தேவை!

மரங்களை குழந்தைகளாய் மதித்து,
மனிதர்கள் யாவரும்
மனிதர்களாய் வாழ
மன்றாடுகிறோம்!

**நற்கிரியைகளுக்காக நன்றி நவிலல்; (அனைவரும்)**

*கள்ளிச் செடிகளையும், அரவணைக்கும் கடவுளே! கண்கள், இமைகளுக்கு எப்பொழுதம் நன்றி கூறுவதில்லை! ஆயினும் உமக்கு நன்றி கூறும்போது, உம் உணவு மேசைத் துண்டுகளை உண்ணும் நாய்குட்டிகளாக நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்! ஏதேனாக அடர்ந்து குலுங்கும், இந்த உலகில், நல் கனிமரங்களாக நாங்கள் வாழ்ந்து, தந்தை, மகன், தூய ஆவியரின் குடும்ப உறவில், தனி மனிதமாகவும், பொறுமையாகவும், ஏழை மக்களுடன் எங்களை இணைத்துக்கொண்டு, எங்களுக்கு பகிர்ந்து வாழும் கொள்கையை கற்றுத்தந்ததற்காக நன்றிகளை ஏறெடுக்கிறோம்!*

**இயேசு கற்றுக்கொடுத்த இறைவேண்டல்; (அனைவரும்)**

*தாயாகவும், தந்தையாகவும், விண்ணகத்தில் வீற்றிருப்பவரே! உமது திருப்பெயர் தூயதென போற்றப்படுவதாக! உம் இறையாட்சி எழுவதாக! உமது தூய சிந்தனை விண்ணுலகில் செயல்படுவதுபோல, மண்ணுலகில் செயல்படுவதாக! அன்றன்று உள்ள உணவை அடியார்களுக்கு பகிர்ந்தருளும்! எங்கள் எதிரிகளை நாங்கள் மன்னிப்பது போல, எங்களையும் மன்னியும்! எங்களை சோதனைக்கு உட்படுத்தாமல், ஆபத்துகளிலிருந்து விடுவியும்! ஆட்சியும், அதிகாரமும், மாட்சியும் என்றென்றும் உமக்குரியவைகளே!*

*ஆமென்!*

*(அதன்படியே ஆகட்டும்)*

**உன்னத ஒப்படைப்பு; (அனைவரும்)**

*தாயிலிருந்து பேறுகாலமாகி, குழந்தையை, தந்தையின் கரங்களில் ஒப்படைப்பதைபோல, மண்ணிலிருந்து எம்மை விண்ணுக்கு ஒப்படைக்கிறோம்! கல்வாரிக்கு நாங்கள் அஞ்சாமல், அவைகளை கடந்து, கானான் நாட்டை கண்டடைய ஆசீர் அளிப்பீராக! நோவா பேழையின் மேல் கதவு மெல்ல திறக்கப் பட்டது போல, எம் இதயக் கதவுகள் திறக்கப்பட்டு, உமக்கும், எமக்குமான ஒப்புறவு வானவில்லை காணச் செல்வீராக!*

**எங்கள் நம்பிக்கை**
**நட்சத்திரம் விழுவதில்லை!**
**சிலுவை விருட்சத்தின்**
**விழுதுகளும்**
**வேர்களுமாகிய நாங்கள்,**
**இறையரசில்**
**என்றும் நிரந்தரமானவர்கள்!**

*(அமைதி)*

**இதயங்களை பதியமிடும் இறையாசி;**

*இதயங்களை சீரமைக்கும் இயேசுகிறிஸ்துவின் அருளும், தாயும், தந்தையுமாகி நம்மைத் தழுவிக்கொள்ளும் கடவுளின் கருணையும், உயர்ந்த ஆவியரின் ஒப்புறவும், ஒட்டுறவும், நம் அனைவரின் ஆத்தும ஆழங்களில் வேரூன்றி நிலைத்து நிற்பதாக!*

*(ஆமென்)*
*(அதன்படியே ஆவதாக)*

*நீரேடையாக பொங்கும் நிறைவு பாடல் ; பாடல்; 3*

(நிறைவு)

●

# லூத்தர் காவியம்!

## (எழுப்புதலின் இன்னொரு முகம்!)



புதுக்கவிதையில்
புரட்சித்துறவி
மார்ட்டின்லுத்தரின் சரிதம்
(LIFE SKETCH OF MARTINLUTHER)

# நோவா பேழையின் நுழைவாயிலில்...

பூமியின் முதுகில் பழிவாங்குதல்களின் ரத்தப்பிசுக்கு! யுத்தப் புகையில் முகங்கழுவும் மலர்கள்! மத, இன, மொழி, சாதி வடுக்களில் வழியும் மானுடம்! திசைகளின் தேகங்களில், விஞ்ஞான கலாச்சாரத்தின் எச்சில் தேமல்கள்! தாய்ப்பாலில் கூடத் தண்ணீர் கலப்படம்! உப்பரிகைகளின் உதடுகளிலிருந்து, சமாதானக் கீதங்கள் ஒலித்தாலும், காலத்தின் இந்த நிமிடக் கடைசி எல்லைவரை, கபாலக் கூடுகளே கைவினைப் பொருள்கள்! மனித சோகங்களே மரபாகிப் போன ஒரு கௌரவ மில்லா இருண்ட முச்சந்தியில், மதங்கள், 'கன்னஜிகினா' மினுமினுக்க கையசைக் கின்றன!

கிறிஸ்தவம், சமத்துவத்தின் தாய்மடி, சந்தேகம் இல்லை! ஆயினும் இதன் அமைப்பியலில் அறை கூவல்களைவிட, இருமல் களே அதிகமாகி வருவது இருண்ட உண்மை! 'ரெபேக்கா'ளைப் போலத் தண்ணீர் ஊற்றவேண்டியத் திருச்சபைகள், 'திலைலா' வைப்போல் மதுக்குவளைகள் ஏந்தி மயங்கி நிற்கின்றன! அதிகார ஆணவம், சுரண்டல், லஞ்சம், பதவிப் பித்து, பணக்காரத்தனம், இவைகள் இறையியலின் இலவச இணைப்பாகவே விநியோகிக்கப் படுகின்றன! அப்பம் பெருக்கிய கணக்கில் அடித்தல் திருத்தல்! சிலுவை கீழே கிடக்கிறது; சீமோன்கள் சிம்மாசனத்திற்காக முண்டுகின்றனர்! அரசியல் பற்கடிப்புகளால் ஆன்மீகம் அழு கின்றது! ஆயினும் விசுவாச வேட்கையில், ஊருணிகள்தோண்டப் படுகின்றன!

*இன்றைய இளைய சமுதாயத்தை ஏறெடுக்கிறேன்! தூணாக நிற்க வேண்டியவன்; நூலாக நிற்கிறான்! ஆன்மீக அமைப்புகளின் ‘சீசேம்’ அரசியல்கள், அவன் விலாவை நசுக்குகின்றன; அல்லது வெளியேற்றுகின்றன!*

*அலங்கார விளக்குகள், அதிகாரக் குரல் ஆங்கில மொழி பெயர்ப்புகள், இயேசுவைப்போல நசுக்கப்பட்டவரைச் சந்தித்து நற்செய்தி வழங்காமல் சுவரொட்டிகளின் தயவால் வித்தைகள் புரியும் சுவிசேஷக் கழைக் கூத்தாடிகள், இளைய சமூகத்தின் இதயத்தில் நம்பிக்கையை அல்ல; நகைச்சுவையையே விதைகக் கின்றனர்! சமகாலச் சமுதாயமும், உண்மையான உயிர்த்தெழுதலை உணராமல் தன் ‘விசுவாச ஓட்டத்தை’ வேர்வை சிந்தி முடிக்கிறது! இந்த இருட்டு வலையைக் கிழிப்பது என்று? விஷப்பூச்சிகளை நசுக்குவது என்று? ஒரு வேத விழிப்பு வேண்டாமா?*

*இந்த நெருடும் கேள்விகளுக்கு. அன்றே நிமிர்த்தெழுந்தவர், ‘மார்ட்டீன் லுத்தர்!’ உண்மை கிறிஸ்தவத்திற்கு அவர் ஒரு, உள்ளங்கைத் தழும்பு! மூடச்சம்பிரதாயங்களின் முதுகெலும்பை முறித்த அவரது சிந்தனைகள், நூற்றாண்டுகள் தாண்டியும் நம் சிந்தனையைத் தூரெடுக்கின்றன! ஒவ்வொரு கிறிஸ்தவனின் வாழ்க்கையிலும் அவர் வலமும் வரும், ‘யோர்தான்’! அவரது விழுப்புண்கள்; வேதவரிகள்!*

*அந்த யுகத்தின் முகத்தை முகமூடி இல்லாமல், வாசனைத் தைலங்கள் தடவாமல் நெசவு செய்திருக்கிறேன்! இதயம் தளும்ப எழுதுகிறேன்; இந்த நீண்ட பாய்முடைதலுக்கு என் நெற்றியை ஸ்பரிசித்து ஆசீர்வதித்தவர், எம்பெருமான் இயேசுவே! அவரது கருணைக்கரங்கள் தீண்டியதால் என் எழுதுகோல், ‘ஆரோனின் கோலாய்’ ஆச்சரியங்களைத் துளிர்க்கிறது!*

*கிறிஸ்துவ இலக்கிய வரிசையில், புதுக்கவிதையில் ஒரு போராட்ட சரித்திரத்தை நேர்முக வர்ணணையாக நிகழ்த்திய வகையில், இதுமுதல் விதை என்பதை முன் மொழிகிறேன்! இறைவன் சிருஷ்டித்த ஏதேனில் ஆடுகளை, மட்டுமல்ல, மேய்ப்பர் களையும் ஒருங்கிணைப்போம்! என் யாசகத்திற்கு எழுத்துப் பிச்சையிட்ட இயேசு பெருமானுக்கு நன்றியின் நளதத் தைலம்!*

திசைகளே!

உங்களுக்காக

ஒரு அப்பம் பிட்கிறேன்!

நீங்கள் அதை

புற மக்களுடன் -

புசித்து மகிழுங்கள்....

போதும்.....!

# ஒரு பிரளயத்தின் பிரசவம்!

அதுவொரு
முதுமக்கள் தாழிக்குள்
முடங்கிக் கிடந்த,
மௌன நூற்றாண்டு!

வேதாகமம்,
மதத்தலைவர்களின்
மஞ்சங்களில்,
தலையணையாய்
சுருண்டு கிடந்தது!

ஆலயங்களின்
அந்தப்புரங்கள்,
மீண்டும்
பிலாத்துக்களையே
பிரசவித்தன!
மாட்டுத்தொழுவ
இம்மானுவேல்,
மாளிகையின் அலமாரியில்
மறைத்து வைக்கப்பட்டார்!

ஏகாதிபத்திய இறையியலின்
இரும்புச் சுத்தியல்கள்,
ஏழைகளின் தொழுவங்களை
இடித்துத் தள்ளின!

அதிகார கிரீடங்களுடன்
ஆர்ப்பரித்துக் களித்த
அரண்மனைக் கோபுரங்கள்,
அடித்தள மக்களுக்கு
அடக்குமுறை முள்முடியை
அணிவித்து ரசித்தன!

மதகுருக்களின்
மண்டபக் கதவுகளில்,
தங்கப் பூட்டுக்கள்
தலைகொழுத்துத் தொங்கின!
உண்மையின் முகம்,
பொய்களின் நாவுகளால்
உமிழப்பட்டது!

போப்பின் பாதங்களைப்
புத்தகம் என்றவனே,
உண்மைக் கிறிஸ்தவனாக
ஒப்புக் கொள்ளப்பட்டான்!

ஆதிக்க இடிவிழுந்து
சிலுவை,
நெளிந்து கிடந்தது!
அப்பத்தையும்
ரசத்தையும்,
‘ஆக்டோபஸ்’களே
உறிஞ்சிக் கொண்டன!

அடக்கமுறைக்கெதிராக
அசைந்த நாவுகள்,
உப்பரிகை உளிகளால்
கொத்தப்பட்டன!

காணிக்கைகள்,
கட்டாய வரிகளாகக்
கழுத்தை நெறித்தன!

மழைக்கு முன்,
காலத்தின் வானம்
கருத்துக் கிடந்தது!

மனிதநேயம்,
'பூர்ஷ்வாக்' களைச்
சபித்தபடியே
புதைக்குழிக்குப் போனது!

அன்று அந்த
ரசாயன மாற்றம்,
ரகசியமாய் நிகழ்ந்தது!

ஒரு
விடுதலைச் சூரியன்
தன்,
வேத விலாசத்தின்
மொட்டவிழ்த்தது!

✦

ஆம்!
பூமியின் வயிற்றில்,
புதைக்கப்பட்ட
முகாரிகளுக்கு மத்தியில்,

ஒரு
வேதபூபாளம்
வெடித்து முளைத்தது!

●

# அக்கினிப் பிரவேசம்!

ஜெர்மன் தேசம்!!
சக்சோனிய மாவட்டத்தின்
ஐஸ்லேபன் கிராமம்...
தன்னில் ஒரு
அக்கினிக் குஞ்சு,
தத்தியிறங்குவதை உணராமல்,
கம்பளிப்போர்வைக்குள்
கண்ணயர்ந்து கொண்டிருந்தது!
வானம் தன்,
நட்சத்திரப் பொத்தல்களுடன்
நடுங்கிக்கொண்டிருக்கும்
குளிர் இரவில்,
அந்த
நீதியின்விதை,
நெருப்புச் சுவாலையாக
நிலத்தில் விழுந்தது!
சிலுவையின் தேகம்
சிலிர்த்துக் கொண்டது!

✦

அந்த
ஈர வளர்பிறையை
ஈன்ற பறவைகள்
அதற்கு
மார்ட்டீன் லூத்தர் என,
பெயரிட்டுப்
பெருமித்தனர்!

✦

அந்த
ஆகாயத்தின் அருளுரை,
அன்றைய
ஹைக்கூ அல்லவா?

✦

அந்தத்
தீபத்தின் உஷ்ணம்,
இன்னும் திசைகளைத்
தீண்டவில்லை!
அந்த
ஆச்சரியக்குறி
ஆகாயத்தின்
அக்கினி முகமல்ல,
இருண்ட வர்க்கத்தின்
இறையியல் தீப்பந்தம்!
அந்தக்
கேள்விக்குறி,
அற்புதங்கள் செய்யும்
அவதார வடிவமல்ல,
ஆயினும்,
அப்போஸ்தலருக்கான
அந்தஸ்து பெற்று,

யோவானாய் தன்னைக்
காட்டு மூலிகையாய்
கசக்கிக் கொண்ட,
ஜீவதாவரம்!

✦

ஏழைகளின் மொழியே!
உனக்கு என்
எழுதுகோலின்
வீரவணக்கம்!
இருட்டின் கர்ப்பத்திலிருந்து
இறக்கை விரித்த உன்னை,
என் கவிதைகள்,
வாழ்த்துப்பாடி
வரவேற்கின்றன!

✦

கால அலைகள்
கரைகளை விழுங்கின!

✦

ஆறுமாத
அடைக்கலான் குருவி,
தன்
சின்னச் சிறகுகளை
அசைக்கும் பொழுது,
வறுமையின்,
தொழுநோய் விரல்
வாசலைத் தட்டியது!
எத்தனை நாட்கள் நான்
எச்சிலை
உணவாக்குவது?

தற்பாதுகாப்பு கருதிய
தந்தைப் பறவை
‘மேன்ஸ்பெல்ட்’ எனும்
வேறு கிளைக்கு,
கூட்டைச் சுமந்து
குடிபெயர்ந்தது!
ஆயினும்...
வாழ்வின் எல்லைவரை
வறுமைச் சூறாவளி
முன்னிலும் அழுத்தமாக
முற்றுகையிட்டது!
காய்ந்த இருதயங்களுக்குக்
கண்ணீரே,
தண்ணீர்ப் பந்தலானது!
வறுமையின்
வறண்ட பூமியில்
குடும்பமே
கொழுவாய் உழுதது!

தலையில் விறகு சுமந்த
தாய்ப் பறவை,
தன் குஞ்சுகளுக்காகத்
தானே விறகானது!
வறுமையின்
சாறுபிழிவால்,
பூவாகச் சொறுகவேண்டிய
வாழ்க்கை,
பொதியாகக் கனத்தது!

✦

மழைக்காலம்
மசக்கையானது!

காலம் – தன்,
கருப்புச் சட்டையைக்
கழற்றியது!

வேர்வைத் துளிகள்
விதைகளாக
விழ... விழ....
கல்வாரி
நந்தவனமானது!

தேனீயைப் போல
திட்டமிட்டு உழைத்த
ஹான்ஸ் லூத்தர்,
தன்
உதிரம் சிந்திய
சுரங்கத்தின்
உரிமையளரானார்!
தத்தளித்த படகு
தரைக்கு வந்தது!
குடும்பம்,
வறுமையின்
வெட்டுக்காயங்களுக்குப்
புன்னகைப் புனுகு
பூசிக்கொண்டது!

தழும்புகளின் மார்பில்
தன்னம்பிக்கை
தளிர்த்தது!
உள்ளங்கையில்
வாழ்வின் சுகந்தம்
வசமானது!
ஹான்ஸ் லூத்தரின்
விலாசத்தை,

வெற்றியின் உதடுகள்
உச்சரித்தன,

உழைப்பு அவரை
பல்லக்குத் தூக்கியது!

நகரசபை
உறுப்பினர் பதவி
நாடி வந்தது!
அறிவு ஜீவிகளுக்கு.
ஆலமரமானார்,
ஹான்ஸ் லுத்தர்!

வீடு,
வேடந்தாங்கலானது!

✦

இந்த வெளிச்ச கிரணங்கள்
விழிகளுக்குள்
விழுந்தபோது,
எட்டு வயதானது நம்
இறையியல் சூரியனுக்கு!

●

# முள் மீது மௌனதவம்!

அது,
பள்ளிக்கூடமல்ல...
திறந்த வெளிச்
சிறைச்சாலை!

சக்கையிலும்
சாறுபிழியும்,
சர்வாதிகார நிர்வாகம்!

வளைப்பதில்லை .....
ஒடிப்பதிலேயே
அக்கறை செலுத்தும்,
ஆசிரியர்கள்!
ஆதிக்கத் திருச்சபை,
லத்தீன் மொழியை
மாணவர்களின்
உதடுகளில் பசை தடவி,
ஒட்டியது!

நம்
ஜெர்மனியக் குயிலும்,
லத்தீன் மொழியிலேயே
திக்கித் .... திக்கிக்
கூவியது!

மதப்பிரபுக்களின்
பொக்கிஷ அறையில்
பூட்டி வைக்கப்பட்ட
வேதாகமம்,
திருவிழாக் காலங்களில்
மட்டுமே,
திறந்து காட்டப்பட்டது!

கல்லறைக்கு
வெள்ளையடிக்கும் கலையே,
திருப்பணியாகத்
திரிக்கப்பட்டது!

இயேசு கிறிஸ்து,
பூக்களின் இதயங்களில்
பூதகணமாகவே
போதிக்கப்பட்டார்!

'மரியாளும், புனிதர்களும்,
ஆன் அம்மையாருமே,
ஆண்டவரின் வாரிசுகள்', என
அன்றைய
ஆன்மீகக் கல்வி,
அறிவின் முளைகளில்
ஆணி அறைந்தது!

✦

சிலுவையின் நிழலில்
சிந்தனைக் குயிலின்
சிறகு வளர்ந்தது!

ஆலய வழிபாடும்
பக்திப் பாடல்களும்,

லுத்தரின் மனதுக்குள்,
நற்செய்தி நாற்றுக்களை
நட்டு வளர்த்தன!

✦

காலமுறத்தில்
மாதங்கள்,
உமியாகின!

'மார்டெபர்க்',
கல்விசாலை
கரங்களை விரித்தது!
புதிய சுவாசம்,
புலன்களுக்கு
அத்தர் பூசியது!

இதயம்
ரோஜாவைச் சூடிக்கொண்ட
இனிப்பு வேளையில்தான்,
சிந்தனையின் தோளில்
சிலுவை விழுந்தது!

பிச்சையெடுத்துவுண்ணும்
'பிரான்சிஸ்கன்' துறவிகளின்,
துறவறவாழ்வு,
அடிமனதுக்குள்
அடுப்பு மூட்டியது!
அரியணை துறந்த,
வில்லியம் இளவரசனின்
ஆண்டிக் கோலம்,
ஆன்மாவின் கன்னத்தில்
அறைந்தது!
மார்ட்டீன் லுத்தரின்
மனதுக்குள்,

குழப்ப அலைகள்
கும்மியடித்தன!

துறவறம்,
மோட்சத்தின்
முகவரியா?
சந்நியாசமே,
முக்தியின்
யுக்தியா?

உலைக்கலனுக்குள்,
உயிர் கொதித்தது!

தந்தையின்
சிந்தையின்
தடம் வேறு!

வாரிசை
வழக்கறிஞராக்குவதே
அவரது
வண்ணக்கனவு!

தந்தையின் கனவு
ஒருபுறம் தப்பவில்லை!

மகனது மன்றத்தில்,
நீதிபதிகளே குற்றவாளிகளாக
நின்றனரல்லவா?

கருப்புச் சட்டையின்
நீதியை விட,
காவியின் நீதி
பொத்தல்கள் இல்லாதது....
புரியுமா தந்தைக்கு?

✦

பள்ளிப் பருவப்
பக்கங்கள் புரண்டன!

'ஐசனாக்' கல்லூரி!
துப்பாக்கியில் காதுகுடையும்
துணிச்சலான பருவம்!

வாழ்வின் புத்தகச்சாலையில்,
வாசகனாக லுத்தர்!

கல்லூரியின் எதிரே
கம்பீர ஓவியமாக நிற்கும்,
வார்ட்பர்க் கோட்டையின்
சாதுக்கள் வாழும்
சந்நியாச மடம்!
துறவிகளின் மௌனவாழ்வுத்
தூண்டிலிட்டது!

விடிவெள்ளியின் கால்கள்,
விரைந்தன!

சந்நியாச மடத்தின் விலாவில் நின்று,
விழிகளைச் சுழற்றினார்
லுத்தர்!

மடத்தின் சுவரில்
மடலாகத் தொங்கியது
ஓர் ஓவியம்!

திருச்சபைக் கப்பல்...
பரிசுத்த ஆவியர்
படகின் மாலுமி!
போப், பேராயர்கள்,
ஆயர்கள், துறவிகள்,
முகத்தில் கர்வத்துடன்
மோட்சப் பயணம் விரைய......

பாமர மக்கள்
பாவக் கடலில்
தத்தளிப்பதாய்,
ஓவியத்தின் உட்கரு
உணர்த்தியது!

மார்ட்டீன் லுத்தரின்,
உள்ளத்தின் மையத்தில்
உணர்ச்சிப் புயல்
உற்பத்தியானது!

துடுப்பை பற்றத்
துடித்தன விரல்கள்!

கனத்த இதயத்தைக்
கவலைக் கரையான்கள்
அரித்தன!
ஆயினும்,
ஆன்மீகப் பயணத்திற்கு
அனுமதிச்சீட்டு!

✦

தொப்புள்கொடியே,
தூளியானது போதும்!

பந்தக் கடிவாளத்துடன்
பத்துக் குழந்தைகளைச்
சுமந்து செல்லும்,
ஒற்றைக் குதிரையாய்
ஹான்ஸ் லுத்தர்!

கங்காருவின் மடிப்பை,
குட்டிக்கு
நாற்காலியே தவிர,
அரியணை அல்லவே?

இல்லங்கள் பல சென்று
இசைக் கருவிகள் மீட்டியதில்,
சொக்கிய இதயங்கள் ஈந்த
சொற்பத் தொகை,
கல்லூரிக் கல்வி
ஊனமில்லாமல் நடக்க
உதவியது!

வழக்கம்போல்,
மஞ்சள் மேகங்கள்
மாநாடு நடத்தும்
மாலைப் பொழுது...
நிதிக்காக,
நதி நடந்து கொண்டே
பாடியது!

ஒவ்வொரு மெட்டுக்கும்
இதயம் மெழுகானது!

'உர்சுலா,
கான்ராட் கோட்டா',
தம்பதியர்...
வாரிசு இல்லாததால்
வாழ்க்கை புளித்தவர்க்கு,
முச்சந்தியின் இசை
முகத்தை வருடியது!

இது இசையா?
இல்லை,
உயிரைச் சுண்டியிழுக்கும்
விசையா?
தண்ணீரில்லாமல்
தவித்த வாய்க்கு,

பழரசம் கிடைத்த
பரவசம்!

இவன்,
இறைவன் வழங்கிய
இலவசக் குழந்தை!

மார்ட்டீன் லூத்தரைத்
தத்தெடுத்துத்
தழுவினர் தம்பதியர்!

நிதி கேட்டவரே,
நிதியானார்!

கருணை இதயங்களால்,
கண்ணீரும் தித்தித்தது!

●

## வாசலைத் தட்டிய வைகறை!

பூமியின் மோதிரமாக
'எர்புர்ட்' பல்கலைக்கழகம்!
நம்
வாலிபச் சிறுத்தைக்கு
வயது பதினெட்டு!

இலத்தீன் இலக்கியத் தத்துவங்கள்,
சுட்டுவிரலில் நின்றன!

ஆயினும்,
வண்ணத்துப் பூச்சியின்
தலையில்
வருத்த முள்முடி!

கனவுகளை வருடவேண்டிய
கண்கள்,
கல்வாரியில் இடறியது!

வேதாகம விளக்கையே,
விட்டில் மனது
முட்டி மோதியது!

வாழ்க்கையைப் பற்றிய
கேள்விகள்,
மனதுக்கும்
மூளைக்குமிடையே
மல்யுத்தம் செய்தன!

இரண்டாவது இதயம்
தோழன் ‘அலெக்ஸ்’,
விபத்தில் இறந்தது
விழிகளை ரணமாக்கியது!

கண்ணுக்குத் தெரியாத
கவலைகள்,
கழுத்தை நெறித்தன!

மரண பயம்,
மனதுக்குள் பாத்தி கட்டியது!
பேசுவதே,
பிரசவ வேதனையானது!
மரணம் மெய்;
மானுடம் பொய்!

துறவியல்லாதவன்
இறந்து போனால்,
நரகத்தின் குதிகாலால்
நசுக்கப்படுவானே?

மோட்சத்திற்கான ஏணியை
முதலில் கைப்பற்ற
வேண்டும்!
யோசி... யோசி...!

✦

சிந்தனைச் சுழற்சியில்
சிலமாதங்கள்,
செலவழிந்தன!

எம்.ஏ.பட்டமும்
தத்துவ அறிவியல் பட்டமும்,

தலைக்கு மகுடமானது!
சட்டக்கலைப் படிப்பு
சங்கிலித் தொடரானது!

✦

வானம் சூலான ஒரு
மழை மாதம்!

விடுமுறை கழிந்து
விடுதி திரும்பிய லுத்தரை,
புழுதியும் மழையும்
புரட்டி எடுத்தன!

தரைக்கும், வானத்திற்கும்,
தண்ணீர் யுத்தம்!

காற்றின் கரு,
கலைந்து போனதா?

சரீரம்,
சருகாய் படபடத்தது;
இருதயம்
குடுகுடுப்பையானது!

இதயத்தில்
ஆணிவேரைப் பிடுங்கும்.
அச்சம்!

கண்ணிமைப்பதற்குள்..
காலடியில் ஒரு,
க
ன
த்
த
இ
டி
!

இமைகள் உறைந்தன;
ஒப்புக்கு ஒட்டியிருந்த
தைரியம் உதிர்ந்தது!

இன்னுமொரு
இடி இறங்கினால்,
சப்தத்திலேயே உயிர்
சமாதியாகிவிடும்!

ஆட்டுக் குட்டியாய்
நடுங்கிய மனது
'ஆன்' அம்மையை
அபயம் நாடியது!
''உயிர் தப்பினால்
துறவறம் பூண்டு
தொண்டு செய்வேன்''

விழுந்த விதை,
முட்டிமோதி
முகம் பூத்தது!

இந்தச்
சத்தியம் பெறவோ,
சதிபுரிந்தது இயற்கை?

காற்றும் மழையும்
கலைந்தன....
மார்ட்டின் லூத்தரின்
மனத்திலுங்கூட!

✦

பூ தன்னைக்
காம்பிலிருந்து,
கழற்றிக் கொண்டது!

தந்தையின்
சிரம் வெடிக்க...

நண்பரின்
கரம் தடுக்க,
உறுதி உரமானது!

தவப்பிரளயத்தைத்
தடுக்கவியலுமா?
கடலைத் தேடும் நதிக்கு
கைவிலங்கு தகுமா?

✦

'எர்புர்ட்'டின்
ஆண்டிகள் வாழும்
அகுஸ்தீன மடம்!

காவி நிலவுக்கு,
கதவுகள் வழிவிட்டன!

இருபத்தி இரண்டு வயது
'பொற்காலம்',
இருண்ட காலத்தினுள்
நுழைந்தது!

திருச்சபைக்குத்
தெரியுமா?

ஒரு
ஊழிநெருப்பு தன்னில்
ஊடுருவிக் கொண்டிருப்பது?

✦

கருப்பு வெள்ளைச்
சேலைகட்டும்
காலமே!
நாட்குறிப்பு எடு!

சரித்திரத்தின் படித்துறைக்கு,
ஒரு
சலவைக்காரன் வருகிறான்!

✦

இருண்ட திசைகளே!
முகம் கழுவுங்கள்;
உங்களுக்கான 'மன்னா'
விழுந்து விட்டது!
மகிழ்ச்சியுடன்
பெற்றுக் கொள்ளுங்கள்!

●

# வித்தியாசமான வேள்வி!

அகுஸ்தீன் மடத்தின்,
அந்தரங்கம் தோலுரிந்தது!
முதுகில் சிலுவைகளாய்
மூத்த துறவிகளின்
முன்னூறு உத்தரவு!
திருவோடே அங்கு
திருமறை!

ஓநாய்களுக்கு மத்தியில்,
ஆடுபோல் அவஸ்தை!
மோட்சத்திற்குப் புறப்பட்ட
விசுவாசக் கப்பல்,
வழிதவறி,
நரகத்தின் துறைமுகத்தில்
நங்கூரமிட்டது!

பிச்சை உணவை
பிரித்து உண்பதிலும்,
மடத்தின் துப்புரவுப் பணியிலும்,
நத்தையின் முதுகிலேறி,
நாட்கள் சவாரி செய்தன!

✦

வேத மடத்தில்
விரிசல்களே
அஸ்திவாரம்!
சிற்றின்பங்களே!
பேரின்பச் சித்தாந்தம்!
துறவற வாழ்வு,
தொழில் ரீதியாகத்
தோன்றியது!

சந்நியாச மடம்
சரீரத்தைச்
சாறு பிழிந்தது!

✦

இருதயம்,
தவணை முறையில்
தற்கொலை
செய்துகொண்டது!
ஆண்டவரே!
மூலிகையின்
ரசவாதங்களைத் தேடியவன்,
கள்ளிச் செடிகளின் மத்தியில்
கைதியாக நிற்கிறேனே?

சுரந்த கண்ணீரும்,
சுண்டிப் போனதே?
இந்த ஊமை விழிகளுக்கு,
உன்னத வெளிச்சத்தைப்
பிச்சையிட மாட்டாயா?

வேதனை சூட்டால்
ரத்தப் பால்
பொங்குகிறது;
உம்

ஜீவ் தண்ணீரால்
சிறிது தணிக்கமாட்டீரா?

பூட்டிய அறைக்குள்,
போராட்டம்....
போராட்டம்...!

ஜெபத்தின் மேல்,
ஜெபம்!

முழங்கால்கள்
நடுங்கினாலும்,
தொழுத கரங்கள்
துவளவில்லை!

ஆறேழு நாட்களாகியும்,
அறைக் கதவுகள்
மௌனமாக
முடங்கிக் கிடந்தன!

மடத்தினுள்,
குண்டு விழுந்தாற்போல்
குழப்பம்!

காவிகள் கூடி
கதவில் மோதினர்;
உள்ளே .....

கசங்கிய காகிதமாய்
கவிழ்ந்த லூத்தர்!

✦

தலைதொங்கிய ரோஜா,
உதிரவில்லை,
உயிர்த்தது!

ஆயினும்,
உதடுகளில் அணையாத
உஷ்ண தாகம்!

தேய்மானங்களைப் பற்றிக்
கவலை கொண்டால்,
திசைகளில் ஒளியாகுமா,
மெழுகுவர்த்தி?

சந்நியாச மடத்தில்
சங்கிலியால்
பின்னப்பட்டிருந்த
வேதாகமம்,
அவ்வப்போது
உள்ரணத்திற்கு
ஒத்தடமானது!
(வேதாகமம் அன்று
விற்பனைக்கில்லை)

✦

காலம்,
மாதங்களை
எச்சமிட்டது!
தரிசான மனதை ஒரு
தளிர்க்கரம்,
தழுவிக் கொண்டது!

அவர்...
அரளிகளுக்கு மத்தியில்
ஓர் ஆப்பிள் மரம்!

‘இயேசு ஒருவரே
உயிர்மெய், என
உணர்ந்தவர்;
உரைப்பவர்!

‘ஜான் ஸ்தௌபிட்ஸ்!’
நகல்களுக்கு மத்தியில்,
ஓர் அசல்!
கவலைக்குடங்கள் சுமக்கும்
கருத்த கண்கள்!
நோன்புகளிலும்,
உபவாசத்திலும்,
நைந்த நூலாய்
நலிந்த லுத்தரின்,
வேதயுத்த வெறியின்
விலாசமறிந்த
ஜான் ஸ்தௌபிட்ஸ்...

பரிசுத்த வேதாகமத்தைப்
பரிசளித்தார்!

தூண்டில் மனது
துப்பாக்கியானது!

கரங்களில்
மின்சாரம்;
கண்களில் மின்விளக்குகள்!

இரவும் பகலும்
மடிமுட்டும் கன்றாய்
மார்ட்டீன் லுத்தர்!

வருடங்கள் இரண்டு
வடிந்தன!
தீக்குச்சி,
தீப்பந்தமானது!

✦

முட்களின் மத்தியிலும்
சிலபூக்கள்
முகத்தை முத்தமிட்டன!

ஆயர் பட்டம்,
வெற்று வானத்திற்கு
விடியலை அழைத்துவந்தது!

ஆராதனை மழையில்
இதயங்கள் குடையாகின!

'ஜான் ஸ்தௌபிட்ஸின்'
பாசக் கரங்கள்
பந்தலாக விரிந்தன!

கண்ணீர்த்துளி,
முத்தாகக்
கருத்தரித்தது!

வித்தன்பர்க்
பல்கலைக் கழகத்தின்
தத்துவப் பேராசிரியராக
மார்ட்டீன் லுத்தர்!

கிரேக்கம்,
எபிரேய மொழிகள்,
நாவின் நுனியில்
நடனம் ஆடின!

வேத நூல்களை
மூலமொழிகளிலேயே
முத்தெடுக்க முடிந்தது!
இறையியல் பட்டம்
இதயக் கோப்பையில்,
உற்சாக ரசத்தை
ஊற்றியது!

சூரியனைச் சுற்றும்
கிரகங்களாய்,
மார்ட்டீன் லூத்தரைச் சுற்றி
மாணவர்கள்!

இருண்டு கிடந்த
எர்புர்ட்டின் மடம்,
மார்ட்டீன் லூத்தரின்
நெருப்புப் பிரசங்கங்களால்
நிமிர்ந்து நெட்டிமுறித்தது!

●

# ஒரு திரைகாட்டியும் சில விறகு வெட்டிகளும்!

அகுஸ்தீன மடத்தில் ...
வெடித்தது ஒரு
வேற்றுமை விரிசல்!
ஸ்தௌபிட்ஸ்க்கும்
துறவிகள் ஏழுபேருக்கும்,
கருத்து மோதல்
காட்டுத் தீயாய்ப் புகைந்தது!

இரவும் பகலும்
இரு தரப்பினருக்கும்,
பட்டி மன்றம்!

தீர்ப்பே குற்றமாய்,
திரும்பவும் கழன்றது!
போப்பின் தீர்ப்பிலேயே
இனி,
சொற்போரின்,
சூடு தணியும்!

தூது யார்?
மடத்தின் கண்கள்
மார்ட்டீன் லூத்தரின் மேல்
மையமிட்டன!

இருதரப்பினரின்
ஏகமனப் பிரதிநிதியாக,
போப்பைக் காணப்
புறப்பட்டது புறா!

✦

சந்தோஷத் தேனில்,
சரீரம் மூழ்கியது!

ரோமாபுரி!
புண்ணிய மனிதர்களின்,
பூந்தொட்டில் அல்லவா?

மோட்சத்தின்
கையடக்கப் பிரதியை
முதன் முதலில்,
தரிசிக்கப் போகும்
தவிப்பு!

மோட்ச பூமியின்
முகத்தைக் காண,
கால்நடையாகப் புறப்பட்டது
கனவுப் பறவை!

✦

கால்களில் புழுதி...
கண்களில்
கடமையின் தீர்க்கம்!
பரிசுத்த நகருக்குப்
பாலைவனப் பயணம்!
பகல்,
எச்சில் உமிழ்ந்தது;
இரவு
முகம் துடைத்தது!

பூமியின் அகோரங்கள்,
புன்னகையைக்
கொலை செய்தன!

வடுக்களை
மெடல்களாக அணிந்த
வாழ்க்கை!

சகதியில் வாழும்
சந்தர்ப்பவாத மனிதர்கள்!
வேதனைத் திராவகம்,
விழிகளைப் பொசுக்கியது!

யாசக உணவால்
வயிறு நிரம்பியது;
ஆத்தும் பசி
அணையுமா?

இரவில் இளைப்பாறிய
இறை மடங்கள்,
பிரபுக்களின்
அரண்மைகளாகப்
பிரமிப்பு ஊட்டின!

இத்தாலிய நாட்டின்
சலவைக்கற்கள் மெழுகிய
'பெனிடிக்' மடம்,
கேளிக்கை விடுதியாய்
கவர்ச்சி காட்டியது!
சன்னதிகளில்,
சந்தைச் கூச்சல்!
பழரசம் பருகிக் கொழுத்து
பன்றிக் குட்டிகளாக
வலம் வரும் துறவிகள்
'பூர்ஷ்வாக்' களையும் மிஞ்சி,

அதிகார போதையில்
அமிழ்ந்து மிதந்தனர்!

முத்துப் பதித்த
முள்முடியும்,
தங்கச் சிலுவையும்,
வெள்ளிச்
சொரூபங்களும், மின்னலையும்
குருடாக்கிவிடும்!

சிந்தனை,
செக்கிழுத்தது!

‘துறவறம்’ - எனும்
தூயச் சொல்,
அர்த்தமிழந்து
அகதியாய் நிற்பதா?

துடிக்கும் உதடுகள்
துப்பாக்கி முனைகளாயின!

‘தொப்பை’த் துறவிகளுக்கு
லூததரின் அறிவுரை,
கடலில் எச்சில்துப்பிய
கதையாயிற்று!

அத்தர் பூசிய
ஆத்தும குஷ்டரோகிகளுக்கு,
ஆத்திரம் கொப்பளித்தது!

கழிப்பறையை விட்டு
வெளியேறியது,
கருவறை!

✦

போர்க்கள யாத்திரையில்,
சடலங்களையே
மனிதர்களாகச்
சந்தித்தார் லுத்தர்!
கிளிஞ்சல்களைக் கொண்டா
முத்தின் தரத்தை
முடிவெடுப்பது?

ஒவ்வொரு
உண்மைக்கிறிஸ்தவனுக்கும்,
கல்வாரி,
கல்வித்தகுதியல்லவா?

வேதனை வெயிலுக்கு,
நம்பிக்கைக் குடைபிடித்து
நடந்தது நந்தவனம்!

ஏழு குன்றுகளின் மேல்,
எழுந்து நிற்கும் ரோமாபுரி!
மார்ட்டீனின் விழிகளுக்குள்,
மகிழ்ச்சி மடை திறந்தது!
இதோ...
வானத்தின்
வாசற்படி!
சிலுவைப்பாடுகளுக்கான
சிம்மாசனம்!

ஆசீர்வதிக்கப்பட்டவர்
இளைப்பாறும்
அன்னை மடி!

கிறிஸ்துவின்
உள்ளங்கை!

கிறிஸ்துவப் பயணத்தின்,
கிழக்கு இலக்கு!

அடடா!
உள்ளத்தின் சாலையில்,
உணர்ச்சி ஊர்வலம்!

✦

வேத நகரத்திற்கு வந்த
வெற்றிக் களிப்பில்,
வியர்வையும் இனித்தது!

கனவுகளைச் சுமந்து
களைத்து வந்த மேகத்திற்கு,
அடைக்கலம் தந்தது
அகுஸ்தீன மடம்!
ஆன்மீகத்
திருத்தலங்களையும்,
அப்போஸ்தலர்களின்
கல்லறைகளையும்
வியப்பு விழிகள்
வீரவணக்கம் செலுத்தின!

'இரண்டாம் ஜூலியஸ்'
போப் ஆண்டவராகச்
சம்பிரதாயங்களின் முதுகில்,
சயனித்திருந்தார்!

ஆண்டகையின்,
அரண்மனை அலங்காரம்,
கண்களுக்குள்
சிலம்பாடியது!

உறைந்து நின்ற லுத்தரை
உசுப்பியது,
ஒரு விளம்பரம்!

இயேசுவின்
பாதம் பட்ட
28 படிக்கட்டுகள்,
தங்க முலாம் பூசப்பட்டுத்
தகதகத்தன!

ஒவ்வொரு படியிலும்
முழங்காலிட்டு ஜெபித்தபடி
முன்னேறினால்,
ஒவ்வொரு படிக்கும்
ஒன்பது வருட பாவங்கள்
ஒழியுமாம்!

விதிமுறைகளைக் கண்டதும்
விடுவாரா லூத்தர்?

முழங்காலிட்டு
மூன்றுபடிகள்
முன்னேறும் பொழுதே....
சிந்தனையில் ஒரு,
சிவப்பு மின்னல்!

சத்திய விசுவாசிகளுக்குச்
சடங்குகள் எதற்கு?

பூவுக்கு
உதட்டுச் சாயம்,
ஒவ்வாது!

விசுவாசத்திற்குச்
சம்பிரதாயங்கள்,
சவக்குழி தோண்டுகின்றன!

உள்ளத்தின்,
ஊஞ்சல் பலகையில்
ஓராயிரம் கேள்விகள்
உந்தி விளையாடின!

உதட்டில் தேனும்
உள்நாக்கில் விஷமும்
தடவிய,
வேத வியாபாரிகள்!

மந்திரவாதிகளாக,
மதவாதிகள்!
போப்பின்
தும்மலைக் கூட,
மலைப் பிரசங்கமாகத்
திரிக்கும் திருடர்கள்!

சடங்குகளின்
கொத்தடிமைகளாகச்
சராசரி மனிதர்களின்,
சமாதி வழிபாடு!

முரண்பாடுகளின்
விஷவாயுவால்,
மூச்சுத் திணறியது!
ரணங்களை ஆற்ற வேண்டிய
ரோமாபுரி
தன் ரகசிய அறையில்,
மனித நேயத்தின் விழிகளை
கொள்ளிக்கட்டையால்
குத்தி ரசிக்கிறதே!
நுரைத்துக் கிளம்பிய
உற்சாக ஓடை
வாழ்வியல் வெப்பத்தில்
வற்றிப்போனது!

கைகுலுக்கிய ரோமாபுரியைக்
கைகழுவினார் லுத்தர்!

சிந்தனை,
சிதறிய இதயத்தைச்
சேமித்தது!

சாத்தான்,
இயேசு கிறிஸ்துவையும்,
இம்சித்திருக்கிறானே?
''நம்பிக்கையே
மீட்பின் வழி;
விசுவாசத்தால்
நீதிமான் பிழைப்பான்!''

நெருப்பினுள் விழுந்த
'ஃபீனிக்ஸ்' பறவை,
மறுபடியும் உயிர்த்தது!

காளான்களைக் குறித்து
கவலை இல்லை!

நல்ல நிலங்களுக்கு,
நம்பிக்கையே கலப்பை!

வேதவரிகள்
விழிகளின் திசைகளில்,
வைரவிதைகள் தூவின!

ஏழைகளே,
இறைவனின் பிரஜைகள்!

மன்னர்களின்
தொட்டிலில் துயிலும்
இம்மானுவேலை,
மறுபடியும்
மாட்டுத் தொழுவத்திற்கே,
அழைத்து வர வேண்டும்!

மானுடத்தின்
கண்ணீர் துடைக்க,
மாட்டீன் லுத்தர்
கைக்குட்டையானார்!

வேர்வை வர்க்கத்திற்கு
விசிறியான லூத்தர்,
வீதியெங்கும்,
வேதாகம வரிகளை
முஷ்டியுர்த்தி முழங்கினார்!

✦

தூது வந்த புறா
துவண்டு திரும்பியது!
போப்பின் தீர்ப்பு
ஒருபுறம்...
பொய்மைகளின்
நகக்கீறல்கள்
மறுபுறம்...

மண்டிய புழுதியுடன்
மடம் திரும்பினார்
மார்ட்டீன் லூத்தர்!

✦

இளவரசன் பிரடரிக்
பெருந்தன்மையின்
பிறப்பிடம்!

அறிஞர்களுக்கு,
ஆதரவு ஊட்டச் சத்தி!

வித்தன்பார்க்கின் கழுத்தில்,
பல்கலைக்கழகம் ஒன்றை
அணிகலனாக அணிவிப்பது
இளவரசன் பிரடரிக்கின்
அந்தரங்க ஆவல்!

நிழலை,
நிஜமாக்க வல்லவர்,
ஸ்தெளபிட்ஸ்!

அவரது உழைப்பு
எறும்பையும்,
சோம்பேறியாக்கிவிடும்!

✦

நாட்கள் பழுத்து
நழுவி விழுந்தன!

ஸ்தௌபிட்ஸின்
இதயத்தில் ஒரு
விருப்பம்,
விரல் சொடுக்கியது!

பேராசிரியராக,
மார்ட்டின் லுத்தரை
பதவிப் பிரமாணம் ஏற்க
பரிந்துரைக்க வேண்டும்!

சிந்தனைக்குள்,
'சிந்தூர்' வாசிக்கும்,
மார்ட்டீன் லுத்தரின்
ஞானதீபம் கண்டு,
இளவரசர் பிரடரிக்
வியப்பின் மடியில்
விழுந்தார்!

திரியைத் தூண்டிவிடும்
தீக்குச்சியானார்,
இளவரசர்!

மார்ட்டீன் லுத்தரின்
அறிவர் கல்விக்கு,
அவரது நிதியுதவி
முதுகுத் தண்டானது!

நாடெங்கும்
திருப்பண்டங்களைச்
சேகரிக்கும் ஒரு
புதிய பொறுப்புக்கு,
ஸ்தௌபிட்ஸ்
தேர்ந்தெடுக்கப்பட்டார்!
தனது நாற்காலிக்குத்
தகுதியானவன் யார்?

மனது,
மார்ட்டீன் லூத்தருக்கே
ஓட்டுப் போட்டது!

மார்ட்டீன் லூத்தரை
தந்தையின் பெருமிதத்துடன்
தனது இருக்கையில்
அமர வைத்தார்
ஸ்தௌபிட்ஸ்!

மார்ட்டீன் லூத்தர்
துடுப்பானார்;
பல்கலைக்கழகம்
படகானது!

வகுப்பறையெங்கும்
ஆன்மீகப் பூக்கள்,
அடர்ந்து குலுங்கின!
தேய் பிறைகளாக இருந்த
மாணவர்கள்,
வளர்பிறைகளாயினர்!

விதைகள்,
கதிர்களாயின!

சிந்தனை உழவரின்
பணியைக் கண்டு,
பல்கலைக் கழகம்
படையெடுத்துப் பாராட்டியது!

ஆயினும்,
மார்ட்டீன் லூத்தரின்
மனப் பிரதேசத்தில்,
சூம்பிக் கிடந்தது
ஒரு சோக விதை!

மோட்சத்தின் கதவுகள்,
மூடிக் கிடக்கிறதே!

சிந்தனையைக் கவலை
செல்லரித்தது!

'அகுஸ்தீன், தாலர்,
எக்கார்ட், கெர்சனின்'
அருள் மொழிகள்,
காயக் கொப்புளங்களுக்கு
களிம்புகள் தடவின!

'ஏழைகளுக்கும்
பாவிகளுக்குமே,
இயேசு உதித்தார்' - எனும்,
வெளிச்ச வரிகள்,
விழிகளுக்குள்
ஏற்றங்கால் இறைத்தன!
வேதனைக் களையெடுக்க,
வேதாகம வரிகள்
விரல்களாயின!

✦

ஓர்
அற்புத அறுவடைக்கு
காலவயல்வெளி
காத்துக் கிடந்தது!

●

# சிலுவைக் கொழுவும் சிலந்தி வலையும்

ஜெர்மானியர்களுக்குத்
தாய்மொழி வேதாகமம்
தயாராகவில்லை!

லத்தீன் மொழியிலேயே,
தேவாலய வழிபாடுகள்
திணிக்கப்பட்டிருந்தன!

மொழிச் சுதந்திரம்,
ஊமைகளுக்கு மட்டுமே
உத்தரவிலிருந்தது!

அந்தப்
பரிதாப வருடத்தில்,
பத்தாம் லியோவின்,
அத்தர் அறிக்கைகளே
ஆராதனை வசனங்கள்!

குறுக்குச் சிந்தனையுள்ள
பத்தாம் லியோ,

'ஜிகினா'த் திட்டங்களின்
'ஜீபூம்பா'!

ஆலய மண்டப
நிதி வசூலுக்கு,
அடித்தள மக்களைக் கவர
மன்னிப்புச் சீட்டுகளை
'மன்னா'க்களாய் தூவிட்டார்!

பணத்திற்கு
பாவ மன்னிப்புச் சீட்டு
பெற்றால்.....

கர்த்தரின் கரங்கள்
தலைமுறை பாவத்தைத்
தள்ளுபடி செய்யுமெனும்,
மாயாஜால பிரச்சாரம்
மக்களிடம் பரவியது!

'தெத்சல்' எனும்
'தொமினிக்க' சந்நியாசி
இந்த,
வேத விபச்சாரத்திற்கு
வியாபாரியனான்!

ஆண்டகையின் ஆணையை
அரியாசனத்தில் வைத்து,
ஆடல் பாடல்களுடன்
பாவமன்னிப்புச் சீட்டுகள்,
விஷக் கனிகளாய்
விற்கப்பட்டன!

ஓநாய்களின்
வசிய வரவேற்பில்,
மந்தைகளாய்
மக்கள் கூட்டம்!

சூழ்ச்சி வியாபாரம்
சூடுபிடித்ததும்

விழித்துக் கொண்டார்,
பிரடரிக் இளவரசர்!

வித்தன்பர்க்
பல்கலைக் கழகத்தை
விரிவாக்க ......

தன் பொக்கிஷ அறையில்
பூட்டி வைத்திருந்த,
புனிதச் சின்னங்களை
புழுதிதட்டி விற்றார்!

இந்தக்
கருப்புச் சந்தைக்
கள்ள வியாபாரம்,
மார்ட்டினின் நெஞ்சில்
நெருப்பை ஊற்றியது!
மன்னிக்கும் அதிகாரம்
இயேசுவைத் தவிர,
எவருக்குண்டு?

உப்பரிகைச் கல்தான்களின்
சந்தர்ப்பவாத வியாபாரத்தைச்
சகிக்க முடியவில்லை!

வக்கிர வாதைகளை
விற்பனை செய்யும்
இந்த
மூட வெட்டுக்கிளிகளின்
முகமூடிகளைக்
கிழிக்க வேண்டாமா?

ரத்த நாளங்களில்,
யுத்த வெறி!

இரவும் பகலும்
வேதாகமமே,
வீடானது!

ரத்தத் துளிகள்,
வார்த்தைகளாக
வடிந்தன!
ரோமானிய திருச்சபையின்
இருட்டுக் கொள்கைகளின்,

வேத ஆதார
விபரம் தயாரானது!

ஒவ்வொரு எழுத்திலும்
உயிரின் சாறு வழிந்தது!

சூரியன்
மேகமெத்தைகளைச்
சுருட்டிக் கொண்ட ஒரு
காலைப் பொழுதில்,

95 நியாயங்கள்
லத்தீன் மொழியில்
தொகுக்கப்பட்டு,
வித்தன் பர்க்கின்
ஆலயக் கதவுகளில்
அறையப்பட்டிருந்தன!

ஆணிகளில் அறையப்பட்ட
அக்கினி அறிக்கை,
மக்களின் மத்தியில்
வேட்டுச் சத்தமாக
வெடித்துக் கிளம்பியது!

ஜெர்மன் தேசம்,
விலாவில்,
விழுந்த உதையால்
விழித்தெழுந்தது!

மார்ட்டீன் லூத்தரின்
அறிக்கை,
அடித்தள மக்களின்
ஆத்திர முஷ்டியாக
உயர்ந்து ஒலித்தது!

ஆதிக்க வர்க்கத்தின்
ஆடம்பர மாடங்கள்

முற்போக்கு இடிவிழுந்து
முகம் கருத்தன!

தாழ்மையின்
தரிசு நிலம்,
அக்கினியின் உழவால்
புரட்சியைப் பூத்தது!
மார்ட்டீன் லூத்தர்
மறுபடியும்.....
95 நியாயங்களுக்கு
விரிவுரை அச்சடித்து,
ஸ்தௌபிட்ஸின் வழியாக
பத்தாம் லியோவின்
பார்வைக்கு அனுப்பினார்!

மக்கள்
மன்னிப்புச் சீட்டுகளை,
குப்பையில் கிழித்தெறிந்து
கொந்தளித்து நின்றனர்!

அரசவை,
அலைகளுக்கு
வேலி கட்டுவதற்கு
ஆலோசித்தது!

ஒரு
தற்காலிக ஓலையைத்
தயாரித்தது!

‘‘மார்ட்டீன் லூத்தர்
இரு மாதங்களில்,
அரசவையில்
ஆஜராக வேண்டும்!’’

அமுதம் பூசப்பட்ட
அறிக்கையினுள்,
கண்ணி வெடிகளைக்
கண்டு கொண்ட
இளவரசர் பிரடரிக்...
ஜெர்மன் தேசத்திலேயே,
வழக்கை வைத்துக் கொள்ள
வற்புறுத்தினார்!

இளவரசரின்
ஏவுக் கணைக்கு,
மதயானைகள்
மசிந்தன!

போப்பின் உப்பரிகை
புரட்டுப் பிரதிநிதியாக,
‘காயத்தான்’ என்பவனை
‘ஆக்ஸ்பர்க்’ கின்
விசாரணைக்கு
அனுப்பி வைத்தது!

காயத்தான் தன்
பகட்டுப் பரிவாரங்களுடன்,
மூன்று நாட்களுக்கு முன்பே
முகாமிட்டான்!

குள்ளநரி காயத்தான்,
சிங்கத்தை முயலாக்கச்
சிந்தித்தான்!

தீயின் வெப்பத்தை
தீண்டிப் பார்ப்பது,
நல்லது!
ஒற்றன் ‘உர்பனை’
மர்மத் தூதுவிட்டு,
நியாயங்களைக் கிழிக்க
நிர்பந்தித்தான்.

கல்லை அப்பமாக
மாற்றிக் கேட்ட
தந்திர சாத்தானாய்,
ஒற்றன் உர்பன்
உருகி நின்றான்!

மசியுமா நம்
மனிதக் கோபுரம்?
நீதியின் தராசுமுள்
வன்முறைக்கு,
வணங்கவில்லை!

அமாவாசைக்கு முன்,
பௌர்ணமி பொங்கியது!

சத்தியத்தின் போர்வாள்
சவரக்கத்தியாகச்
சம்மதிக்குமா?

லூத்தரின்
ஆவேச அலைகள்முன்,
எச்சில் உர்பன்
எம்மாத்திரம்?
பொசுங்கிய தலையுடன்
புறப்பட்டது புழு!

✦

ஆத்திர அலைகளுக்கு
அன்னையின் தாலாட்டாக,
வேதாகமத்தை விரித்தது
சத்தியத்தின் சங்கொலி!

ஆம்!
நிகழப்போகும்
நீதியின் யுத்தத்திற்கு,
நிரூபம் தானே
கேடயம்?

●

# கதவில் அறையப்பட்ட
# காலத்தின் கல்வெட்டு!

*அக்டோபர் 31, 1517 சீர்திருத்த மாவிரரான மார்ட்டின் லூத்தர் தமது 95 நியாய நிரூபணங்களை விட்ட பர்க் தேவலாயத்தின் அகன்று உயர்ந்த மரக் கதவிலே ஆணி அடித்து விளம்பரப் படுத்தினார். அதன் விவரங்களாவன.*

## நியாய பிரமாணங்கள்!

1. தேவன் அனுதினமும் நாம் செய்கிற பாவங்களுக்காக மனஸ் தாபப்படுகிறார். (மத் 4:17)

2. பாதிரியார்கள் பாவ மன்னிப்பை அளிக்க அனுமதி இல்லை.

3. பாவ மன்னிப்பை உடலை வருத்திக்கொள்வதால் பெற முடியாது.

4. உள்ளான மனம் வருந்துதல் நம்முடைய வெளிப்படையான மாறுதலுக்கு வழி வகுக்கும்.

5. போப்பானவருக்கு பாவங்களை மன்னிக்க அதிகாரம் இல்லை.

6. தேவன் மன்னித்தால் ஒழிய போப்பானவர்க்கு மன்னிக்க அதிகாரம் இல்லை. தேவ மன்னிப்பை அறிவிக்கவே அவருக்கு முடியும்.

7. தன்னை தாழ்த்தி மனந்திருந்தாதவனுக்கு தேவன் பாவ மன்னிபை அருளுவதில்லை.

8. பரித்தவர்களுக்கு தேவ வெளிப்படுத்துதல் (வேதம்) எவ் வித பயனும் அளிக்காது.

9. போப் மரணம் ஆபத்து என யாருக்கு திப்பரித்தாலும், தேவன் நம் மீது அன்புள்ளவராகவே இருக்கிறார்.

10. அறியாமையினாலே குருமார்கள் உத்தரிப்பு எஸ்தலம் ஒன்று உண்டு என மரிக்கும் தருவாயில் உள்ளவர்களிடம் கூறுகின்றனர்.

11. உத்தரிப்பு எஸ்தலம் என்பது திருச்சபைக்கும் அதன்ச ட்டத்திற்கும் எதிராக விதைக்கப்பட்டகளையாகும்.

12. மெய் மனந்திரும்புதலை கண்டறியவே தேவன் தண்டனை களை அனுமதித்தார்.

13. சபை மரிதித்தவர்கள் என்று தீர்ப்பு கூறினாலும் அவர்கள் மரணத்தின் வாயிலாக எல்லா திரப்புகளிலிருந்தும் விடுதலை ஆவார்கள்.

14. தேவ பக்தி அற்று வாழ்ந்தால் உடல் நலம் குறையும்போது பயம் மேலோங்குகிறது.

15. பயமே உத்தரிப்பு சல்தலம் ஒன்று உள்ளது என நமக்கு போதிக்கின்றது, வேறென்றுமில்லை.

16. பாவ மன்னிப்பின் நிச்சயம் இல்லாததால் தான் நமக்கு நரகம் உத்தரிப்பு ஸ்தலம் மோட்சம் என்பதை குறித்து பயம் உண்டாக்குகிறது.

17. உத்தரிப்பு எஸ்தலத்தில் ஆன்மாக்களின் துன்பங்கள் குறையும் என்பது பொய்யே.

18. உத்தரிப்பு ஸ்தலம் என்பது வேத வசனத்தால் நிறுபிக்கப்பட வில்லை.

19. உத்தரிப்பு சந்தலத்தில் ஒரு ஆத்துமா வாழும்பட்சத்தில் நம்மை (இரட்சிக்கப்பட்டவர்கள்) போல் முழு இரட்சிப்பின் நிச்சயம் அவர்கள் அடைந்ததாக நிரூபிக்கப்படவில்லை.

20. பரிபூரண மன்னிப்பு என்னும் போப்பின் வார்த்தை செல்லுபடியாகாது.

21. பாவ மன்னிப்பு சீட்டு என்பது ஒரு மனிதனையும் இரட்சிக்காது, மன்னிக்காது.

22. உத்தரிப்பு சஸ்தலத்தில் உள்ள பரித்த ஆத்துமாக்கள் போப்பானவராலோ மரித்தவர்கள் அவரது பூசையால் மன்னிக்கப்பட்டு நித்திய ஜீவன் அடைவதில்லை. உலக வாழ்வின்போதே தங்கள் பாவ மன்னிப்பை பெற வேண்டும்.

23. பூரணமாக்கப்பட்ட (மனந்திரும்பின) பரிசுத்தவான்களுக்கு பாவ மன்னிப்பு வழங்க நமக்கு அதிகாரம் உண்டு என்று கூறும்.

24. இப்படிப்பட்ட பொய் பாவ மன்னிப்பால் அநேகர் வஞ்ஜிக்கப் படுகின்றனர்.

25. போப்பானவருக்கு உத்தரிப்பு எஸ்தலத்தின்மேல் எவ்வித அதிகாரமும் இல்லை.

26. நல்லெண்ணத்தின் அடிப்படையில் போப்பானவர் உத்தரிப்பு எஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்களுக்காக வேண்டுதல் ஏறெடுக்கிறார். ஆனால் அந்த வேண்டுதல் கடவுளால் கேட்கப்படுவதில்லை.

27. காணிக்கை பெட்டியில் பணம் விழுகிற சத்தத்தின் அடிப்படையில் உத்தரிப்பு ஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்கள் விண்ணுலகம் பரப்பதில்லை.

28. காணிக்கை பொருளாசையை பெருக வைக்கும், மன்னிப்பு தேவனால் அருளப்பட வேண்டும்.

29. புனித செவரினு, புனித பாஸ்கல் உத்தரிப்பு ஸ்தலத்தில் நீண்ட காலமாக இருக்க விரும்பினார்களா. விலை கொடுத்து விண்ணோ அவர்கள் விரும்பினார்கள் என்பது தவறு.

30. மனஸ்தாபம் என்பது உண்மையானது என எவராலும் நிச்சமாக கூற இயலாது. முழு பாவ மன்னிப்பு மனஸ்தாபம் அளித்ததாக கூறவும் இயலாது.

31. மன்னிப்பு பத்திரத்தை புரிந்துகொண்டு வாங்குகிறவனை அறிவது அரிது. மெய் மனஸ்தாபம் கொண்டவனை காண்பது அதிலும் அரிது.

32. இப்படிப்பட்ட உறுதி அளிப்பவர்கள் (மன்னிப்பு பத்திரத் தால் இரட்சிப்பு நிச்சயம்) ஆக்கினைக்கே உள்ளாவார்கள்.

33. இப்போதனைகளை (மன்னிப்பு பத்திரத்தால் இரட்சிப்பு நிச்சயம்) போதிக்கிறவர்களை குறித்து அனைவரும் எச்சரிக்கையாக இருத்தல் அவசியம்.

34. மன்னிப்பு சீட்டு. சாக்கிரமெந்துகள் பிரயாசித்தங்கள் இவை அனைத்தும் மனித ஏற்பாடுகளே.

35. மன்னிப்பு பத்திரத்தால் இரட்சிப்பு நிச்சயம் என போதிப்ப வர்கள் மாறுபட்ட கிறிஸ்தவர்களே.

36. மெய் மனஸ்தாபம் உடைய எந்த கிறிஸ்தவனும் இவை (பாவ மன்னிப்பு சீட்டு) இல்லாமல் பூரண மன்னிப்பை கிறிஸ்துவினால் பெற்றிடும் உரிமை உண்டு.

37. கிறிஸ்துவின் மீட்பால் மட்டுமே இறந்தவர்களும் உயிரோடிருப்பவர்களும் பாவ மன்னிப்பு சீட்டு இல்லாமலே எல்லா இறையருள் பாக்கியங்கள் பெற உரிமை உண்டு.

38. இப்படி கூறுவதால் போப்பானவர் கூறும் பாவ மன்னிப்பை நாம் உதாசினப்படுத்தலாகாது. அது தெய்வீக கூற்றுகளாய் இருக்கின்றன.

39. மன்னிப்பு பத்திரங்களின் மகத்துவத்தையும் மெய் மனஸ்தாபத்தின் அவசியத்தையும் எந்தவித பண்டிதர் களாலும் (ஒரே நேரத்தில் விளக்க இயலாது)

40. மெய் மனஸ்தாபம் பாவத்தின் தண்டனையிலிருந்த நம்மை காப்பாற்றவும், அப்பாவத்தை வெறுக்கவும் வழிவகை செய்கின்றது.

41. மன்னிப்பு சீட்டை எதிர்க்க நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். காரணம் நற்செயல்கள் மூலம் விண் பாக்கியம் நாம் பெற முடியும் என்கிற தவறை அவர்கள் செய்திட நேரிடும்.

42. மன்னிப்பு சீட்டு ஒருபோதும் அறச்செயலுக்கு நிகராகாது என மக்களுக்கு நாம்போதிக்க வேண்டும்.

43. பக்குவமாக ஏழைக்கு இறங்குவதும் தேவைப்பட்ட வர்களுக்கு கடன் தந்து உதுவுதலும் ஏற்ற செயல் எனவும் பணம் கொடுத்து பாவ மன்னிப்பு சீட்டு வாங்குவதிலும் இது சிறந்தது என மக்களுக்கு நாம் போதிக்க வேண்டும்.

44. பாவ மன்னிப்பு சீட்டின் அடிப்படையில் எவரும் சிறப் படைவதில்லை. மாறாக அன்பின் அடிப்படையிலேயே ஒருவன் சிறப்படைகிறான். (இது விசுவாசிக்கு மட்டுமே பொருந்தும்)

45. இக்கட்டில் உள்ளவர்க்கு உதவி செய்யாமல் பாவ மன்னிப்பு சீட்டுக்கு பணம் செலுத்துகிறவன்மேல் தேவ கோபம் வரும் என நம் விசுவாசிகளுக்கு போதிக்கவேண்டும்.

46. பணம் படைத்தவர்கள் தங்கள‘குடும்ப நலனுக்கு பணம் சேமிக்க வேண்டுமே அல்லாமல் மன்னிப்பு பத்திரங்களுக் காக ஒருபோதும் நம் பணத்தை செலவழிக்ககூடாது. என கிறிஸ்தவர்கள் உபதேசிக்கப்படவேண்டும்.

47. மன்னிப்பு சீட்டுகள் வாங்குவது சுய விருப்பத்தை பொறுத்தது. கட்டாயப்படுத்தி எவரும் வாங்கலாகாது என கிறிஸ்தவர்களுக்கு போதிக்க வேண்டும்.

48. போப்பானவர் மக்களின் பணத்தை அல்ல அவர்களின் மெய்யான மனந்திரும்புதலையே விரும்பவேண்டும் என மக்கள் கவனத்திற்கு கொண்டுசெல்ல வேண்டும்.

49. மன்னிப்பு பத்திரத்தின்மேல் நம்பிக்கை வைக்காதவர்கள் அதிகம் நன்மை பெற்றவர்கள். ஆனால் பாவ மன்னிப்பின் தவறான உபதேசத்தை நிராகரித்து கடவுள் பயம் அற்ற வர்கள் அதிகம் அவர்கள் மோசத்திற்கு ஆளாவார்கள் என கிறிஸ்தவர்களுக்கு நாம் போதிக்கவேண்டும்.

50. இப்பத்திர முறைகேடுகளை போப் அரசர் அறிய நேர்ந்தால் பேதுரு ஆலயம் எரிந்து சாம்பலாகட்டும் என்பாரே அன்றி வேறு எந்த முறையிலும் ஆலயத்தை கட்ட முன்வரமாட்டார் என நாம் கிறிஸ்தவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.

51. புனித பேதுரு ஆலயத்தை விற்றாவது அம்மக்களுக்கு பணம் ஈந்து அவர்கள் சுரண்டபடுவதை தவிர்ப்பது போப் அரசரின் கடமை என மக்கள் அறிய வேண்டும்.

52. போப் அரசரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ உத்தர வாதம் தந்தாலும் பாவ மன்னிப்பு பத்திரத்தை கொண்டு இரட்சிப்பு கிடைப்பது என்பது வீன்.

53. பாவ சீட்டை முன்நிறுத்தி பிரசங்கத்தை தடை செய்பவர்கள் கிறிஸ்துவுக்கு எதிரிகளே.

54. பிரசங்கம் முக்கியமானது. அந்த நேரத்தை பாவ மன்னிப்பு பத்திர பிரச்சாரத்துக்கு பயன்படுத்தல் ஆகாது, இப்படி நேரத்தை விரயமாக்குவது திருவசனத்தை அவமதிப்பதாகும்.

55. ஒருமுறை மணியடித்தால் ஒரு ஊர்வலம் ஒரு ஆராதனை என்று பாவ மன்னிப்புக்காக செய்யப்படும் பிரயாசங்கள் ஒழிந்து நூறுமுறை சுவிசேஷம் ஆராதனை என்னும் மணி யோசை முழங்குவதை நாம்பிரபலபடுத்தவேண்டும். இதுவே போப் அரசனின் கருத்தாகவும் இருத்தல் வேண்டும்.

56. பாவ மன்னிப்பை போப் ஆனாவர் திருச்சபையின் பரம கருவூலத்தினின்று பகிர்ந்தளிக்கிறார் என்னும் கருத்தை இன்னும் மக்கள் (கிறிஸ்தவர்கள்) அறிந்துகொள்ளவில்லை. தர்கித்தும்புரிந்துகொள்ளவில்லை.

57. மன்னிப்பு பத்திரங்களை விற்பனையாளர்கள விற்று தங்கள் பண வருவாயை பெருக்கிக்கொண்டிருக்கிறார்கள்,

58. மன்னிப்பு சீட்டுகள் எவ்வித பலன்களையும அளிப்ப தில்லை. கிறிஸ்துவின் சிலுவை மரணம் உயிர்தெழுதல் மனிதனுக்கு பாவ மன்னிப்பை ஈந்தளிக்கிறது.

59. புனித லாரன்ஸ் என்பவர் அக்கால கருத்துக்கு இசைய திருச்பையயின் ஏழைகளே திருச்சபையின் செல்வங்கள் என மொழிந்தார்.

60. கிறிஸ்துவால் அருளப்பட்டுள்ள திரவுகோல் திருச்ச பையின் செல்வம் என அதிகாரப்பூர்வமாக சந்தேகமின்றி நாம் துளிந்து கூறுகிறோம்.

61. போப் அரசரால் தீர்ப்பிடப்பட்ட ஆக்கினைகளை மன்னித் திட அன்னாரின் தனிப்பட்ட அதிகாரமே போதுமானதாகும்.

62. கடவுளின் மகிமை, கடவுளின் கிருபை ஆகியவற்றாலான அதி பரிசுத்தசுவிசேஷமே திருச்சபையின் மெய் செல்வ மாகும்.

63. எனினும் இச்செல்வம் மனித இயல்பின்படி வெறுக்கப் படுகிறது.

64. ஆனால் இச்செல்வங்களுக்கு மாறாக மன்னிப்பு பத்திரங்கள் முதன் நிலைக்கு மாற்றப்படுகின்றன.

65. எனவே கவிசேஷம்ஆகிய செல்வத்தை வலையாக பயன் படுத்தி முற்காலத்தில் செல்வந்தர்களை பிடித்தனர்.

66. தற்போதைய மன்னிப்பு பத்திரங்கள் என்னும் வலைகளால் மக்களின் செல்வத்தை வாரிக்கொள்கிறார்கள்.

67. மன்னிப்பு பத்திரங்களையெல்லாம் மகா உன்னத கிருபை களே என குதர்க்கவாதிகள் உளருகிறார்கள்.

68. ஆயினும் அவற்றை கடவுளின் கிருபையோடும் சிலுவை யின் பக்தியோடும் ஒப்பிடுகையில் அவை மிக மிக மலிவான கிருபைகளே ஆகும்.

69. மன்னிப்பு பத்திர பிரச்சாரம் செய்பவர்களை கவுரவமான முறையில் வரவேற்றிட அத்தியட்சர்களும், குருமாரும் கடமைப்பட்டவர்களே.

70. ஆயினும் இப்படி பிரச்சாரம் செய்பவர்கள் தங்களின் சுய சரிதைகளை பிரசங்கிக்கிறார்களா என்பதை அத்தியட்ச குருமார் கண்ணும் கருத்துமாக உன்னிப்பாக கவனிக்க வேண்டும்.

71. பாவ மன்னிப்பு பத்திரங்களின் எதார்த்தத்தின் உண்மை தன்மைக்கு மாறாக வசனிப்பவன் புறம்பார்க்கப்ட்டவனும். சபிக்கப்பட்டவனுமாவான்.

72. இப்படி பிரசங்கிறவர்கள் கொண்டுள்ள வரம்புக்கு மீறய அதிகாரம் மற்றும் அவர்களின் பொருளாசை ஆகியவற்றை எதிர்த்து நிற்பவன் ஆசிர்வதிக்கப்பட்டவனாவான்.

73. பாவ மன்னிப்பு பத்திர வியாபாரம் பாதிப்படையும்படி சூழ்ச்சி செய்கிறார்கள் என கூறி அத்தகையோருக்கு எதிராக போப் அரசர் முழங்குகிறார்.

74. ஆனால் தூய இறையன்பு வாய்மை ஆகியவை பாதிப் புள்ளாக்கும் என்பவர்களுக்கு எதிராகத்தான் போப் அரசன் இடியென முழங்கவேண்டும்.

75. ஆண்டவரின் தாயாருக்கு அவகிரத்தி வரும் வகையில் நிந்தனை செய்வது பெருங்குற்றம். அதை மன்னிக்கும்

ஆற்றல் மன்னிப்பு பத்திரத்துக்கு உண்டு என எண்ணுவது பயித்தியகாரத்தனம்.

76. சுலபமாக நம் பாவங்களை மன்னிப்பு பத்திரங்கள் மன்னித்திடாது என்பதுதான் உண்மை.

77. தற்போதைய போப் அரசராக புனித பேதுருவே பதவி வகுத்தாலும் பெரிதான கிருபைகளை அவரால் அருள இயலாது என கூறுவது புனித பேதுருவுக்கும் போப்புக்கும் எதிராக நிந்தனையாகும்.

78. 1 கொரிந்தியர் 12:28ன்படி பெரிதான ஈவுகளான சுவிசேஷம். ஆன்மீக ஆற்றல்கள் மற்றும் குணப்படுத்தும் வரங்கள் ஆகியவை போப்பின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவைதான்.

79. போப்பானவரின் இலட்சினையில் பொரிக்கப்பட்டுள்ள சிலுவை சிள்ளம் கிறிஸ்துவின் சிலுவை சின்னத்தோடு ஒப்பு உமமையுடையதே என கூறுவது தெய்வ நிந்தனையாகும்.

80. இத்தகைய நிந்தனைகளை மக்கள் மத்தியில் பரப்பும் அத்தியட்சர்கள் குருமார்கள் வேத விற்பளர்கள் தேவனுக்கு பதில் கூறியே ஆகவேண்டும்.

81. தான்தோன்றிதனமான மள்ளிப்பு பிரச்சார பத்திரத்தின் விளைவாக போப்பிள் மீதுள்ள மதிப்பும் மரியாதையும் குறைந்து போகின்றன.

82. உதாரணமாக ஆலயத்தை கட்டும் பணிக்கென பெறப்படும் பணத்தால் உத்தரிப்பு எஸ்தலத்தில் உள்ள ஆத்துமாக்களை போப்பானவரால் வெளிக்கொளர கூடுமாளால் எல்லா ஆத்துமாக்களையும் ஏன் வெளியே கொண்டுவர இயலாது.

83. மீட்கப்பட்டவர்களுக்காக ஜெபம் தேவையில்லை என்றால், அது தவறு என்றால், இறந்தவர் களுக்கான சடங்குகள் ஆண்டிருதி நினைவு கூறல் பூஜைகள் ஏனி நிரூபிக்கப் படவில்லை.

84. அவபக்தியுள்ள ஒரு ஆத்துமாவை உத்தரிப்பு எஸ்தலத்தில் நின்று பணத்தால் வெளிக்கொளா முடியுமால் பக்தியுள்ள ஒரு நல்ல ஆத்துமாவை அன்பின் பெயரால் உத்தரிப்பு ஸ்தலத்தில் நின்று வெளிக்கொனர கூடாதா?

85. வேத வசனம் இப்போது செயல்படவில்லை என்றார் எப்படி பாவ மன்னிப்பு பத்திரம் உயிர்பெற்றதும் செயலாற்று வதுமாயிருக்கும்.

85. சீசரைவிட பெரும் செல்வந்தனான போப் ஏன் தன் சொந்த பணத்தை செலவிட்டு ஆலயத்தை கட்டாமல் ஏழை பாமர விசுவாசிகளின் பணத்தை கொண்டு அதை கட்ட முயற் சிக்க வேண்டும்.

87. மெய் மனஸ்தாபத்தால் பூரண மன்னிப்பையும் பெரு வாழ்வையும் பெற்றிடும் உரிமையுள்ளவர்களுக்கு போப் வேறு எதனை கொடுக்க விளைகிறார்.

88. ஒரு நாளில் ஒரு முறை மட்டுமே போப் அரசரால் தரப் படுகின்ற மன்னிப்பும் ஆசிகளும் ஒரே நாளில் நூறு முறை தரப்படுமானால் திருச்சபைக்கு அதைவிட சிறந்த சிலாக்கியமாக வேறு எது இருக்கமுடியும்.

83. பண வருவாயை எதிர்பார்க்காமல் ஆத்துமாக்களின் மீட்பையே போப் நாடுகிறார் எனில் சரிநிகர் திரானி யுள்ளவர்களுக்கு மன்னிப்பு சீட்டுகளை அவர் ஏன் நிறுத்திவைக்கிறார். 90. தனி அதிகாரத்தை பயன்படுத்தி திருச்சபையை அடக்குவது கிறிஸ்தவர்களை துக்கப்பட வைப்பதாகும்.

91. போப்பின் விருப்பமாகவே மன்னிப்பு பத்திரம் வழங்கப் படுவதாக அறிவித்தால் மட்டுமே அனைத்தும் சுமூக முடிவுக்கு வரும்.

92. சமாதானம் சமாதானம் என கூறியும் சமாதானம் கொடுக்க முடியாத போலி தீர்க்கதரிசிகள் ஒழியட்டும்.

93. சிலுவை சிலுவை என்று சொல்லி கிறிஸ்தவர்களின் துன்பம் ஒழிய செய்யும் மெய் தீர்க்கதரிசிகர் வாழட்டும்.

94. தண்டனை மரணம் நாகம் ஆகியவற்றையே அறிந்து கிறிஸ்துவுக்கு பின் செல்ல நாம் வழிகாட்ட வேண்டும்.

95. பல உபத்திரவங்களோடே நாம் மோட்சத்திற்குள் பிரவேசிக்கவேண்டுமே தவிர போலி உத்திரவாதத் தினால் பிரவேசித்திட முடியாது என நாம் உறுதிகொள்ள வேண்டும்.

●

# நீதியின் நித்திரை கலைந்தது!

ஆக்ஸ்பர்க்கின்
எட்டுத் திசைகளுக்கும்,
நெற்றிப் பொட்டுகள்
புடைத்தன!

மூன்று நாள்
மொழியுத்தம்,
அரச மண்டபத்தின்
அடிவயிற்றைக் கலக்கியது!

நீதிக்கு
ரத்தக் கொதிப்பு
ஏறியது போல்,

கிளர்ந்து எழுந்த
மார்ட்டீன் லூத்தரின்
சூறாவளிச் சொற்பொழிவு,
அவையினரின் வாய்களில்
ஆச்சரியக் குறிகளை அப்பின!

புயலின் கர்ஜனை முன்
காயத்தான்,
காற்றாடியானான்!

லுத்தரின்
கொள்கைக் கோடரி,

விஷவேரை
வெட்டி வீழ்த்தியது!
காயத்தானின்
உள்நாக்கும்,
உறைந்தது!

முகத்திலும், முதுகிலும்,
அவமான எச்சங்களுடன்
அரண்மனை திரும்பிய
காயத்தானைக் கண்டு,
போப்பின் விழிகள்
புகைந்தன!

கோடரியுடன் போராட
குண்டூசியை அனுப்பியது,
குற்றம்!
ஆய்வுக்குப் பின்...
வல்லுனர்களை
வடிகட்டிய போப்,
'எக்' எனும்
காகிதப் புலியைக்
கண்டெடுத்தார்!

மீண்டும்,
'லைப்சிக்' மாநகரில்
'கார்ஸ்டால்' எனும்
ஆன்மீக அறிஞரின் கீழ்
அவை கூடியது!

'எக்' விட்ட ஏப்பத்தில்
புளித்த தத்துவங்களே
புறப்பட்டு வந்தன!

மார்ட்டீன் லூத்தர்
சுண்டி எறிந்த கேள்விகள்,
சுத்தியல்களாக அடித்தன!

''இறை மீட்பின்,
இலக்கு இயேசு!
போப்பின் பாதங்களைப்
பூஜிப்பது தவறு!

மார்ட்டீன் லூத்தரின் நாவு,
நீதியின் நெம்புகோலாய்
பொய்மைக் கல்லறையைப்
புரட்டிப் போட்டது!

''இயேசுவே தலைவர்...
இயேசுவே மீட்பர்...
இயேசுவே வாக்கு...
இயேசுவே வழி...
இயேசுவே வாழ்வு...
இயேசுவே வாய்மை...
இயேசுவே நீதி...!''

மற்றவை நிழல்!

தீர்ப்பெழுதினார் நம்,
திருச்சபை 'பித்தாகரஸ்!'
வெளியேறிய 'எக்'
விக்ளிப் ஜானை
விவாதத்திற்கு இழுத்தான்.

மார்ட்டீன் லூத்தர்,
மிரட்டல் பூரான்களை
மிதித்து நசுக்கினார்!

உதட்டிலிருந்து
வேத இசைக் குயில்கள்
வெளிக் கிளம்பின!

‘எக்’ கின் முகத்தில்
இயலாமைக் கரி!
மன்றம் கலைந்தது!

தண்ணீர்ப் பந்தல்,
எரிமலையானதைத்
தடுக்க இயலாத
‘எக்’,
போப்பின் காதுகளில்
பொய்களைத் திரித்தான்!

போப்பிற்கு,
சுவாசம் நீராவியானது!

ஒரு,
தீக்குச்சிக்கு இவ்வளவு
திமிரா?

கருணைக் கண்கள்,
மிருகவெறியுடன்
மினுமினுத்தன!

மலரை கசக்குவதற்கு,
முட்கள் கூடி
முண்டாசு கட்டின!
‘‘மார்ட்டீன் லுத்தர்
திருச்சபைக் கெதிரான
தீவிரவாதி!

அவரது,
சிந்தனை நெசவு செய்த
சிவப்பு நூல்களுக்குச்
சிதை மூட்ட வேண்டும்!

ஆண்டகையின் உத்தரவில்,
ஆக்கினைப் பத்திரம்
ஆயத்தமானது!

மார்ட்டீன் லூத்தர் மீது
இரும்புச் சிலுவைகளாக
ஏற்றப்பட்ட...
நாற்பத்தியொரு குற்றங்களை

அறுபது நாள்களுக்குள்
மறுதலிக்காவிடில்...

அவரை,
ஆதிக்கத் திருச்சபை
அகதியாக்கும்!

முன்னறிவிப்பில்,
முதலாளித்துவ
முலாம் பூசியிருந்தது!

சிங்கத்தின்
பிடரி சிலிர்த்தது!

திமிங்கலத்திற்கெதிராகத்
தீப்ந்தம் ஏந்திய
பூகம்பம்,
போப்பின்
புரட்டு மிரட்டலைத்
தீயின் பசிக்குத்
தீனியிட்டது!

அரண்மனை
ஸ்தம்பித்தது!

அடுத்தடுத்து
அவமானச் சகதியை
அப்பிக் கொண்ட
போப்பின் நாவில்,
புலம்பல்கள் குடியேறின!

✦

கொடும்பாவிகள் கூடி,
எரிமலையைக் கொளுத்த
எண்ணினர்!
புலியை பிடிக்க
‘பொறி’ தயாரானது!
போப்,
சார்லஸ் அரசனிடம்
‘அலெண்டர்’ எனும்
அடிவருடியை அனுப்பி,
மார்ட்டீன் லுத்தரைத்
தூக்கிலிடத் தொழுதார்!
அரசரின் சுட்டுவிரல்,
பிரடரிக் இளவரசனிடம்
பேசும்படி அசைந்தது!
நீலத்தைப் பிரித்தெடுக்க
ஆகாயம் அனுமதிக்குமா?
இளவரசன் பிரடரிக்,
எரிச்சலின்
குழந்தையானான்!
போப்பின்
புழுதிக்கும்பல்,
சிங்கத்தின் குகையை
சிதைக்காத படி சில
‘‘தற்பாதுகாப்பு வலைகளைத்
தயாரித்தான்!’’

1. ‘‘மார்ட்டீன் லுத்தர்,
வாக்குவாதம் செய்ய
வழி அமைக்க
வேண்டும்!

2. நீதி விசாரணையின்
பொழுது

உயிர்காப்புப் பத்திரம்
உறுதி
செய்யப்பட வேண்டும்!

3. ஜெர்மன்
தேசத்திலேயே
நீதி விசாரணை
நிகழ வேண்டும்!''

பொய்யின் திட்டங்கள்,
புதை குழிக்குப்
போனது!
மார்ட்டீன் லுத்தர்,
ஆன்மீக அஸ்திரங்களுடன்
ஆயத்தமானார்!

நியாயத் தீர்ப்புக்காக
காலம்,
கன்னத்தில் வைவைத்துக்
காத்துக் கிடந்தது!

●

# சமயமைக் கல்லறை புரண்டது!

‘ஓம்ஸ்’ நகரம்,
ஆர்வ அலைகளால்
ஆர்ப்பரித்தது!

மனித நெரிசலில்
காற்றுக்கும்,
மூச்சுத்திணறியது!

தாம்பூலத்தட்டாய்
சூரியன்!

தர்மத்தின்
தலைப்பிரசவத்திற்கு,

மருத்துவராய்
மார்ட்டீன் லுத்தர்!

தழல் நெருப்பு
தலை நிமிர்ந்தது;

‘‘நீர் யானை நின்றாலும்
அதன்
திறந்த வாயினுள் நுழைந்து,
பற்களுக்கிடையே நின்று
பரமன் இயேசுவைப்
பாடுவேன்!

முழக்கத்தில்,
முதுகுத்தண்டு
சிலிர்த்தது!

✦

அரண்மனையின்
உள்ளங்கை
அறிஞர்களால் வழிந்தது!
ஐந்தாம் சார்லஸ்,
அவைத் தலைமை!

அரசர்கள்,
சிற்றரசர்கள்,
பேராயர்கள்,
பிரபுக்களென
முன்னூறு பிரதிநிதிகள்
மொய்த்திருந்தனர்!

'கோலியாத்' தாக,
'எக்'!
தயார் நிலையில்
தாவீதின் கவண்கற்கள்!

மண்டபம்,
தற்காலிக மௌனத்தைத்
தரித்தது!
'எக்' கின் விஷநாவு
இரு கேள்விகளை துப்பியது;
''1. இந்த,
ஆய்வுப் புத்தகங்களின்
ஆசிரியன் நீயா?

2. இதில்
நீ புனைந்துள்ள

புரட்டுக்களை
மறுதலிக்கிறாயா?

ஆகாயத்தை அளக்க,
ஐந்து நிமிட,
அவகாசமா?

நியாயத்தின் அளவுகோல்,
நீளமானது அல்லவா?

முன்னுரை கூறாமல்,
முடிவுரை கூற
முடியாது!

ஒருநாள் அவகாசத்தை
உத்தரவாக வினவியது
வாய்மையின் வலதுகரம்!
அரண்மனை
தலையசைத்தது!

✦

இரவின்
இடுப்பின் மீது,
கெத்சமனே போராட்டம்!

மெழுகுவர்த்தி மேனியில்
கொப்புளங்களாக
வெப்ப வியர்வை!

‘‘இருண்டு கிடக்கும்
இறையியலுக்கு ஒரு
நெருப்பு விடியல்
நிகழ வேண்டும்!

பிடில் வாசிக்கும்
நீரோக்களை,

குடிசைகளின் கூக்குரல்
கொல்கொத்தாவுக்கு
இழுத்து வரவேண்டும்!

சுட்டு விரலே...!
சேரி சிந்திய
கண்ணீர்க் காசுகளை
கஜானாக்களில் நிரப்பும்,
கருப்பு யூதாஸ்களைக்
காட்டிக் கொடு!

இறையியலைப் புதைத்து
வேத பீடங்களுக்கு
வெள்ளையடிக்கும்
இவர்களது
சிந்தனைக் கருவறை
சிலுவைகளைச்
சூலாக்கட்டும்!''

சிந்தனை முழுக்க
ஜெப உழவு!

நிலாவின் நெற்றி
நட்சத்திரங்களைச்
சிந்தியது!

✦

வானம்,
விலாரத்தம் சிந்த
விடிந்தது!

அழுக்கு பூமி,
சுத்தமான ஈரத்தென்றலை
சுவாசித்த தேதி!

மண்டபம் மறுபடியும்,
நிறைமாத காப்பிணியானது!

சத்தியத்தின்
சாட்டை நாவு,
சபையில் சுழன்றது!

உப்பரிகைத் தென்றல்,
உதடு உறைந்தது!

காலத்தின் கண்களில்,
கலப்படம் இல்லாத
தாய்ப்பால் பீய்ச்சப்பட்டது!

சத்திய ஞானக்கண்
விழிப்பில்,
சாத்தான்கள் சாம்பலாயின!

உண்மையின் உஷ்ணத்தில்,
மூடுபனியின்
முகத்திரை விலகியது!

‘‘1. இயேசு கிறிஸ்துவே,
இதயங்களுக்கு மீட்பு!

2. திருமறையே,
ஆதார ஆகாரம்!

3. போப்பின் வாக்கு,
சங்கங்களின்
சட்டங்கள்,
சரியல்ல!

4. கிறிஸ்தவ விசுவாசத்தின்
உண்மைக்காக
நிற்கிறேன்!’’

அடுத்தடுத்து,
அணுகுண்டுகள்
விழுந்தன!

சோர்ந்து கிடந்த
ஆலயமணிகள்
சுதந்திரம் பாடின!

சிலுவை,
கைகளை விரித்து
சோம்பல் முறித்தது!

முதலாளித்துவம்,
மூட்டைப்பூச்சியாய்
நசுக்கப்பட்டது!

ஏழைகளுக்கான
எதிர்மறுப்போர் சபை,
வெடித்து முளைத்தது!

சூரியனைச்
சுவர் எழுப்பி,
மறைக்க முடியுமா?

வெற்றியைப்
பறித்துக்கொண்டு
வெளியேறியது,
வேத நதி!

காற்றும், கடலும்,
கைதட்டி வரவேற்றன!

மார்ட்டீன் லூத்தர்,
மக்களின் கரங்களில்
மகிமை சிசுவானார்!

மானுடம்
மறுமலர்ச்சியை
தோள்களில் தூக்கியது!

இனி,
கண்ணீர்க் கப்பம்
கட்ட வேண்டியதில்லை!

காயங்களை
அடைகாக்கவேண்டிய
கட்டாயம் இல்லை!

தனியுடைமையின்
கைத்தடியாய்,
தலைகுனிந்து நின்ற
சிலுவை,

பொதுவுடைமையின்
ஏர்க் கலப்பையாய்,
பூமியை உழுதது!

✦

வீதியெங்கும்
வெற்றி வைரங்களை
விதைத்து விட்டு
வித்தன்பர்க்கை நோக்கி,
காட்டுவழியாக விரைந்தது
கவிதை நிலா!

திடீரென...
போர்வீரர்கள் நம்
புயலை வழிமறித்தனர் !

இளவரசன் பிரடரிக்கின்
முன்னெச்சரிக்கை
முற்றுகை அது!

கழுகுகள் கூடி
கடத்தாவண்ணம்,
வெண்புறாவுக்கு
‘வர்ட்புர்க்’ கோட்டையில்
தங்க வசதி
செய்யப்பட்டது!

‘‘கண்தானம் அளித்தவனைக்
காணவில்லை!’’

‘‘புரட்சிப் புலியைக்
கொன்று விட்டனர்!’’

முணுமுணுப்பு
முழக்கமானது!

ஐந்துவயதுக் குழந்தையும்,
ஆயுதம் ஏந்தத் துடித்தது!

நீதி இறக்கவில்லை என
நிரூபிக்க,

சூரியனின் நகல்களாய்,
துண்டுப் பிரகரங்கள்
வெளிவந்தன!

தேசம்,
தீயை
அணைத்துக் கொண்டது!

●

## விசுவாசத்தின் விலாரத்தும்!

ஜெர்மன் தேசம்
துயரங்களைத்
தோலுரித்தது!

புளித்த மாவு
பொங்கியது!

இருதயத் துருத்திகளில்,
சந்தோஷ ரசம்
வழிந்தது!

மார்ட்டீன் லுத்தர்,
ரத்தந் தொட்டு
ஜெர்மனியில்

மொழி பெயர்த்த
புதிய ஏற்பாடு,

மக்களின்
மனப்புழுதியை
தூசிதட்டியது!

நண்பர்கள்,
‘மெலாங்தோன்’
‘கார்ல்ஸ் தாட்டின்’

எஃகுக்கரங்கள்,
இரும்பு வேலிகளாய்
பின்னி நின்றன!

யுத்தம் முடிந்த
போர்க்களமாய்,
ரோமானிய ஆலயங்கள்
வெறிச்சோடிக் கிடந்தன!

ஆலய மாடப்புறாக்கள்கூட
குஞ்சுகளைச் சுமந்து,
குடிபெயர்த்தன!

மாளிகைகளில்,
மரண மௌனம்!

சீர்திருத்த திருச்சபை,
தீக்குச்சிகளைச் சேகரித்து,
அக்கினிக் குண்டமாய்
அவதரித்தது!

அப்பங்களைப் போல்
ஆத்துமாக்கள் பெருகின!

✦

இதயத்தின் தலையில்
ஒரு
கனத்த இடி
கால் மிதித்தது!

இளவரசர் பிரடரிக்,
இறந்து போனார்!

சூரியன்,
சோக ரத்தம்
சொட்டியது!

அழுகையே
ஆறுதலானது!

இளவரசர் பிரடரிக்கின்
இளைய சகோதரர்
ஜான் பிரபு,
அரியணையேறினார்!

சீர்திருத்த சபைக்கு
இளவரசர் ஜான்பிரபுவின்
நேசக் கரங்கள்
நீண்டன!

தேசங்கள் தாண்டி,
கிளைச் சபைகள்
சிறகசைத்தன!

வெற்றி போதை,
விழிகளைக்
குருடாக்க வில்லை!

எழுதுகோலின்
முதுகு முழுக்க
முற்போக்குச் சிந்தனை!

வழிபாட்டு முறைமை,
ஞானப் பாட்டுகள்,
வேதக் கட்டுரைகள்,
இதயங்களைச்
சலவை செய்தன!

கல்லறைக்கு
வெள்ளையடிக்கும்
கரியமிலச் சித்தாந்தங்கள்,
சிரச்சேதம் செய்யப்பட்டன!

ஆன்மீகத்தின்
அடிஉரமாய்,
ஆலய வழிபாடுகள்
அரங்கேறின!

சுவிட்சர்லாந்து,
ஐஸ்லாந்து,
பின்லாந்து,
டென்மார்க்,
சுவீடன்,
நார்வே நாடுகள்,
சொப்பனம் கலைந்து
முகம் கழுவின!

✦

மூர்ச்சித்துக் கிடந்த
ரோமானிய சபை,
மீசையில் கொஞ்சம்
ஒட்டியிருந்த வீரத்தை
உசுப்பி விட்டு,
'ஆக்ஸ்பர்க்'கில் ஓர்
அரசவையைக் கூட்டியது!

மீண்டும்
சிண்டு முடிந்த மின்மினிகள்,
செல்லரித்த கைத்தடியையே
செங்கோல் என்றன!

'எதிர்மறுப்போர்' சபையின்
இயக்க முறைகள்
எழுத்து வடிவில்
இயற்றப்பட வேண்டும்!

அரசரின் ஆணை
அடுப்பு மூட்டியது!

தூரிகை,
துப்பாக்கியானது!

மார்ட்டீன் லூத்தர்,
வேதாகம வானில்
நட்சத்திரங்களைப் பறித்து,
அச்சடித்து அனுப்பிய
அதிரடி அறிக்கை,
அதிகார யானைகளுக்க
அங்குசமானது!

மாளிகைச் சபை,
மாரடைப்பு நோய்க்கு
மருத்துவம் பார்க்கச்
சென்றது!

பிணக் குழியாக
நாறிய திருச்சபை,
பிருந்தாவனமானது!

●

## பைசா கோபுரம்
## படுக்கையில் சாய்ந்தது!

துறவறம்,
கிறிஸ்தவனுக்கு,
அகமே தவிர
முகமல்ல!

இறையியல்,
இல்லறவியலுக்கு
வேகத்தடையே தவிர
விவாகத் தடையல்ல!

மரபுகளை மறுப்பவன்,
அவைகளை
மாற்ற வேண்டாமா?

மார்ட்டீன் லூத்தர்,
ஒப்பனை வாழ்வுக்கு
உடன்பட வில்லை!
'காத்ரின் வொன்போரோ',
எனும்
கன்னித் துறவியைக்
கரம்பிடித்தார்.

இறையியல்
நெடுஞ்சாலையில்,
இல்லறம் பயணித்தது!

ஆறு மலர்களை
இல்லற ரெபேக்காள்,
ஈன்று தந்தார்!

✦

வரலாறு,
வருடங்களைத்
தேதிகளாகக் கிழித்தது!

பருவக் கிளைகளில்
முதுமை கூடுகட்டியது!

தேய்மானம் இல்லாமல்
தீர்மானம் ஏது?

இமைகளில் நரை,
விழிகளில் திரை!

எண்ணெய்
வற்றிப்போனது;
ஆயினும் தீபம்,
தள்ளாடவில்லை!

மார்ட்டீன் லுத்தரின்
எழுதுகோல் மட்டும்,
நீதி விருட்சமாய்
நிமிர்ந்து நின்றது;

உலக மீட்புக்கு
உழுது கொண்டிருந்தது!

'மான்ஸ்பெல்டி' லுள்ள
பிரபுக்கள் இருவருக்கு,
பிரிவினைப் பிரச்சனை!

இதயங்களைச் செப்பனிட
தாய்மடி திரும்பியது,
தத்துவத் தகழி!

கடுங்குளிர் காலம்!
நெருப்பு கூட
உறைந்து கிடந்தது!

தேசமெங்கும்
தேமலாய்
சிதறிக்கிடந்த பனி,
வெண் குஷ்டமாய்
விரிந்தது!

அந்திமுகம் சிவந்து,
அழுதது!

திறந்த ஜன்னலின் வழியே
திருச்சபை பௌர்ணமி!

விழிகள்
விம்மின;
''இயேசுவே!
உம்
ஜீவ நதியில்,
என்
காயங்களைக்
கழுவிக் கொண்டேன்!

விடுதலையின் திசைகளுக்கு,
விசுவாசம் என்
விலாசம் சொன்னது!

உமக்கும்
எனக்கும்,
உடன்படிக்கையான

உயிர்வானவில்
கலைய எத்தனிக்கிறது!

இதோ என்
ஜீவநதி,
உன்
சமுத்திர சன்னதியில்
சங்கமிக்கிறது!''

✦

படுக்கையில் சாய்ந்தது
பரிசுத்த கோபுரம்!

தென்றலுக்கு
மூச்சு முட்டியது;
பெருங்கடலின் முகம்,
கருங்கடலானது!

பொய்மையின்
கல்லறைகளைப்
புல்லாங்குழலால் புரட்டி...

சோர்ந்து கிடந்த
மனிதர்களைச்
சுள்ளிகளாகப் பொறுக்கி....

விசுவாசத்தின்
ஊற்றுக் கண்களை
உடைத்து....

திருச்சபையின் முகத்தில்
தீபங்களைப் பொருத்திய...

ஆன்மீகச் சூரியன்,
மெல்ல..... மெல்ல....
அணைந்து போனது!

விடுதலை இறையியலுக்காக
விடியல்களை மொழியாக்கிய
ஒருவானம்,
பூமியின் கிழே
புதைந்து போனதே?

திருச்சபைகள் எங்கும்,
திராவகக் கண்ணீர்!

ஏ! மரணமே!
உன்
அசுர பசிக்கு ஒரு
சரித்திரத்தையே அல்லவா
புசித்து விட்டாய்!

தோற்றுப் போனது
நீதான்!
வீரனின் பிணமும்,
விதை!

✦

வித்தன்பர்க்கின்
கழுத்து வரை,
கண்ணீர் அலைகள்!

வார்த்தைகள் கூடி ஒரு,
வரலாற்றைச்
சுமந்து வந்தன!

தொண்ணூற்று ஐந்து
நியாய பிரமாணங்களை,
விருதுகளாகச் சுமந்த
தேவாலயம்!

அது,
இறுதி ஊர்வலமா?

இல்லை!
நம்பிக்கையின்
நகர்வலம்!

மக்களின் கண்ணீர்
மலர்வளையங்களாக
விழ... விழ...
ஆலய,
அருளுரைத் தொட்டியின்
அருகில்...
புரட்சியின்
போர்ப்பிரகடனம்,
புதைக்கப்பட்டது!

✦

அது,
அந்தகாரமில்லை!
அருணோதயம்!
கனவுகளை மெய்ப்பிக்கும்
கானான் தேசம்!

மார்ட்டீன் லுத்தர்
மரிக்கவில்லை!

ஒவ்வொரு கிறிஸ்தவனின்
உள்ளங்கைகளிலும் அவர்,
வேதாகம நிழற்குடையாய்
விரிந்திருக்கிறார்;
உதடுகள் அவரை,
உச்சரிக்கும் பொழுது
உயிர்த்தெழுகிறார்!

அவரது சிலுவை
நம்,
இதயத் துறைமுகங்களில்
நம்பிக்கை
நங்கூரமிட்டிருக்கிறது!

●

# நீ விசுவாசத்தின் அமுதசுரபி!

காலத்தின்
இதயத்தைத் துழாவிய,
தீர்க்க ரேகையே!

உனது ரத்தம்,
சிலுவையின்
நாளங்களில் பாய்ந்தபொழுது,
மனிதநேயம்
துளிர்த்தது!

இதயச் சிலந்திவலையைச்
சுத்திகரித்த உன்னால்,
மலட்டுமத விதைகள்
ஆண்மையின்
அர்த்தமறிந்தன!

பிற்போக்குத் தனத்தின்
பிடரி பிடித்து
உலுக்கிய உன்,
கிடுக்குப்பிடி கேள்விகள்,

அடக்குமுறையின்
முதுகில் விழுந்த
ஆழமான அரிவாள்வெட்டுகள்!

✦

மத உண்ணிகள்
மனித ரத்தம்
உறிஞ்சிய பொழுது,
அவற்றை நசுக்கியதுன்
நம்பிக்கைப் பிரம்பு!

மன்னிப்புச் சீட்டுக்களை
கிழித்தெறிந்த
உன்கேள்விகள்,
மனவியாதிகளுக்கு
மருந்துச் சீட்டுகளாயின!

பள்ளியறையில்
துயின்ற கிறிஸ்தவம்,
உன்னால்,
வரவேற்பறைக்கு
வந்து நின்றது!

ஆலய முற்றங்களில்
யூதாஸ்கள் துப்பிய
முத்த எச்சங்கள்,
திருச்சபையின் தேகத்தில்
நச்சுப்பிசினாய்
வழிந்த பொழுத அதை,
வெட்டி எறிந்தது உன்
விசுவாசக் கோடரி!

அநீதியின் அந்தப்புரத்துக்கு
புறக்கடை வழியாகப்
போய்வந்த தலைவர்களை,
நீதியின் தாழ்வாரங்களில்
நிர்வாணமாக
நிற்க வைத்தவன் நீ!

அந்த
இருட்டு நூற்றாண்டில்,

தீப்பந்தங்களாய் எரிந்தஉன்,
தேவ தத்துவங்கள்.

இந்தக்
கருப்பு நூற்றாண்டில்,
எண்ணெய் வற்றிப்போனது
எதனால்?

உன்
'மேஜைத் துணிக்கை'கள்
மேல்,
நாய்க்குட்டிகளுக்கு
நம்பிக்கை
பிறக்கவில்லையோ?

உண்மையின் மழு,
உடைந்து கிடக்கிறது!

எதார்த்தங்கள்
தொண்டையடைக்க,
எழுதுகோல்,
விம்முகிறது!

●

# நீ நியாயத்தின் ரத்தப்பரிசோதனை!

உன்,
வேத விசுவாசம்...
விடியலைப் பதியமிடும்
கூட்டுறவுப் பண்ணை!

உன்,
தாழ்மையின் தத்துவம்...
விடுதலை இறையியலுக்கான
வெளிச்ச இலக்கியம்!

உன்,
நம்பிக்கை நற்செய்தி...
இதயங்களை ஊடுறுவும்
எக்ஸ்ரே கதிர்!

உன்,
சிந்தனைச் சிலுவை,
சமத்துவ சம்மட்டி!

உன்,
ஆத்தும் அன்பு...

அடித்தள மக்களின்
ஆதார ஆகாரம்!

உன்,
போராட்டக் குரல்...
'பூர்ஷ்வா' க்களுக்கெதிரான
புழுதிப் புகை!

உன்
ஜெய ஜெபம்...
புலன்களை உசுப்பும்
போர் முரசு!

உன்,
சமத்துவச் சத்தியம்...
நீதியின் முலைப்பால்!

உன்,
சமாதான சகோதரத்துவம்...
மகிமையைத் தரித்த,
மனிதநேய வெண்கொடி!

✦

வரலாற்றுச் செங்கடலை
வாக்குவாதத்தால்
பிளந்தவனே...

நீ நீதியை
நெசவு செய்ததால்,

கிழிசலைக் கட்டாமல்
கிறிஸ்தவம் தப்பியது!

நன்றி!
இன்று ...
ஒப்பனை அறையில்
உதட்டுச் சாயம் பூசுகின்றன
உன் திருச்சபைகள்!

‘ஜிகினா’ மனிதர்களின்
ஜெப ஜன்னிகள்!

வெண் குஷ்ட உதடுகளில்
கயமைக் கருப்பு!

ஊழியர்களின்
தலைகளை விட,
உண்டியல்களின்
தலைகளே அதிகம்!

சுரண்டிய கரங்களை
நறுக்கிய உன்
நியாயத் தீர்ப்புகள்,
இன்று,
சுவிசேஷ சுவரொட்டிகளில்,
கவர்ச்சியுடல்
காட்டுகின்றன!

ஆலயங்களின் வாசல்களில்
ஆசீர்வாத அங்காடிகள்!

கசாப்பு அரசியலில்,
ஆடுகளாக
ஆயர்கள்!

நீர் சூடாக்கிய
சுவிசேஷப் பாலை,
திருட்டுப் பூனைகள் குடித்து,
தெரு மேடைகளில்
ஏப்பம் விடுகின்றன!

நங்கூரமில்லாத
நடைமுறைத் திருச்சபைகள்,

ஓட்டைகளை அடைக்க
உன்னையே சொறுவுகின்றன!

திருச்சபைகள்
திரைப்படங்களாகிவிட்டன!

வேத ‘விசில்’ கள் மத்தியில்
நற்செய்திக் ‘கேமிரா’ முன்,
சாதி ’மேக்கப்’புடன்
குணச்சித்திர நடிகர் கூட்டம்!

✦

இந்த,
அழுக்கு மனிதர்களை
அடித்துத் துவைக்க,

பரிசுத்தவான்கள் எவரும்
படித்துறையாகவில்லை!

●

# அடுத்து வரும் அக்கினி உடுத்திய ஆண்டுகள்!

மூடநம்பிக்கைகளின்
தாழியுடைத்த,
மோசேயின் கைத்தடியே!

உன்
திசைகாட்டியின் கீழ்அமர்ந்து,
தீவிரமாகச் சிந்திக்கிறேன்!

உன் உந்துச்சக்திக்கான,
மின்சக்தி எது?

சம்பிரதாயச்
சேணங்களணிந்த
மனிதர்கள் மத்தியில்,
உன்
ஆவேசப் பாய்ச்சலுக்கான
அதிர்வேட்டு எது?

விசுவாசத்தினால்
நீர்மட்டுமல்ல,
நீதியும் பிழைத்தது
நெருப்பு நிஜம்!

உன்
வைராக்கியக் கடிவாளம்,
வசப்படுமா எனக்கு?

மைதானங்களில்
இயேசுவைத் தேடும்
நாங்கள்,
மனதுக்குள்
இயேசுவைத் தேட
மறந்து போனோமே?

✦

இதயம்,
'சோதோம், கெமாராவாக'
எரிகிறது!

எங்கள்,
ஓய்வுநாள் உபசரிப்புகள்,
தொலைக்காட்சியின் கீழேயே
துவங்குகின்றன!

எங்கள்,
கடனாளிகளை நாங்கள்
வட்டியுடன் வந்தால்தான்
மன்னிக்கிறோம்!

திரையரங்குகளே எம்
பகுதிநேர ஆலயங்கள்!

உம் கிடையில்,
ஆடுகளுக்கும்
ஓநாய்களுக்கும்,
அரசியல் மோதல்கள்!

மொட்டைக் கடிதங்களை
இப்பொழுதெல்லாம்,

அச்சடித்தே
அனுப்பிவிடுகிறோம்!

எழுதுகோல் அளவு
வளராத குழந்தைகள் கூட,
திருச்சபையின்
நெளிவு சுளிவுகளைத்
தெரிந்து வைத்திருக்கின்றன!

'இலாக்கா' கிடைக்காதவன்
எதிர்க்கட்சிக்குத் தாவுகிறான்!

✦

ஆயினும் நாங்கள்,
சூழ்ச்சிகளின் பீறல்களால்
சோர்ந்து விழவில்லை!

உம் பாய்மரத்தின்,
பொத்தல்களைத் தைக்கப்
புறப்படுகிறோம்!

எமது எழுதுகோல்களில்
உமது
உற்சாக ரத்தம்
பீறிடுகிறது!

சிந்தும் கண்ணீரைச்
சேமித்து...
சொந்தமாகச் சில
சூரியன்களைச்
சிருஷ்டிப்போம்!

பிரிக்க அல்ல...
இணைப்பதே
இப்பொழுது எங்கள்,
இறை வேண்டல்!

பெருக்க அல்ல....
பொறுக்கி எடுப்பதே
இப்பொழுது எங்கள்,
புதிய நற்செய்தி!

நீர்,
விதைத்த விசுவாசம்,
இனி எந்த
மூடச் சகதியிலும்
முழுகாது!

காலத்தின் தோளேறி
கையசைக்கிறோம்!

✦

எம்,
புதிய ஏதேனில்
உம் சிலுவையே,
தெருவிளக்கு!

வேதாகமே...
விழிகளின் நெடுஞ்சாலை!

●

# ஆசிரியர் வாழ்க்கை குறிப்பு:


| | | |
|---|---|---|
| இயற் பெயர் | : | லா. ஜோசப் மோகன் குமார் |
| புனைப் பெயர்கள் | : | மோகனப்பிரியன், யுரேகா லெமூரியன் |
| பெற்றோர் | : | Rev.Dr.S. லாரன்சு அடிகளார்<br>R. வசந்தா ஜெயவதி |
| மனைவி பெயர் | : | J. ஜெனித்தா ஜூலியட் |
| பிறந்த வருடன் | : | 24.06.1968 |
| பிறந்த ஊர் | : | மதுரை |
| கல்வித் தகுதி | : | M.A., M.Phil., B.D, D.D., M.Th, P.hd., |
| பணி | | |
| கௌரவ ஆயர் | : | தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபை T.E.L.C. |
| பேராயர் | : | இந்திய ஆங்லிகன் பேராயம்<br>ACI & CEEC |
| தலைவர் | : | பன்னாட்டுக் கிறித்தவத் தமிழ்ச் சங்கம்<br>சர்வ சமய சமத்துவச் சங்கம்<br>பன்னாட்டு லுத்தரன் கூட்டமைப்பு & பேரவை - ILCC & ILC |

எழுதிய நூல்கள் :

1. தச்சனின் கதை
2. கவண்கல் கவிதைகள்
3. தினம் ஒரு தீப்பந்தம்
4. பகுத்தறிவுக் கிறிஸ்தவம்
   (கிறிஸ்தவ இலக்கியக் கட்டுரைகள்)
5. டீக்கடையில் இயேசு
   (கிறிஸ்தவ கதைகள்)

**Address :**

Post bag No: 5313,
Kodambakkam,
Chennai -600 024. Tamilnadu,
South India.
Email : bishopjmk@gmail.com.

"**சிலுவைச்சித்தர்**" என்று அனைத்துத் திருச்சபையினராலும் அறியப்பட்ட **லா.ஜோசப் மோகன் குமார்** அவர்கள் ஐந்துதலைமுறை லூத்தரன் ஊழிய மரபில் வந்தவர்! தன் இளவயது முதல் கவிதை எழுதும் ஆற்றல் கொண்ட இவரது இறையியல் கவிதைகள், பாரம்பரிய திருச்சபைகளில் புற்றுநோயாகப் புரையோடிப் போன சாதி அரசியல், ஊழல், சர்வாதிகாரம், புரட்டு போதனைகளுக்கு எதிராக போர்க் குரல் எழுப்புபவை! தான் சார்ந்த கிறிஸ்தவ இறையியலில் தளம் நின்று, தன் கவிதைகள் மூலம் களைபறிக்கும் இவர், கிறிஸ்தவக் கம்யூனிசக் கோட்பாட்டை உள்வாங்கி, விடுதலை இறையியலுக்கான விடியலைப் பதியமிடுகிறவர்! திருச்சபைகளின் நிழல் அரசியல்களை தாக்குவது மட்டுமல்ல, பகுத்தறிவுக் கிறிஸ்தவத்தையும், பாமரர்களுக்கான திருச்சபையை கட்டி எழுப்புவதிலும், கடைநிலை கானகச் சத்தமே, இவரது "**கவண்கல் கவிதைகள்**" இத்தொகுப்பு மட்டுமல்லாது, இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றை புதுக்கவிதையில் வடித்தெடுத்த "**தச்சனின் கதை**" "**தினம் ஒரு தீப்பந்தம்**" "**பகுத்தறிவுக் கிறிஸ்தவம்**", போன்றப் பல தொகுப்புகள், பல்வேறு இறையியல் மாணவர்களால் ஆய்வுக்கும், அருளுரைகளுக்கும் எடுத்தாளப்பட்டவை பாரம்பரியமிக்க தமிழ் சுவிசேஷ லூத்தரன் திருச்சபையில் (TELC) ஆயராகவும், பன்னாட்டு லூத்தரன் கூட்டமைப்பு & பேரவை (ILCC) மற்றும் இந்திய ஆங்லிகன் பேராயத்தின் (ACI & CEEC) பேராயராகவும் இறை பணிபுரிந்துவரும் **லா.ஜோசப் மோகன்குமார் கோலிவுட் To கொல்கொதா** எனும் முதல் திரையுலக மக்களுக்கான திருச்சபையை உருவாக்கியவர்.


**பன்னாட்டுக்கிறித்தவத் தமிழ்சங்கம்**

(A Unit of ILCC/Gov.Trust No.00433/22)

NITI Aayog Government Of India Ngo Darpan Unique
ID No. For ILCC : TN/2022/0321174



Post Box No; 5313 கோடம்பாக்கம்
சென்னை - 600 024. தென் இந்தியா
மின்னஞ்சல் : bishopjmk@gmail.com